# அவள் வாழத்தான் போகிறாள்



மாத்தளை சோமு

# அவள் வாழத்தான் போகிறாள்

மாத்தளை சோமு

தமிழ்க்குரல் பதிப்பகம்
*P.15, ஐந்தாவது பிரதான சாலை,*
*இராமலிங்க நகர்,*
*திருச்சி – 620 003*

அவள் வாழத்தான் போகிறாள்
இது ஒரு தமிழ்க்குரல் வெளியீடு

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 1996
பிரதிகள் : 1200
அளவு : Crown

வெளியீடு:
தமிழ்க்குரல் பதிப்பகம்
P. 15, ஐந்தாவது மெயின் ரோடு,
இராமலிங்க நகர், திருச்சி – 3.

இலங்கையில் விற்பனை உரிமை
சுஜாதா பதிப்பகம்
288, பிரதான வீதி,
மாத்தளை

வடிவமைப்பு : வே. கருணாநிதி
அட்டைப் படம் : விவேக்

விலை : 50.00

அச்சும் அமைப்பும்:
பார்கர் கம்யூட்டர்ஸ் மற்றும் இளவழகன் பதிப்பகம்
தொலைபேசி : 82 666 37

அச்சிட்டோர்:
கண்ணப்பா ஆர்ட் பிரிண்டர்ஸ்
சென்னை – 600 005

சமர்ப்பணம் ....!

இந்நாவல் 1948ஆம் ஆண்டு

இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து

இன்றுவரை

மலையகத்தில் நடந்த

இனக்கலவரங்கள், அடக்குமுறைகள்,

தொழிற்சங்கப் போராட்டங்கள்

என்பனவற்றில்

உயிர் இழந்தவர்களை

நினைவு கூர்ந்து

சமர்ப்பணமாகிறது.

# பதிப்புரை

'அவள் வாழத்தான் போகிறாள்'
என்ற இந்த நாவல்
'தமிழ்க்குரல்' பதிப்பகத்தின்
ஆறாவது வெளியீடாக வருகின்றது.

எமது முதல் வெளியீடே
சாகித்ய பரிசு பெற்ற நாவலாகும்.

மூன்றாவது வெளியீடான
'அவர்களின் தேசம்' சிறுகதைத் தொகுதி
1995ஆம் ஆண்டின் தமிழ்நாடு லில்லி தேவசிகாமணி நினைவு
இலக்கியப் பரிசுத் திட்டத்தின்கீழ்
வெளிநாட்டுச் சிறப்புப் பரிசு பெற்றது.

ஏனைய வெளியீடுகள்
எழுத்தாளர்கள், விமர்சகர்கள், வாசகர்கள்
பாராட்டுதல்களைப் பெற்றன.

மேற்கண்ட பரிசுகளும் பாராட்டுகளும்
எம்மை ஊக்கப்படுத்தியுள்ளன.
அந்த ஊக்கத்தில் ஆறாவது வெளியீடாக
இந் நாவலைத் தந்துள்ளோம்.

தமிழ் வாசகர்கள் தொடர்ந்து எமக்கு
ஆதரவு நல்குவார்கள் என்று

எதிர்பார்க்கின்றோம்.

நன்றி!

**தமிழ்க்குரல் பதிப்பகம்**

## என்னுரை

'அவள் வாழத்தான் போகிறாள்' என்ற இந்நாவலே, நான் நாவல் உலகில் காலடி வைக்கப் பாதை போட்டுக் கொடுத்த முதல் நாவல். ஆனால் புத்தகமாக வந்து என்னை ஒரு நாவலாசிரியராகத் தமிழ் உலகில் அறிமுகப்படுத்தியது மட்டுமல்லாமல் சிறந்த நாவலுக்கான இலங்கை சாகித்திய விருதினையும் எனக்குத் தேடிக் கொடுத்த நாவல், நான் இரண்டாவதாக எழுதிய 'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்' என்ற நாலாகும். இந்நாவலே எனது முதல் நாவல் என்ற ஒரு தவறான செய்தி பலரைச் சேர்ந்தது. அது உண்மை அல்ல. எனது முதல் நாவல் இப்போதுதான் 'தமிழ்க்குரல்' பதிப்பகத்தின் ஆறாவது வெளியீடாக வருகின்றது.

இந்நாவலை எழுதியதுமே மறைந்த எழுத்தாளர் என். எஸ்.எம். ராமையா அவர்களுக்கு அனுப்பி வைத்து 'அபிப் பிராயம்' கேட்டிருந்தேன்.

'நாவல் கிடைத்தது; நேரம் கிடைக்கும் போது படித்துப் பாக்க்கின்றேன்' என்று ஒரு பதில் போட்டார் என்.எஸ். எம். ராமையா அவர்கள். நாட்கள் ஓடின.... என்னால் பொறுமை யாக இருக்க முடியவில்லை. மீண்டும் ஒரு கடிதம்அவருக்கு எழுதினேன். சில நாட்களில் அவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் தன்னை நேரில் சந்திக்கும்படி எழுதியிருந்தார். நான் கொழும்பிற்குப் போனேன். என்.எஸ்.எம்.ராமையாவைச் சந்தித்தேன். நாவல் சம்பந்தமாக நிறைய ஆலோசனைகள் தந்தார். சில அத்தியாயங்களைச் சுட்டிக்காட்டி மீள எழுத வேண்டும் என்றார். கூடவே உற்சாகப்படுத்தினார். சிறுகதை மட்டுமே எழுதிய அவர், ஒரு நாவல் கூட எழுதவில்லை. ஆனால், ஒரு நாவல் எப்படி இருக்க வேண்டும்; நாவல் எப்படி எழுதப்பட வேண்டும் என்பதை நன்கு தெரிந்தவர் அவர். இலங்கை மலையகச் சிறுகதை இலக்கிய முன் னோடியும் அவர்தான்.

நாவலை வாங்கிக் கொண்டு மாத்தளை திரும்பினேன். இது 1980ன் நடுப் பகுதிகளில் நடந்தது.

நாவலை அப்படியே வைத்துவிட்டுச் சிறுகதைகள் தொடர்ந்து எழுதினேன். அதே நேரத்தில் நாவலுக்கான புது உருவம் பற்றி மனதுக்குள் சிந்தித்துக் கொண்டே இருந்தேன். பிறகு ஒருநாள் உட்கார்ந்து புதிய வடிவில் இந் நாவலை மீள எழுதி முடித்தேன். இம்முறை நாவலை எவருக்கும் அனுப்பி 'அபிப்ராயம்' கேட்கவில்லை. நாவலின் தரத்தில் எனக்கே நிறையத் திருப்தி.

1981ன் பிற்பகுதியில் இலங்கை 'தினகரன்' இதழுக்கு நாவலை அனுப்பி வைத்தேன். பிற்பாடு அதுபற்றி மறந்தே போனேன்.

1989ல் இந்நாவல் இதே பெயரில் 'தினகரன்' நாளிதழில் தொடராக வந்தது. ஆனால் அப்போது ஆஸ்திரேலியாவில் இருந்த எனக்கு அது தெரியாமல் போனது. பல அத்தி யாயங்கள் போன பிறகு, ஒருநாள் கொழும்பில் இருந்து இலக்கிய அன்பர் துரை விஸ்வநாதன் அவர்கள் நாவலின் முதல் அத்தியாயத்தின் பத்திரிகைப் பக்கத்தையும் கடிதத் தையும் சிட்னிக்கு அனுப்பினார். அவர்தான் நாவல் வந்த செய்தியையே எனக்குத் தந்தவராவர்.

சிட்னியில் 'தினகரன்' தின இதழ்கள் தொடர்ந்து விற்பனைக்குக் கிடைக்காத நிலையில் நண்பர் எஸ். சுந்தர தாஸ் அவர்கள் வாரா வாரம் கொண்டு வந்து தரும் தினகரன் இதழ்கள் பொக்கிசமாய் இருந்தன. பதினைந்து அத்தியா யங்கள் தொடராக வந்தன. திடீரென்று ஒருநாள் 'தினகரனில்' 'நாவல் முற்றியது' எனப் போட்டிருந்தார்கள். எனக்கு இது பெரும் அதிர்ச்சி. நாவலே முடியவில்லை... எவ்வாறு 'முற்றும்' வந்தது? உடனே தினகரன் ஆசிரியர் எஸ். சிவ குருநாதன் அவர்களோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது 'நாவலின் கடைசிப் பகுதி காணாமல்

போய் விட்டது; எனவே வேறு வழியின்றி 'முற்றும்' போட வேண்டி வந்தது' என்றார் கவலையோடு... நானும் கவலையடைந்தேன்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு அந்த நாவலைத் திரும்பப் படித்தபோது நாவலின் முடிவில் திருப்தி இல்லாமை தோன்றியது. அப்போது அந்நாவல் முழுமையாகப் பிரசுரம் ஆகாதது நல்லதாய்ப் போயிற்று என நினைத்தேன். எனக்கு மட்டுமே தெரிந்த நாவலின் முடிவை மாற்றி எழுதினேன். இப்போதைய முடிவு மனித சமூகமே எதிர்பார்க்கின்ற எதிர்பார்க்க வேண்டிய ஒரு முடிவு. இந்த முடிவு வரவேண்டும் என்பதற்காகத்தானோ என்னவோ நாவல் அற்ப ஆயுளில் 'தினகரன்' இதழில் நின்றது போலும்...

இந்நாவல் கற்பனைக் கதையல்ல...! மலையகம் எனச் சொல்லப்படும் தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களின் கதை. நான் பார்த்தது; கேட்டது; அனுபவ பூர்வமாக உணர்ந்தது எல்லாமே இதில் எழுத்துக்களாய், கதாபாத்திரங் களாய் வருகின்றன. இந்நாவல் நாயகிக்கு நான் சூட்டிய பெயரே பார்வதி. ஆனால் அவள் வேறு பெயர்களில் நடமாடிக் கொண்டிருப்பது நிஜம்.

இந்நாவலில் வரும் பார்வதி வாழவேண்டும் என்பது எனது விருப்பம் மட்டுமல்ல. மனித குலத்தை நேசிப்பவர் களின் ஆசையும் கூட. பார்வதி வாழ்ந்தால்தான் மனித வாழ்க்கைக்கே ஒரு அர்த்தம் இருக்கும் என இந்த நாவலில் வரும் ராமு நினைக்கின்றான். எனவே அந்த ராமு இந்தப் பார்வதியின் வாழ்க்கைக்காக மட்டும் போராடவில்லை. அந்த மலைகளிடையே வாழ்கின்ற உழைக்கும் மக்களின் புதிய பாதைக்காக - புதிய நம்பிக்கைக்காகப் போராடுகின்றான். காலங்காலமாக அநீதிகளுக்கு எதிராக - அடக்குமுறை களுக்கு எதிராகச் சாதி வெறிகளுக்கு எதிராக மனித நேயம் மிக்க மனிதன் ஆங்காங்கே போராடினான்; போராடு கின்றான் இந்தப் போராட்டத்தினால்தான் மனிதர்கள்

கொஞ்சமாவது சுதந்திரம் கிடைத்தவர்களாக இருக்கிறார் கள். ஆனால் வருந்தத்தக்க விஷயம் நாகரீகம், கல்வி, விஞ்ஞானம் மேம்பட்டு விட்டதாகக் கொட்டமடிக்கும் இந்தக் காலத்திலும் இந்தப் போராட்டம் தொடர்வதுதான். இங்கே ராமுவும் அந்தப் போராட்டத்தைத் தொடர்கின்றான். அதனை விவரிப்பதே இந்நாவல்.

இந்நாவல் முழுமையாக ஒரு பத்திரிகையில் வர வேண்டும் என்று விரும்பினேன். பெரிதும் சிறிதுமாக இருந்த அத்தியாயங்களை ஒரே அளவாக்கினேன். அப்போது சிங்கப் பூரில் இருந்து கனடா சென்ற செல்வி. மொனிக்கா ஞானப் பிரகாசம் என்ற சகோதரி கனடாவில் இருந்து வரும் 'தாயகம்' என்ற வார இதழுக்கு ஒரு தொடர்கதை கேட்டிருந்தார். நான் உடனே இந்நாவலை அனுப்பி வைத்தேன்.

'தாயகம்' இதழில் தொடராக 'அவளும் வாழத்தான் போகிறாள்' என்ற பெயரில் வெளிவந்தது. 'தாயகம்' வாசகர்களை அது கவர்ந்தது. தற்போது 'தமிழ்க்குரல்' பதிப்பகத்தின் வெளியீடாக வருகின்றது.

இந்நாவலைத் 'தாயகம்' இதழில் பிரசுரித்த ஆசிரியர் ஜோர்ஜ் குருசேவ் அவர்களுக்கும், சகோதரி மொனிக்கா ஞானப்பிரகாசம் அவர்களுக்கும், தினகரன் ஆசிரியர் எஸ். சிவகுருநாதன் அவர்களுக்கும் எனது அன்பான நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

இதனை நூலாக்க உதவிய மட்டக்களப்பு வே. கருணாநிதி அவர்களுக்கும், அட்டைப்பட ஓவியர் விவேக் அவர்களுக் கும், இந்நாவலைப் புத்தகமாக்கத் தூண்டிய மலேசிய எழுத்தாளர் சை. பீர்முகம்மது அவர்களுக்கும் இறுதியாக என்னை எழுதத் தூண்டிவரும் நண்பர்களுக்கும், வாசகர் களுக்கும் நன்றிகள்.

அன்புடன்

*மாத்தளை சோமு*

# அவள் வாழத்தான் போகிறாள்...

## அத்தியாயம் – 1

தலையை நிமிர்த்தி கம்பீரமாக நடந்து போகிற ராமுவைக் கண்டதும், வெளியே நின்ற கட்டக் கருப்பையா அதிர்ந்து போனான். அவன் அப்படி நடப்பான் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை. சற்று முன்னர் பார்வதியோடு பேசியது ராமுதான் என்பதை யூகித்துக் கொண்ட அவன், ராமு எப்படியாவது வெளியே வந்துதானே ஆக வேண்டும் என்ற நினைவை நெஞ்சுக்குள்ளே வளர்த்துக் கொண்டு வராந்தாவில் கால் 'கடு'க்க நின்றான். ஒருவேளை ராமு பின்பக்கமாக நழுவி விடுவானோ என்ற சந்தேகத்தில், ராமசாமியைப் பின்பக்கம் நிறுத்தியிருந்தான். ஆனால் ராமுவோ முன்பக்கத்தால் யாரையும் சட்டை செய்யாமல் போகின்றானே..!

சேலை முந்தனையால் தனது கண்களைத் துடைத்து விட்டுப் பார்வதி குசினிக்குள் சென்று விரித்தே கிடந்த பழைய சாக்கில் உட்கார்ந்தாள். அவள் எவ்வளவோ முயன்றும் விரட்ட விரட்ட செத்த மீனில் குவிகின்ற ஈக்களைப் போல் நினைவுகள் அவளை மொய்த்தபடி இருந்தன.

அவளுக்கு இப்போது மனதுக்கு நிம்மதியாக இருந்தது. வாழ்க்கையில் ஒரு பிடிப்பும் உண்டாகியிருந்தது. இத்தனை நாட்களும் மறைத்தே வைக்கப்பட்டிருந்த உறவை தானாகவே ராமு யாருக்கும் பயப்படாமல் உறுதிப்படுத்தியது அவளுக்கு மகிழ்ச்சியை அளித்தது. இனி மற்றவர்கள் போல் அவள்

தலைநிமிர்ந்து நடக்கலாம். யாருக்கும் பயப்படத் தேவை யில்லை. ராமு நிச்சயம் தன்னை ஏமாற்றமாட்டான் என்பதில் அவளுக்கு ஒரு உறுதி. தோட்டத்து ஸ்டோரில் வேலை செய்யும்போது மயங்கி விழுந்ததை விசாரிக்க அவன் தன் காம்பராவிற்கு வருவான் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை..

...அப்போது உள்ளே வந்த ராமு மெல்லச் சிரித்துக் கொண்டு அவளைப் பார்த்தான். பார்வதியால் பதிலுக்கு உடனே சிரிக்க முடியவில்லை.. 'வாங்க' என்று அழைக்கவும் முடியவில்லை. வாய் ஏனோ ஒட்டிக்கொண்டு விட்டது. பிரியமானவர்களைக் கண்டால் இப்படித்தான் வாய் மூடிக் கொள்ளுமா! அட... வாய்தான் மூடிக் கொண்டு விட்டதே, கண்களால் பேசியிருக்கலாமே! ஆனால் அவளுடைய கண் களின் பார்வை அவனுடைய பார்வையை எதிர்கொள்ள முடியாது நிலம் பார்த்தது. அவ்வளவு வெட்கமா அவளுக்கு? சில நிமிடங்களே நிலவிய மௌனத்திலும் அந்த இருவரது நெஞ்சங்களும் துடித்த துடிப்பை அவர்களை விட யார் அறிவர்? எத்தனை எத்தனை எண்ணங்கள் ஓடி, ஓடி வருகின்றன! அவைகளுக்கு உருவம் கொடுத்தால் பெரிய காவியமே வரையலாம். பத்து நிமிடப் பேச்சிலும் பார்க்க பத்து நிமிட மௌனத்தில் கிளம்பும் எண்ணங்கள் தான் அதிகம். அவற்றுக்கு உருவம் கொடுப்பதுதான் கஷ்டம்.

ராமு மௌனத்தைக் கலைத்து முதலில் பேசினான். "ஸ்டோர்ல மயங்கி விழுந்ததா சொன்னாங்க.." அதற்கு மேல் அவனால் பேசமுடியவில்லை.

பார்வதி பதில் சொன்னாள். "ஆமா.. ராத்திரியும் சாப்புடல்ல. காலையிலயும் சாப்பிடல்ல... அதோட ஸ்டோர்ல வேலை செஞ்சேன். தேயிலை வாசத்தில தலை சுத்து வந்து விழுந்திட்டேன்..."

"ராத்திரியும் சாப்பிடாம காலையிலயும் சாப்பிடாம வேலைக்குப் போகலாமா? ஒரு துண்டுப் பாணாவது சாப்பிட்டுப் போவணும். அதுதான் நல்லது!"

அதற்கு மேல் எதுவும் பேசாமல் அவளுடைய பதிலையும் கேட்காமல் காம்பராவை விட்டு ராமு கிளம்பினான். அப்போதுதான் அவள் அவனை 'டீ' குடித்துவிட்டுப் போகச் சொன்னாள். அவன் அதனை மறுக்கவில்லை.

இவன் தன்னைத் தேடி வந்ததே அவளுக்குப் போதுமென்று இருந்தது. தன்மீது சுமத்தப்பட்டிருக்கும் இந்த விதவைக் கோலத்தைக் கலைத்து விட்டு வாழ, அவன் உதவுவான் என்பதில் அவளுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது.

பார்வதி எழுந்து சென்று கட்டைக் கருப்பையா நின்று கொண்டிருக்கும் பக்கம், இனித்தான் யாருக்கும் பயமில்லை என்பது போல் பார்த்துவிட்டு, வெளியே கொடிக்கயிற்றில் தொங்கிக் கொண்டிருந்த சேலையைப் பார்த்ததும் 'மாத்திக் கட்ட இந்த ஒரு சேலைதான் இருக்கு. இதையும் எவனும் திருடிட்டுப் போயிராம' என்ற நினைவு வரவும், அந்தச் சேலையை எடுத்து வந்தாள். காம்பராவில் அதை மடித்து வைத்து விட்டு, மீண்டும் வெளியே போய் நின்றாள். அவள் வேண்டுமென்றுதான் நிற்கின்றாளோ? நிற்கட்டுமே. என்ன பயம் அவளுக்கு...? வராந்தாவின் மேலே எப்போதோ கட்டித் தொங்கவிட்ட ஒரு கொழுந்துக் கூடை காற்றில் ஆடி அசைந்து கொண்டிருந்தது. காற்றின் வேகத்திற்கு ஈடு கொடுக்காமல் அது அறுந்து விழுந்துவிடும் போலிருந்தது.

தூரத்தில் நாயொன்று குரைத்தது. அது ஓயும்போது பூனையொன்று அசிங்கமாகக் குரல் கொடுத்தது. பூனையின் குரல் ஓயும் போது கட்டைக் கருப்பையாவும் ராமசாமியும் பேசிக்கொள்வது தெளிவாகக் கேட்டது. அவர்களின் பேச்சு

தன்னைப் பற்றியதாக இருந்தாலும் அவள் அதைப் பொருட் படுத்தவில்லை. ராமு கொடுத்து விட்டுப் போன தைரியம் அவளுக்கு உதவியாக இருந்தது.

அந்த இருவரும் பார்வதியின் காதில் விழட்டுமே என்று சத்தம் போட்டுப் பேசினார்கள்.

“வரவர ஒலகம் கெட்டுப் போச்சி... எங்கப் பார்த்தாலும் அக்குரும்பு கூடிப் போச்சி! கண் முன்னுக்கே அநியாயம் நடக்குது... அதுவும் பட்ட பகல்ல.. சே! கொஞ்சம் கூட மானம் மருவாதி இல்லாம..” கட்டக் கருப்பையா முதலில் தொடங்கினான்.

ராமசாமி அதற்கு ஒத்து ஊதினான்... “சீ வெக்கம் கெட்ட ஜென்மங்கள்.. எதுக்குத் தான் இப்படி வாழுதோ..! ஆக மோசம்டா... சுத்தி வர ஆளுக குடும்பம் இருக்கேலியே இப்படின்னா... யாரும் இல்லேன்னா..?”

கட்டக் கருப்பையா வாய்விட்டுச் சிரித்தான்.

“இப்படி வரப்போக இருந்தா வாந்தி ஏன் வராது? மயக்கம் ஏன் வராது?”

ராமசாமி காறி, ‘சீ’யென்று வாசல் பக்கம் துப்பினான். அப்போது எங்கிருந்தோ வந்த காற்று, அதைப் பார்வதியின் காம்பராவரை இழுத்துப் போட்டுவிட்டுப் போனது. ராம சாமியின் எச்சில் இப்போது அவர்களுடைய வார்த்தைகள் போல் அசிங்கமாகப் பார்வதியின் காம்பரா வாசலில் கிடந்தது. பார்வதியால் பொறுமையாக இருக்க முடியவில்லை. வராந் தாவில் அதற்கு மேலும் நிற்க முடியாதவாறு உணர்வுகள் முட்டிக் கொண்டு வந்தன. வாசலில் கிடந்த எச்சில் அவளைக் கேலி செய்வது போலிருந்தது. அவர்கள் இருவரின் வார்த் தைகளைவிட அந்த எச்சிலில் அசிங்கம் குறைவுதான். ஆனால் முகத்தில் துப்ப முடியாததால்தான் இப்படித் துப்பி

யிருக்கிறான். இதுவரை அவளிடம் இருந்த தைரியம் அந்த நொடிப் பொழுதில் சிதறியது. உள்ளே சென்று அழுதாள். எவ்வளவு கேவலமான வார்த்தைகள்?

அவர்களின் வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவளின் காதில் மோதின. ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு ஈட்டியாக நெஞ்சைக் குத்தின.. 'வறுமையில் சாப்பிடாமல் மயங்கி விழுந்ததைக் கேவலமாகச் சொல்கிறார்களே, படுபாவிகள்!..'

அழுது கொண்டிருந்த பார்வதியை ஆறுதல் படுத்த யாருமே வரவில்லை... அவள் அழவேண்டியவள் அழட்டுமே ... அதனால் என்ன? என்று நினைக்கிறவர்கள்தான் பக்கத்துக் காம்பராவில் இருந்தார்கள்..

அவள் விம்மி விம்மி அழுதாள்... அப்போது மட்டும் தபால்கார கந்தசாமி இருந்திருந்தால் அவளை அழவிடுவாரா?

'இதுக்கு போய் ஏன் அழவுறே? இவனுக எதையும் சொல்லட்டுமே! நரம்பில்லாத நாக்கு ஆயிரம் சொல்லும்.... அவனுக நல்லதும் சொல்ல வேணாம்.. கெட்டதும் சொல்ல வேணாம். அதை நாம கேக்க வேணாம்.. இவனுக என்னா பெரிய மனுசன்க?.. இவனுக வீட்டுக்குள்ளே ஆயிரம் இருக்கும்.. நீ இதுக்கு அழ வேணாம்!..'

தபால்காரருக்குப் பக்கத்துக் காம்பராக்காரர்கள் நிஜமாகவே பயம்தான்... தப்பித்தவறி அவரிடம் வாயைக் கொடுத்தால் 'நல்லா' வாங்கிக் கட்டுவார்கள்.

தபால்காரர் கந்தசாமி எப்போதும் பார்வதியின் காம்பராவில்தான் இருப்பார். அவளுடைய காம்பராதான் இப்போதும் அவருக்கு வீடு.. அவர் அங்கே இருப்பதைக் கூட சிலர் தவறாகக் கதை கட்டிப் பேசினார்கள்.. ஆனால் அதற்கு

பார்வதியோ அவரோ அசையவில்லை.. யாருமில்லாத அவளுக்கு யாருமில்லாத அவர்தான் உறவு.. அந்த உறவுக்கு அவள் சித்தப்பா என்று பெயர் வைத்துக் கொண்டாள்...

பார்வதியின் அழுகை கட்டக் கருப்பையாவின் காதிலும் ராமசாமியின் காதிலும் விழுந்தது... இருவரும் ஆளுக் கொரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டார்கள்.. அவள் அழுவதில் அவர்களுக்கு மகிழ்ச்சியும் சாதனை செய்த எண்ணமும் பிறந்தது....

தன் காம்பராவை நோக்கி நடந்து கொண்டிருந்த ராமு, பார்வதியின் காம்பராவில்தான் நடத்தி முடித்த நாடகத்தை அசை போட்டுப் பார்த்தான்.. இவ்வளவு நாளும் 'ரகசியமாக' பார்வதியைச் சந்தித்து வந்தது, இனிமேல் 'சந்தி'க்கு வந்து விடும். இன்னேரம் கட்டக் கருப்பையாவும் ராமசாமியும் போட்டிபோட்டுக்கொண்டு அவன் பார்வதியின் காம்பரா வில் இருந்ததை - அங்கே இருந்ததை தாங்கள் கண்ணால் பார்த்ததை கதைகதையாகச் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.. இந்தக் கதை அவன் அம்மா மூலம் அவனை சீக்கிரமே சந்திக்கப் போகிறது என்பது அவனுக்குத் தெரியும்... அம்மாவை நினைக்கும்போது அவனுக்குக் கவலையாக இருந்தது... அம்மாவை மட்டும் சமாளித்து விட்டால் போதும்...

வேகமாக நடக்க வேண்டும்.. வேகமாக நடந்தால் 'சுருக்கா' தன் காம்பராவிற்குப் போகலாம் என்று நினைத் தான் அவன். 'ஏன் மவன் இம்புட்டு நேரம்னு' அம்மா கேட்டால் எதையும் சொல்லிச் சமாளித்து விடலாம். ஆனால் பார்வதியின் காம்பராவிற்கு 'ஏன் போனே?' என்று கேட்டால் என்ன சொல்வது? ஏற்கனவே அவளிடம் பார்வதியோடு பேசுவதை சொல்லியிருக்கிறார்கள். அவளோ அதை நம்ப வில்லை.. ஆனால் இன்று கேட்டால் என்ன பதில் சொல்வது? ராமுவின் சிந்தனை, கேள்விகளை நீட்ட அவன் கைகளை 'விசுக்'கென்று வீசி வேகமாக நடக்கத் தொடங்கினான்.

வானம் இருண்டு கொண்டு வந்தது. குளிர் காற்று திடீரென்று வீசத் தொடங்கியது. திடீரென்று இயற்கையின் குமுறல்.. வேகமாக நடந்து கொண்டிருந்த ராமு ஒரு விநாடி அப்படியே நின்று வானத்தை அண்ணாந்து பார்த்து விட்டு மழை நிச்சயம் என்பதை உணர்ந்து கொண்டு சந்தோஷத்தில் 'சீட்டியடி'த்தான்... ஏதோ ஒரு சினிமாப் பாட்டு சீட்டியில் மலர்ந்தது. பாதையின் இரு பக்கங்களிலும் நின்ற பெரிய மரங்கள் காற்றில் அசைந்தன. முற்றிப் பழுத்த இலைகள் உதிர்ந்து பூமிப்பெண்ணின் நிர்வாணத்தை மறைத்தன. ரொம்பவும் காய்ந்துபோன சருகுகள் காற்றில் அள்ளுப்பட்டு அலைந்தன.

இடுப்பில் கட்டியிருந்த சாரமும் காற்றில் பறக்கவே ராமுவுக்குக் கோபம் வந்தது. சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு மனதுக்குள் காற்றைத் திட்டினான்.... 'சே! பேய்க் காத்து.. வர்ர மழைய பெய்யவுடாது போல இருக்கே.'

தூரத்தில் நிற்கும் ஆலமரத்திலிருந்து பருத்தி இலை ஒன்று அவன் முகத்தில் உரசிவிட்டுக் கீழே விழுந்தது. ஆலமரம் எங்கோ இருக்கிறது.. இலை எங்கே வந்து விழுகிறது' எல்லாம் காற்றுச் செய்யும் வேலை... காற்று வீசும் வேகத்தைப் பார்த்தால் முகிலை இழுத்துக் கொண்டு போனாலும் போகும் போல் இருக்கின்றது.. மழை இல்லா மையால் பூமியின் தேகத்தில் லட்சக்கணக்கான வெடிப்புகள் வாயைப் பிளந்து கொண்டு இருக்கின்றன. பச்சைப் பசே லென இருக்கவேண்டிய தேயிலைச் செடிகள் காய்ந்து சுருண்டு இலைகளை உதிர்க்கத் தொடங்கிவிட்டன. சில செடிகளில் இலைகளே இல்லை... விழுதுகள் மட்டும் குச்சிகளாக நீட்டிக் கொண்டிருந்தன..

ராமு மீண்டும் வானத்தைப் பார்த்தான்.. 'சட' 'சட' வென்று சில துளிகள் கீழே விழுந்தன. அவன் நெற்றியில் கூட மழைத்துளி விழுந்து சிதறியது. 'ஓ'வென்று இரைச்சல்...

கொடி விட்டுப் படரும் மின்னல்.. குளிர்ந்த காற்று... இவைகளுக்கு மத்தியில் மழைக் குழந்தை பிறந்து விட்டது...

மழைத்துளிகள் இப்போது பெரிய கற்களைப் போல் விழ ஆரம்பித்தன.. இதில் நனைந்தால் அவன் தொப்பையாக நனைய வேண்டும்... நனைந்தாலும் நல்லதுதான்! குளித்தது போல் இருக்கும்... ஆனால் போட்டுக் கொள்ள மாற்றுச் சட்டை அவனிடம் இல்லை. அவனிடம் இருப்பதே போட்டிருக்கும் ஒரே சட்டையும் சாரமும் தான்...

ராமு ஓட ஆரம்பித்தான்.. பக்கத்தில் ஒரு மொடக்குத் தாண்டினால் வருகிற மாரியம்மன் கோயில் வரைக்கும் ஓடினால் போதும் என்று நினைத்தான். கோயிலில் நனையாமல் நிற்கலாம். அதனால் ஓடினான்... அடேயப்பா என்ன ஓட்டம்? சரளைக் கற்கள் இருப்பதைக்கூட பார்க் காமல் வேகமாக ஓடினான்... அப்படியே ஓடி மாரியம்மன் கோயிலில் ஓரத்தில் நின்றாள்.. மூச்சு அவனுக்கு இளைத்தது...

தலையில் விழுந்த மழைத்தண்ணீர் தாடை வழியாக சொட்டுச் சொட்டாக வடிந்து கொண்டிருந்தது. சில நிமிடங்கள் அப்படியே நின்றான். பிறகு போட்டிருந்த சட்டையைக் கழட்டி கசக்கிப் பிழிந்தான். நன்றாகப் பிழிந்த பின்னர் சட்டையை உதறிவிட்டுப் போட்டுக் கொண்டான். சட்டை தேகத்தில் ஒட்டிக் கொண்டது. தேகம் முழுவதும் 'சில்'லென்று குளிர்ந்தது. கட்டியிருந்த சாரத்திலிருந்து சொட்டுச் சொட்டாக நீர் கொட்டியது...

வெளியே மழை வெளுத்து வாங்கியது.. பல நாட்கள் மழை பெய்யாததால் காய்ந்து போன பூமி குளிர்ந்ததால் ஒருவித மணமும் வீசியது.. ராமு அந்த மணத்தை நன்கு முகர்ந்தான்.. சில நிமிடங்கள் வரை அந்த மணம் நீடித்தது.. அது பின்னர் மழையில் கரைந்தது.

மழை பெய்வதை வேடிக்கைப் பார்த்த ராமு இப்போது கோயிலைப் பார்த்தான்.. கோயில் ரொம்ப பழைய கோயில்.. சிறிய கோபுரத்துடன் இருந்த அந்தக் கோயிலின் பின்பகுதி வீட்டைப் போல் கட்டப்பட்டிருந்தது.. சிக்கனத்தின் காரண மாக அப்படிக் கட்டி விட்டார்கள்.. அதனால் என்ன; பெரிய கோபுரத்துடன் பெரிய திட்டங்களுடன் பெரிய விளம்பரங் களுடன் கட்டத் திட்டம் போட்டு 'தலைமை'ப் பிரச்சனை வந்து கட்டமுடியாமல் போன பணக்காரர்களின் கோயிலை விட உழைத்து ஓடாகத் தேய்கின்ற இந்த வர்க்கத்தின் உழைப்பில் உருவான இந்தக் கோயில் சிறப்பானதுதானே? இந்தக் கோயிலைக் கட்டுவதற்காக எத்தனையோ மாதங்கள் எத்தனையோ நாட் சம்பளத்தை அள்ளிக் கொடுத்திருக் கிறார்கள் அவர்கள்... ஊர் ஒன்றுபட வேண்டும் என்பதற்காக கட்டப்பட்ட கோயில்.

இன்று அந்தக் கோயிலால் தோட்டத்தை ஆளுகின்ற வர்க்கத்தின் தந்திரத்தால் தோட்டமே பிரிந்து கிடக்கிறது. ஐந்து வருடத்திற்கு முன் திருவிழாவன்று முளைவிட்ட சாதாரண சண்டை கோஸ்டிச் சண்டையாக உருவெடுத்தது. அதன் பின்னர் கோயிலில் திருவிழாவே நடக்கவில்லை.. சாமி கும்பிடப் போகிற வர்களும் குறைந்து விட்டார்கள். பண்டாரம்தான் தினமும் பூஜை செய்து வருகிறார். அதுவும் மாதச் சம்பளத்திற்காக..

ராமு கோயிலின் ஒரு தூணில் ஒட்டப்பட்டிருந்த நோட்டீசைப் பார்த்தான். அப்போது அவன் முகத்தில் பார்க்க வேண்டுமே... படர்ந்த மகிழ்ச்சியை! அது அவன் ஒட்டிய நோட்டீஸ்.. அதுவும் ஐந்து வருடத்திற்குப் பிறகு நடக்கப் போகும் திருவிழாவுக்கான நோட்டீஸ்.. அந்த நோட்டீசைப் பார்த்துக் கொண்டிருந்தபோது அவன் நெஞ்சில் தோட் டத்து ஸ்கூலில் படிக்கும்போது பார்த்த தேர்த்திருவிழாக் காட்சிகள் நிழலாடின....

அவனுடைய அப்பா கூட அதைப் பெருமையாகச் சொல்வார். இப்ப என்ன திருவிழாவா நடக்குது? அந்தக் காலத்தில இல்ல திருவிழா பார்க்கணும். திருவிழா வருதுன்னு சொன்னா கெழடு கட்டைக வாண்டு வதக்கு எல்லாத்துக்கும் சந்தோசம்தான்... அன்னைக்குத் தோட்டமே சொர்க்க லோக மாகத்தான் இருக்கும்.. இந்தப் பகுதியில இருக்கிற ஆனுக ளெல்லாம் வந்திருவாங்க அவங்களுக்குச் சோறாக்கி போடு வாங்க.. தேர் போற நேரம் காவடி, கரகம், குதிரையாட்டம், பொம்மலாட்டம், புலியாட்டம், பேயாட்டம், சிலம்பாட்டம் எல்லாம் நடக்கும்.. நெருப்பு வெளையாட்டும் இருக்கும். அது கொஞ்சம் தவறினாலும் சுட்டுப் பொசுக்கும்... இதை பார்க்க குடுத்து வைச்சிருக்கணும்.

ஆளுக கூட்டம் கூட்டமாக ஜேன்னு வந்திருக்கும். பொட்டனி யாவாரிக வெதவெதமான சாமான் சட்டுகள் அள்ளிக் கட்டிகிட்டு வந்து கடை போட்டிருப்பாங்க.... இதை வாங்கிரதா - அதை வாங்கிரதான்னு இருக்கும். அம்புட்டு சாமான்.. தோட்டத்து வெள்ளைக்கார தொரகூட தேரு பார்க்க வருவாரு... நம்ம ராமு கூட அப்ப சின்ன பய. ‘அந்தக் கூட்டத்தில வெள்ளக்கார தொரய பார்க்கனும்ணு தோள் மேல குந்திட்டான்...’

ராமு மீண்டும் நோட்டீசைப் பார்த்தான். அப்போது தான் திருவிழாவுக்காகச் செய்யவேண்டிய வேலைகளின் ஞாபகமே வந்தது. திருவிழாவுக்காக அவனும் முத்துவும் இன்னும் சிலரும் இணைந்த விழாக் குழுவினர் ஒன்று சேர்ந்து நோட்டீஸ் அடித்தார்கள்... டவுனில் கூட நோட்டீஸ் ஒட்டி யிருக்கிறார்கள். கோயிலின் முன்பக்கம் நின்ற ராமு சிறிது நேரத்தில் ஓரமாக நடந்து பின் பக்கமாகப் போனான்... அப்போதுதான் அவனால் கோயிலின் பின் பக்கம்.. முத்து நின்று கொண்டிருப்பதைக் காண முடிந்தது...

## அத்தியாயம் – 2

"யாரு? முத்துவா..?" ஆர்வத்துடன் குரல் கொடுத்தான் ராமு. அந்தக் குரலைக் கேட்டதும் திரும்பிப் பார்த்த முத்து ஆச்சரியத்துடன் ராமுவின் அருகே ஓடி வந்தான்.. "அட... ராமுவா! ஒன்ன பார்க்கலாம்னுதான் இருந்தேன். கோயில் வேலயெல்லாம் எப்படி இருக்கு?.."

ராமு புன்னகையுடன் சொன்னான்.. "திருவிழா கமிட்டி யில் ஒரு ஆளா இருந்துகிட்டு நீயே இப்படி கேக்கிற? எல்லாரும் சேர்ந்துதான் செய்யணும்.. அதுசரி நீ எங்க வந்த?.."

"நான் விறகு பொறுக்க வந்தேன்... மழை வந்திருச்சி... கெடைச்சதைப் பொறுக்கிட்டு வந்துட்டேன்..." என்ற முத்து சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மெதுவாகக் கேட்டான்... "ஆமா.. ஒன்னய வேலையில இருந்து வெலக்கினாங்களே அது என்னாச்சி? திரும்ப வேல கெடைக்குமா? நம்பிக்கை இருக்கா?.."

ராமு நம்பிக்கையுடன் பதில் கொடுத்தான்.. "அதெல் லாம் சரியாகும். அப்படி சரிவரலேன்னா அதை சரி வர வைப்பேன். அப்பதான் நா மனுசன்! இவனுக பன்ற அநியாயத்துக்கு ஒரு முடிவு கட்டத்தான் வேணும்.. நம்ம ஆள்கல மனுசன்னு நெனைக்காம ஆடு மாடு மாதி நெனைச்சு மேய்க்கப் பார்க்கிரானுக... இவனுகளுக்கு நல்ல பாடம் படிச்சி கொடுக்கணும்...!"

அவன் சத்தம் போட்டே பேசினான்.. அவன் போட்ட சத்தத்தில் முத்து பயந்தே விட்டான்... அவனுடைய கண்கள் அங்கும் இங்கும் நகர்ந்து தவித்தன. முத்து பயந்தவன்.. ஒரு ஆளை வெட்டித் துண்டு துண்டாகப் போட்டாலும் நமக்கு

எதற்கு வம்பு என்று ஒதுங்குகின்ற பரம்பரையில் வந்தவன். ஆனால் ராமு நேர்மாறு அவனுக்கு... யாரிடமும் தோட்டத்து துரையிடமும் துணிந்து நியாயத்திற்காகப் பேசுவான். நியாயத் திற்காக அவசியம் ஏற்பட்டால் கரங்களையும் நீட்டுவான்! மலைகளுக்கு அப்பால் இருக்கின்ற உழைப்பவர்களின் உரிமைக்கும் அவர்களின் தன்மானத்திற்கும் அங்கிருக்கிற சுரண்டல்களுக்கும் அநியாயத்திற்கும் தன் ஏந்தனியாகக் குரல் கொடுப்பான். இதனால் அந்தத் தோட் -த்துத் துரை அவனோடு பேசுவதற்கே யோசிப்பார்...

"அதுசரி ராமு! நீ எதுக்காக அந்த புது சுப்பவைசரோட சண்டைக்கு போன? அவன் நம்ம தோட்டத்துத் தொரைக்கு வேண்டியவனாச்சே!.."

"அவனோட நான் ஏன் வீண் சண்டைக்கு போறேன்?.. அவன் தான் என்னோட சண்டைக்கே வந்தான்... நம்ம பாப்பாத்திக்காக ஞாயம் கேக்க போனதால வந்த தகராறு.." என ராமு ஒரு பெருமூச்செறிந்து விட்டு அந்தக் கதையைச் சொன்னான்.

"நம்ம பாப்பாத்தியதான் ஒனக்குத் தெரியுமே! ஆளு பார்க்க அழகானவ.. அந்த தோட்டத்தில மிச்சம் பேருக்கு அவ மேல ஒரு கண்... இந்த சுப்பவைசர் யாருமில்லாத நேரத்தில அவ கைய புடிச்சி இழுத்திருக்கான்... பாப்பாத்தி குய்யோ முய்யோன்னு சத்தம் போட்டா.. அது என் காதில விழுந்திச்சி நான் அதே மலையில வேற எடத்தில இருந்தேன்.. ஒடனே நான் பாப்பாத்தி இருந்த எடத்துக்குப் போனேன்.. சுப்பவைசர் ஆடு திருடின கள்ளன் மாதிரி முழிச்சான்.. இது ஞாயமான்னு கேட்டேன் அதுக்கு நீ யாரு இதை கேக்கன்னு ஏசினான்... எனக்குச் சரியான கோபம் .. சொல்லிச்சொல்லி பார்த்தேன். கேக்கிற மாதிரி தெரியல்ல.. ஒடனே கையால ஞாயத்தை காட்டினேன்..! செம்மையா முதுகில ரெண்டு மூனு

போட்டேன் மறுநா வேலைக்கி போனேன். வேலை நிப்பாட்டிருக்குன்னு சொன்னாங்க. ஏன்னு கேட்டதுக்கு நான் சுப்பவைசரோட சண்டைக்குப் போனேன்னு சொன்னாங்க.."

முத்து சுருக்கமாகச் சொன்னான்... "தோட்டத்தில் அநியாயம் கூடிப் போச்சி.. நம்ம மாதிரி ஏழைக என்ன செய்யிரது?"

ராமு 'வெடுக்'கென்று சொன்னான்.. "நீயே இப்படி சொன்னா எப்படி நாம எல்லாரும் தைரியமா ஒன்னு சேர்ந்தா இவனுகள என்ன இவனுக அப்பனையே என்னான்னு கேக்கலாம்...! ஆனா நமக்குள்ள தான் ஆயிரம் கோஷ்டி இருக்கே... நாம இப்படி இருந்தா பிரிஞ்சு கிடந்த நாலு மாட்டையும் சிங்கம் சாப்பிட்ட கதைதான் இங்கயும் நடக்கும்..."

"அதுனான நெசம்தான்" என்றான் முத்து. மழை 'லேசு' 'லேசாக' வானத்திலிருந்து பன்னீர் தெளிப்பது போல் பெய்யத் தொடங்கியது...

முத்து புறப்பட ஆரம்பித்தான்... பிறகுதான் அவனுக்கு பொறுக்கி வைத்த விறகு ஞாபகத்திற்கு வந்தது.. "காலையில் வந்து எடுக்கலாம்" என்றவாறு நடந்தான் அவன்.

தன் லயத்திற்குப் போகும் குறுக்குப் பாதை வந்ததும் நின்று முத்து, ராமுவிடம் "ராமு! சும்மாதானே இருக்கே!... காம்பரா வரைக்கும் வந்திட்டு போகலாமே.. அப்படியே உன் அத்தையைப் பார்க்கலாமே!" என்றான்.

ராமுவுக்கு உடனே முகம் 'கறு'த்தது. வாயில் பாகற்காய் விழுந்து விட்டது போன்ற ஓர் உணர்வு.. அது நெஞ்சுக் குள்ளும் இறங்கியது... முத்துவின் மேல் 'கேந்தி' வந்தது... 'கேந்தி' வந்து என்ன செய்ய? அவனுக்கு அத்தையும் அத்தைக்கு ஒரு பெண்ணும் இருப்பது நிஜம்தானே?..

"அத்தை வீட்டுக்கா அங்க போக மாட்டேன்.. இனி போறது இல்லேனு வைச்சிருக்கேன்.." தன் மனதிற்குள் அத்தையைத் திட்டினான்.. 'அத்தையாம் அத்தை.. அத்தைய எனக்கு புடிக்கஇல்ல..'

"அப்ப நீ அங்க போகவே மாட்ட?..." முத்துதான் கேட்டான்.

அதற்கு ராமு உடனே காட்டமாகப் பதில் சொன்னான்.. "போகவே மாட்டேன். மனுஷ சாதியா அவங்கள்ளாம்.. நேரத்துக்கு தகுந்த மாதிரி ஆளுக்கு ஏத்த மாதிரி மாறுவாங்க.. எனக்கு அவங்களப் புடிக்காது!"

"அப்படின்னா அத்தை மகளை யார் கட்டிக்கிறது?... ஒனக்காகத்தான் வைச்சிருக்கேன்னு அத்தை தெனம் சொல் லிக் கிட்டிருக்கே!"

"அவங்க சொன்னா சொல்லட்டும்.. எனக்கென்னா? நா கட்டிக்க மாட்டேன்!"

"உண்மையை சொல்லு அத்தை மகளே ஏன் கட்டிக்க மாட்டே?" முத்துவின் இந்தக் கேள்வியில் ஒரு புது அர்த்தம் இருப்பது போல் தெரிந்தது ராமுவுக்கு.. அதனால் அவன் பதில் சொல்லவில்லை.. அந்தக் கேள்விக்குப் பதிலாக பார்வதி அவன் மனதில் புன்னகைப்பது அவனுக்குத் தெரியும். அதை அவனிடம் சொல்லாமல் சொல்ல விரும்பாமல் பதில் எதுவுமே சொல்லாமல் "சரி நா வர்ரேன் முத்து!" என்று சொல்லிவிட்டு நடக்கத் தொடங்கினான் அவன்.

"அட! இதுக்குப் போயி கோபமா போறியே?" என்றான் முத்து. ராமு எதுவும் பேசாமல் நடந்தான். முத்து குறுக்குப் பாதை வழியில் இறங்கினான். ராமுவின் கோபத்தைப் பற்றி அவனுக்குத் தெரியும்.. நாளை பார்த்தால் எதுவும் நடக்காதது போல் பேசுவான்..

சிறிது தூரம் நடந்த பின்னர் தான் முத்துவோடு பேசி இருக்கலாம் என்ற எண்ணம் ராமுவின் நெஞ்சில் வந்து நின்றது. பிறகு நாளை பேசிக்கலாம் என்று தனக்குத்தானே சமாதானம் செய்தான்.. அவன் மனதில் வேறு எண்ணங்கள் படையெடுத்து கம்பளிப் பூச்சியாய் நெஞ்சில் அரித்தன..

அத்தை மகள் ராணியை, எப்படியாவது ராமு தலையில் கட்டிவைக்கப் பார்க்கின்றாள். ஆனால் அதே அத்தைதான் ஒரு வருடத்திற்கு முன்னர் டவுனில் கடை வைத்திருக்கும் முதலாளியின் மகனை மாப்பிள்ளை மாப்பிள்ளை என்று வாய் நிறையக் கூப்பிட்டு விருந்து வைத்துக் கொண்டிருந்தாள். அவனும் ஒவ்வொரு மாதமும் கொடுத்த கடனை வசூலிக்க வரும்போது அத்தையின் லயத்திற்கு வந்து போயிருக் கின்றான்.. அன்றெல்லாம் ராமுவை அத்தை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஆறு மாதத்திற்கு முன்னர் வேறு ஒரு முதலாளியின் பெண்ணை அத்தையின் டவுண் மாப்பிள்ளை திருமணம் செய்து கொண்ட பின்னர்தான் இவன் மீது திடீர் பாசம் வந்தது.

அத்தையும் அவனுடைய சம்மதத்தை வாங்க ஓடியாடிப் பார்க்கிறாள். ராமுவின் அம்மாவும் அப்பாவும் அத்தையின் மகளைக் கட்டிக் கொள்ள விரும்புகிறார்கள். ஆனால் அவனோ அதை நேரடியாக மறுக்காமல் அவ்வப்போது எதையாவது சொல்லித் தட்டிக்கழித்து வருகிறான். இப்படி எத்தனை நாளைக்குத் தான் தட்டிக் கழிக்க முடியும்!

அத்தை மகள் ராணியின் நினைவு ராமுவின் மனதில் கசப்புணர்வைத் தந்தபோது பார்வதியின் நினைவு அந்தக் கசப்புணர்வைத் துரத்துமாப் போன்று மெள்ள மெள்ளக் குவிந்தது.

ஓ! பார்வதி... அவள் அழகானவள்தான். ஆனால் ஊரே இழுத்தோடப் பார்க்கும் அழகுடையவள் அல்ல... லேசான

கருப்பானாலும் அந்தப் கருப்பிலே செதுக்கப்பட்ட சிலையாக அவள்.. அந்தச் சிலைக்கு உயிர் கொடுப்பது போல் இதழோரத்தில் மலரும் புன்னகை.. தேனில் நனைந்தது போன்ற குரல். அதை விட மேலாக அவனுடைய எண்ணங் களுக்கும் இலட்சியத்திற்கும் வளைந்து நெளிந்து உதவக் கூடியவள்.. ஆனால் இன்று அவளைக் கறுப்புத் திரையிட்டது போல் மறைத்திருக்கிறது இந்த விதவைக் கோலம்..

படிகளில் ஏறினான் ராமு. அந்தப் படிகள்தான் அவன் இருக்கிற லயத்தையும் அவன் நடந்து வந்த பாதையையும் இணைக்கின்ற பாலம்.. அதில் கிட்டத்தட்ட பதினைந்து படிகள் இருக்கின்றன. இதுவரை எழுபடிகளில் ஏறிவிட்டான். எட்டாவது படியில் ஏறப் போனான்.. அப்போதுதான் வீரனைப் பார்த்தான். வீரன் அவன் ஆசையோடு வளர்க்கிற நாய். கீழே குனிந்த ராமு மேலே தாவி நின்ற வீரனைத் தூக்கி தன் தோளில் போட்டுக் கொண்டு படிகளில் ஏறி தன் காம்பராவின் உள்ளே போனான்.. காம்பரா உள்ளே போனதும் வீரன் தானாகவே கீழே குதித்து வெளியே மீண்டும் ஓடியது...

ராமு குசினிக்கே நேராகப் போனான்.. அவனுடைய அப்பா வராந்தாவில் இருமிக் கொண்டே படுத்திருந்தார்.. அவனுடைய அம்மா மீனாட்சி குசினியில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தாள்.. அவனைக் கண்டதும் கோபத் துடன் கேட்டாள்.. "ஆமா டவுனுக்கு போயிட்டு வர இம்புட்டு நேரமா? வெரசா வரக் கூடாது.. மழையில வேற நனைஞ்சி வந்திருக்க.. மொதல்ல தலையை துவட்டு.. இல்லே காய்ச்சல் வரும்.. இம்புட்டு வளர்ந்தும் இன்னும் சின்ன புள்ள புத்தி தான்! ம்.. போய் நல்லா தலையைத் துவட்டு.. ராமு மௌனமாக நடுக்காம்ப்ராவிற்குத் திரும்பினான்.. குசினி யிலிருந்த மீனாட்சி அவனுக்குக் கேட்கட்டும் என்று முணு முணுத்தாள்.. "வயசுதான் அது பாட்டுக்கு ஏறிக்கிட்டு

போவுது.. அநியாயமா சுப்பவைசரோட சண்டை போட்டு இப்ப வேலையும் இல்ல.. எவளை எவன் இழுத்தா இவனுக்கென்னா? என்னைக்கி இவன் திருந்துவானோ?.."

உள்ளே தலையைத் துவட்டிக் கொண்டிருந்த ராமுவுக்கு மீனாட்சியின் இந்த 'முணுமுணுப்பு' கேட்கத்தான் செய்தது.. அம்மா மீது அவனுக்குக் கோபம் வந்தது.. ஆனால் பேசாமல் இருந்துவிட்டான். பேசினால் வீண் வம்புதான் வந்து சேரும்.. என்று அவனுக்குத் தெரியும்.. அதனால்தான் அவன் மௌன மாக இருந்தான்..

தலையைத் துவட்டி முடித்த போது மீனாட்சி ஒரு கிளாஸ் நிறைய 'டீ' போட்டு அவனிடம் கொடுத்தாள்.. அவன் அதைக் குடிக்க நினைத்து யோசித்து விட்டு அப்படியே அதை எடுத்துக்கொண்டு போய் படுத்தே கிடக்கின்ற அப்பா விடம் கொடுத்து அவரைக் குடிக்க வைத்தான்.. அவர் குடித்து முடிந்ததும் கிளாஸை குசினியில் கொண்டு போய் வைத்தான்.

வாசலில் வீரன் குரைக்கும் சத்தம் கேட்டது. வாசலைப் பார்த்தான் ராமு. கேட்டு லயத்து செல்லையா நின்று கொண்டிருந்தான். மீனாட்சியும் எட்டிப் பார்த்தாள்.. பிறகு ராமுவுக்கு முன்னமே வாசலுக்குப் போனாள் அவள்.. ராமு அவன் பின்னே போனான்..

இருவரின் விழிகளும் ஆர்வமாய் இருந்தன.. ராமுவின் மனதில் கூடவே செல்லையா ஏன் வந்திருக்கிறான்? என்று ஒரு நினைவு ஓடியது..

செல்லையா உள்ளே வராமல் வெளியே நின்று கொண்டே சொன்னான்.. "நம்ம வேலுக்கெழவன் செத்து போயிட்டாரு.. கமிட்டி ஆளுக உங்கள வரச் சொன்னாங்க.."

மீனாட்சியின் முகம் 'சுரு'ங்கியது. செத்த வீட்டு வேலைக்கு மகன் போகப் போகிறான் என்பது புரிந்து

விட்டது.. அதற்கேற்றாற் போல் செல்லையாவிடம் ராமு, 'நான் வர்ரேனு' சொன்னது அவள் காதில் விழுந்துவிட்டது. கோபத்துடன் கேட்டாள்..

"பொணம் எடுக்கிற நேரம் போனா என்னா? நீ போய்தான் எல்லாமே செய்யனுமோ? அதுக்கு தான் தோட்டத்தில தொரை மாருக - கணக்குபுள்ள மாருக தலைவர் மாருக எல்லாம் இருக்காங்களே?.."

ராமு துணிந்து சொன்னான்.. "இருக்காங்க ஆனா இதுக் கெல்லாம் வரமாட்டாங்க... போன மாசம் குருவிக் கெழவி செத்ததுக்கு வந்தானுகளா? கடேசியில் நாங்கதான் செஞ்சோம்.. சாமி கெழவனுக்கும் நாங்கதான் செய்யனும். அவனுக்கு யாரு இருக்கா?.."

மீனாட்சிக்கு ராமு சாவுக் காரியங்களைச் செய்யப் போகிறான் என்பது நேரடியாகப் புரிந்துவிட்டது. கோபத்தில் ராமுவின் அப்பா அருகே போய் சத்தம் போட்டாள்.

"இதைக் கவனிக்க மாட்டீங்களா? ஒங்க மகனுக்கு ஊர் வேலையே வேலையா போச்சி.. இப்படி இருந்தா எப்படி முன்னேற முடியும்?.."

அவர் இருமிக் கொண்டே "நீயாச்சு ஒன் மகனாச்சி... எனக்கிட்ட ஏதும் சொல்லாதே!.." என்று பேச்சுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தார்..

ராமு ஒரு டவலைத் தோளில் போட்டுக் கொண்டு காம்பராவை விட்டு வெளியே நடக்கத் தொடங்கினான்.

## அத்தியாயம் – 3

புதை குழியிலிருந்து பகல் ஒரு மணியைப் போல் வேலுக் கிழவனின் சடங்கு சம்பிரதாயங்களை முடித்துக் கொண்டு வந்த ராமு பீலியடியில் குளித்துச் சாப்பிட்டு விட்டுப் படுத்தவன்தான், இப்போதுதான் கண்களைத் திறந்து பார்க் கின்றான்.. அப்போதுதான் அவனால் தான் இன்னமும் போர் வைக்குள்ளே இருப்பதை உணர முடிந்தது. பிறகு மெள்ள போர்வை என்ற கௌரவத்துடன் போர்த்திக் கொண்டிருந்த பழைய எட்டு முழு வேட்டியைக் கழுத்துவரை நீக்கிவிட்டு படுக்கையில் உட்கார்ந்தான்...

அவனுக்கு எழும்பவே மனமில்லை, கண்களில் இன்ன மும் தூக்கக் கலக்கம் இருந்தது. இமைகள் இரண்டும் பசை போட்டு ஒட்டியது போல் ஒட்டிக் கொண்டன.. இன்னும் கொஞ்சம் நேரம் தூங்கினா நல்லது என்று நினைத்தான். ஆனால் அப்போதைய நேரம் காம்ராவில் குப்பிலாம்பு எரிகிறதே... அப்படியென்றால் அந்தி சாய்ந்து இரவாகி விட்டது போலும்!

அவனுடைய நெஞ்சில் வேலுக்கிழவனின் நினைவுகள் ஆடிக் கொண்டிருந்தன...

செல்லையா வந்து சொன்னதுமே போனவன் இராவெல் லாம் அங்கேயே இருந்து ஆகவேண்டிய வேலைகளைக் கவனித்தான். அவனுக்கு முன்பேயே வேலுக்கிழவனின் காம்பராவிற்குக் கமிட்டியைச் சேர்ந்தவர்கள் சந்திக்கடை முதலாளி இன்னும் பல பேர் உட்கார்ந்திருந்தார்கள்.. அவன் தான் கடைசியாகப் போனான்.. ஆனால் அவனுக்காக அ!னைவரும் காத்திருந்தார்கள்.. அவன் இல்லாமல் எதையும்

செய்யமாட்டார்கள்.. அவர்கள். அதற்குக் காரணம்.. அவன் கமிட்டியின் தலைவன் என்பதலா? இல்லை... இது போன்ற காரியங்களைச் செய்ய அவர்களிடையே ஓர் உணர்வை ஊட்டியவன் என்பதால்..

சந்திக்கடை முதலாளி அவனைப் பார்த்ததுமே, "கமிட்டி வைச்சு ஆறே மாசமானாலும் நெறைய வேல இருக்கு இல்ல.." என்று துக்கத்துடன் கேட்டார். ராமு அவரின் கேள்வியில் இருந்த உண்மையை உணர்ந்து பார்த்தான். ஒரு காலத்தில் செல்வத்தைக் குவிக்க உழைத்து வந்த அவர்களிடையே வரட்சியாலும் மனித ஜாதியின் சுரண்டலால் வந்த வறுமையாலும் பட்டினிச் சாவுகளும் நோய் நொடிச் சாவுகளும் நடந்திருக்கின்றன... வயிற் றோட்டத்தால் ஒரு கிழவனும் கிழவியும் கல்யாணம் கட்ட இருந்த பூமணியும் உயிரை விட்டிருக்கிறார்கள்.. பட்டினியால் மூன்று வயசானதுகள் போயிருக்கின்றன.. இவையெல்லாம் இந்த ஆறு மாத காலத்தில் ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லி வைத்தாற் போல் நடந்தன.. இந்தச் சாவுக்காரியங்களை இவர்களிடையே உருவான கமிட்டிதான் கவனித்தது.. ஒரு சாவுக்கும் தோட்டத்துத் துரையின் மனம் இறங்கவில்லை.. முதல்முதல் நடந்த சாவுக்குப் பெட்டி கேட்டதற்குத் 'தோட்டம் இப்ப நட்டத்தில் போவுது..' என்று காரணத் தைக் காட்டி 'ஒத்த காசு' தர மறுத்து விட்டார்...

துரை மறுத்ததும் அவர்களிடைய கமிட்டி உருவாகியது. இதை உருவாக்கச் சொன்னவர் சந்திக்கடை முதலாளிதான்.. அவரும் இந்தக் கமிட்டிக்குக் காசு கொடுத்திருக்கிறார்.. லயம் லயமாக ஏறி இறங்கி சில்லறைகளும் சேர்த்துக் கொள் வார்கள்.. இந்தத் தொகையில்தான் பெட்டியெடுத்து மற்ற வேலைகளைப் பார்ப்பார்கள்.. பற்றாக்குறையைச் சாவுக்கு வருபவர்கள் போடும் கட்ட மொய்யில் சமாளிப்பார்கள்.

அனாதைப் பிணம் என்பதற்காகச் சடங்கு சம்பிரதாயங் களுக்குக் குறைவே இருக்காது. சொந்தம் பந்தம் வீடுவாசல் உள்ளவர்கள் செத்தால் நடப்பது போல் நடக்கும்.. லயம் லயமாக ‘கேதம்’ சொல்வார்கள்.. நான்கைந்து பெண்கள் ஒப்பாரி வைப்பார்கள்.. அதுவும் இல்லாவிட்டால் பார்வதி யாவது அழுவாள்.

நெருப்பில் காச்சிய த பு ‘செஞ்ச’னொக்கு போடும். லயத்திலிருந்து பாதை வரைக்கும் பிணத்தைத் தூக்கும்போது வண்ணான் நடை பாவாடை விரிப்பான். குழி மேட்டுக் காரியங்களுக்குப் பாபர் வருவான்... சாமிக்கண்ணுவுக்கும் இப்படியே நடந்தது.

வேலுக்கிழவன் நல்லவன்.. அவன் எத்தனையோ பேருக்கு உதவி செய்திருக்கிறான்.. திருவிழா வந்தால் காவடி கரகம் ஆடுவான்.. வேல் குத்துவான். ஒரு தடவை பறவைக் காவடியும் எடுத்தான்.. கோயிலில் ஓடி ஆடி வேலை செய்தான்.. சின்னப் பிள்ளைகளுக்கு நோய் கண்டால் கை மருந்து செய்து கொடுப்பான்; விபூதி மந்திரிப்பான்..

அவன் செத்தது ராமுவுக்குக் கவலையைக் கொடுத்தது.. அந்தக் கவலையை சந்திக்கடை முதலாளியிடம் சொன்னான். சந்திக்கடை முதலாளி அதற்குப் பதில் கொடுத்தார்..

“என்ன செய்ய? கெழவன் நேர காலம் சரியா போச்சி! உசிர் போயிருச்சி... போற உசிரை நம்மால் நிப்பாட்ட முடியுமா? இருந்தாலும் கெழவன் இன்னும் கொஞ்ச நாளைக்கி இருந்திருக்கலாம்.. ஆனா ஆறு மாசமாவே நோயில் இருந்தான்..! என்ன செய்யிரது?”

வாசலில் வீரன் குரைக்கும் சத்தம் கேட்டது. ராமு நினைவுகளை அறுத்துக் கொண்டு வாசலைப் பார்த்தான்...

யாரோ ஓடிவரும் சத்தம் கேட்டது.. முதலில் பக்கத்துக் காம்பராக் கிழவியின் பேரன் மூர்த்தி ஓடிவந்தான்.. அவனுக்குப் பின்னால் வீரன் ஓடி வந்தது..

ராமுவின் அருகில் உட்கார்ந்த மூர்த்தி சில கேள்விகளை எழுப்பினான்..

"ஏன் அண்ணே! இப்ப தூங்கவா போறீங்க?.."

"இப்பதான் தூங்கி முழிச்சேன்!..." ராமு சொன்னான்..

"அப்ப இன்னைக்கி ராத்திரிக்கு தூங்கமாட்டே? ராத்திரி என்ன செய்வ?..."

"ராத்திரிக்கு தூங்குவேன்.." என்று பேச்சைத் திசை மாற்றினான் ராமு. மூர்த்தியின் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டே போனால் அது சங்கிலித் தொடராக நீண்டு போகும்.. வாய் வலிக்கும்.. சின்னப்பயல்... வானத்தை வில்லாக வளைத்துக் கேட்கும் பருவம்! ராக்கெட்டை விட வேகமாகப் பறக்கும் அவன் எண்ணங்கள்..

மூர்த்தி வீரனையே பார்த்தான்... வீரன் வாலை ஆட்டிக் கொண்டு நாக்கை நீட்டிக் கொண்டும் இருந்தான்.. வால் சும்மா சும்மா அசைந்தது.. ஓ! அதுவும் பாஷையில் பேசப் போகிறதாம்..! பேசட்டுமே!

உள்ளே அப்பாவின் இருமல் தொடர்ந்தது..

ராமு உடனே எழுந்து படுக்கையைச் சுருட்டிப் போட்டுவிட்டு மூர்த்தியை அங்கேயே இருக்கச் சொல்லி விட்டு முகம் கழுவப் பின் பக்கமாய் ஓடினான்.. அம்மா வருவதற்குள் முகம் கழுவி விடவேண்டும்..

அம்மா வந்தால் இவ்வளவு நேரம் தூங்கியதற்கு 'ஏச்சு' கிடைத்தாலும் கிடைக்கும்...

சில நிமிடங்களில் ராமு திரும்பிய போது உள்ளே பேச்சுக் குரல் கேட்டது..

"யாரு.. ராமம்மாவா?.. எங்க போனீங்க?" மூர்த்தியின் கேள்வி.

மீனாட்சி சொன்னாள்...

"நம்ம ராணி தெரியுமா?.. அவங்க காம்ராவுக்குப் போனேன்..."

ராமுவுக்கு அம்மா சொன்னது புரிந்தது... அவனுடைய அத்தை வீட்டுக்குப் போய்விட்டு வந்ததை கோடிட்டுக் காட்டுகிறாள்.., அதுவும் நம்ம ராணியாம்..

அவனுக்குக் கோபம்தான் வந்தது!. முகத்தை டவலால் துடைத்தவாறு உணர்ச்சியைக் கட்டுப்படுத்தினான்..

மூர்த்தி மீனாட்சியிடம் சொல்லிவிட்டு வெளியே ஓடினான்.. அவன் பின்னே வீரன் ஓடியது. ராமுவுக்கு வெளியே போக வேண்டும் போலிருந்தது...

அன்று இரவு சாப்பிட உட்கார்ந்தான் ராமு. மீனாட்சி அவனுக்கு ரொட்டியும் சம்பலும் கொடுத்துவிட்டுச் சொன்னாள்,

"அத்தை யாருக்கோ கடுதாசி எழுதனும்ணு சொல்லிச்சி.. காலையில ஒரு ஓட்டம் ஓடிப் போயி எழுதிக் குடுத்திட்டு வா..."

அவன் கோபத்துடன் சொன்னான்.. "கடுதாசி எழுத எனக்கு நேரமில்லை.. காலையில நான் சந்திக்கடைக்கு போறேன்.. மொதலாளி வரச் சொன்னாரு.. சும்மா இருக் கிறதுக்கு அங்க வேலை செய்ய போறேன்!"

"ஆமா; இப்படியே ஓசி வேலை செஞ்சுகிட்டிருந்தா சரிதான்... நேத்து சாவு வேல.. இன்னைக்குத் தூக்கம். நாளைக்கி சந்திக்கடை.. இந்த தோட்டத்த கெடுக்கிறதே சந்திக்கடை மொதலாளிதான்.. அவருதான் முக்கியமா? தாயி புள்ளையவுட அவன்தான் நாளைக்கி தாங்குவான்!"

மீனாட்சி கோபமாகக் குத்தலாகப் பேசினாள்.. ராமு சாப்பிட்டு முடியும் வரை பேசவே இல்லை.. சாப்பிட்டு முடிந்ததும் படுக்கையை விரித்துவிட்டான்... தூக்கம் வராவிட்டாலும் தூங்குவது போல் கிடக்கலாமே!...

சேவுகன் காம்பரா ரேடியோ சத்தமாக பாடிக் கொண் டிருந்தது.. மூன்றாவது காம்பரா ராசலிங்கம் 'நாட்டில்' போய்க் கள்ளைக் குடித்துவிட்டு உளறிக் கொண்டிருந்தான்... நாலாவது காம்பராவில் சாமியார் தாத்தா லயத்து வாண்டு களுக்குக் கதை சொல்லிக் கொண்டிருந்தார்..

மீனாட்சி படுத்திருக்கிற கணவனின் அருகே உட்கார்ந்து 'முணுமுணு'த்தாள்..

"எனக்கொன்னும் தெரியாது! நீயாச்சு.. மகனாச்சி!.. எப்படியும் போங்க!" என்று சொல்லிவிட்டு அதற்கு மேல் பேச முடியாமல் இருமினார்.

அவர் நிரந்தர நோயாளி.. அடிக்கடி அவருக்கு இருமல் வரும்.. நெஞ்சு வலிக்கும்.. சில நேரத்தில் அவர் இருமும் போது லயமே பயப்படும்.. இந்த இருமலால்தான் அவ்ர் வேலைக்குப் போகாமல் படுக்கையோடு இருக்கிறார்..

மீனாட்சி கவலைப்பட்டாள்... 'கடவுளே! கசமாலம் புடிச்ச நோய் எப்படித்தான்... ஒங்களுக்கு வந்திச்சோ! கடவுளே... நீ தான் காப்பாத்தனும்!.."

மௌனமாக மீனாட்சியின் கணவன் யோசித்தான். எப்படி இந்தக் காசநோய் இவருக்கு வந்தது?.. அது அவருக்கு மட்டுமே தெரியும்.. ஆனால் ராமுவும் மீனாட்சியும் அதற்கு வேறு காரணம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.. பத்து வருடத்திற்கு முன் 'வாயைக்கட்டி வயித்தக்கட்டி' சேர்த்து வைத்திருந்ததை அவசரத் தேவைக்காகக் கேட்டு வாங்கிய தோட்டத்துத் துரை அதைத் திருப்பிக் கொடுக் காமலே போய்விட்டதால் வந்த கவலைதான் இந்த நோய்க்கு காரணம் என்பதே அவர்கள் எண்ணம்.. உண்மையில் காரணம் அதுவல்ல - துரையின் அம்மாவே காரணம்...

ராமுவின் அப்பா துரை தரும் சில சலுகைகளுக்காக அவர்மீது நம்பிக்கை வைத்திருந்தார். அடிக்கடி பங்களா வுக்குப் போய் வந்தார்.. பங்களாவில் விறகு உடைத்துக் கொடுப்பார்... காய்கறித் தோட்டத்தைக் கவனிப்பார்.. சமையலில் ஊடமாட உதவி செய்வார்.. நாளாக நாளாக அவருக்கும் பங்களாவிற்கும் உறவு நீண்டது. அந்த உறவில் தான் சேர்த்து வைத்திருந்ததையே கொடுத்தார். அத்தோடு நிற்கவில்லை.. அவர் உறவு! காச நோயாளியான துரையின் அம்மாவைக் கவனிக்கும் அளவிற்குப் போனது. துரையே தொடப் பயந்த அம்மாவின் எச்சிக் கொத்தைக் கழுவிக் கொடுத்தார். அவருக்கு நல்ல மனது.. ஆனால் காச நோய்க்கு அது இருக்குமா?.. மெள்ளமெள்ள அவரையே பிடித்துக் கொண்டது.. முதலில் லேசாக இருமினார்.. கை மருந்து சாப்பிட்டார். இருமல் நிற்கவில்லை.. மாறாக நெஞ்சு வலித்தது.. இருமினார். இருமலோடு ரத்தமும் வந்தது. இப்போது மருந்தும் மாத்திரையும் என்று இருக்சிறார் அவர்..

'எம்புட்டு மருந்தெடுத்துக் குடுத்தும் போகமாட் டேங்குதே!...' என்று நினைத்துக் கவலைப்பட்டான் ராமு...

காலையில் மீனாட்சி படுக்கையைப் பார்த்தாள். ராமு இல்லை.. எல்லோருக்கும் முதல் எழுந்து போய்விட்டான்... எங்கே போயிருப்பான்?.. சந்திக்கடைக்குத்தான் போயிருப் பான்... 'ஒரு. நாளைக்கி அந்தச் சந்திக்கடைகாரனை பார்க் காட்டி பொழுது போகாதே! அவனாலதான் இவன் இப்படி இருக்கிறான்..'

மீனாட்சியின் நெஞ்சுக்குள் ஆத்திரம் குமிறிக் கொண்டே இருந்தது. காம்பரா வாசலில் நின்று கொண்டிருந்த ராமுவைக் கண்டதும் அத்தைக்கு வியப்பு.. அவள் முகத்தில் மகிழ்ச்சி ரேகைகள் ஓடின.. மீனாட்சியிடம் இரவுதான் சொல்லியனுப்பினோம்.. காலையில் ஒரு பக்கம் விடிவதற் குள்ளேயே வந்துவிட்டானே!

'இவனுக்கு நம் மேல் ஒரு பாசம் இருக்கத்தான் செய்கிறது' என்று நினைவு ஓடியது அவளுக்கு. ராமு வாசலிலேயே நின்றான்..

"தம்பி! வாங்க... ஏன் வெளியவே நீக்கிறீங்க.. வாங்க!..."

ஒரு புன்னகையோடு அவனை வரவேற்றாள் அத்தை... முதலில் அத்தை வீட்டுக்குப் போகக் கூடாதென்றுதான் நினைத்திருந்தான் அவன். அந்த நினைப்பு உறுதியாகவும் இருந்தது. பிறகு அவனாக அத்தை வீட்டுக்குப் போய் ஒரு லெட்டர் எழுதிக் கொடுப்பதால் குறைந்து விடப்போவ தில்லை என்று உணர்ந்து அந்த உறுதியைத் தளர்த்தினான். கடிதம் எழுதிக் கொடுக்க முடிவெடுத்தான். அப்படி எழுதிக் கொடுக்காவிட்டால் உலகம் என்ன நினைக்கும்? அந்தத் தோட்டத்தில் முடியாதவர்களுக்கு உதவி செய்தவனுக்கு. போன கிழமைகூட ஒரு கிழவியைக் கூட்டிக் கொண்டு ஆஸ்பத்திரியில் மருந்தெடுத்துக் கொடுத்தவனுக்கு ஒரு கடிதம் எழுதிக் கொடுக்க முடியாதா?..

ராமு வேறு வழியில்லாமல் லெட்டர் எழுதிக் கொடுக்க வந்தாகி விட்டது.. இனி என்ன தயக்கம்! என்று எண்ணிக் கொண்டே உள்ளே நுழைந்தான்.

அந்தக் காம்பராவின் உள்ளே ஒரு ஒட்டை நாற்காலி இருந்தது. அத்தை சொல்வதற்கு முன்பே அதில் உட்கார்ந் தான். அது அவனுடைய பாரத்தைத் தாங்காமல் 'கீறிச்'சென்று சத்தம் போட்டு ஆடி அசைந்தது..

"ஒட்டை நாக்காலி தம்பி! பார்த்து உக்காருங்க.. டீ ஊத்திகிட்டு வாறேன்.." அத்தை குசினிக்குப் போனாள்.

ராமு நாற்காலியில் இருந்தவாறு காம்பராவைச் சுற்றித் தன் பார்வையை ஓடவிட்டான். காம்பராவில் ஒரு கொடிக் கயிறு கட்டப்பட்டிருந்தது. அதில் பழைய சேலை ஒன்றும் பாவாடைகளும் கிடந்தன. சுவர்களில் சினிமாப் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. தொப்புளைக் காட்டிக் கொண்டும், பல்லை இளித்துக் கொண்டும் அரைகுறை நடிகைகள் அதில் இருந்தார்கள். ஏன் இந்தப் போஸ்டர்களை ஒட்டினார்களோ?. அவனுக்கு இந்தப் போஸ்டர்கள் எல்லாம் பிடிக்காது. அவனுடைய காம்பராச் சுவர்களில் சாமி படங்களும் பொன் மொழிகளும் ஒட்டப்பட்டு இருக்கின்றன.

நேரத்தைப் போக்குவதற்காக அவனுடைய கண்கள் அந்தச் சுவரில் தேடுதல் வேட்டையில் இருந்தன.. இப்போது அவனுடைய கண்ணுக்குச் சுவரின் ஒரு மூலையில் மாட்டப்பட்டிருந்த ஒரு புகைப்படம் தெரிந்தது சில நிமிடங்கள் அதை உற்றுப் பார்த்தான்... பிறகு திடீரென்று நாற்காலியை விட்டு எழும்பி அதன் அருகே போய்ப் பார்த்தான். ஓ! அந்தப் படம்.. அந்தப் படத்தில் அவனும் இருக்கின்றான்! அவனோடு அத்தை மகளும் இருக்கின்றாள்.. இருவரும் குழந்தையாக இருந்தபோது மாத்தளை டவுனுக்கு

தேர் பார்க்கப்போன நேரத்தில் பிடித்த படம்.. அதில் ஒரு பிரதி அவனிடமும் இருக்கிறது..

அவனுடைய மனதில் 'பளிச்சென்று' சில எண்ணங்கள் மின்னின.. 'சின்னப் புள்ளையில அத்தை மக அழகாத்தான் இருந்திருக்கா.. இப்பதான் கறுப்பாயிட்டா.. நெறமும் மாறிப் போச்சி! நெறம் மாறுனாலும் பரவாயில்ல; குணமும் இல்ல மாறிப் போச்சி!'

ராமு மீண்டும் அந்த நாற்காலியில் உட்கார்ந்தான். உள்ளே குசினியில் பேசும் சத்தம் கேட்டது. ராணியும் அத்தையும் பேசுகிறார்கள் போலும்..

"ஏன் நிக்கிற ராணி! ரொட்டிய கொண்டு போயி குடு.!"

ராணி முகம் சிவந்து வெட்கப்பட்டாள்.

"அட இப்படி வெக்கப்பட்டா அவன் ஒன்ய கட்டிக்க மாட்டான். போ ராணி.."

அவள் கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாகத் தள்ளினாள் அத்தை.

ராணி தட்டிலுள்ள ரொட்டியை ராமு முன்னே வைத்துவிட்டு குசினிக்கே ஓடிவிட்டாள். அவள் வந்த வேகமும் தெரியவில்லை. போன வேகமும் தெரியவில்லை. அவ்வளவு வெட்கமாம் அவளுக்கு.

ராமு வெறுப்புடன் ராணியை சாடையாகப் பார்த்தான். பிறகு ஏன் பார்த்தோமென்று நினைத்தான். அவனுக்கு அவளை எந்த வகையிலும் பிடிக்க மாட்டேன் என்கிறது. பிடிப்பு இருந்தால்தானே ஆசையின் துடிப்புகள் மலரும்... தட்டில் இருக்கும் ரொட்டியைப் பார்த்தான். ரொட்டி சில இடத்தில் கருத்தும் வெளுத்தும் 'மொறு' 'மொறு'

வென்றிருந்தது. அவனுக்கு ரொட்டி பிடிக்கும்.. தினமும் சலிக்காமல் ரொட்டி சாப்பிடுவான். அவனுடைய உடம்பு கூட முக்கால் வாசி மாவு ரொட்டியில் உருவானதாக இருக்கும். இதுவரை எத்தனையோ ரொட்டிகளை உள்ளே தள்ளியிருக்கின்றான்.. தட்டில் கிடந்த ரொட்டியை ஆசை யுடன் எடுக்கப் போன ராமு மனதில் 'இந்த ரொட்டி அத்தை மக கொண்ணாந்தது தானே' என்ற நினைவு வரவே கைகள் பின் வாங்கின. ராமு ரொட்டியைத் தொடாமலே இருந்தான். அவன் நினைவுகளில் பார்வதி சிரித்துக் கொண்டிருந்தாள்.. ஓ.. பார்வதி! அவளை அவனால் மறக்கவே முடியவில்லை... எங்கே போனாலும் அவள் ஞாபகம் வந்து விடுகிறது...

முதன் முதலாகப் பார்வதியை நேருக்கு நேர் பார்த்தது, பேசியது தோட்டத்துக் கமிட்டிக் கூட்டத்தில்தான்.. அதற்கு முன்னரே அவளின் அறுந்து போன வாழ்வைப் பற்றித் தெரிந்து கொண்டு கவலைப்பட்டான். அந்தக் கவலை தான் அவள் மீது அன்பு காட்டிடவும் வைத்தது. விதவை என்பதற்காக அவளை ஒதுக்கி வைக்க விரும்பவில்லை..

கமிட்டிக் கூட்டத்திற்குக் கூட அழைத்திருந்தான் அவளை.. கமிட்டி சொல்வதை ஆளுக்கு முதல் செய்ய வருவாள். சாவுக்குக் கூட அவள்தான் முதல் பெண்ணாக போவாள்.. துரை - கணக்குப்பிள்ளை ஆகியோருக்குக் கூடப் பயப்படாமல் கமிட்டியின் இலட்சியங்களுக்கும் சுரண்ட லுக்கும் எதிரான போராட்டங்களுக்கும் ஒத்துழைத்தாள்.. இதனாலேயே அவள் மீது ராமுவுக்கு தனி விருப்பம் மனதில் அரும்பி மலர்ந்தது...

பார்வதியின் நினைவுகள் ராமுவின் மனதில் மெள்ள ஒரு சுகானுபவத்தை எழுப்பி நின்றன. விதவை என்பதால் அவன் மட்டும் அவளை ஒதுக்கவில்லை. ஆனால் மற்றவர்களோ

அவளோடு பேசவும் மாட்டார்கள் சிரிக்கவும் மாட்டார்கள்! அவள் தாலி அறுத்தவளாம் அது அவளாகத் தேடியதல்ல.. காலம் விதித்த கோலம்... மற்றப்படி அவள் எதில் குறைச்சல்? அழகிலா? உழைப்பதிலா? பெண்ணுக்கு உள்ள லட்சணங் களிலா?.. புருஷன் உயிரோடு இருக்கும்போது அற்ப சலுகைக் காக மலையிலும் மடுவிலும் கணக்கப்பிள்ளையோடு கொஞ்சு கிறவர்களை விடக் குறைந்தவளா என்ன? இவள் கணவன் என்ற ஒருவனோடுதான் சில மாதம் வாழ்ந்திருக்கிறாள். அதுவும் தாலி கட்டியவனோடு... ஆனால் சிலரோ சிலதுக்காக எத்தனையோ பேர்களோடு...

தட்டில் வைத்திருந்த ரொட்டி அப்படியே இருந்தது... அத்தை 'டீ' கிளாஸோடு வந்தாள்.

"அட...! இன்னுமா சாப்புடல்ல?.."

ராமு புன்னகையில் சமாளித்தான்.

"ம்.. சாப்புடுங்க தம்பி! ஏன் எங்க வூட்ல சாப்பிடக் கூடாதுன்னு இருக்கா?..."

அத்தையின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் ராமு ஒரு ரொட்டியை எடுத்து அதில் ஒரு துண்டைப் பிய்த்து வாயில் போட்டான். அத்தை சிரித்துக் கொண்டிருந்தாள்.. உள்ளே இருந்த ராணி கதவு வழியாக அவனைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

## அத்தியாயம் – 4

தார் ரோட்டுக்கும் தோட்டத்திற்கும் போகிற ரோட்டுக்கு நடுவில் உள்ள மேட்டுப் பகுதியில்தான் அந்த சந்திக்கடை தன்னந்தனியாக கம்பீரத்துடன் இருக்கிறது. அக்கம் பக்கத்தில் கடைகளோ வீடுகளோ இல்லை. தார் ரோட்டில் ஓடுகிற பஸ் சந்திக்கடையருகேதான் நிற்கும். அநேகமாக அந்தப் பாதை யில் ஓடும் எல்லா பஸ் வண்டி களும் ஏழெட்டுப் பேரை இறக்கிவிட்டுத்தான் போகும்...

பஸ்ஸிலிருந்து இறங்குபவர்கள் சந்திக் கடையில் கால் வைக்காமல் போகமாட்டார்கள். பீடி, சிகரெட், வெற்றிலை வாங்கவாவது போவார்கள்.. அதுவும் வாங்காதவர்கள் பேப்பர் வாங்க, தபால் வந்திருக்கிறதா என்று பார்க்கவாவது போவார்கள். அந்தப் பகுதிப் பேப்பர் எஜன்ட் அந்தக் கடை தான். பலருடைய தபால் முகவரியும் அந்தக் கடைதான். தினமும் தபால் வரும் தபால் பெட்டியும் அங்கே இருக்கிறது. எல்லா வகையான சில்லறைச் சாமான்களும் அங்கே இருக் கிறது. இதனால் ஒரு ஊசி வாங்கக்கூட அந்தக் கடைக்குத் தான் ஓடி வருவார்கள்.

காலையில் ஆறு மணிக்கு கடையைத் திறந்து இரவு எழு மணிக்கு மூடுவார் சந்திக்கடை முதலாளி. இரவு எழுமணிக்கு மேல் ஒத்தப் பலகையில் வியாபாரம். பத்து மணிக்கு மேல் ஒருவரின் முகம் தெரியக்கூடிய அளவுக்குப் பலகையில் உள்ள திறந்து மூடக்கூடிய ஓட்டையில் வியாபாரம் நடக்கும். ஒரு நாள் சந்திக்கடை மூடப்பட்டால் ‘சந்திக்கடை மூடியாச்சாமே ஏன்?’ என்று எல்லோரும் பேசிக் கொள்வார்கள். அந்த அளவிற்கு அந்தக்கடை முக்கியமாகி

விட்டது. கடை மட்டும்தானா? முதலாளி இல்லையா? முதலாளியும்தான்...!

சந்திக்கடை முதலாளி மீது அந்தத் தோட்டத்தில் உள்ளவர்கள் பெரும் மதிப்பு வைத்திருக்கிறார்கள். அவர் எல்லோரோடும் பேசுவார். வியாபாரத்தில் அதிக லாபம் வைக்கமாட்டார். தோட்டத்தில் உள்ளவர்களுக்கு கடன் கூடக் கொடுக்கிறார்.. இந்தக் கடனுக்காகக் சம்பளவாசல் பக்கம் கால் வைக்க மாட்டார். காசு அவர் கடையைத் தேடி வந்துவிடும். முடியாதவர்களுக்கு உதவி செய்வார். தோட்டத்தில் ஒன்றென்றால் ஓடிப் போவார். அவருடைய எண்ணங்கள்தான் ராமுவுக்கும் அவருக்கும் ஒரு நட்பை ஏற்படுத்தியது. அடிக்கடி சந்தித்துப் பேசிக் கொள்வார்கள். சந்திக்கடையில் ஆள் இல்லாவிட்டால் அந்த நேரத்தில் ராமு சும்மா இருந்தால் வேலை செய்ய வருவான்.

இன்றும் அப்படித்தான்.. வேலுக்கிழவனின் சாவிற்கு வந்தபோது சந்திக்கடை முதலாளி ராமுவிடம், "வேலை இல்லாம சும்மா தான் லயத்தில இருக்கே! ரெண்டு மூணு நாளைக்கி கடைக்கு வா... வேலைக்கு இருந்தவன் லீவுல வீட்டுக்கு போயிருக்கிறான்!" என்று சொல்லி அழைத்தார். அவனும் அத்தைக்குக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வந்து விட்டான்.

ராமு சந்திக்கடைக்குப் போனபோது முதலாளி பேப்பர் பார்த்துக் கொண்டிருந்தார். கடையில் வேறு யாருமே இல்லை. அவனைக் கண்டதும் பேப்பரை மடித்து வைத்து விட்டு அலுமாரி மீது உள்ள மேசைக் கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஒன்பதாகி விட்டது. ஆறு மணிக்கு வருகிறேன் என்று சொன்னவன் இப்போது தான் வருகிறான்...

"கடை தொறக்கிற நேரம் வர்ரேனு சொன்ன... மணி ஒம்பதாச்சே!"

ராமு புன்னகையுடன், போன மாதம் ஒரேயடியாக இந்தியா போன அத்தையின் சித்தப்பாவுக்கு அத்தை கடிதம் எழுதிக் கேட்டதையும் - எழுதிக் கொடுத்துவிட்டு வந்ததையும் சொன்னான்.

"அத்தை வீட்டுக்கே போகமாட்டேனு சொன்ன...! மனம் மாறியிருச்சா?..." சிக்கலான கேள்வியைச் சிரிப்புடன் கேட்டார் சந்திக்கடை முதலாளி.

"மனசு மாறல்ல. லெட்டர் எழுதிக் கேட்டாங்க.. எழுதிக் கொடுத்தேன். ரொட்டியும் சாப்பிட்டேன். அதுக்காக அத்தை மகளை கட்டிக்குவேணா, அதுதான் இல்ல..."

"அத்தை மகளை கட்டாட்டி பரவாயில்ல. அவங்களுக்கு ஒதவி செய்ய மறக்காதே! அதுதான் முக்கியம்!"

சந்திக்கடை முதலாளி உள்ளே போனார். திரும்பி வந்த போது இரண்டு கிளாஸில் 'டீ' இருந்தது. ஒரு கிளாஸை ராமுவிடம் கொடுத்தார். அவர் 'டீ'யும் ஊற்றுவார்.. சமையலும் செய்வார். இரண்டிலும் கெட்டிக்காரர்.. வேலைக் காரன் இல்லாதபோது இரண்டையும் அவர்தான் செய்வார்.. குடும்பத்தையெல்லாம் இன்னும் தோட்டத்தில்தான் வைத் திருக்கிறார். அவரின் மனைவி இன்னமும் தோட்டத்தில் கொழுந்தெடுத்து வருகிறாள்.. இரண்டு பேரும் 'டீ' குடித்தார்கள்...

"ஆமா ஒன் வேலை என்னாச்சி? கெடைக்குமா? தொரை என்னா சொன்னார்?"

"தொரைகிட்ட அதை பத்தி பேசல்ல.. பிரதிநிதிக்கிட்ட சொல்லியிருக்கேன். அவரும் தொரைக்கி லெட்டர் போட்டு இருக்காரராம்! பார்ப்போம் என்னா பதில் வருதுன்னு. பதில் என்ன வந்தாலும் என்னைய வேலைக்கி சேர்த்துக்

கிரேன்னு வந்தாலும் இந்த தொரைக்கி ஒரு பாடம் படிக்காம வுடமாட்டேன்!"

ராமுவின் முகம் சிவந்தது....

"அதுக்கு எல்லாரும் ஒன்று சேரணும்! அப்பதான் தொரை பயப்படுவான்.. பாதிப்பேர் தொரை பக்கமும் மீதிப் பேர் ஒன் பக்கமும் இருந்தா முடியாது! எல்லாரும் ஒன்னாகனும். அஞ்சு வெரலும் ஒன்னு சேர்ந்தாதான் கையே வேல செய்யும். அப்பதான் எதையும் சாதிக்கலாம்..."

ராமு யோசித்தான்... இவர்களை ஒன்று சேர்க்க முடியுமா? தன்னிடம் துரைக்கு எதிராகப் பேசுபவர்கள் துரையைக் கண்டதும் வாயை மூடிக் கொள்வார்கள். அட வாயை மூடிக் கொண்டாலும் பரவாயில்லையே! துரையின் அநியாயத்துக்கு எதிராகச் சுரண்டலுக்கு எதிராக அவரிடம் ஒன்றாகப் போய்க் கேட்போம் என்றால் ஒரு பிள்ளை வராது. அவனும் கமிட்டியைச் சேர்ந்த சிலரும் பார்வதியும் தான் வருவார்கள்...

போன மாதம் நடந்த சம்பவம் அவன் நினைவில் நின்றது.

அன்று தோட்டத்து ஸ்கூல் மாஸ்டர் ஒழுங்காகப் படித்துக் கொடுக்காமல் எஸ்டேட் ஒபீசில் கணக்கெழுதிக் கொண்டு இருப்பதைக் கண்டித்து எல்லோரையும் துரை யிடம் முறைப்பாடு செய்வதற்காக வரச் சொல்லியிருந்தான் ராமு. ஆனால் சொன்ன நேரத்திற்கு ராமுவும் முத்துவும் பார்வதியும் வேறு சிலரும் மாத்திரமே வந்திருந்தார்கள். மற்றவர்கள் ஏனோ வரவில்லை. மறுநாள் அவர்களிடம் ஏன் என்று கேட்டதற்குத் தலைவலி காய்ச்சல் அசதி என்று பொய் சொன்னார்கள். அவர்களுக்கு அன்று எதுவுமே இல்லை என்று அவனுக்குத் தெரியும்.. அவர்கள் நழுவியதற்கு

காரணமே தோட்டத்து துரையிடம் முறைப்பாட்டுக்காக போய் நின்றால் பிறகு என்ன வருமோ என்ற பயம்தான்...

இப்படி எத்தனையோ சம்பவங்கள்... இருந்தாலும் ராமு மனம் தளரவில்லை... இன்று துரைக்குத் தொடை நடுங்கும். இவர்களை ஒன்று திரட்டி துரையையே பயப்பட வைக்க முடியும் என்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கை இருந்தது அவனுக்கு.. அந்த நம்பிக்கையில்தான் உழைக்கின்றான். அந்த உழைப்பில் மலர்ந்தவை தான் தோட்டக் கமிட்டி, தேர்த் திருவிழாக் கமிட்டி!

"இவங்களை ஒன்னு சேர்க்க முடியும்னு எனக்கு நம்பிக்கை இருக்கு! இவங்க ஒன்னு சேர்ந்திட்டா தொரய என்னா சேதின்னு கேக்கலாம்.. ஆனா ஆளுக தான் பயப் படுராங்க. ஆளுகள கூட ஒரு மாதிரி பேசி சேர்த்திரலாம்.. ஆனா பழைய தலைவரும் அவர் லயத்து ஆளுகளும் தொரைக்கு ஆதரவா இருக்காங்க... அவங்கதான் மத்த ஆளுகள கூடத் தொரையோட ஏன் மோதுறீங்க? அவர் பதவி என்னா! அந்தஸ்து என்னா! அவரோட போட்டி போட்டு வெல்ல முடியுமான்னு சொல்லி பயமுறுத்தி மனசையே மாத்திரானுக... மொதல்ல இவனுகளுக்கு ஒரு பாடம் படிச்சி கொடுக்கணும்!"

ஆவேசத்துடன் வார்த்தைகளை உதிர்த்தான் ராமு....

சந்திக்கடை முதலாளி நிதானமாகச் சொன்னார்... "அந்த ஆளுகள குறை சொல்லிப் பயனில்லை... தோட்டத்தில லயத்துக்கு ஒரு சங்கம் இருக்கிரதுனால தான் தொரை மார்களுக்கு ஆதாயமா இருக்கு! ஆள்க பயப்படுறதுல காரணம் இருக்கு... நம்ம ஆள்களுக்கு நம்ம உரிமை - சங்கம் என்னான்னே தெரியாது.. நாமதான் கொஞ்சம் கொஞ்சமா அவங்களுக்கு எடுத்து சொல்லணும்... தொரைக்கு பயப்படுற

வங்களை மெல்ல மெல்ல நம்ம பக்கம் இழுக்கணும்.. அவங்க விரோதியில்ல... ஏதோ இப்ப தொரைக்கி பயந்துகிட்டு இருக்காங்க... என்னய கூடதான் மொதலாளின்னு சொல் ராங்க! தோட்டத்து மொதலாளிய என்னான்னு சொல்றது? அவரோட என்னய ஒப்பிடலாமா?. நானும் முந்தி தோட்டத்தில வேல செஞ்சவன்தான். இப்ப வயித்தில ஒபரேசன் பண்ணினதுனால கஷ்டமான வேலை செய்ய முடியல்ல.. அதுனால இந்த யாவாரத்தை செய்யிரேன்! இதில மத்த யாபாரிக மாதிரி கொள்ளையடிக்கல்ல.... ஏதோ கொஞ்சம் ஆதாயம் கெடைச்சா போதும்னு செய்யிரன்... ஆனா என்னய எல்லாரும் சந்திக்கடை மொதலாளின்னு சொல்ராங்க! அது எனக்குப் பிடிக்கல்ல... ஆனா பேரை மாத்த முடியல்லியே?.."

ராமு அவர் சொன்னதில் உள்ள உண்மைகளை ஒரு கணம் உணர்ந்து பார்த்தான்.. பெரிய போர்டு மாட்டி, சாமி படங்களுக்கு பூப்போட்டு விளக்கேற்றி கடையைத் திறந்து அப்பாவித் தொழிலாளர்களைக் கண்டதும் பல்லிளித்து வெற்றிலை போடச் சொல்லி, தாய்ப்பிள்ளை போல் பேசிச் சிரித்து அவர்கள் போல் கொள்ளை இலாபம் அடித்து உறிஞ்சுகின்ற முதலாளி அல்ல இவர்; ஒரு காலத்தில் தோட்டத்தில் மழை இல்லாமல் எல்லோரும் கஷ்டப் பட்ட போது கடனுக்கு அரிசி மாவு, மரவள்ளிக்கிழங்கு கொடுத்து எல்லோரையும் காப்பாற்றியவர். ஒரு தோட்ட நிர்வாகம் செய்ய மறுத்ததை இவர் தனி ஆளாக இருந்து செய்தார்.

அன்றிரவு ஏழு மணி வரை ராமு கடையில் இருந்து முதலாளிக்கு உதவி செய்தான். ஏழு மணியானதும் அங்கேயே சாப்பிட்டு விட்டு லயத்திற்குப் போக முதலாளி கொடுத்த டோர்ச்லைட்டோடு புறப்பட்டான். அவனுக்கு இரவிலும் அங்கு இருக்க விருப்பம்தான்.. 'அப்பாவுக்கு சொகமில்ல.

ஏதும் அவசரமின்னா யார் இருக்கா? நீ கிட்ட இருக்கத்தான் வேணும்! ராத்திரியில ஒன்னுன்னா யார் பார்ப்பா?' என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தார்.

லயத்தில் மீனாட்சி சாப்பிடச் சொன்னாள். ராமு சந்திக் கடையில் சாப்பிட்டு விட்டதாகச் சொன்னான். காலையிலும் சாப்பாடு வேண்டாம் என்று சொல்லிவிட்டான். மீனாட்சி ஒன்றும் சொல்லவில்லை. ஒரு விதத்தில் அவன் சந்திக் கடையில் இருப்பது சந்தோஷம்தான்...

'லயத்தில இருக்கிறதுக்கு கடையில இருக்கிறது நல்லது தான்... இங்க இருந்தா சும்மா சரி எவனாவது வந்து ஊர் வேலைக்கு கூட்டிக்கிட்டுப் போவாங்க. கடையில இருந்தா முடியாதில்ல.. இவனை மெல்ல மெல்லதான் திருத்தணும் - திருத்தலாம். நேத்து அத்தைக்கி கடுதாசி எழுதித்தர மாட்டேன்னவன் இன்னைக்கி காலையில எழுதிக் குடுத் திட்டானே' என்று எண்ணிக் கொண்டாள்.

சந்திக்கடையில் இரண்டு நாட்கள் ராமு வேலை செய்தான். மூன்றாவது நாள் வேலைக்காரன் பகலில் கடைக்கு வந்தான். அவன் வந்ததும் ராமு லயத்திற்குப் புறப்படப் பார்த்தான். முதலாளி விடவில்லை. டவுணுக்குப் போய்ச் 'சாமான் வாங்கனும்' என்று அவனையும் டவுணுக்கு கூட்டிப் போனார். இரவு ஏழு மணிக்கு மேல் சாமான்களோடு ஒரு லொறியில் இருவரும் வந்தார்கள். லொறியிலிருந்து சாமான்களை இறக்கி முடிக்கும் போது மணி எட்டரைக்கு மேலாகிவிட்டது. அதன் பின்னர் கடையிலே சாப்பிட்டு விட்டு காலையில் போகலாம் இரு! என்று முதலாளி சொன்னார். ஆனால் இவனோ கடையில் சாப்பிட்டான்.. காலையில் வருவதாகச் சொல்லிவிட்டு டோர்ச் லைட்டோடு லயத்திற்குப் புறப்பட்டான்...

தனியாக நடப்பதில் ராமுவுக்குப் பயமே கிடையாது. கையில் வெளிச்சம் இருந்தது. அதைவிட மேலாக மனதில் தைரியமிருந்தது. வேகமாக நடந்தான். இப்போது நடந்து போகிற அந்தக் 'கரத்தை' ரோட்டு வழியாகப் போனால் ஸ்டோரைத் தாண்டித்தான் போக வேண்டும். தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல். ஆனால் தைரியமாகப் போகலாம். குறுக்குப் பாதையில் போனால் மனதுக்கு நிம்மதி இல்லை. பாதையும் மோசமானது. பாதையில் கல்லும் முள்ளும் பூச்சியும் புழுவும் ஏராளம்.

வானில் சந்திரன் இல்லை. ஒரே இருட்டு... பாதை யோரத்தில் நிற்கிற சவுக்கு மரங்கள் காற்றில் ஆடி அசைந்து 'உய் உய்' என்று சத்தம் போட்டன. வேறு சில விநோதமான சத்தங்கள் தூரத்தில் யாரோ சொல்கிற கதைக்கு 'ஊம்' போடுவது போன்று ஊமைக்கொட்டான் போடுகிற ஊம் சத்தம் பயங்கரமாகக் கேட்டது. அவனுக்குப் பழகிப் போன சத்தங்கள்...

தூரத்திலிருந்த ஸ்டோர் வெளிச்சம் இப்போது பாதை யில் விழுந்தது. கையிலிருந்த டோர்ச்சை அணைத்தான் ராமு. பாதையெங்கும் வெளிச்சம் இருக்கும்போது ஏன் டோர்ச் போடுவான்? ஸ்டோரை நெருங்கினான் அவன்.

அப்போது ஸ்டோரில் யார் யாரோ போவதும் வருவதும் நிழல்களாய்த் தெரிந்தன. அதைப் பார்த்த ராமு, மேலே நடக்காமல் பாதையோரத்திலிருந்த ஒரு கல்லின் மீது உட்கார்ந்து கொண்டான். பார்வை ஸ்டோருக்கு நீண்டது. மனம் என்ன நடக்கிறது என்று அறியத் துடித்தது. சிறிது நேரத்தில் அவனுக்கு மெல்ல மெல்ல என்ன நடக்கிறது என்று புரிந்து கொள்ள முடிந்தது.

## அத்தியாயம் – 5

ஸ்டோரில் யாரோ ஒருத்தன் ஒரு மூடையைத் தூக்கிக் கொண்டு போகின்றான். அவன் துரையின் கையாள்தான்... துரையின் பங்களாவுக்குத்தான் இந்த மூடை போகிறது. மூடையில் நிச்சயம் மிளகு இருக்கும் அல்லது தேயிலை உரம். இது தோட்டத்தின் முதலாளிக்குத் தெரியாமல் துரை செய்கிற சுரண்டல். இதில் மட்டும் தானா சுரண்டல். தேயிலையின் ஏலத்தில்; தோட்டத்தில் ரிப்பேர் செய்வதில்; ஏழைத் தொழிலாளியின் உழைப்பில் எல்லாவற்றிலும் சுரண்டல்தான்.. இப்படி சுரண்டிப் பணம சேர்ப்பதுதான் அவர் கொள்கை. இதற்காக எதையும் செய்வார். அவர் சொன்னதுதான் நீதி. வைத்ததுதான் சட்டம். இவைகளை மீறினால் அவர்தான் நீதிபதி... தண்டனை எப்படி இருக்கு மென்று சொல்ல முடியும்?

ராமுவின் மனதில் அந்த நேரத்தில் ஒரு காட்சியைக் கொண்டு வந்து நிறுத்தியது. அது பல மாதங்களுக்கு முன்னர் நடந்த சம்பவம்...

அன்று லயத்தில் தனது காம்பராவில் பேப்பர் பார்த்துக் கொண்டிருந்தான் ராமு. அப்போது தோட்டத்துக் கணக்கப் பிள்ளை வெற்றிலைக் காவி படிந்த பற்கள் அத்தனையையும் காட்டியவாறு அவனுடைய காம்பராவிற்கு வந்தார்.. அவரு டைய சிரிப்பையும் ஒரு நாளுமில்லாமல் படியேறி வந்த தையும் ராமு யோசித்துப் பார்த்தான். கணக்கப்பிள்ளை லேசில் சிரிக்கமாட்டார்.. சிரித்தால் முத்து உதிரும் என்று நினைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்தவர். அப்படியானவர்

சிரித்தால் அதில் ஏதோ இருக்கத்தான் செய்யும்.. அவன் நினைத்தது சரியாகி விட்டது. கணக்கப்பிள்ளையின் பேச்சே அப்படித்தான் இருந்தது..

"ராமு உன்னைத்தான் பார்க்க வந்தேன்.." என்று இழுத்த வாறு சொன்னார். நின்று கொண்டே இருந்தார்.. கணக்கப் பிள்ளை ஐயா.

அவரை உட்காரச் சொல்லவில்லை ராமு. அவருக்கு நாற்காலி கொடுக்க வேண்டுமா என்பது போலிருந்தான்.. ஆனால் அதற்குள் ராமுவின் அம்மா இரண்டு கையாலும் கும்பிட்டு வரவேற்றாள்...

"ஐயா வாங்க ஐயா! வாங்க... இன்னைக்காவது நம்ம வூட்டுக்கு வந்திருக்கீங்களே!..." என்ற மீனாட்சி "அட.. நிக்கிறீங்களே..." என்றவாறு ஒரு பதட்டத்துடன் நடுக் காம்பராவிலிருந்து ஒரு மரப்பெட்டியை இழுத்து வராந் தாவில் போட்டாள்.

"ஒக்காருங்க அய்யா! இதுதான் நமக்கு புட்டுவம். அய்யா வூட்டுல மாதிரி நல்ல புட்டுவம் இல்ல.."

மீனாட்சி "ஒக்காருங்க ஒக்காருங்க" என்று ஒரு புராணமே பாடுகிறாள். ராமு மௌனமாக இருக்கிறானே.. வாயைத் திறந்து உட்காரச் சொல்லவே இல்லையே!... அவனை மனதுக்குள் 'கறுவி'க் கொண்டே பேசினார்...

"இருக்கட்டும் இருக்கட்டும்! இப்படியே நிக்கிரேன்.. இம்புட்டு நேரம் ஒக்காந்து தான் இருந்தேன்!"

ராமுவுக்குப் 'பொசுபொசு'வென்றிருந்தது. தோட்டத்தில் துரையோடு சேர்ந்து கொண்டு தொழிலாளிகளைச் சுரண்டு கிற சுயநலப்புலி இவன். இவனுக்கு உட்கார இடமே

கொடுக்கக் கூடாது என்று திட்டிக் கொண்டான் மனதுக்குள்... ஐயா மெள்ளப் பேச்சுக் கொடுத்தார்...

"நம்ம தொரைவூட்டு மச்சானுக்கு அடுத்த கெழமை கல்யாணம்.. தொர, பொண்ணு-மாப்பிள்ளைக்கு விருந்து கொடுக்கிறாரு... அதுக்கு நல்ல வாழைப்பழம் தேடிப் பார்த்தாரு.. கெடைக்கல்ல.. உன்கிட்ட கோழி கூட்டு வாழைப் பழக்குலை இருக்குன்னாங்க. அதை தர்ரியா?.. தொரைதான் கேக்கச் சொன்னாரு..."

ராமுவுக்கு கணக்கப்பிள்ளையின் கெஞ்சலுக்கும் சிரிப் புக்கும் அர்த்தம் புரிந்து விட்டது. இதற்குத்தானா இந்த சோழியன் குடுமியை ஆட்டினான்? அவனுடைய உழைப்பில் சின்ன வாழைத் தோட்டம் காம்பராவிற்குப் பின்னால் உருவாகியிருக்கிறது. அங்கே பலர் கண் படுமாப்போல் ஒரு வாழைக்குலை அதை அடித்துக் கொண்டு போக ஒரு திட்டம் -அதற்கு ஒரு பூச்சு - சிரிப்பு.... அந்த வாழைத் தோட்டத் திற்காக அவன்பட்ட கஷ்டம் - உழைப்பை உறிஞ்சும் அட்டை களுக்கு எங்கே புரியும்? சும்மா கிடந்த இடத்தைக் கொத்திப் போட்டுவிட்டு நல்ல வாழைக் கன்றுகள் தேடிப் பல நாட்கள் நடந்திருக்கின்றான்...

ராமு ஒரே வரியில் மறுத்துவிட்டான். அம்மா அவனு டைய பதிலைக் கேட்டுப் பதறினாள்...

"தொர ஆசையா கேக்கிராரு. ஒரு வாழைக்குலை குடு ராமு" மீனாட்சி கெஞ்சினாள்..

"அம்மா நீங்க சும்மா இருங்க.. தொரைக்கி வாழைக் குலை வேணும்னா டவுன்ல தேடி பார்க்கட்டும்... பிச்சைக் காரபசங்க வூட்டு குலைக்கு ஏன் ஆசைப்படணும்? தோட்டத்தில் ஒரு காய்கறி போடமுடியாது. போட்டு

ஏதாவது காச்சிட்டா அதில கொஞ்சம் கொண்டா! மாங்கா காய்ச்சிடக் கூடாது - காச்சா அதை பறிச்சு அனுப்பு! ஆடு குட்டி போடக்கூடாது - பால் கொண்டு வா! எச்சிப் பயலுக எச்சி தின்னே பழகிப் போச்சி!"

கணக்கப்பிள்ளை ஓடியே போனார். துரையிடம் காலும் கையும் வைத்து ராமு திட்டியதை நீட்டினார். துரைக்கு மூக்கின் நுனி மேல் கோபம் நின்றது.

"லேபர் 'பலோ' நம்மள ஏசினானா... அவனை..."

இதுதான் சந்தர்ப்பம் என்று ஐயா நன்றாக ஊதினார். பிறகு இருவரும் ரகசியமாகப் பேசிக் கொண்டார்கள்.. அன்றிரவே ராமுவின் தோட்டத்திலிருந்த வாழைக்குலை துரையின் பங்களாவுக்கு வந்துவிட்டது.. மரம் மட்டும் தாலியறுத்த பெண்ணாக நின்றது..

துரையை நினைக்க நினைக்க ராமுவுக்குக் கோபம் ஏறியது. அவனுக்கு ஓர் பாடம் படித்துக் கொடுக்க வேண்டு மென மனதில் உறுதி கொண்டான்.

அவன் பார்வை அந்த இருட்டிலும் நீண்டு அடையாளம் போய்ப் பார்த்தது. யாரோ ஒருத்தன் மூடையைத் தூக்கிக் கொண்டு போய்க்கொண்டிருந்தான்... இது திருட்டுதான்.. துரையின் திருவிளையாடல்தான்.. திடீரென்று அவனுக்கு ஒரு யோசனை.. ஓடிப்போய் அவனைப் பிடித்துக் கொண்டால் துரையின் வேஷத்தைக் கலைக்கலாமே!

ராமு வேகமாக டோர்ச் லைட்டோடு ஓடினான்.. டோர்ச் லைட்டில் வெளிச்சம் இல்லை...

பாதை ஓரத்தில் கிடந்த இலைகளை மிதித்து 'சரசர' வென்ற சத்தத்துடன் யாரோ ஓடி வருவதைக் கேட்டு மூடையைத் தூக்கி நடந்து கொண்டிருந்தவன் பயத்தில்

திரும்பிப் பார்த்தான். உண்மையில் யாரோ ஓடிவந்து கொண்டிருப்பது போல் தெரிந்தது. ஆனால் யாரென்று தெரியவில்லை.. அவன் நெஞ்சு 'படக் படக்'கென்று அடித்துக் கொண்டது... ராமு அவனைப் பிடிக்க அருகிலேயே வந்து விட்டான். இன்னமும் சில அடிகள்... அவனைப் பிடித்து விடலாம். ஆனால் அதற்குள் மூடையைப் போட்டு விட்டு அவன் ஓடியே போய் விட்டான். ராமு அப்படியே நின்றான் அவன் மனதுக்குச் சரியான வருத்தம்.. ஆளை கையோடு பிடிக்க முடியவில்லையே!

ஸ்டோர் லைட் அணைந்தது. இப்போது ஒரே இருட்டு.. ராமு கையிலிருந்த டோர்ச்சை அடித்தான். ஒருத்தரையும் காணவில்லை.. திடீரென்று அவன் முகத்தில் டோர்ச் லைட்டின் வெளிச்சம் பட்டது. அவனுடைய கண்கள் அவ் வெளிச்சத்தில் விழிக்க முடியாமல் கூச்சத்தில் தவித்தன. நல்ல பவரான டோர்ச்.. இந்த டோர்ச் யாரிடம் இருக்கிறது? துரையிடம் அல்லவா இருக்கிறது! அட அது உண்மைதான்.. துரைதான் டோர்ச் லைட் அடித்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார். அவரின் பின்னால் தோட்டத்துக் காவல் காரனும் பங்களா வேலைக்ககாரனும் வந்தார்கள்...

ராமு அப்படியே நின்றான். மூடை அவன் காலருகே கிடந்தது. வழியில் கிடந்த பாம்பை மடியில் கட்டிக் கொண்டது போலாகி விட்டதே என்று கவலைப்பட்டான். அவன் கவலைப்பட்டதற்குக் காரணமிருந்தது.. இப்போது அவன் முகத்தில் விழுகின்ற டோர்ச் லைட்டின் வெளிச்சம் ஒரு திருடனைப் பிடித்து விட்டோம் என்று சொல்லாமல் சொல்வது போலிருந்தது. அதை உண்மையாக்கி விட்டால்? துரை அப்படிச் செய்யக் கூடியவர்தான்... எதிர்ப்பவர்களை எப்படியும் பழிவாங்கக் கூடியவர். அப்படிப் பழிவாங்கப் பட்டவன்தான் கோபால்.

சில ஆண்டுகளுக்கு முன்பு தனக்கெதிராகக் குரல் கொடுக்கிறான் என்று தெரிந்ததும் அவனைத் திருடனாக்கிப் பிடித்துத் தோட்டத்துக் காவல்காரனை விட்டு செம்மையாக அடித்தார். அடேயப்பா! அடியென்றால் அடி ஒங்க வூட்டு எங்க வூட்டு அடியல்ல! பொல்லாத அடி. அடி மட்டுமா நிமிர்ந்தால் உதை! படுத்தால் மிதி...! துரை டோர்ச் லைட்டை ராமு முகத்தில் அடித்துக் கொண்டே கத்தினார்.. "திருட்டுப் பயலே எத்தனை நாளா இந்த வேலை?"

'பேச்சு மூச்சில்லாமல்' ராமு நின்றான். தன் கதை கோபால் கதையைப் போல் மாற்றப்படுவதை உணர்ந்தான். அவன் காலின் அருகே மூடை. கதை சோடிக்கலாம் தான்...

ஒரு நிமிடம் தன்னைச் சுதாகரித்துப் பழைய நிலைக்கு வந்தான்.. "என்ன தொரை செய்யிறதையும் செஞ்சிட்டு கதைய மாத்துறீங்க? கோபாலை அனுப்பின மாதிரி என்னய அனுப்பலாம்னு நெனைக்காதீங்க! கொஞ்சம் முந்தி வந்திருந்தா எல்லாத்தையும் கையும் மெய்யுமா புடிச் சிருப்பேன். ராமு துணிந்து பேசினான்.

துரையின் பின்னால் நின்ற காவல்காரன் முன்னால் பாய்ந்தான்.

"திருட்டுப் புத்தி... திங்கிற சோத்திலே மண்ண அள்ளி போடுறீங்கடா! இப்படி மூட்டை மூட்டையா திருடினா தோட்டம் எப்படி உருப்படும்...?"

ராமுவின் உள்ளம் ஸ்டோர் அடுப்பாய் எரிந்தது.

"கோபாலை ஏமாத்தின மாதிரி என்னை ஏமாத்தலாம்னு நெனைக்காதீங்க. அது நடக்காது. முந்தி மாதிரி நாங்க தூங்கல்ல.. முழிச்சிகிட்டு இருக்கோம்..."

துரை கத்தினார்... "டேய் மிச்சம் பேசாதே! ஊர்லே பெரிய மனுசன்... செய்யறது திருட்டு வேல.."

அதற்கு மேலும் அவனைத் திட்ட வாயெடுத்தபோது அந்த நேரத்தில் யாரோ ஓடி வரும் சத்தம் கேட்டது... துரை மனது 'திக்' கடித்தது. கையிலிருந்த டோர்ச்சால் அது யாரென்று பார்த்தார்.. வந்தது பார்வதிதான்... துரை பயந்து விட்டார்.. பார்வதியா? அவள் இந்த நேரத்தில் எங்கே வந்தாள்? ராமுவுக்குத் தைரியம் வந்தது. சரியான நேரத்தில் தான் வந்திருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டான்.

பார்வதி ராமுவின் அருகே வந்து நின்று துரையை முறைத்தாள்.

"தொர என்னய ஏமாத்தலாம்னு நெனைக்காதீங்க.. நான் எல்லாத்தையும் பார்த்துகிட்டு இருந்தேன். நம்ம லயத்தில இருக்கிற தபால்காரர் கந்தசாமி அய்யாவுக்கு சொகமில்லாததனால மேட்டு லயத்துக் கடையில டிஸ்பிரின் வாங்கிட்டு இந்தக் கரத்தை ரோட்டு வழியா லயத்துக்குப் போய்கிட்டிருந்தேன். இந்த எடத்தில வந்தோன்ன ஸ்டோர்ல லைட் போட்டாங்க.. யாரு இந்த நேரத்தில லைட் போடுறான்னு பார்த்தேன்.. அப்ப யாரோ ஒருத்தன் ஒரு மூட்டையை தூக்கிட்டுப் போறதைப் பார்த்தேன். ஒடனே ரோட்டோரமா ஏறி தேயிலைச் செடியோராமா ஒளிஞ்சிகிட்டேன்.. கையில மெழுகுவர்த்தி செரட்டைக்குள்ள எரிஞ்சிகிட்டிருந்ததுனால எல்லாத்தையும் பார்த்தேன். நீங்க என்னடான்னா இவரு மேல திருட்டுப் பட்டம் கட்டப் பார்க்கிறீங்க..." ராமு பார்வதியை நன்றியுடன் பார்த்தான்.. பார்வதி பதிலுக்கு 'ஒங்கள காப்பத்த என்னால முடிஞ்சிச்சே! அதே போதும்!' என்பது போலப் பார்த்தாள்... இருவருடைய பார்வையும் அந்த இருட்டிலும் உணர்ச்சியுடன் சந்தித்துக் கொண்டன.

துரை ராமு மீது திருட்டுக்கதை சோடிக்க முடியாததால் பின் வாங்கினார். அந்தப் பின் வாங்கலிலும் ஒரு உறுமல் தெரிந்தது.

"சரி.. சரி... இன்னைக்கி என்னமோ திருட்டுப்பய தப்பிச்சிட்டான்! வசமா ஒரு நாளைக்கி மாட்டுவான். அன்னைக்கி பார்ப்போம்!"

மூடை ஸ்டோருக்கு மீண்டும் போய்விட்டது. துரையும் காவல்காரனும் ஸ்டோர்ப் பக்கம் போனார்கள். காவல்காரன் போகும்போது சும்மா போகவில்லை. வார்த்தைகளால் அவனைக் கிண்டிவிட்டுத்தான் போனான். "ராமு! ஒனக்கு இப்ப திமிர் கூடிப் போச்சி. நல்லா இருக்கிற தோட்டத்தையே நாசமாக்கிறது நீ தான்! ஆளுகளை கெடுக்கிறதும் நீ தான்! இன்னைக்கி என்னமோ தப்பிச்சிட்ட.. ஒரு நாளைக்கி பிடிபடுவ அப்ப பார்ப்போம்.." ராமு அதைக்கேட்டு 'நக்கல'டித்தான்... "திருட்டு வேலை செஞ்சுட்டு என் மேல பழி போடப் பார்க்கறீங்களா?. திமிர் எனக்கா?.. ஏன்னா நீங்கதானே எனக்கு சோறு போடுறீங்க,.."

பார்வதி அந்த இருட்டிலும் தன்னை மறந்து சிரித்து விட்டாள். அவளின் சிரிப்பு துரையின் நெஞ்சை அரித்தது. ராமு அவளிடம் பேசினான்...

"நீ மட்டும் வராம இருந்தா நான் திருடன் தான்.. அடி பட்டு சாக வேண்டியதுதான்.. நல்ல நேரத்தில கடவுள் மாதிரி வந்து காப்பாத்தின. ஒன்னய கண்டதுனால தான் தொரை இந்த வெளையாட்டு சரிவராதுன்னு போனான். நீ இல்லைன்னா நான் திருடன்தான்.. நல்ல நேரம்.. கடவுள் மாதிரி!..."

"நான் கடவுளும் இல்ல... கடவுள் மாதிரியும் இல்ல... கடவுள் தான் மேட்டு லயத்து கடையில மருந்து வாங்க

அனுப்பி வைச்சான்! இல்லேன்னா இந்த நேரத்தில நான் ஏன் இங்க வரப் போறேன்.. சரி.. நேரமாச்சி நான் வர்றேன்..."

"தனியா போக முடியுமா?" ராமு கேட்டான்..

"அதெல்லாம் போகலாம்.. இன்னம் கொஞ்சம் தூரம் தான்..." என்று சொன்ன பார்வதி நெருப்புப் பெட்டியால் மெழுகுவர்த்தியைப் பற்ற வைத்துச் சிரட்டைக்குள்ளே வைத்துக் கொண்டாள்.

"அய்யாவுக்குத் தலைவலி... மருந்து வாங்கிட்டு வர வான்னு கேட்டேன். வேனாம்னுதான் சொன்னாரு. நான் தான் அவருக்குத் தெரியாம வாங்கிட்டுப் போறேன்..." மெழுகு வர்த்தி காட்டிய வெளிச்சத்தில் நடந்து போனாள்... அவள் வெளிச்சம் இல்லாமலும் போவாள். பெரிய துணிச்சல்காரி.. ஆனால் இந்தத் துணிச்சல் முன்பு இல்லை.. விதவையான பின்னர்தான் அது தானாக வந்து சேர்ந்து விட்டது.

ராமு நின்றுகொண்டே இருட்டில் நின்று பார்வதி நடந்து செல்லும் பாதையைப் பற்றி யோசித்தான். அவள் துணைக்கு வரவேண்டாம் என்று சொல்லியும் அவன் மனம் அவளைத் தனியே விட இடம் கொடுக்கவில்லை. அவள் சிறிது தூரம் சென்றதும் அவளுக்குத் தெரியாமல் அவள் பின்னே நடக்க ஆரம்பித்தான்.

அப்போதுதான் அவனுக்கு கையில் டோர்ச்லைட் இருப்பது ஞாபகத்திற்கே வந்தது. அட.. துணைக்குத்தான் போகவில்லை.. இந்த டோர்ச் லைட்டையாவது கொடுத் திருக்கலாமே என்று கவலைப்பட்டான்.. பிறகு அவளுக்குத் தெரியாமல் அவன் அவளுக்குத் துணையாக அவள் லயத்திற்குப் போகும் வரை அவளுக்குப் பின்னால் நடந்து போய் விட்டுத் தன் லயத்திற்குப் போனான் அவன்.

## அத்தியாயம் – 6

ஸ்டோருக்கு வேலைக்குப் போவதற்காகக் காம்பராவை விட்டு வெளியே வந்த பார்வதி அங்கிருந்து கரத்தை ரோட்டைத் தொடுகின்ற குறுக்குப் பாதையில் ஒட்டமும் நடையுமாக இறங்கியபோது 'பொட்'டென்று இரண்டு மூன்று சொட்டுப் பனித்துளி குறுக்குப் பாதையோரத்தில் இருக்கின்ற மாமரத்தில் இருந்து நழுவி அவள் முதுகில் விழுந்தது. 'சில்'லென்று முதுகு நனைந்தது. ஆனால் முழு உடம்பே நனைந்தது போல் இருந்தது. அதற்கேற்றாற்போல் ஈரக்காற்று அப்போது வீசியது. குளிரில் அவள் உடம்பு லேசாக நடுங்கியது.

இந்தக் குளிருக்குப் பயந்தவள் அல்ல அவள். குளிரோ, மழையோ பனியோ வெயிலோ இவற்றுக்கெல்லாம் பயப் படாமல் அவற்றைத் தாங்கிக்கொண்டு உழைத்து வருகின்ற ஒரு வர்க்கத்தைச் சேர்ந்தவள் அவள். ஆனால் அவள் மனசு இன்று சரியில்லை. அதனால்தான் அவள் மனம் தைரிய மில்லாமல் நழுவி நழுவி விழுகிறது.

இரவு நடந்த சம்பவம் இப்போதும் நெஞ்சில் ஆடிக் கொண்டிருந்தது. 'நான் மட்டும் அந்த நேரம் போகலேன்னா அவரை திருடனாக்கி புடிச்சி பொலிசில மாட்டியிருப்பாங்க! எந்த சாமி புண்ணியமோ நான் அவரைக் காப்பத்தினேன்.' அதை நினைக்கும்போது அவளுக்கு பெருமையாக இருந்தது. ஒரு இனம் புரியாத பரவசம் உள்ளத்தில் ஊற்றெடுத்தது. ஆனால் மறுநிமிடமே துரையின் நினைவு அவளைத் தவிக்க வைத்தது. துரை நிச்சயம் ராமுவுக்குச் சாட்சி சொன்னதற்காக பழி வாங்குவார் என்பது அவளுக்குத் தெரியும். அது எந்த ரூபத்தில் வருமோ என்பதுதான் இப்போதைய தவிப்பு. இந்தத்

தவிப்பில் அவள் மனம் இன்று இப்படியாகிவிட்டது. இன்று வேலைக்குப் போகாமல் இருந்து விடலாம் என்றுதான் நினைத்தாள் முதலில்.. இதனால் ஏதும் பிரச்சனைகள் வந்தாலும் வருமென்ற பயத்தில் வேலைக்குக் கிளம்பினாள்.

தூரத்தில் கொழுந்து பறிக்கும் பெண்கள் கொழுந்துச் சாக்கும் கூடையுமாக வரிசை வரிசையாகப் போய்க் கொண் டிருந்தார்கள். அவர்கள் ஒருவர் பின் ஒருவராக புதுப் பெண்ணைப் போல் தலை குனிந்து நடப்பதைப் பார்க்கும் போது அழகாக இருந்தது. ஆனால் பார்வதியின் பார்வையில் அதில் அழகிருப்பதாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக உழைக்க வேண்டிய கடமையைக் கண்டாள். ஒரு குடும்பத்தில் இருக்கிற கணவன் - மனைவி - வயதுக்கு வந்த குமர் -வாயும் வயிறுமாக உள்ளவள் - இப்படி எல்லோரும் ஒன்றாக உழைக்க வேண்டிய கட்டாயம் இங்கே மட்டும்தான். இது இவர்களின் தலையெழுத்து இப்படி உழைத்தாலும் அவர்கள் முன்னேறப் போவதில்லை. முன்னேறவும் விடமாட் டார்கள். இவர்கள் இதனுள்ளேயே போராடிக் கொண்டிருக்க வேண்டியது தான். அவர்களின் உலகம் அந்தத் தோட்டத் துக்கு உள்ளேயே சுருக்கப்பட்டு விட்டது...!

பார்வதி ஸ்டோருக்குப் போனாள். ஸ்டோரில்தான் அவளுக்கு வேலை. கணக்கப்பிள்ளை பார்த்தால் கண்டபடி ஏசுவானே... பார்க்காவிட்டால் தப்பிக்கலாம். பார்த்து விட்டால்... நரம்பில்லாத நாக்கு...

ஸ்டோரின் உள்ளே நுழைந்தபோது கணக்கப்பிள்ளை ஐயா அவளைக் கூப்பிட்டதாக யாரோ அவள் காதில் போட்டார்கள். அவ்வளவுதான் கொஞ்சமாக இருந்த நடுக்கம் அவளை ஆட்டியது. அப்படியே நின்றாள். தேகமெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது. கணக்கப்பிள்ளை இங்கே பெரிய ராஜாவுக்கு அடங்கிய ஒரு குட்டி ராஜா... அவர் சொன்னது

தான் நீதி.. அவர் நினைத்தால் யாரையும் தண்டிக்கலாம். சில நேரங்களில் துரையின் பழிவாங்கல் இவர் மூலமாக வரும்..

"நேத்து சாட்சி சொன்னதுக்கு பழி வாங்கத்தான் கூப்புடுரான் என்ன சொல்லப் போறானோ?..."

என்ன சொன்னாலும் சொல்லாட்டும் என்று தனக்குள் ஒரு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கணக்கப் பிள்ளையிடம் போனாள்.

கணக்கப்பிள்ளை இவளைக் கண்டதும் நக்கல் சிரிப்பு சிரித்தான்.

"யாரு பார்வதியா? நீ இப்பத்தானே வேலைக்கு வந்த...?"

"ஆமாம்" என்பது போல் தலையை ஆட்டினாள் பார்வதி.

"நீ இன்னும் ஸ்டோருக்கு போகலியே..! நல்லதா போச்சி! இன்னையில இருந்து ஒனக்குத் தேயிலை மலையிலதான் வேலை.. கொழுந்தெடு.. தொரைதான் சொன்னாரு.."

இரண்டு பக்கமும் ஈட்டி போல் வளைந்திருக்கும் மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டே சொன்னார் கணக்கப் பிள்ளை. பார்வதி பதில் சொல்லவில்லை. முதலில் ஒரு அதிர்ச்சியைத் தந்தாலும் இந்தத் திடீர் மாற்றம் அவர்கள் பாஷையில் ஒரு தண்டனை. எதற்காக என்பது புரிந்தது அவளுக்கு. அவர்களின் திட்டத்தை முறியடித்ததற்குக் கிடைத்த பரிசு.

"ஏன் யோசிக்கிற? இன்னைக்கே கொழுந்தெடுக்கப் போ.. ஒனக்கிட்டதான் கொழுந்து சாக்கு கூடையெல்லாம் இருக்கே.. எடுத்துகிட்டு வா.. துண்டு தர்ரேன்.. பேர் போட...." கணக்கப்பிள்ளைக்கு தான் நினைத்ததை முடித்து விட்டதில் பெருமையாக இருந்தது.

பார்வதியைக் கொழுந் தெடுக்கப் போட்டதை உடனே துரையின் காதில் போட்டு விடுவார் அவர். அப்போதுதான் அவருக்கு நல்ல பெயர் கிடைக்கும். துரை இப்படிச் செய்யச் சொல்லவில்லை. சில நேரங்களில் அப்படி செய்யச் சொல் லுவார். நேற்றிரவு பங்களாவில் கூடிய மகாநாட்டில் அதைச் செய்! இதைச் செய்! என்று சொல்லவில்லை. ஆனால் அவருக்குச் சரியான கோபம் வந்தது. அந்த நேரத்தில் மாத்திரம் ராமு பிடிபட்டிருந்தால் கண்டதுண்டமாக வெட்டிப் போட்டிருப்பார் அவனை.

இவ்வளவு நாளும் இரவில் செய்து வந்த நாடகத்தை ராமு கண்டு விட்டானே என்ற பயம் அவருக்கு. அந்த நேரத்தில் ஐயாதான் துரையைச் சமாளித்தார்.

"தொரை நீங்க பயப்படாதீங்க.. நான் பார்த்துக்கிரேன்.. இன்னைக்கே ராமுப் பய ஸ்டோர்ல திருட வந்து தப்பிச்சி கிட்டான்னு கதைய கட்டிவிடுரேன். இதை யாரும் நம்புவாங்க தொரை.. ஏன்னா அவனும் வேல இல்லாம இருக்கான். இல்லியா!"

ஆனால் விடிந்த போது கதை மாறியிருந்தது. அவரால் கதை கட்டமுடியவில்லை. அதற்குள் ராமு உள்ள கதையையே அவிழ்த்து விட்டான். அது நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்து விட்டது போல் பரவியது. கணக்கப்பிள்ளை ஐயாவின் காதிலும் விழுந்தது. காதில் போட்டவன் அவர் வீட்டு வேலைக்காரன்தான்.

"காலையில குளிக்கப் போனேன். அங்க நம்ம ராமுப்பய வந்திருந்தான். என்னய கண்டதும் ராத்திரி ஒரு சிங்கம் புடிபட இருந்திச்சி.. ஆனா தப்பிடிச்சி.. இருந்தாலும் அதை ஒரு நா புடிக்கத்தான் போறேன்னு சொன்னான். அது மட்டுமா இன்னைக்கே சிங்கத்தை புடிக்கலாம். ஆனா காட்டிக் குடுக்கிற வெள்ளையனும் கூட்டிக் குடுக்கிற செல்லையனும் இருக்கிற

வரைக்கும் முடியாதுன்னு வேற சொன்னான். அவனுக்கு சரியான திமிருங்க.. வேல இல்லாம போயே இப்புடி. வேலை இருந்தா."

ஐயாவுக்கு அப்போது கோபம் வந்தது.. ராமுவை அப்போதே ஏதாவது செய்ய வேண்டும் என்று துடித்தார். முடியவில்லை. என்னதான் செய்வது? வேலையை நிறுத்தி விட்டார்கள். இந்த நேரத்தில்தான் பார்வதியின் நினைவு வந்தது.. 'இவளுக்காவது ஒரு புத்தி படிச்சி குடுக்கனும்... அப்பதான் அடங்குவா?.'

பார்வதியை மலைக்கு விரட்டினார். அவள் மௌனமாக தன் காம்பராவிற்குத் திரும்பினாள். காம்பராவின் வராந் தாவில் மாட்டியிருந்த கொழுந்துக் கூடை லேசாகக் காற்றில் ஆடி அவளை வரவேற்றது. அதைப் பார்த்தபோது அவளுக்கு கொழுந்துக் கூடை கிண்டல் செய்வது போன்ற உணர்வு ஏற்பட்டது.

கொழுந்துக் கூடையுடன் படங்குச் சாக்குடன் பார்வதி மலையேற நடந்தாள்.

கொழுந்துக் கூடையோடு மலையேறிய போது பார்வதிக்கு 'குபீரெ'ன்று சிரிப்பு வந்தது. சிரிப்பை அடக்கிக் கொண்டாள். சிரிக்கிற நேரமா அது! ஆனால் சிரிப்பு வந்தது. ஸ்டோரில் இருந்து கொழுந்தெடுக்கப் போட்டதை நினைத் ததும்தான் சிரிப்பு வந்துவிட்டது.

'இம்புட்டு நாளும் ஸ்டோர்ல வேல செஞ்சு கிட்டிருந்தேன். இன்னையிலிருந்து மலையில கொழுந்தெடுக் கணுமாம். எடுக்கிறேன். எடுக்கிறேன்... அது எனக்கு தெரிஞ் சதுதான். இதுக்கு மொத கொழுந்தெடுத்தேன் தானே! இதுக்காக நா பயப்படல... தொரை நெனச்சுகிட்டான் இம்புட்டு நாளும் ஸ்டோர்ல வேல செஞ்சதுனால இனி மலை

வேலை செய்ய க டப்படுவேன்னு. எனக்கு அது கஷ்டமில்ல. எனக்கு எல்லா வேலயும் ஒன்னுதான்.. வேலை செய்யத்தானே நாங்க பொறந்தோம்...'

பார்வதி ஸ்டோரில் இருந்து மலைக்குப் போட்டதற்காக பயப்படவில்லை... உழைக்கப் பிறந்தவள் அவள். எங்கே உழைத்தால் என்ன?

கொழுந்தெடுக்கப் போ கிற மலைக்கு வந்தாள். பல மாதங் களுக்குப் பிறகு கொழுந்தெடுக்கப் போகிறாள்.. தேயிலை மலையைப் பார்க்கும் போது தன்னைப் பழி வாங்கவே இங்கே அனுப்பியிருப்பது அவளுக்குத் தெரிந்தது.. மழை இல்லாததால் தேயிலைச்செடி பசுமை இழந்திருந்தது.. மலையைச் சுற்றிச் சுற்றி வந்தாலும் ஒரு பிடிக் கொழுந்து கிடைக்காது.. யோசனையில் ஆழ்ந்திருந்தபோது கங்காணி ராக்கையாவின் குரல் அவளை எண்ணங்களிருந்து விடு வித்தது..

"பார்வதி கொழுந்தெடுக்க வந்தியா? நீ வந்த நேரம் கொழுந்து இல்ல.. இருக்கிற கொழுந்த எடுக்கலாம்னாலும் தொரை ஒன்னய கொழுந்தெடுக்க வேணாம்னு சொல்லி அனுப்பினாரு.."

என்ற கங்காணி சுற்றும் முற்றும் பார்த்து விட்டு மெள்ளப் பேசினார்..

"பார்வதி! எனக்கு ஒண்ணும் தெரியாது! இது தொர சொல்லி அனுப்பினது. நா என்னா செய்வேன்!. என் மேல கோவிச்சிக்காதே!.."

கங்காணி ராக்கையா பதிலைக் கூட எதிர்பார்க்காமல் நடந்தார். கங்காணியைப் பார்வதி ஒன்றும் சொல்லவில்லை. அவர் வெறும் அம்பு.. அம்பை அனுப்பிய வில் வேறு. எங்கோ இருக்கிறது. பாவம் இந்தக் கங்காணி வாயில்லாப் பூச்சி.. அந்த

வாயில்லாப் பூச்சியை நம்பி ஏழெட்டு வாயுள்ள பூச்சிகள் இருக்கின்றன. அவர் என்ன செய்வார்?

பார்வதிக்கு சிறிது கவலையாக இருந்தது. ஆனால் சில நிமிடங்களில் அந்தக் கவலையை உதறிவிட்டு ஒரு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு மலையை விட்டு இறங்கத் தொடங்கினாள். வழிநெடுக எண்ணங்களின் இழுப்பில் அலைக்கலைந்த அவள், காம்பராவை நெருங்கும் போது ஒரு தெளிவோடு இருந்தாள். ராமுவைச் சந்தித்து நடந்ததைச் சொல்லவேண்டும்.

காம்பராவில் இருந்து குசினி வழியாக வெளியே வந்தாள் பார்வதி. வெளியே அக்கம் பக்கத்திலுள்ள குஞ்சுகுளு வான்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பொழுது விடிந்தால் அவர்களுக்கு விளையாட்டுத்தான்.. இனி அது இருட்டும் வரை தொடரும். அவர்களின் தாய் தகப்பன் மண்ணில் உழைப்பது போல் இவர்களும் அதே மண்ணில் உருண்டு புரண்டு விளையாடுவார்கள். இப்படி உருண்டு விளையாடிய மண்ணிலே உழைக்கப் போகிறார்கள். பார்வதியும் இந்த மண்ணில் விளையாடியிருக்கிறாள்.

நாய்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக படுத்துக் கிடந்தன. அங்கே நன்றிக்கு குறைவிருந்தாலும் நாய்களுக்குக் குறைவில்லை. காம்பராவிற்கு ஒரு நாய் லயத்துக்குப் பத்து பன்னிரண்டு கிடக்கும். யாருக்கு எது சொந்தமென்று யாருக்கும் தெரியாது.

பார்வதியின் காம்பராவிற்கு நேரே பூஞ்செடிகள் மூன்று நாலு நின்றன. பார்வதி அதனருகே போனாள். செடிகளில் பூத்திருந்த பூக்களைப் பறித்துக் கையில் வைத்துக் கொண்டு யோசித்தாள். அப்போதுதான், தான் விதவை என்பதும் பூச்சூடக் கூடாது என்பதும் நினைவுக்கு வந்தது. கையிலிருந்த

பூக்களைக் கீழே போட்டாள். முன்னர் அவன் இருந்தபோது எத்தனை ஆர்வத்தோடு ஆசையோடு இந்தப் பூக்களைப் பறித்து வைத்துக் கொண்டிருக்கிறாள். மீதியைச் சாமி படத்துக்குப் போடுவாள். இன்றோ? பூவைத் தொடக்கூடாதாம். தொட்டால் விதவை என்பது நினைவுக்கு வருகிறதே!

பூக்களைப் பறித்ததில் கைகளை நனைத்த ஈரத்தைப் போல் அவள் கண்களையும் ஈரம் நனைத்தது. அவன் நினைவு அவளுக்கு வந்துவிட்டது. இப்போதும் கண்களின் உள்ளே அவன் இருப்பது போல் தெரிகிறதே.

பூஞ்செடிகளை விட்டு விலகி குழந்தைகள் விளையாடும் இடத்தைப் பார்த்தாள். அங்கே நாலு பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். நாலில் மூன்றுக்கு உடுப்பே இல்லை. ஒன்று மட்டும் சட்டை போடாமல் கால் சட்டை போட்டிருந்தது. மற்ற மூன்றும் நிர்வாணம். இது இங்கே சகஜம்... இதற்காகக் கவலைப்பட யாருமில்லை. உடுத்துவதற்குத் துணியிருந்தால் உடுத்திவிட மாட்டார்களா? இருப்பதோ ஒன்றிரண்டு. அதையும் உடுத்தி மண்ணில் புரண்டால் டவுனுக்குப் போகும் போது எதை உடுத்துவது? இது குழந்தைகளுக்கு மட்டும் உள்ள பிரச்னையல்ல. பெரியவர்களுக்கும் உள்ள பிரச்னைதான். இந்தப் பிரச்னையின் கொடுமையைப் பார்க்க வேண்டுமானால் பீலியடிக்குப் போனால் போதும்... குளித்து விட்டு வயது வந்த பெண்கள் கூட, உடுத்திக் கொள்ளத் துணியில்லாமல் கட்டியிருக்கிற சேலையின் ஒரு பகுதியைத் துவைத்து, அலசிக் காயப் போடுவார்கள்.. அது காய்ந்ததும் அதை உடுத்திக் கொண்டு மறு பகுதியைத் துவைத்துக் காயப்போட்டு அலசி உடுத்தி... எத்தகைய கொடுமை இது? நாட்டின் மானத்தைக் காக்க, உழைப்பவர்கள் தங்கள் மானத்தைக் காக்கப் போராட வேண்டுமா?

குழந்தைகளின் விளையாட்டை வேடிக்கைப் பார்த்தாள் பார்வதி. அவர்களின் விளையாட்டுத் தனி. முடிவில்லாத மோகம் கொண்ட விளையாட்டு. இன்று சோறாக்கி விளை யாடுகின்றனர். சிறுகல் அடுப்பு இரண்டில், இரண்டு தேங்காய்ச் சிரட்டைகள் ஏற்றப்பட்டிருந்தது. ஒரு சிரட் டையில் பிஞ்சுக் கரங்கள் கிள்ளிப் போட்ட இலைகள் அதுதான் குழம்பு. இன்னுமொரு சிரட்டையில் மண் உருண் டைகள். அதுதான் சோறு. காலையிலேயே சோறாக்கி விட்டார்கள். இது விளையாட்டில். நிஜத்தில் இரவுதான் சோறாக்குவார்கள்.

நீண்ட நேரம் வேடிக்கை பார்த்தாள் அவள். எவ்வளவு நேரம்தான் வேடிக்கை பார்ப்பது. அலுத்துப் போய்விட்டது அவளுக்கு. தன் காம்பராவிற்குப் போகப் போனாள். அப்போது சேலையை யாரோ இழுப்பதை உணர்ந்தாள் பார்வதி. கீழே பார்த்தாள். பிஞ்சுக் கரத்தினால் சேலையை இழுத்துச் சிரித்துக் கொண்டிருந்தது சின்னக் குழந்தை யொன்று. கமலத்தின் குழந்தைதான் அது.

குழந்தையைத் தூக்கி முத்தமிட்டுக் கொண்டே காம்பரா விற்குப் போனாள். குசினியில் ஒரு இடத்தில் உட்கார்ந்து மடியில் குழந்தையை வைத்துக் கொண்டு கொஞ்சினாள். குழந்தைக்கு 'கிச்சு கிச்சு' மூட்டினாள். குழந்தை தன்னை மறந்து சிரித்தது. அதன் கன்னங்களில் சிறு குழி அழகாக மலர்ந்தது.

"அட ராசாவுக்குக் கன்னத்தில் பனக்குழி விழுகுதே! அப்ப ஒனக்கு நெறயை சல்லி சேரும்டா.." என்று குழந்தையை முத்தமிட்டாள். குழந்தை திணறியது... அவ்வளவு அழுத்த மான முத்தம். அன்பின் வேகம்.

குழந்தை அவளைப் பார்த்துச் சிரித்தது. அந்தச் சிரிப்பில் அவள் தன்னை மறந்து கொண்டிருந்தாள். குழந்தையின்

கரங்கள் அவள் முகத்தைத் தடவியபோதுதான் நினைவே திரும்பினாள். அவள் அதைத் தடுக்கவில்லை. குழந்தையின் கரங்கள் படட்டும் என்று இருந்தாள். குழந்தை மார்பகத்தை மூடியிருந்த சேலை முந்தானையை இழுத்து விட்டது. பார்வதி பேசாமலிருந்தாள். குழந்தையின் பிஞ்சுக் கரங்கள் பேசாமல் இருக்கவில்லை. அவளுடைய மார்பகத்தைத் தொட்டன. மார்பகத்தின் மேலிருந்த ரவிக்கையை இழுத்துவிட்டது.

ஓ! குழந்தை பால் கேட்கிறதோ? அவள் எப்படிப் பால் கொடுப்பாள்? அவள் இன்னும் தாயாகவில்லையே! அவளுக்கு ஒரு நினைவு மின்னலாய் வெட்டி மறைந்தது. இப்படி ஒரு குழந்தை இருந்திருந்தால்.... அவன் நினைவாக அது இருந்திருக்கும்.. அந்த நினைவில் இந்தக் காலத்தை ஓட்டியிருக்கலாம்.. ஆனால் குழந்தையும் இல்லை குழந்தை யைத் தர அவனும் இல்லையே!

இந்த உலகமே கசந்தது அவளுக்கு.. ஆனால் மறுகணம் குழந்தையின் நினைவும் சிரிப்பும்தான் அந்தக் கசப்பைக் கரைத்தது. மீண்டும் முத்தம் கொடுத்தாள்..

'இச்' 'இச்'

குழந்தை அவளைப் பார்த்துச் சிரித்தது. அவளும் அந்தச் சிரிப்பில் மயங்கி பதிலுக்குச் சிரித்தாள்.. இரண்டு பேரும் ஒரு மயக்க நிலையில் இருந்தார்கள். வெளியில் விளையாடுகின்ற குழந்தைகள் போடும் சத்தம் கூட அவளுக்குக் கேட்கவில்லை..

வாசலில் நிழல் படிந்தது. அடுத்து ஒரு குரல் வந்தது.

"ராஜா... ராஜா..."

பார்வதி வாசலைப் பார்த்தாள்.. கமலம் நின்று கொண்டு இருந்தாள். குழந்தையைத் தேடி வந்திருக்கிறாள்.. பார்வதி சிரித்துக் கொண்டே குழந்தையைக் கமலத்திடம்

கொடுத்தாள்.. கமலம் கோபத்துடன் அவளை முறைத்துப் பார்த்து விட்டு குழந்தையை வாங்கிக் கொண்டு குழந்தையின் காலில் ஒரு அடி போட்டாள்.

"ஒன்னய நம்ம காம்பராவிட்டு வெளியே போக வேணாம்னு தான் சொன்னேன்.. நீ கண்ட கண்ட காம்பராவுக்கு ஏன் போற?.."

குழந்தைக்கு என்ன தெரியும்? மனிதர்களிடையே ஒருத்தரை ஒருத்தர் சந்திக்கக் கூடாதென்ற வறட்டுக் கௌரவமும் தாண்டக் கூடாத கோடுகளும் அதற்குத் தெரியுமா என்ன! மேலும் சில அடிகள் குழந்தைக்கு விழுந்தது. பார்வதி பதறினாள். ஆனால் அந்தப் பதற்றத்துக்கு உருவம் கொடுக்காமல் தவித்தாள்.. குழந்தைக்கு அடி விழுவது அவள் காம்பராவிற்கு வந்ததால்தான்.. அவளுக்கும் அவர்களுக்கும் இடையே கோடுகள் உண்டாம்! அதைத் தாண்டக்கூடாதாம். குழந்தை தாண்டிவிட்டது.

பார்வதியின் உள்ளம் கலங்கியது. அதைப் பிரதிபலிப்பது போல் கண்களும் கலங்கின.. 'ஓ' வென்று சத்தம் போட்டு அழ வேண்டும் போல் இருந்தது அவளுக்கு.. ஒரு குழந்தையைத் தூக்கக் கூடாதாம். கமலம் பார்த்த பார்வையின் அர்த்தமே அதுதானே! ஒரு காலத்தில் பார்வதி தாலியும் கழுத்துமாக இருந்தபோது அவளிடம் உப்புக்கும் மாவுக்கும் சீனிக்கும் கடனுக்கு ஓடி வந்த கமலம் இன்று வெறுக்கிறாளே! அவள் குழந்தையைத் தூக்க வேண்டாம் என்கிறாளே; விதவை என்றாள் அவள் சமூகத்தில் இருக்கக் கூடாதவளா? அவள் வாழக்கூடாதா?..

சேலை முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டாள். வெளியே போயிருந்த தபால்காரர் கந்தசாமி உள்ளே வந்தார்.

"ஏம்மா! இன்னைக்கி வேலைக்கி போகலியா?.."

"நீங்க வெளியே போனதும் நா எந்த நாளும் மாதிரி ஸ்டோர் வேலைக்கு போனேன். கணக்கப்புள்ள ஒனக்கு இனி ஸ்டோர் வேல இல்ல - மலையிலதான் வேலன்னு சொன்னாரு. மலைக்குப் போனேன்.. கொஞ்ச நேரத்தில் கங்காணி ஓடிவந்து தொர ஒனக்கு மலை வேலயும் இல்லேன்னுட்டாருன்னு சொன்னாரு... வந்துட்டேன்..."

தபால்காரருக்கு என்ன நடந்திருக்கிறதென்று புரிந்து விட்டது.

"ராத்திரி ராமுவுக்கு சாட்சி சொன்னே இல்ல.. அதான் மலைக்கு அனுப்பி அப்புறம் வேலை இல்லேன்னு நாடகம் ஆடி இருக்கானுக.. அநியாயக்காரனுக நெனைச்சதை செய்யிரானுக..."

பார்வதியின் குரல் கம்மியது; இம்புட்டு நாளும் ஸ்டோர் வேல செஞ்சதுனால கால் வயித்துக் கஞ்சியாவது கெடைச்சிச்சி... மலைக்கு கொழுந்துக்கு போனா பட்டினிதான்.. இந்த வெயில்ல ஒரு கைக் கொழுந்து கிடைக்குமா?.. அரிசி மாவுக்காவது கொழுந்தெடுக்கலாம்னாலும் அதையும் இல்லே னுட்டானுக.."

"ஆமா, இப்ப சும்மா இருக்கிறதுக்கு கல் ஒடைக்கிற எடத்துக்குப் போனான ஏதாவது வேலை கெடைக்குமே! போயி பார்க்கிறியா?..." தபால்காரர் சொன்னார்.

பார்வதி யோசித்தாள்.. கல் உடைக்கும் இடத்தில் சில்லறை வேலை கிடைக்கும். சில்லறையாக ஏதாவது கிடைக்கும்... அதுவும் நல்லதுதான்.

"அப்ப நான் போறேன். நீங்க இருங்க" என்று சொல்லி விட்டுப் பார்வதி கல் உடைக்கும் இடத்திற்குப் புறப்பட்டாள்..

கல் உடைக்கும் இடம் அங்கிருந்து சுமார் முக்கால் மைல் தூரத்தில் தோட்டத்தின் மறுபக்கக் கேட்டருகே பின் பக்கம் நாட்டுப் புறத்தில் இருக்கிறது. ஒவ்வொரு நாளும் இருபதுக்கு மேற்பட்டவர்கள் அங்கே வேலை செய்கிறார்கள்.

எல்லோருக்கும் தினச் சம்பளம்தான். தோட்டத்தில் வேலை இல்லாத நாட்களில் பார்வதி வேலை செய் திருக்கிறாள்.. எப்போது போனாலும் அவளுக்கு அங்கே வேலை கிடைக்கும். குத்தகை எடுத்து ஆள் வைத்து கல் உடைக்கும் முதலாளி அபுசாலி ஹாஜியாரும் அவள் மீது கருணை கொண்டவர். இவளைக் கண்டதும்,

"யாரு! பார்வதியா வேலை வேணுமா? என்ன வேல இங்க இருக்கு.. நமக்கிட்ட தேயிலை மலை இல்ல.. பெரிய பெரிய கல்லுதான் இருக்கு.. அதை சின்னதா ஒடைக்கனும்.. ஒடைச்சதை அள்ளிப் போடணும்.. மணல் சலிக்கணும்... நீ ஏதாவது செய்" என்று சிரித்துக் கொண்டே சொல்லுவார்.

பார்வதியும் உடைத்த கல்லைப் பொறுக்கிப் போடு வாள். மணலைச் சலிப்பாள்.. இருட்டியதும் சில்லறையை வாங்கிக் கொண்டு காம்பராவிற்கு வருவாள்.

பார்வதி கல் உடைக்கும் இடத்திற்குப் போனாள். மணி ஒன்பதுக்கு மேலாகிவிட்டது. பார்வதியின் கண்கள் முதலாளி யைத் தேடின. முதலாளி இருந்தால்தானே வேலை கேட் கலாம். முதலாளியைக் காணவில்லை. யாரிடம் கேட்கலாம் என்று கல் உடைப்பவர்களைப் பார்த்துக் கொண்டே போனாள். ஓரிடத்தில் அவள் பார்வை நின்றுவிட்டது. அதற்கு மேல் நகரவில்லை. அவரா கல் உடைக்கிறார்.. தன் கண்களை நம்பாமல் சிமிட்டிப் பார்த்தாள்... அங்கே ராமுதான் கல் உடைத்துக் கொண்டிருக்கின்றான்.

## அத்தியாயம் – 7

பார்வதி தன்னை மறந்து ராமுவையே பார்த்தாள்.. அவனைப் பார்த்தபோது அவள் நெஞ்சின் உள்ளே மகிழ்ச்சி கிளம்பியது. அதன் அடையாளமாக முகத்தில் புன்னகை மலர்ந்தது.

அங்கே இருந்த அத்தனை பேரும் அவளையே பார்த் தார்கள். ராமு அவளைக் கண்டதும் கையிலிருந்த சுத்தி யலைக் கீழே போட்டு விட்டுத் தொடை தெரிய மடித்துக் கட்டியிருந்த சாரத்தை அவிழ்த்து விட்டு அவளருகே வந்தான். அவன் மனதில் 'இவள் ஏன் இங்கே வந்தாள்?' என்ற கேள்வி சுழியிட்டு நின்றது.

"இன்னைக்கி வேலைக்கி போகலியா..?"

ராமு மெதுவாகக் கேட்டான். பார்வதி நடந்ததைச் சொன்னாள்.. அதைக் கேட்டு ராமு கோபத்தில் பல்லைக் கடித்துக் கொண்டு பேசினான்.

"இவனுகளுக்கு கெட்ட காலம் வந்திருச்சி! அதான் இப்படி அநியாயம் பன்னுரானுக.. என்னாலதான் ஒனக்கு வேலை இல்லாமப் போச்சி... என்னாலதான் இப்ப கஷ்டம் ஒனக்கு..."

"இதை ஒரு கஷ்டம்னா இனி வரப்போற கஷ்டத்தை என்னான்னு சொல்றது?"

அர்த்தம் நிறைந்த ஒரு பதிலைச் சொல்லிவிட்டு அவன் முகத்தை பார்த்தாள் பார்வதி.

"ஆமா இங்க எதுக்கு வந்தே? வேலை செய்யவா?"

"ஆமா.. சும்மா இருக்கிறதுக்கு கல்லு ஒடைச்சா கஞ்சித் தண்ணிக்காவது காசு கெடைக்கும்! நீங்க சந்திக்கடைக்கு போவலியா?..."

"இல்ல ரெண்டு நாள் வேலைக்காரன் இல்லாததனால வேல செஞ்சேன். இப்ப வேலைக்காரன் வந்திட்டான். இனி சந்திக்கடையில போயிருக்கிறது சரியில்ல.. அதான் கல்லு ஒடைக்க வந்தேன்.. சில்லறையாவது கெடைக்குமே!"

பார்வதிக்கு வேலை கிடைத்தது. முதலாளி இல்லாத தால் முதலாளி வேலையைக் கவனிக்கிற காதர் நானா வேலை கொடுத்தார். பார்வதியும் வேலை செய்யத் தொடங்கினாள்.

ராமு கட்டியிருந்த சாரத்தை மடித்துக் கட்டிக் கொண்டு சுத்தியலால் கல்லை உடைத்தான். பெரிய கற்கள்.... சிறுசிறு கற்கலாக்க வேண்டும்... ஒவ்வொரு கல்லையும் துரையாக நினைத்துக் கொண்டு சுத்தியலால் ஓங்கி ஓங்கி அடித்தான்... சிறுசிறு கற்களாகச் சிதறின... சிதறிய கற்களைப் பார்வதி இரும்புத் தாச்சியில் அள்ளி வேறு ஒரு இடத்தில் குவித்தாள்.

புதிய தெம்புடன் பார்வதி வேலை செய்யத் தொடங்கினாள்.. சிறிது நேரத்தில் உடைத்துப் போட்டிருந்த அத்தனை சிறு கற்களையும் ஓரிடத்தில் குவித்து விட்டாளே? அத்தனை வேகமா அவளுக்கு? மலைக்கு வேலைக்குப் போ என்றும் மலை வேலையும் இல்லை என்றும் சொன்னபோது தளர்ந்து போன அவள் மனம் இந்த வெய்யிலில் இங்கே வேலை செய்ய எப்படி முன்வந்தது? யார் கொடுத்த தைரியம்?... ஓ! ராமு பக்கத்தில் இருக்கின்றான் என்ற தைரியமா?... ராமு கல் உடைத்துக் கொண்டே பார்வதியை ரகசியமாகப் பார்த்து ரசித்தான்.. அதேபோல் பார்வதியும் ரகசியமாக அவனைப் பார்த்து மனதுக்குள் ரசித்துக் கொண்டாள். இந்த இரண்டையும் மற்றவர்கள் இவர் களுக்குத் தெரியாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்..

ஒரு குடையை விரித்து வைத்தது போல் தன் கிளைகளை நீட்டி, அகல விரித்து நிழல் பரப்பிக் கொண்டு மாரியம்மன் கோயிலின் முன்னே அந்த அரசமரம் கம்பீரமாக நின்று கொண்டிருக்கிறது. கோயில் கட்டுவதற்கு முன்னர் சாதாரண மரமாக இருந்த அந்த மரம், இப்போது தெய்வீக மரமாகி விட்டது. மரத்தின் அடிப்பாகத்தில் நாட்டப்பட்டிருக்கும் பெரிய வேலும், மரத்தில் கைக்கு எட்டிய உயரத்தில் ஆணி அடித்துக் கட்டப்பட்டிருக்கும் காணிக்கைகளுமே அதற்குச் சாட்சிகளாகும். இது போதாதென்று கோயிலுக்கு வருபவர்களும் இப்போதெல்லாம் மரத்திலிருக்கும் வேலை கும்பிட்டுப் போகிறார்கள்.

அந்த மரத்தின் கீழே தோட்டத்திலுள்ள அத்தனை பேரும் தாராளமாக வெய்யில் படாமல் நிற்கலாம். ஏன் உட்காரவும் முடியும். அவ்வளவு அகலமான இடத்தை தன் கிளைகளின் நிழலின் கீழ் அரவணைத்து வைத்துக் கொண்டிருக்கிறது அந்த மரம்! அந்த மரத்தின் கீழ்தான் கோயிலில் திருவிழா வந்தால் எல்லோரும் கூடுவார்கள். பொங்கல் வைத்தால் கூட மரத்தின் கீழ்தான் வைப்பார்கள். கமிட்டிக் கூட்டமும் அங்கேதான் நடக்கும்.

இன்றும் அந்த மரத்தின் கீழேதான் தேர்த் திருவிழாவைப் பற்றிக் கூடிப் பேச ஒரு கூட்டத்தை ராமு கூட்டியிருந்தான். கூட்டத்திற்கு ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக தோட்டத்தில் உள்ள முக்கால் வாசிப்பேர் வந்திருந்தார்கள். ஆண்கள் பகுதியில் இத்தனை நாட்களும் துரைக்கு 'ஜே' போட்ட சேவுகக் கிழவனும் உட்கார்ந்திருந்தான். அவனை நேருக்கு நேர் பார்த்தபோது ராமுவுக்கு அந்தக் கிழவன் துரைக்கு ஆதரவாகப் பேசிய வார்த்தைகள் நினைவுக்கு வந்த போதும் 'கிழவன் மனம் மாறி வந்திருக்கலாம். இனி மெல்ல மெல்ல அவனை நம் பக்கத்திற்கு இழுக்க வேண்டியதுதான்' என்று நினைத்துப் பேசாமலிருந்தான்.

பெண்கள் பகுதியில் பார்வதி முதல் ஆளாக வந்திருந்தாள். அவளையும் சேர்த்து ஏழு பெண்கள்தான் வந்திருந்தார்கள். வேடிக்கை பார்க்க வந்திருந்த வாண்டுகள் ஆங்காங்கே பெரியவர்களோடு உட்கார்ந்திருந்தார்கள்.

கூட்டத்திற்கு யார்யார் வந்திருக்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தான் ராமு. அப்போது அவனால் பார்வதியை நேருக்குநேர் பார்க்க முடியவில்லை. அப்படியும் அவனுடைய கண்கள் பார்வதியைச் சந்திக்கும் போது அவனுடைய உள்ளம் சிறகடித்துப் பறந்தது. ஓ! அவள் எந்தக் கூட்டத்திற்கு வரச் சொன்னாலும் வந்து விடுகிறாளே! துரையை எதிர்க்கின்ற போராட்டத்திலும் அவளாகக் கலந்து கொள்கிறாள். அவள் இல்லா விட்டால் எந்தக் கூட்டமும் கூட்டமாகவே இருக்காது! அப்படி ஒரு உணர்வு வந்துவிடும். கூட்டத்தில் அத்தையையும் ராணியையும் தேடித்தேடிப் பார்த்தான். அவர்கள் வரவே இல்லை. அவர்கள் மேல் அவனுக்கு வெறுப்புத்தான் வந்தது. தோட்டத்தில் நடக்கும் ஒன்றுக்கும் வரமாட்டார்கள்.. வேலுக்கிழவன் செத்ததற்கும் வரவில்லை. அவர்களுக்கு அவர்கள் வேலை தான் பெரிது.

"கூட்டத்தை ஆரம்பிப்பமா?" முத்துதான் கேட்டான்.

ராமு தலையசைக்க அதைப் பார்த்த பணிய லயத்து நல்லதம்பி, தேவாரம் படிக்கத் தொடங்கினான். எல்லோரும் மரியாதைக்காக எழுந்து நின்றார்கள். அந்தக் கூட்டத்தில் தேவாரம்தான் அவர்களுக்கு பிள்ளையார் சுழி. தேவாரம் படித்து முடித்ததும் அவர்கள் உட்கார்ந்து கொண்டார்கள்.

கூட்டம் தொடங்கியது. ராமுதான் முதலில் பேசினான். "நம்ம கோயில்ல அடுத்த மாசம் பதினைந்தாம் தேதி தேர்த்திருவிழா நடக்க இருக்குது. அதைப் பத்தி பேசத்தான் இங்க கூடியிருக்கிறோம். திருவிழாவ எப்படி நடத்தலாம்னு ஒங்க யோசனையை சொல்லுங்க!..."

ஒருத்தரும் யோசனை சொல்ல முன்வரவில்லை. முத்து தான் துணிந்து முதலில் பேசினான்.

"அஞ்சு வருஷத்துக்குப் பொறகு திருவிழா செய்ய போறோம். சிக்கனமா செய்யனும்.. நமக்குள்ள மனத் தாங்கல் இருக்கக் கூடாது."

"தம்பி சொல்றது ஞாயம்தான்..! எல்லாரும் சேர்ந்து தான் திருவிழா செய்யணும்" - ஒரு கிழவன் சொன்னான்.

"எல்லாரும் சேர்ந்து செய்ய ஆசைதான்.. ஆனா பழைய தலைவரும் அவரூட்டு ஆள்களும் கூட்டத்துக்கு வரச் சொல்லியும் வரலியே! அதுக்கு என்னா சொல்றீங்க?" ஒரு வாலிபன் கேட்டான்.

ராமு அதற்குப் பதில் கொடுத்தான்.. "நாங்க எல்லோ ரையும் தான் வரச் சொன்னோம்! ஒரு சிலர் வராததுக்கு நாங்க என்னா செய்ய முடியும்.. கூட்டத்துக்கு வந்தவங்கள வைச்சி செய்ய வேண்டியதுதான்... தனி மனுசனுக்காக எந்தக் காரியமும் நிக்கக் கூடாது...!"

"திருவிழாவுக்கு தொரை மார்களைக் கூப்பிடுரதா?.."

கூட்டத்தில் அப்படி ஒரு கேள்வி வந்தது. எல்லோரும் யோசித்தார்கள்.. ராமு அப்போது தன் எண்ணத்தை வெளியிட்டான்.

"தோட்டத்து துரைங்கிற முறையில் வரச் சொல்ரது ஞாயம்தான்! வரச் சொல்லுவோம்...!"

அப்போது ஒரு ஆவேசமான குரல் ஒலித்தது..

"தொழிலாளிய அட்டை மாதிரி உறிஞ்சி குடிக்கிற இந்த தொரய திருவிழாவுக்குக் கூப்பிடத்தான் வேணுமா?..."

இதற்கு ராமு பதில் சொல்ல வாயெடுக்கும் முன்னர் தங்கையாக்கிழவன் பதில் சொல்லிவிட்டான்...

"அதான் ராமு தம்பி சொல்லிருச்சே! தோட்டத்து தொரைங்கிற மொறையில கூப்புடுவோம்னு... அப்புறம் என்னா?..."

திருவிழாவுக்குத் துரையை அழைக்க முழுக்கூட்டமே சம்மதித்தது. அதன் பின்னர் ஒவ்வொருவருக்கும் ஒவ் வொரு பொறுப்புக் கொடுக்கப்பட்டது. ராமுவுக்கும் முத்துவுக்கும் தேர் அலங்காரப் பொறுப்பும் கோயிலில் தேர் இல்லாததால் டவுனில் இருந்து தேர் கொண்டு வரும் பொறுப்பும் கொடுக்கப்பட்டது.

கூட்டம் முடிவடையப் போகும்போது ஒரு வேண்டு கோளை, அது அவன் ஆசையும் கூட. சொன்னான்.. அது அவன் மனதிலே நீண்ட நாட்களாகக் கருக்கட்டிருந்த ஆசை...

"செலவோட செலவா கோயிலுக்குப் பக்கத்திலே ஓலையாலே ஒரு சின்ன லைப்ரரி கட்டலாம்னு நெனைக் கிறேன். டவுணில தெரிஞ்சவங்க சில பேரு புஸ்தகம் தர்ரேன்னு சொல்லி இருக்காங்க. படிக்கிறவங்களுக்கு இது நல்லது. நாம எல்லாரும் சும்மா இருக்கிர நேரம் பேப்பர் பார்க்கலாம். ஒலகத்தில என்ன நடக்குதுன்னு தெரிஞ்சுக் கலாம். நீங்க எல்லாரும் சரின்னு சொன்னா திருவிழா அன்னைக்கே லைப்ரரியத் திறக்கலாம்.."

"மலையில வேலை செய்யிறவனுக்கு படிக்க எங்க நேரம் இருக்கப் போவுது.. இது தேவைதானா?.."

கூட்டத்தில் ஒரு குரல் இப்படி எழுந்தது. அந்தக் குரலுக்கு உரியவன் 'யாரே'ன்று முழுக் கூட்டமே அடை யாளம் காண்பதற்குள் வேறு ஒரு குரல் ஓங்கி ஒலித்து விட்டது...

"இப்படி சொல்லி சொல்லிதான் நமக்கு எல்லாமே இல்லாம போச்சி! இனியாவது புத்தியா நடப்போம்... லைப்ரரிய தொறப்போம்...!"

முழுப்பேரும் ஏகமனதாக லைப்ரரி திறப்பதை ஆதரித்தார்கள்.. ராமுவின் முகத்தில் புதுமலர்ச்சி தோன்றியது. அவனுடைய ஆசையை நனவாக்க முன் வந்து விட்டார்கள்.. அது மட்டுமில்லாமல் அதற்கு ஆதரவாகப் பேசவும் முன்வந்து விட்டார்கள்.. இனி இவர்களை ஏமாற்ற முடியாது.. விழித்துக் கொண்டு விட்டார்கள்.. அவனுக்குத் தோள் கொடுக்கத் தயாராகி விட்டார்கள்.

தனது எண்ணத்திற்கு அங்கீகாரம் கொடுத்து ஒத்துழைக்கத் தயாராகிவிட்ட கூட்டத்தினரைப் பார்த்து விட்டு ராமு பார்வதியைப் பார்த்து லேசாகப் புன்னகை புரிந்தான்.

அவளோடு பேச வேண்டுமென்ற பேரவா எழுந்தது. ஆனால் அவனால் அப்போது மட்டுமல்ல கூட்டம் முடிந்த பின்னர்கூட அவளோடு பேசமுடியவில்லை. கூட்டம் முடியும் வரை அடிக்கடி ஏக்கத்துடன் பார்வதியைப் பார்த்தான்.

கூட்டம் முடிந்ததும் கோயிலில் வெள்ளையடிப்பது சம்பந்தமாக அழகையாவைப் பார்க்க ராமும்வும் முத்துவும் போனார்கள். ராமுவுக்கு பார்வதியோடு பேச முடியவில்லையே என்ற கவலை. அவன் தனக்குள், அழகையாவைப் பார்த்துவிட்டுப் பார்வதியைக் கண்டு பேசவேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தான்.

இது பற்றி அவளிடம் சொல்லக்கூட அவனால் முடியவில்லை. கூட்டம் கலையும்போது அவனைச் சூழ்ந்து கொண்டு பல சந்தேகங்களைக் கேட்டார்கள். அதற்கெல்லாம் பதில் சொல்லிக் கொண்டிருந்தான். மற்றவர்கள் போய்க் கொண்டிருந்தார்கள். பார்வதியும் அவர்கள் பின்னால் போனாள்.

அவர்கள் இருவரும் போனநேரம் அழகையா லயத்திலிருந்தார். அவர்கள் கோயில் திருவிழாவைப் பற்றிச் சொன்னதும்,

"கோயிலுக்கு வெள்ளைதானே அடிக்கனும்!.. அடிச்சி தாரேன்! நமக்கு சுண்ணாம்பு, பிரஸ், நீலம் மட்டும் வாங்கித் தாங்க.. சும்மாவே அடிச்சித் தாரேன்.. என் உபயமா இருக்கட்டும்!" என்று சொல்லி விட்டார்.

இருவரும் இதை எதிர்பார்க்கவே இல்லை. சந்தோஷப் பட்டார்கள். போன காரியம் சுலபமாக முடிந்து விட்டதே.

ராமு முத்துவிடம் சொல்லிவிட்டுப் பார்வதியைப் பார்ப்பதற்காக குறுக்குப் பாதையில் இறங்கினான். குறுக்குப் பாதையில் போனால் நேரத்தோடு போகலாம் தானே! அவனுடைய கால்கள் வேகமாக நடந்தன. ஆனாலும் அதனால் மனதின் வேகத்திற்குப் போட்டி போட முடிய வில்லை. மனம் ஏற்கனவே பார்வதியைக் காம்பராவில் பார்த்துவிட்டு ஓடி வந்தது. இன்று தாராளமாக அவளோடு பேசத் துடித்துக் கொண்டிருந்தது அது..

ஓட்டமும் நடையுமாகப் பார்வதியின் காம்பராவிற்கு வந்து சேர்ந்தான் ராமு. பார்வதி அப்போது காம்பராவில் இல்லை. தபால்காரர் கந்தசாமி மட்டுந்தான் படுக்கையில் இருந்தார். ராமு அவரின் அருகே உட்கார்ந்தான். அவர் முழு உடம்பையும் போர்வைக்குள்ளே நுழைத்துக் கொண்டு கிடந்தார். அவருக்கு ராமு வந்திருப்பது தெரியாது. ராமுதான் "அய்யா" என்று கூப்பிட்டு, தான் வந்திருப்பதைச் சொன்னான்.

தபால்காரர் போர்வையைக கழுத்து வரை நீக்கிப் ப்பார்த்து விட்டு, "யாரு ராமுத் தம்பியா ஆங்" என்று சொல்லிக் கொண்டே படுக்கையில் உட்கார்ந்தார்..

'அது கூட அவரால் முடியவில்லை.' மூச்சு இளைத்தது.. ரொம்பத் தளர்ந்து போய்விட்டார்.

"இப்ப எப்படி இருக்கு ஓங்களுக்கு?"

அவரைப் பார்த்துக் கொண்டே கேட்டான் ராமு. "நேத்திக்கி இன்னைக்கி நல்லா இருக்கு.. நாளைக்கு எப்படி இருக்கோ! கஷ்டம்தான்... நான் கஷ்டப்படுரதுன்னு போததுன்னு பார்வதியும் எனக்காக கஷ்டப்படுரா இப்ப கூடப் பான் வாங்க லயத்துக் கடைக்குப் போயிருக்கா.... இப்ப வந்திருவா..."

லேசான இருமல் வந்து அவரின் பேச்சை நிறுத்தியது. ராமுவுக்குப் பார்வதி எங்கே போனாள் என்ற கேள்விக்குப் பதில் கிடைத்து விட்டது. மௌனமாக இருந்தான்..

"தம்பி நீங்க வந்ததை யாரும் பார்த்தாங்களா?.."

தபால்காரர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மெதுவாகக் கேட்டார்.

ராமு "இல்லை"யென்று சொல்லிவிட்டு யோசித்தான். ஏன் இவர் இப்படிக் கேட்கிறார்? திடீரென்று அவன் மனதில் கட்டக் கருப்பையாவின் ஞாபகம் வந்து போனது.

"பார்த்திருந்தாப் போச்சி. அதுக்குக்கூட ஒரு கதையக் கட்டுவானுக.. இங்க இருக்கிறவனுகளுக்கு இதே பொழப்பா போச்சி. தெனம் ஏதாவது சொல்லுவானுக.. பாவம் பார்வதி... அதைக் கேட்டுட்டு அழுவா.. நாந்தான் அப்ப சமாதானம் செய்வேன். நானும் இல்லேன்னா அவ வாழ்ரதே கஷ்டம் யாருயாரு ஆறுதல் சொல்லுவா? இவனுக கண்டதை சொல்லியே அவளைச் சாகடிச்சிரு வானுக. கெட்ட சாதிப் பயலுக!" இதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. மூச்சு களைத்தது அவருக்கு..

ராமு மௌனமாக இருந்தான். ஆனால் யோசித்துக் கொண்டிருந்தான். அவனுக்கு அவர் சொன்னதன் அர்த்தம் தெளிவாகப் புரிந்தது. இன்று பார்வதி எத்தனையோ எதிர்ப்புகளைச் சமாளித்து வாழ்வது அவராலும் அவனாலும் தான்... அவர்கள் இருவருந்தான் அவளுக்குத் துணை.. அந்தத் துணையிலும் ஒரு துணை இழுத்துக் கொண்டு கிடக்கிறது.. அவரும் போய்விட்டால் அதற்குப் பிறகு யார் துணை?

ராமுவின் முகத்தில் லேசான புன்னகை பூத்து மறைந்தது. தபால்காரர் போய்விட்டால் இனி அவன் மட்டுந்தான்! ஆனால் இந்த உலகம் எந்த ரீதியில் ஏற்கும் அதை? தபால்காரர் துணையாக காம்பராவில் இருப்பதற்கே 'கதை' கட்டியவர்கள் அவனை விட்டு வைப்பார்களா? அவன் யோசித்தான்.

தபால்காரர் பேச்சைத் தொடராமல் மீண்டும் படுக்கையில் ஒரு பக்கம் சாய்ந்து படுத்துக் கொண்டார். அவரால் முடியவில்லை. மூச்சு இரைத்தது. ராமு பார்வதி வராததால் தபால்காரரிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

"இப்ப வந்திருவா பார்வதி நீங்க இருங்க தம்பீ.."

"நான் அப்புறம் வர்ரேனு சொல்லுங்க! அவசரமா வீட்டுக்குப் போவனும். நேரம் கிடைச்சா நாளைக்கி வர்ரேன்... நீங்க மருந்தெடுங்க.. ஆஸ்பத்திரிக்கு போவனும்னா என்னய கூப்புடுங்க.

தபால்காரர் 'சரி'யென்றார். அவருக்கு ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகிறேன் என்று சொன்னது ஒரு தெம்பைத் தந்தது. வேறு யார்தான் அவருக்கு உதவ இருக்கிறார்கள்.

ராமு காம்பராவை விட்டு வெளியே வந்து கரத்தை ரோட்டில் நடந்து போய்க் கொண்டிருந்தான்.

சற்றுத் தூரத்தில் பார்வதி வந்து கொண்டிருந்தாள். அவளைக் கண்டதும் அவன் அப்படியே நின்றான். அவள் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

ராமு மெள்ள அவள் அருகே போனான். சுற்றும் முற்றும் பார்த்தான். எவருமே இல்லை. அவள் விழிகள் எதையோ சொல்லத் துடிப்பது போன்று படபடத்தன..

"நான் தபால்கார அய்யாவ பார்த்திட்டுத்தான் வர்ரேன்..."

பார்வதிக்கு 'சுரு'க்கென்றது. காம்பராவிற்கு வந்தவர், தான் வரும்வரை இருக்காமல் புறப்பட்டு விட்டாரே! கவலையுடன் சொன்னாள்...

"அய்யாவுக்கு பான் வாங்கப் போனேன்.. நான் வர்ர வரைக்கும் இருந்திருக்கலாமே - அதுக்குள்ளே ஏன் அவசரமா வந்தீங்க. அங்கிருக்கப் பயமா?...."

"என்ன பயம்? யார் என்ன சொன்னாலும் எனக்கு சரிங்கிறதை நான் செய்வேன். உன்னோட பேசனும்னு வந்தேன். நீ இல்ல.. வந்திட்டேன்.."

அதற்கு மேல் ராமுவால் பேசமுடியவில்லை... அவளோடு என்னென்னவோ பேசவேண்டும் என்று நினைத்து ஆசைப் பட்டு ஓடோடி வந்தான். ஆனால் ஏனோ பேச்சு வரவில்லை. ஏன்? அவளைப் பார்த்ததும் தயங்கி விட்டானா?..

தலை குனிந்து நின்ற பார்வதியின் முகத்தில் மீண்டும் புன்னகை அரும்பியது.

"கூட்டம் நடக்கிற நேரம் பேசலேன்னு கோபமா? அந்த எடத்தில எப்புடி பேசுவேன். எல்லாரும் இருக்காங்களே!"

ராமு மெள்ளச் சொன்னான்.

“நான் கோபப்படல்ல... என்னோட ஏன் பேசலேனு எனக்கு தெரியும். ஆனா இப்ப நான் கோபப்பட்டது... லயத்துக்கு வந்திட்டு நான் வர்ற வரைக்கும் இருக்காம வந்ததுக்குத்தான்...”

ராமுவுக்குப் பெருமூச்சு வந்தது...

“அதான் இன்னொரு நாளைக்கி வர்ரேனு சொல் லிட்டேனே! அன்னைக்கி நல்லா பேசலாம்.”

கடைசி வார்த்தைக்கு ஒரு அழுத்தம் கொடுத்தான் ராமு. அது பார்வதிக்குச் சந்தோஷமாக இருந்தது... நன்றி யுணர்வுடன் ராமுவைப் பார்த்துச் சிரித்தாள் அவள்.... தூரத்தில் ஜீப் வரும் சத்தம் கேட்டது. பார்வதிக்கு லேசான பதற்றம் மனதில்... வார்த்தைகளாக வந்தன.

“டவுனுக்குப் போயிட்டு தொரதான் வர்ரான். நம்ம ரெண்டு பேரையும் பார்ப்பான்.. நீங்க தேயிலை செடிக்குள்ள ஒழிஞ்சுக்குங்க...”

ராமு ‘வெடுக்’கென்று கேட்டான்...

“ஏன் நான் ஒழிஞ்சுக்கனும்? நான் என்ன குத்தம் செஞ்சேன். ஒன்னோட பேசுரது குத்தமா?.. என்ன.... பார்த்தா பார்க்கட்டும். எனக்குப் பயமில்ல..”

ஜீப் அவர்களைத் தாண்டி மெதுவாக ஓடியது. ஜீப்பில் இருந்த துரையும் கணக்கப்பிள்ளையும் அவர்கள் இரு வரையும் ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு போனார்கள். அவர்கள் பார்த்தது அவளுக்குத் தெரியும். அவள் உள்ளத்தில் பெரிய கேள்விக்குறி கிளர்ந்து நின்றது..

துரை நேருக்கு நேர் பேசமாட்டான். இந்தக் கணக்கன் சும்மா இருக்க மாட்டானே! நேருக்குநேர் பார்க்கிறபோது பார்வையிலேயே வக்ர புத்தியைக் காட்டுவானே!"

"நம்மாளுகளைச் சுரண்டித் தோட்டத்தையே கொள்ளையடிக்கிரானுக..! அவனுக என்னா நம்மள பார்க்கிரது?"

பார்வதிக்கு இதமாக இருந்தது. ராமு துணிந்து விட்டான். அவனின் இதயம் அவளின் இதயத்தோடு நெருங்கி வருகிறது. அதன் அடையாளம் தான் அவனுடைய உறுதியான அந்த வார்த்தைகள்...

இயற்கையின் ஒப்பந்தப்படி வெளிச்சம் மெல்ல மெல்ல பின் வாங்கிக் கொண்டிருந்தது. இருட்டு தன் ஆட்சியை நீடிக்க முயற்சி கொண்டது.

லயத்திற்குப் பார்வதியைப் போகச் சொல்லிவிட்டு ராமு தன் லயத்திற்கு நடந்தான். சிறிது தூரம் நடந்தான்.. யாரோ முனகும் சத்தம் காதில் விழுந்தது. அங்கும் இங்கும் பார்த்தான்.. ஒருத்தரையும் காணவில்லை. அப்படியே நின்று சற்று யோசித்தான்.

பிறகு பாதையின் இடது பக்கமாய்ச் சரிவில் தேயிலைச் செடிகள் பக்கம் இறங்கிப் பார்த்தான். அங்கே தேயிலைச் செடிகளுக்குக் கீழே நிலத்தில் அவனுக்குத் தெரிந்த சாக்கு வியாபாரம் செய்யும் தங்கையா நாடார் மல்லாக்கக் கிடந்தார். அவரின் வாயில் துணி திணிக்கப்பட்டிருந்தது. கைகள் பின் பக்கமாய்க் கட்டப்பட்டிருந்தன.

## அத்தியாயம் – 8

நாடாரின் நிலையைப் பார்த்து ராமு பதறிப் போனான். அவரின் வாயில் திணிக்கப்பட்டிருந்த துணியை இழுத்தெடுத்து வீசிவிட்டு எப்போதுமே இடுப்பில் 'அரைஞாண்' கயிற்றோடு வைத்திருக்கிற மடக்குக் கத்தியை எடுத்து விரித்து கைகளைக் கட்டியிருந்த கயிற்றை 'டக்' 'டக்'கென்று அறுத்து விட்டான்.

நாடார், "தம்பி.. தம்பி" என்றவாறு கையெடுத்து ராமுவைப் பார்த்துக் கும்பிட்டார். ராமு அதைத் தடுத்தான்.

"என்னை ஏன் கும்புடுறீங்க?.. கடவுள கும்பிடுங்க.."

"இல்லத்தம்பி ஒன்னத்தான் கும்பிடுவேன்.. நீ தான் சாகப் போன என்னை காப்பாத்தின" என்றவாறு மெள்ள எழும்பி நிற்க முயன்றார். முடியவில்லை. கீழே விழுந்தார். ராமு அவரைத் தூக்கி நிறுத்திக் கொண்டான். நாடார் மீண்டும் கும்பிட்டுக்கொண்டே பேசினார்..

"தம்பி நீங்கதான் என்னைய காப்பாத்தினீங்க.. நீங்க மட்டும் வரலேன்னா நான் செத்துப் போயிருப்பேன். திருட்டுப் பயல்க ரெண்டு பேரு இப்புடி செஞ்சுட்டானுக.. சாமான் வாங்க வைச்சிருந்த அறுநூறு ரூபாவை எடுத்துக்கிட்டு போயிட்டானுக..."

அவரின் கண்கள் கலங்கின. அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. குரலும் அழுதது. சிறிது நேரம் வரை தேம்பி அழுதவர் பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு மறுபடியும் பேசினார்.

“என்னயத்தான் தெரியுமே. மாசாமாசம் சாமான் வாங்க வருவேன். வர்ர நேரம் கொஞ்சம் பணம் கொண்டா ருவேன். இதை நோட் பண்ணியிருக்கானுக. திருட்டுப் பயலுக... இன்னைக்கி ரெண்டு பேர் என் பின்னுக்கே வந்தானுக. நான் இதை சந்தேகமா நெனைக்கல்ல. நான் என் பாட்டுக்கு நடந்துகிட்டிருந்தேன்.. அப்பதான் திடீர்னு ஒருத்தன் ஓடிவந்து என்னை இறுக்கி புடிச்சிகிட்டான். வாயையும் பொத்திக் கிட்டான். மத்தவன் ஓடிவந்து வாயில துணிய வச்சான். கை ரெண்டையும் பின்னுக்கு வைச்சிக் கட்டினான். அப்புறம் சட்டை சேப்பில இருந்த பணத்தை எடுத்தான். பொறகு இரண்டு பேரும் சேர்ந்து தேயிலைச் செடிக்குள்ள தள்ளி விட்டுட்டு ஓட்டமா ஓடிட்டானுக.. எல்லாம் சொல்லி வைச்ச மாதிரி நடந்திச்சி... என்னால என்ன செய்யிரதுன்னு தெரியல்ல..”

“இனி தப்ப முடியாதுன்னுதான் நெனைச்சேன்... கடவுள் தான் தம்பிய இந்த, பக்கமா அனுப்பியிருக்கான்...”

நெஞ்சில் ‘சிலு’வைக்குறி இட்டுக் கொண்டார் அவர்.

“அவனுகள ஒங்களுக்குத் தெரியுமா?..”

“அவனுகள சரியா தெரியாது. ஆனா இப்பவும் அவனுக என் கண்ணுக்கு முன்னே நிக்கிற மாதிரி இருக்கு...”

ராமுவின் மூளையில் சில புகைப்படங்கள்.. அவனாக இருக்குமா? இவனாக இருக்குமா?... என்றவாறு வந்து போயின ஒருத்தன் சிறையில் இருக்கின்றான். அப்படியானால் இது மாடசாமியின் திருவிளையாடல்தான்... அவனுக்குத் துணை யாக வேறு ஒருத்தனும் இருக்கின்றான். அந்த இரண்டு பேரும்தான் இதனைச் செய்திருக்க வேண்டும்.. போன மாதம் கூட செல்லையாவின் பால் மாடுகளை இருட்டில் அவிழ்த்துக் கொண்டு ஓடிவிட்டார்கள். கையில் காசில்லை போலும்.. நாடாரிடம் கைவரிசையைக் காட்டியிருக்கிறார்கள், இன்று.

நாடார் அழுதார்.. "நான் யாவாரம் செய்ய வைச்சிருந் ததே அறுநூறு ரூபாதான். அதையும் எம்புட்டோ கஷ்டப் பட்டு சேர்த்தேன். அதை அடிச்சிகிட்டு போயிட்டா னுகளே... இனி எப்படித் தம்பி யாவாரம் செஞ்சு சாப்புடு வேன்? என் புள்ள குட்டிகளைக் காப்பாத்துவேன்?.."

ராமுவுக்குக் கண்கள் கலங்கி விட்டன. ஆயினும் அதனை சமாளித்துக் கொண்டு அவரைச் சமாதானம் செய்தான்...

"அஞ்சு ரூபாவுக்கு ஆளையே துண்டுதுண்டா வெட்டி போடுர காலத்தில நீங்க தப்பினதே பெரிய அதிசயம்.! பணம் போனா என்னா? தேடிக்கலாம். உசுர் போனா என்ன செய்ய முடியும்?.."

நாடார் தேம்பித் தேம்பி அழுதார், மறுபடியும்.

"தம்பி! நீங்க இல்லேன்னா?.."

அவரை இடைமறித்த ராமு, "அட இதுக்குப் போயி அழுவுறீங்களே அழாதீங்க.! வாங்க நம்ம லயத்துக்கு போயி டீ குடிப்போம்... வாங்க.." என்று சொல்லிவிட்டு அவரை மெதுவாக நடக்க வைத்து அவனும் மெதுவாக நடந்தான். இருவரும் லயத்திற்குப் போனார்கள்.

லயத்தில் ராமுவின் காம்பராவில் நாடாரைச் சுற்றி அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் கூடிவிட்டார்கள். ஒவ்வொரு வரும் நடந்த கதையை அறியத் துடித்தார்கள். அதற்கெல்லாம் சலிக்காமல் பதில் சொன்னார் நாடார். அப்படிச் சொன்ன பதிலில் எல்லாம் "தம்பி இல்லேன்னா செத்திருப்பேன்" என்ற வார்த்தைகள் ராமுவைப் புகழ்ந்தன.

மீனாட்சி, நாடாருக்குத் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். நாடாரும் 'டீ'யைக் குடித்துவிட்டு புறப்படத் தயாரானார்.

ராமு விடவில்லை. மீனாட்சியும் விடவில்லை. மற்றவர்களும் விடவில்லை.

"நல்லா இருட்டிருச்சி.. காலையில போவலாம். இங்க இருங்க! ஒங்க வீடா இத நெனைச்சுக்குங்க..."

நாடாரால் மறுத்துப் பேசமுடியவில்லை. அன்றிரவு அங்கேயே தூங்கினார். தூங்கும்போது அவர்களின் அன்பை நினைத்துக் கொண்டார். இந்தச் சின்ன இடத்தில் வாழ்கின்ற இந்த மனிதர்களின் இதயத்தில்தான் எவ்வளவு பரந்த அன்பு. வறுமையில் வாடினாலும் மற்றவர்களுக்கு ஒரு பிடிச் சோறு போடுவதைப் பெருமையாக நினைக்கிறார்கள் இவர்கள்! இவர்கள் எங்கே? நாகரீகம் என்ற போர்வையில் கதவைத் திறக்காமலே பேசுகின்ற நகரத்து மனிதர்கள் எங்கே?

காலையில் நாடார் புறப்பட்டபோது அவர் கையில் சில்லரைக் காசுகளையும் சில நோட்டுகளையும் கொடுத்து விட்டு சொன்னான்.

"இதில நாப்பது ரூபா இருக்கு... எங்களால முடிஞ்சது இதுதான்... செலவுக்கு வைச்சுக்குங்க..."

நாடார் மறுத்துப் பேசவில்லை. வாங்கிக் கொண்டார். பிறகு அவர் புறப்பட்டபோது ராமு துணையாக மெயின் ரோடு வரைக்கும் அவரோடு புறப்பட்டான். அவர்களுக்கு பின்னால் அவர்களுக்குத் துணையாக ராமுவின் வளர்ப்பு நாய் வீரனும் புறப்பட்டது.

தனக்குத்தானே ஒரு தைரியத்தை ஊட்டிக் கொண்ட பார்வதி இன்றுதான் முதன்முதலாக அந்த லயத்திற்குப் போய் ராமுவின் காம்பராவில் தயங்கித் தயங்கிக் கால் வைத்தாள். வராந்தாவில் சுருண்டு படுத்திருந்த நாய் வீரன் அவளைக் கண்டதும் 'விருட்'டென்று எழுந்து 'லொள்..' 'லொள்..'

என்று தன் பாஷையில் அவளை வரவேற்றது. பின்னர் அவளைச் சுற்றி வந்து மோந்து பார்த்துக் கொண்டிருந்தது. அவள் ஆடாமல் அசையாமல் பயந்து போய்ப் நின்று கொண்டிருந்தாள்.

காம்பராவில் ஒருத்தரும் இல்லை. இருந்திருந்தால் வீரன் போட்ட சத்தத்திற்கு வந்திருப்பார்கள். குரல் கொடுத்தும் கூப்பிடலாம் என்றால் யாரைக் கூப்பிடுவது? எப்படிக் கூப்பிடுவது? தவித்துக் கொண்டிருந்தாள் அவள். அவளின் நல்ல நேரம் பக்கத்துக் காம்பராக் கிழவியின் பேரன் மூர்த்தி ஓடி வந்தான். அவளைப் பார்த்துச் சிரித்துவிட்டு வீரனைப் 'போ போ' என்று விரட்டினான். வீரன் வெளியே ஓடியது. பார்வதி அப்பாடா என்று பெருமூச்சு விட்டாள். பின்னர் மூர்த்தியிடம் மெதுவாக, "ஒருத்தரும் இல்லையா?.." என்று கேட்டாள். மூர்த்தி 'நில்லுங்க.. கூட்டிக்கிட்டு வாரேன்' என்று வெளியே ஓடினான்.

பார்வதி பக்கத்துக் காம்பராவைப் பார்த்தாள்.. அப்போதுதான் அவளால் பக்கத்துக் காம்பராவில் உள்ள வர்கள் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர முடிந்தது. அவர்கள் ஏன் அவளையே பார்க்கிறார்கள்? இப்படித்தான் அவள் அந்தக் காம்பராவிற்கு வர அந்தப் படிகளில் ஏறி வந்தபோதும் பார்த்தார்கள். ஏன்? அவள் அங்கே புதியவளா? அவளைத்தான் அவர்களுக்குத் தெரியுமே!.. பின் எதற்காக அவர்கள் அவளோடு வெறுப்புக் கொண்டது போல் நடந்து கொள்கிறார்கள்? எவ்வளவோ காலத்திற்குப் பின்னர் இங்கே வந்திருக்கிறாள்.. "வாம்மா.. பார்வதி!" என்று ஒரு ஆள் கேட்க வேண்டுமே! அட கேட்கத்தான் வேண்டாம்... சிரிக்கவாவது கூடாதா?.. விதவை என்பதற்காக அவள் மீது அனுதாபமாவது இருக்கக்கூடாதா..!

பார்வதிக்கு ஏன் இங்கே வந்தோம் என்றிருந்தது முன்பின் யோசிக்காமல் வந்து விட்டோமா என்று

யோசித்தாள்.. சொந்த வேலைக்காக அவள் வரவில்லை. கோயிலில் வேலை செய்து கொண்டிருந்தபோது டவுனில் இருந்து இரண்டு பேர் ராமுவைப் பார்க்க வந்து அவன் இல்லாததால் அவளிடம் கேட்டார்கள். அவள் உடனே சற்றும் யோசிக்காமல் அவர்களைக் கோயிலிலேயே இருக்க வைத்துவிட்டு ராமுவைக் கூட்டி வருவதாக சொல்லி இங்கே வந்தாள். வருவதற்கு முன்னர் எதையும் யோசித்துப் பார்க்க வில்லை இங்கே வந்த பின்னர்தான் யோசித்துப் பார்க்க வேண்டி வந்தது.

மீனாட்சியை நினைக்கும் போது பார்வதிக்கு நடுக்கமே வந்தது. அவள் என்ன சொல்வளோ..? ஏற்கனவே மீனாட் சிக்கும் அவளுக்கும் நெருக்கமான உறவே இல்லை. இருவரும் பேச மாட்டார்கள். பார்வதிக்கு பேச ஆசைதான். மீனாட்சி பேசினால் தானே! எங்காவது 'எக்கச்சக்கமாக' நேருக்கு நேர் சந்திக்கும்போது கூட மௌனமாகப் போய் விடுவாள் மீனாட்சி. அவளோடு இன்று பேசமுடியுமா?

வருவது வரட்டும் என்ற குருட்டுத் தைரியத்தில் இருந்தாள் அவள். சிறிது நேரத்தில் மீனாட்சியை மூர்த்தி கூட்டிக் கொண்டு வந்தான்.

பார்வதியைப் பார்த்ததுமே மீனாட்சியின் முகத்தில் 'சுரு'க்கம் விழுந்தது. மனதில் இவள் ஏன் இங்கே வந்தாள்?... என்ற எண்ணம் வளர்ந்தது. ஆனால் எதையும் வெளிக் காட்டாமல் லேசான புன்னகையுடன் பார்வதி இருந்த இடத்திற்கு வந்தாள்.. அவள் வந்ததும் வெளியே போயிருந்த வீரன் உள்ளே வந்து அவளருகே நின்றுகொண்டு வாலை ஆட்டியது. மூர்த்தி பார்வதியையே பார்த்தான்.

மீனாட்சி பேசவில்லை. 'என்ன' என்பது போல் நெற்றிப் புருவத்தை உயர்த்தினாள். அது பார்வதிக்குப் புரிந்ததோ என்னவோ அவள் தயங்கிப் பேசினாள்...

"டவுண்ல இருந்து உங்க மகனை தேடி யாரோ வந்திருக்காங்க.. அவங்க இப்ப மாரியம்மன் கோயில்ல இருக்காங்க. மகனை கோயிலுக்கு வரச்சொல்லுங்க.."

மீனாட்சி தலையாட்டினாள். மீனாட்சியின் எண்ணம் பார்வதிக்குப் புரிந்தது.

"நான் வாறன்.."

பார்வதி உடனே புறப்பட்டாள்.

மீனாட்சி ஒன்றுமே பேசவில்லை. ஆனால் அவள் போனால் போதும் என்று எண்ணிக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பார்வதி லயத்திற்கு வந்தது பிடிக்கவே இல்லை. கோபத்துடன் இருந்தாள். அந்த நேரம் பார்த்து மூர்த்தியின் பாட்டி அவளிடம் வந்து பேசினாள்.

"ஆமா இவ பார்வதி இல்ல.. எதுக்கு வந்திட்டு போறா?" அவ்வளவுதான்.. மீனாட்சிக்கு அடக்கி வைத்திருந்த உணர் வுகள் எல்லாம் வெடித்தன.

"யாரோ வந்திருக்காங்களாம்.. கோயில்ல... அதை சொல்லிட்டுப் போக வந்தா. இங்கதானே கோயில் தலைவர் இருக்காரு.. இவனைத் தொலைக்கனும் மொதல்ல.. அப்பதான் தோட்டம் உருப்படும். இல்லாட்டி இப்படித்தான் ஆள்வரும். இவளுக்கென்னா கோயில்ல வேல.. தாலியறுத்தவ.. கொஞ்சம் கூட மரியாதை இல்லாம ஆம்பள ஆளுகளோட வேலை செய்யிராளே, இவ எல்லாம் பொம்பளயா?."

கிழவி 'பொக்'கை வாயைத் திறந்து சிரித்துவிட்டு "இவ மாதிரி ஆளுகளாலதான் மழை பெய்ய மாட்டேங்குது. வானம் கறுக்குதில்ல.." என்றாள்.

அவர்கள் பேசியது பார்வதியின் காதில் விழுந்தது. இங்கே வந்ததற்கு இவர்கள் நல்ல வரவேற்புத் தந்தார்கள்.

என்பதை எண்ணிக்கொண்டே கவலையோடு படிகளில் இறங்கி வேகமாக 'விறுவிறு'வென்று கோயிலை நோக்கி நடந்தாள்.

கோயிலுக்கு வந்த பார்வதி அரைகுறையாக வைத்து விட்டுப் போயிருந்த ஓலைகளைப் பின்னத் தொடங்கினாள். அவளுக்கு இந்த இரண்டு நாட்களாக இதுதான் வேலை. தோட்டத்தில் வேலை இல்லாததால் இது வசதியாகப் போய் விட்டது. காலையிலிருந்து அந்திவரை வேலை செய்தாள். அவளுக்குத் துணையாக பூச்சிக் கிழவியும் ஓலை பின்னினாள். இருவரும் ஓலைகளைப் பின்னிப் போடப்போட அந்த ஓலைகளைக் கோயிலுக்கு முன்னே போட்டிருந்த மடுவத்தின் கூரையில் போட்டார்கள் மற்றவர்கள்..

அந்த மடுவத்தை ராமுவும் முத்துவும் தான் கட்டி னார்கள். கூரை மட்டும்தான் போட வேண்டும் அதற்கு. அதையும் போட்டு விட்டால் அந்த வேலையும் முடிந்துவிடும். அந்த வேலை முடிந்தால் நூல் நிலையம் தயாராகிவிடும்.

ராமுவும் முத்துவும் இன்று காலையிலிருந்து நூல் நிலையத்தைக் கட்டி வருகிறார்கள். அவர்களுக்குத் துணை யாக மேலும் மூன்று பேர் இருந்தார்கள். நாளை பகலுக்குள் அந்த வேலையும் முடிந்து விடும். அது முடிந்ததும் தேர்த் திருவிழாவுக்கான வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான்.. நாளும் நெருங்கி விட்டது.. சரியாக இன்னும் இரண்டு நாள் தான் தேர்த்திருவிழாவிற்கு இருக்கிறது..

அரை மணித்தியாலத்திற்குப் பின்னர் ராமு கோயிலுக்கு வந்தான். அவனுடைய மனம் பார்வதியைச் சந்திக்கத் துடித் தாலும் அதை அடக்கிக் கொண்டு அவனுக்காகக் காத்திருந் தவர்களை முதலில் பார்த்தான். அவர்கள் அவனுக்குத் தெரிந்தவர்கள்தான். டவுனில் ஒரு கடையில் வேலை

செய்பவர்கள். அவர்களில் ஒருத்தர் உரிமையோடு சிரித்ட்டுப் பேசினார்..

“ஒங்கள பார்க்கத்தான் வந்தோம். நம்ம கடை மொதலாளி பங்களாவுல வேலை செய்ய பத்து பன்னெண்டு வயசில பொடியனோ - பிள்ளையோ வேணுமாம். நீங்க கொஞ்சம் முயற்சி செஞ்சு ஒரு பெடியனையோ - பிள்ளை யையோ தேடித் தர்ரீங்களா? நீங்க சொன்னாக் கேப்பாங்க!”

ராமுவுக்குச் ‘சடா’ரென்று முத்துவின் தம்பி நினைவு நெஞ்சில் விழுந்தது. முத்துவின் தம்பிக்கு பதினைந்து வயதிருக்கும். ஆளைப் பார்த்தால் பத்துதான் மதிக்கலாம். டவுனில் பங்களாவில் வேலைக்குப் போனான். ஒரு நாள் ஒரு கிளாஸை தவறுதலாகக் கீழே போட்டு உடைத்ததற்காக அவனுடைய கையில் பழுக்கக் காய்ச்சிய கம்பியால் சூடு போட்டு விட்டாள் வீட்டுக்காரி. காயத்தோடு முத்துவின் தம்பி தோட்டத்திற்கு ஓடி வந்துவிட்டான். அதற்குப் பிறகு அவன் வேலைக்கே போகவில்லை. இதைப் பார்த்த மற்றவர் களும் தங்கள் பிள்ளைகளை வேலைக்கு அனுப்பப் பயந்தார்கள்.

அன்று கையில் சின்ன கைப் பையோடு முத்துவின் தம்பி அழுதது இன்னும் ராமுவிற்கு நினைவில் இருந்தது. ஓ! என்னமாய்க் குமிறிக்குமிறி அழுதான். தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்ட ராமு சமாளித்தான்.

“கோயில் திருவிழா இன்னும் ரெண்டு நாள்ல இருக்கு. அதுக்காக வேலை செஞ்சுகிட்டிருக்கோம். திருவிழா முடி யட்டும். கேட்டுப் பார்த்து சொல்லி அனுப்புரேன்..”

“மறந்திராம சொல்லியனுட்புங்க.. நாங்க வர்ரோம்..” அவர்கள் அவனிடம் சொல்லிவிட்டுப் போனதும் அங்கே வேலை செய்து கொண்டிருந்த கோவிந்தன், “என்னா தம்பி!

பொடியன் தானே வேலைக்குக் கேட்டாங்க.. சொல்லியிருந்தா என் மகனை அனுப்பியிருப்பேனே. அவன் இங்க சும்மாதானே இருக்கிறான்..'' என்று ஆசையுடன் கேட்டான்.

ராமுவுக்குக் கோபம்தான் வந்தது. “ஐம்பது ரூபா சம்பளத்திற்காக தன் மகனைப் படிக்க வேண்டிய வயதில் படிக்க வைக்காமல் வெளி உலகமே தெரியாமல் வேலை செய்ய அனுப்புகின்றேன் என்கிறானே! இவனும் இவன் பரம்பரையும் உலகமே தெரியாமல் லயத்திலேயே அடைத்து வைக்கப்பட்டதை நினைக்காமல் தன் மகனையும் தன்னைப் போலவே ஆக்க ஒரு வீட்டுக்கு வேலைக்கு அனுப்ப இவனே விரும்புகிறானே; இப்படி வாழவேண்டும் என்பது இவர் களுக்கு மட்டும் வகுத்த சட்டமா?

சில நிமிடங்களில் குமுறிய கோபத்தை அடக்கி ஓ! இவனிடம் கோபப்படக்கூடாது. இவனும் உலகம் தெரியாமல் உழைத்து வந்தவன்தானே என்று எண்ணிக் கொண்டு சமாதானமானான். அதன் பின்னர் பேசினான்.

“நீங்க சொன்ன மாதிரி ஒங்க மகனை அங்க அனுப்பினா ஒங்களுக்கு மாசா மாசம் அம்பது ரூபா கெடைக்கும். அதுக்கும் மேல யாரும் குடுக்க மாட்டாங்க. ஆனா ஒங்க புள்ள அங்க வீடுகள்ல - பங்களாவுல படுற கஷ்டம் ஒங்களுக்குத் தெரியுமா. வேலைக்கி வந்துட்டாங்கிரதுக்காக கொஞ்சம் கூட மனுசத்தன்மை இல்லாம வேல வேலன்னு அவனைப் புழிஞ்சி எடுப்பாங்க! ஒழுங்கா உடுத்தவுட மாட்டாங்க! சாப்பாடு குடுக்க மாட்டாங்க! இதல வேற தப்பு செஞ்சா அடி உதை குடுப்பாங்க. சில பங்களாவுல முத்து தம்பிக்குப் போட்ட மாதிரி சூடு போடுவாங்க. அவங்களுக்கு அவங்க குடுக்கிற சம்பளம்தான் பெருசா தெரியும்! சின்ன புள்ளதானேன்னு நெனைக்க மாட்டாங்க! இதுக்கு நாங்க எடம் குடுக்கக் கூடாது! நம்ம புள்ளைகள வேலைக்கு

அனுப்புனோன்ன சோத்துக்கு இல்லாம வருதுன்னுதான் டவுன்ல நெனைக்கிராங்க. அதனால கஷ்டப்பட்டாவது நாலு எழுத்து வாசிக்க எழுதப் படிக்க வைக்கனும். வேலைக்கி சின்ன வயசில அனுப்பக்கூடாது. படிக்க வைக்கனும். அப்பதான் நாங்க முன்னேறலாம். இல்லேன்னா எங்கள கூலி வேல செய்யற சாதின்னே நெனைச்சிருவாங்க!..."

கோவிந்தனின் மூளையிலும் ராமுவின் வார்த்தைகள் புகுந்து உணர வைத்தன. சில உண்மைகள் அவனுக்குப் புரியலானது.

"நீங்க சொல்றது ஞாயம்தான்! நம்ம பரம்பரையே தோட்டத்தில அடிமையா இருக்கு. நம்ம பாட்டா இங்கதான் வேலை செஞ்சாரு.. நானும் இங்கதான் வேல செஞ்சேன் - செய்யிரேன்! இந்தத் தோட்டம்தான் ஒலகம். இந்த ஒலகத்திலதான் வருசம் பூராவும் கெடக்கிரோம்! மகனை யாவது படிக்க வைப்போம். அவனாவது நல்லா வரட்டும்!"

கோவிந்தன் வேலை செய்யத் தொடங்கினான். ராமு, பார்வதி ஓலை பின்னும் இடத்திற்குப் போனான். பார்வதியின் முகத்தில் சோகம் கப்பிக் கிடந்தது. இதயம் பின்னுகின்ற எண்ணங்களை அவள் முகம் பிரதி பலிக்கின்றதோ! அவன் கவலையுடன் நின்று கொண்டிருந்தான். அவளோ எதுவும் நடக்காததைப் போல் ஓலை பின்னிக் கொண்டிருந்தாள். என்றாலும் அவள் அவனோடு முகம் காட்டிப் பேசாம லிருப்பதை ராமு உணராமலில்லை. அவளுடைய உள்ளம் ராமுவின் அம்மா கொட்டிய வார்த்தைகளால் வேதனை ஏற்பட்டு அதில் தவிக்க வேண்டும் என்பதை அவன் உணர்ந்தான். பிறகு மெள்ளப் பேச்சுக் கொடுத்தான்.

"அம்மா ஏசினதுக்கு என்னோட ஏன் கோவிக்கனும்? அவங்க எப்பவும் அப்படித்தான்!..."

அம்மாவின் வார்த்தைகளுக்கு மகனோடு கோவிப்பதில் நியாயமில்லை என்பதை ராமுவின் பேச்சிலிருந்து உணர்ந்த பார்வதி அவனை நிமிர்ந்து பார்த்து விட்டு புன்னகைத்தாள். ஆனாலும் அந்தப் புன்னகை அவளின் வேதனை இன்னும் குறையவில்லை என்பதைக் காட்டியது. "அதுக்காகக் கவலைப் பட வேணாம்! அந்த நேரம் நா இருந்திருந்தா அம்மா ஏசியிருக்க மாட்டாங்க. அப் படி ஏசினாலும் உனக்காக நா பேசியிருப்பேன்!"

அவள் பதில் பேசவில்லை. உள் மனதில் ஒரு தைரியம் பிறந்தது. இனி யார் என்ன சொன்னாலும் அவள் பயப்பட மாட்டாள். அப்படித்தான் அவள் உள்ளுணர்வு சொல்லியது.. ஆயினும் அவனை ஏனோ நேருக்கு நேர் பார்க்கத் தயங்கினாள்.

"இம்புட்டு சொல்லியும் என் மேல ஒனக்கு நம்பிக்கை இல்லையா?"

"நம்பிக்கை இருக்கிரதுனாலதான் ஒலை பின்னிக் கிட்டிருக்கிரேன்! இல்லேன்னா லயத்தில அழுதுகிட் டிருப்பேன்.."

குனிந்து கொண்டே பதில் சொன்னாள் பார்வதி. அவளின் முகத்தைப் பார்க்கத் துடித்தான் ராமு. "நிமிர்ந்து பார்த்தா என்னா? கொறைஞ்சா போகும்..!" "ஒன்னும் கொறையாது நல்ல பாருங்க!" என்ற பார்வதி ராமுவை நிமிர்ந்து பார்த்தாள். அவனை நேருக்கு நேர் பார்த்ததில் மலர்ந்த வெட்கத்தில் முகம் செம்மையுற தலை குனிந்தாள்.

ராமு யோசித்தான். ஓ! அவள் ஒரு வசந்தத்தில் மலர்ந்து குலுங்கும் புதுமை மலரைப் போல் எவ்வளவு சௌந் தர்யத்தோடு இருக்கிறாள்!

## *அத்தியாயம் – 9*

*பார்வதி ஓலை பின்னத் தொடங்கினாள். அவளுக்கு ஒரே சந்தோஷம். அதன் உந்துதலில் அவளின் கைகள் சுறுசுறுப்பாக இயங்கின. கண்களோ அடிக்கடி ராமுவைப் பார்த்துக் கொண்டிருந்தன. அந்தக் கண்கள் பார்க்காதபோது அவனுடைய கண்கள் அவளையே பார்த்துக் கொண் டிருந்தன. இந்த ரகசிய நாடகம் இரண்டு பேரின் வேலைக்கு நடுவேதான் நடந்து கொண்டிருந்தது.*

*அன்று இருட்டும் வரை எல்லோரும் வேலை செய் தார்கள். இருட்டிய பின்னர் பார்வதியையும் மற்றவர்களையும் லயத்திற்குப் போகச் சொல்லி விட்டு ராமுவும் முத்துவும் வேறு சிலரும் தேருக்குப் பொருத்தத் தேவையான பாகங் களையும் சகடையையும் கொண்டு வர அங்கிருந்து ஐந்து மைலுக்கு அப்பால் இருக்கும் முருகன் கோயிலுக்கு நடந்து போனார்கள். பார்வதிக்கும் அவர்களோடு போக ஆசைதான். ஆனால் அவர்களோடு அந்த இருட்டில் போக முடியுமா? போனால் என்ன நினைக்குமோ இந்த உலகம்?*

*அவர்களோடு போக வேண்டுமென்ற விசித்திரமான கற்பனையைக் கைவிட்டாள் பார்வதி. ஆனால் அதற்காக அவள் லயத்திற்குப் போகவும் தயாரில்லை. முன்னர் என்றால் தபால்காரரைப் பார்க்க வேண்டிய கட்டாயம் இருந்தது. இப்போது அவர் சுகமாக இருக்கிறார்.. கவலையில்லை. விடியவிடிய கோயிலில் வேலை செய்யலாம். மின்விளக்கு வேண்டுமே.! தேங்காய் எண்ணெய் விளக்குதான் இருக்கிறது. அது ‘மினுக்’ ‘மினுக்’ போட்டு எரிகிறது.. அந்த வெளிச்சத்தில் என்ன செய்யமுடியும்? வெளிச்சம் நன்றாக இருந்தால் ஓலை பின்னலாம். யோசித்தாள் பார்வதி.*

இரவு ஒன்பது மணி... இருண்டு கிடக்கின்ற வானத்தின் கீழ் வெறி கொண்டு அலையும் காற்று பாதையோரத்தில் நிற்கின்ற மரங்களில் மோதி பயங்கர சத்தத்தைக் கிளப்பிக் கொண்டிருந்தது. பெயர் சொல்லவும் ஒரு நட்சத்திரமில்லை.

கரத்தை ரோட்டில் ராமுவும் முத்துவும் மற்றவர்களும் ஆர்வத்தோடு தேர்ச்சகடை யைத் தள்ளிக் கொண்டு வந்தார்கள். சகடையைக்கெ ண்டு வந்து விட்டதில் எல்லோ ருக்கும் தாங்க முடியாத பெருமை. ஆனால் அவனுக்குத்தான் தெரியும் இந்த சகடையையும் அதில் பொருத்த வேண்டிய பாகங்களையும் கொண்டு வர ஒரு போராட்டத்தையே நடத்தியது. ராமு அந்தப் போராட்டத்தை நினைவு படுத்திப் பார்த்தான்.

பத்து நாட்களுக்கு முன்னர் கூட்டத்தில் பேசியபடி டவுனில் உள்ள பிள்ளையார் கோயிலுக்குத் தேர் தரச் சொல்லி கடிதம் எழுதினான் ராமு. இரண்டு நாட்களில் தர முடியாது என்று பதில் வந்தது. ராமு கோபத்தில் கடிதத்தை எடுத்துக் கொண்டு சந்திக்கடை முதலாளியோடு கோயிலுக்குப் போனான். அவனோடு முத்துவும் போனான்.

டவுனில் கோயிலின் நிர்வாக சபைத் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் சிலர் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் அவனுக்குத் தெரிந்தவர்கள். அவர்கள் ஒவ் வொருவரும் ஒவ்வொரு கடைக்கு முதலாளி. பத்து வரு டத்திற்கு முன்னர் மாதா மாதம் சம்பளத்தன்று சிட்டை புத்தகத்துடன் கடன் வசூலிக்க லயம் லயமாக ஏறி இறங்கியவர்கள் இன்று அதையெல்லாம் மறந்து பெரிய முதலாளியாகி ஆளே மாறியிருக்கிறார்கள். அவனைத் தெரியுமோ என்னவோ? தெரிந்திருந்தால்தான் தேர் தந்திருப் பார்களே! ராமு அவர்களிடம் 'ஏன் தேர் தரமுடியாது?' என்று கேட்டான். அதற்குப் பதில் கோயில் தலைவரிட மிருந்து வந்தது.

"தோட்டத்துத் துரைகிட்ட லெட்டர் வாங்கிட்டு வாங்க. தேர் தர்ரேன். அவரைத்தான் எங்களுக்குத் தெரியும்! அவர் சொன்னா சரிதான்.!"

"எங்களுக்கு தர்ரதுன்னா தாங்க. துரைகிட்ட லெட்டர் கேக்க மாட்டோம். அவருக்கும் திருவிழாவுக்கும் சம்பந்தம் இல்ல. துரையிடம் இந்த லெட்டருக்காக பிச்சை கேட்க விரும்ப மாட்டோம்."

அவர்களோ 'லெட்டர்' கொண்டு வரச் சொன்னார்கள். சந்திக்கடை முதலாளிக்குச் சூடாகியது..

"எங்ககிட்ட இந்த கோயில் கட்ட பணம் வாங்கலாம்னா எங்களுக்குத் தேர் தந்தா என்னா? சாமிய வைச்சி இழுக் கத்தானே தேர் கேக்கிறோம்! தேர்ல நாங்களா போகப் போறோம்.."

சந்திக்கடை முதலாளியும் ராமுவும் எவ்வளவோ சொல்லியும் அந்தக் கோயிலின் நிர்வாகசபை கேட்கவே இல்லை. கோயிலுக்குள் இருக்கிற கடவுள் எல்லோருக்கும் அருள் கொடுத்தாலும் அந்தக் கோயிலை நிர்வகிக்கிற முதலாளிகள் எல்லோருக்கும் 'அருள்' கொடுக்கத் தயா ரில்லை. கடைசியில் அவர்களை முதலாளியென்றும் பார்க் காமல் 'நறுக்'காக நாலு வார்த்தையில் ஏசிவிட்டு தோட்டத்திற்குக் கவலையுடன் வந்தார்கள். எல்லோருக்கும் டவுனில் தேர் தரமுடியாது என்று சொல்லிவிட்டது தெரிந்தது. அழகர் பாஸ் ஓடிவந்தார்.

"ஒங்களுக்குத் தேர்தானே வேணும். என்னோட வாங்க... வேற கோயில்ல வாங்கித்தாரேன்.. அங்க ஏன் போய் கேட்டீங்க... அவனுக தரமாட்டானுகளே.. மத்தவங்க சாமி கும்பிடுரது... திருவிழா செய்யிரது.. தேர் இழுக்கிறது எல்லாம் அவனுகளுக்குப் புடிக்காதே!"

அப்போதே அவர்களை அழைத்துக்கொண்டு டவுனில் உள்ள முருகன் கோயிலுக்குக் கூட்டிப் போனார். முருகன் கோயில் நிர்வாகியிடம் பேசி தேர் கொண்டு வர ஏற்பாடு செய்து கொடுத்தார். இன்று அங்கிருந்து தான் தேரை இழுத்துக் கொண்டு வருகிறார்கள்.

கரத்தை ரோட்டு வழியாக வந்து கொண்டிருந்த சகடை கோயிலை நெருங்கிக் கொண்டிருந்தது. சகடையைத் தள்ளிக் கொண்டே கோயிலை உற்றுப் பார்த்தான் ராமு. கோயிலில் இருந்து வெளிச்சம் தெரிந்தது.. அது என்ன வெளிச்சம்? சிட்டி விளக்கு வெளிச்சமா?.. சிட்டி விளக்கா இவ்வளவு பிரகாசமாக இருக்கிறது? அனைவரும் உற்றுப் பார்த்தார்கள் கொஞ்ச நேரத்திற்குப் பிறகு தான் அது பெரிய லந்தாரத்தின் வெளிச்சம் என்பதைக் கண்டார்கள். கோயிலுக்குப் போன பிறகுதான் அந்த வெளிச்சத்தில் தனியாகப் பார்வதி ஓலை பின்னிக் கொண்டிருப்பது தெரிந்தது.

ராமுவுக்கு வியப்பாக இருந்தது. அதைவிட வியப்பு முத்துவுக்கும் மற்றவர்களுக்கும். அனைவரும் அவளையே பார்த்தார்கள். அந்தப் பார்வை எல்லோரும் போன பின்னர் இவள் மட்டும் தனியாக ஏன் அக்கறையோடு வேலை செய்கிறாள்?" என்று கேட்பதைப் போலிருந்தது. ராமு அவள் அருகே போனான்...

"எல்லாரையும் லயத்துக்குப் போகச் சொன்னேன். நீ மட்டும் லந்தார வெளிச்சத்தில் ஓலை பின்னிக் கிட்டிருக் கிறயே! ஓலைக்கு அப்புடி என்ன அவசரம்? காலையில பின்னினா போதும்தானே..! யார் பின்னச் சொன்னா?"

"சொல்லித்தான் ஓலை பின்னனுமா?.." பார்வதி கேட்டாள். பிறகு சிரித்தாள். ஓ.. அந்தச் சிரிப்பு இருட்டில் என்னமாய்க் 'கலகல'த்தது. அது அவன் நெஞ்சை

இழுக்கிறது. அவன் அவளையே பார்த்தான்.. கழுத்திலும் காதிலும் நகைநட்டு இல்லாமல் வெள்ளைச் சேலையிலும் எவ்வளவு அழகாக இருக்கிறாள்..!

இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.. இவர்களின் சிரிப்பை முத்து கவனித்தான். அப்போது அவன் மனதில் சில கேள்வி அதற்குப் பதில்.. ராமுவிடமிருந்துதான் வர வேண்டும். அதற்கான சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் முத்து.

சிறிது நேரத்திற்குப் பின்னர் எல்லோரும் லயத்திற்குப் புறப்பட்டார்கள். எல்லோருக்கும் முன்னால் பார்வதி லந்தாரத்தோடு நடந்தாள். முத்து ராமுவின் காதில் 'குசு' 'குசு'த்தான்.

"கேக்கிரேன்னு கோவிச்சுக்காதே! இவ இப்புடி வந்து வேல செய்யலாமா?.. பார்க்கிறவங்க என்ன சொல்வாங்க."

"யாரும் எதையும் சொல்லட்டும்.. ஆனா அவ செய்யிரது சரியா பிழையான்னு ஒனக்குத் தெரியுந்தானே? அவ கோயில்ல தானே வேலை செய்யிரவா... இது குத்தமா?.. அது சரி இத்தனை பொம்பள ஆளுக இருந்தும் ஒருத்தியும் வராம இவமட்டும் வேலை செய்யிராளே அதை யோசிச்சு பார்த்தியா?"

ராமு நெஞ்சுக்குள் கிளம்பி வந்த கோபத்தை அடக்கிக் கொண்டான். முத்து அதற்கு மேல் பேசவில்லை. மௌனமாக இருந்தான். ஆனால் அதே நேரத்தில் ராமுவுக்கும் பார்வதிக்கும் உள்ள உறவு பற்றி பீலியடியிலும் - சம்பள வாசலிலும் அடிபடுகின்ற கதைகளில் கொஞ்சமாவது உண்மை இருக்கத்தான் செய்கிறது என்பதை உணர முடிந்தது அவனால்.

## அத்தியாயம் – 10

இன்றுதான் தேர்த் திருவிழா.

பொழுது 'பலபல'வென்று விடிவதற்கு முன்னரே ராமுவும் முத்துவும் கோயில் கமிட்டியைச் சேர்ந்த சிலரும் கோழி கூவுவதற்கு முன்னர் இருட்டில் குளிர் என்றும் பாராமல் பீலியில் தலையைப் பிடித்துக் குளித்தார்கள். விடிந்த பின்னர் குளிக்க நேரம் இருக்குமோ என்னவோ சொல்லமுடியாது. அவ்வளவு வேலை இன்னும் இருக்கிறது.

குளித்து முடிந்ததும் அவர்கள் அத்தனை பேரும் லயத்துக் கடை வாசலில் தொட்டியிலிருந்த நெருப்பைச் சுற்றி உட்கார்ந்து குளிர் காய்ந்தார்கள். அவர்கள் குளிர் காயும் போது லயத்துக்கடை முதலாளி ராக்கன் எல்லோருக்கும் 'டீ' ஊற்றினான். ஒவ்வொருவராக நெருப்பைவிட்டு எழும்பி 'டீ' குடித்தார்கள். ஒரு சிலர் இன்னும் நெருப்பையே சுற்றிக் கொண்டிருந்தார்கள்.

ராமு 'டீ' குடித்துக் கொண்டே,

"கொஞ்சம் நெருப்பில காஞ்சாப் போதாதா? ஒரேயடியாக ஒட்டிக்கிட்டீங்க! வாங்க டீ குடிங்க... டீ குடிச்சா உடம்பு உள்ளேயும் சூடாகும்.. குளிர் தாங்கும்" என்று அவர்களை அழைத்தான். அவர்களும் ஒவ்வொருவராக 'டீ' குடிக்கத் தொடங்கினார்கள்.

குளிக்கப் போகும்போதே லயத்துக்கடை ராக்கனை எழுப்பி 'டீ' போடச் சொல்லிவிட்டுப் போனார்கள். அதனால்தான் இந்த நேரத்தில் 'டீ' குடிக்க முடிந்தது.

இல்லாவிட்டால் அந்த நேரத்தில் யார் போட்டுத் தருவா. பார்வதியிடம் சொன்னால் செய்வாள். ஆனால் இவர்கள் அதைத் தவறாக நினைத்துவிட்டால் ஏற்கனவே இது சம்பந்தமாக முத்துவின் மனதில் சில எண்ணங்கள் குடியேறி இருக்கின்றனவே.

'டீ' குடித்து லயத்துக் கடை ராக்கனிடம் நன்றி சொல்லிக் காசையும் கொடுத்துவிட்டு எல்லோரும் ஒரே ஒரு லாந்தரோடு வந்தார்கள். ஒரு லாந்தார் போதாதென்று லயத்துக்கடை ராக்கனின் லாந்தரையும் வாங்கி வந்தார்கள்.

இரண்டு லாந்தர் வெளிச்சத்தில் அவர்கள் வேலையை ஆரம்பித்தார்கள். என்ன வேலை? பொறுமையுடன் செய்ய வேண்டிய வேலை.. இருத்து ஓலை பின்ன வேண்டிய வேலைதான் அது..

முத்து முதலில் ஓலை பின்னுவதற்குத் தோதாக மடக்குக் கத்தியால் வெட்டி வெட்டிப் போட்டான். மற்றவர்கள் பின்னத் தொடங்கினார்கள். நேற்று இரவே குருத்து ஓலையை மரத்திலிருந்து வெட்டிப் போட்டதால் இன்று 'லேசாக'ப் போய்விட்டது. ஆனாலும் தோரணம் கட்ட ஓலை ரொம்பப் பின்ன வேண்டியிருந்தது.

முழுத் தோட்டமே தோரணம் கட்ட வேண்டும் என்றால் லேசா? புதிதாகக் கட்டிய நூல் நிலையத்தைச் சுற்றியும் கோயிலுக்கு வரும் பாதை நெடுகவும் இரு பக்கங்களிலும் சந்திக் கடையருகே, எஸ்டேட் கேட்டில் லொறி உயரத்திற்கு மேலே கட்டித் தொங்கவிட பின்னப் பட்ட குருத்தோலை ரொம்ப வேண்டும் தானே..? அதையெல்லாம் பின்னி முடிக்கும்போது வெளிச்சம் வரும்... மற்றவர்களும் வருவார்கள்..

லாந்தர் வெளிச்சத்தைத் தவிர வேறு வெளிச்சமே இல்லை. தூரத்தில் நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன.

அவர்கள் மௌனமாகத் தங்கள் வேலையைக் கவனித் தார்கள். ராமுவின் கைகளோ இயந்திர கதியில் ஓலையைப் பின்னிக் கொண்டிருந்தன. ஆனால் மனமோ பார்வதியைச் சுற்றிப் பின்னல் போட்டுக் கொண்டிருந்தது. பார்வதி எப்போது வருவாளோ? விடிந்ததும் நிச்சயம் வருவாள்!

இந்த நேரத்தில் இங்கே பின்னுகிறார்கள் என்று தெரிந்தால் கூட ஓடிவந்து விடுவாள். ஆனால் ராமுதான் விடிந்ததும் வரச் சொல்லியிருக்கிறான். அதுவும் அவளுக் காகவே.... நல்லது கெட்டது தெரியாமல் வேலை செய்ய வந்தால் அதைக்கூடத் தவறாகச் சொல்லி விட்டால் என்ன செய்ய முடியும்? தேர்ச் சகடை கொண்டு வந்த அன்று பார்வதி ஓலை பின்னிக் கொண்டிருந்த கதையை அமுக்கி, வேறு கதையைக் கட்டி விட்டார்கள்.

"ராத்திரி பத்து மணி வரைக்கும் அவளுக்குக் கோயில்ல என்னா வேல..? அப்படி ராவு ராவா செய்ய என்ன வேலை இருக்கு? ம்.... கோயில் வேலன்னு என்னா செய்யிராளோ"

பீலியடியில் அப்படிச் சொன்னதை அவன் காது படவே கேட்டான்.. அவள் வெளிச்சத்தில் வருவதே நல்லது...

அப்போதுதான் பின்னி முடித்த ஒரு ஓலைக் குருத்தை உற்றுப் பார்த்தான்... அது அழகாக இருந்தது... ஐந்து பின்னல்கள் ஓலையில் விழுந்திருந்தன. நீளமான ஓலை.. அதனால் எத்தனை பின்னல்கள்... அதிலே அழகு.. அவனுக்குப் பார்வதியின் கூந்தல்தான் நினைவில் வந்தது. அந்தக் குருத் தோலையைப் போல அழகான கூந்தல்.. குளித்து முழுகி கூந்தலைப் பின்னிவிட்டு ஒற்றை ரோஜாவை அதில்

செருகினால்... ஓ... எவ்வளவு அழகாக இருக்கும்... ஆனால் அவள் ரோஜா வைக்க முடியாதே!...

அவள் விதவையாமே...!

ராமு தலையைக் கீழே குனிந்து கொண்டு எண்ணங் களுக்கு ஏற்ப முகத்தில் கோடுகளைப் போட்டுக் கொண்டு ஓலை பின்னினான்... யாரும் அவனைக் கவனிக்கவில்லை. அவர்களும் அவனைப் போலவே குனிந்த தலை நிமிராமல் வேலை செய்யும் போது இவனை எங்கே பார்க்கப் போகிறார்கள்..?

வெளிச்சம் வந்து விடிந்து விட்டது என்று புரிந்து கொள்வதற்கு முன்னரே பறவைகளின் மொழிகள் விடிந்து கொண்டிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருந்தன. வீட்டையும் வெளிச்சத்தையும் பொருட்படுத்தாமல் அந்தக் கோயிலில் வேலைகள் நடந்து கொண்டிருந்தன. இடையில் ஒரு தடவை மட்டும் லயத்துக் கடையில் போத்தல் மூலம் 'டீ' யெடுத்துக் குடித்தார்கள்.

வேலையை முடித்துவிட்டு எல்லோரும் எழுந்தபோது ராமுவைத் தேடிக்கொண்டு அத்தை வந்திருந்தாள். அவள் கையில் சின்னப் பார்சல் ஒன்றும் இருந்தது. ராமுவுக்கு அத்தையைக் கண்டதும் கசப்புத்தான் நெஞ்சில் கிளம்பியது. ஆனால் அதை அவன் வெளிக்காட்டாமல் இருந்தான்.

"ஒங்க அம்மாவுக்கு ராத்திரியில் இருந்து தலைவலி தம்பி.. அதான் நா ஒங்களுக்காக ரொட்டி சுட்டுக் கொண் ணாந்திருக்கேன். அம்மாவுக்கும் குடுத்திட்டுத்தான் வந்தேன். இந்தாங்க.." என்றவாறு கையிலிருந்த அந்தப் பார்சலை ராமுவிடம் கொடுத்தாள் அத்தை.

அவன் அதை வாங்க விரும்பாவிட்டாலும் ஏனோ வாங்கிக் கொண்டான்.

"அப்ப நா வரட்டா தம்பி..."

அத்தை சிறிது தூரம் நடந்துவிட்டு,

"டீ ஊத்தி அனுப்பவா தம்பி" என்று கேட்டாள்...

ராமு "வேணாம்" என்று சொன்னான். அத்தை போய் விட்டாள்...

ராமு அந்தப் பார்சலை கோயில் வெளி வராந்தாவில் ஒரு மூலையில் வைத்துவிட்டு அனுமார் வால் போல் நீட்டி வைத்திருந்த கயிற்றில் பின்னிய தென்னந் தோரணங்களை இடைவெளி விட்டுக் கட்ட ஆரம்பித்தான்.. முத்து வெளிய மாவிலைகளைச் சொருகினான்...

"ம்... காலைச் சாப்பாடு வந்திருக்காக்கும்.. நமக் கெல்லாம் இப்புடி ஒரு அத்தை இல்லியே!.."

முத்து கிண்டலாகப் பேசினான். ராமு பேசவில்லை.

"சாப்புட்டு தோரணம் கட்டலாமே! ம்... ராமு... நீ சாப்புடு.."

"வேல செய்யிர நேரம் நா மட்டும் சாப்புடலாமா..? வேல முடிஞ்சதும் எல்லாரும் சாப்புடுவோம்!"

முத்துவின் கேள்விக்கு ராமு பொய்தான் சொன்னான்.

அவன் அந்த ரொட்டியைச் சாப்பிடப் போவதில்லை. அதைத் தீர்மானித்துவிட்டான். அவனுடைய கண்கள் பார்வதியைத் தேடிக் கொண்டே இருந்தன.

அவள் இன்னும் ஏ " வரவில்லை?... நன்கு விடிந்ததும் வருவாளோ..!

கோயிலைச் சுற்றித் தோரணம் கட்டி முடித்தபோது பார்வதி வந்தாள். அவள் கையிலும் ஒரு பார்சல். அதில் நிச்சயம் சாப்பாடு இருக்கும். ராமுவின் முகத்தில் ஒரு மலர்ச்சி பிறந்தது.

பார்வதியைக் கோயிலின் பின் பக்கம் கண் சாடையால் வரச் சொ"ன்னான். இருவரும் அங்கே போனார்கள். ராமு மட்டும் கீழே உட்கார்ந்தான். பார்வதி நின்று கொண் டிருந்தாள். ராமு அவசர அவசரமாகப் பார்வதி கொண்டு வந்த பார்"லைப் பிரித்து இடியாப்பத்தைச் சாப்பிட்டான். போத்தலில் கொண்டு வந்திருந்த டீயைக் குடித்தான். கையைக் கழுவியபோது அத்தையின் பார்சல் நினைவுக்கு வரவே சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறீங்க?." பார்வதியின் கேள்வி.

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி அத்தையும் ஒரு பார்சல் கொண்ணாந்திச்சி... அதை நெனைச்சோன்ன சிரிச்சேன்..."

"ஏன்?"

"அத்தை மேல உள்ள வெறுப்புலதான் அதைச் சாப் பிடல்ல... முத்து சாப்புடலியான்னு கேட்டான். வேலய முடிச்சிட்டு சாப்புடுவோம்னு சொன்னேன். ஆனா நீ பார்சல் கொணாந்ததும் சாப்புடணும்னு மனசு சொல் லிச்சி... சாப்புட்டுட்டேன்.. ஆனா வேல இன்னும் முடியல்ல.. அதை நெனைச்சோன்ன சிரிப்பு வந்திருச்சி - சிரிச்சேன்.."

பார்வதி புன்னகையைப் பதிலாக்கினாள். அவள் முகத்தில் புது மெருகு ஏறியிருந்தது.

"பார்வதி! நீயும் முடிஞ்சா வேல செய்.."

"வேல செய்யத்தான் வந்தேன்.."

பார்வதி, "நா கோயிலைச் சுத்தி சுத்தம் செய்யிரேன்" என்று சொல்லிவிட்டுப் போனாள்..

ராமு மறுபக்கம் போய் முத்துவையும் மற்றவர்களையும் சாப்பிடச் சொன்னான். அத்தை கொண்டு வந்த பார்சலை வேலை செய்த ஒருவனுக்குச் சாப்பிடக் கொடுத்துவிட்டு ராமு தோரணம் கட்டப் போனான்.

எல்லாவற்றையும் தெரியாதது போல் பார்த்துக் கொண்டான் முத்து. ராமுவைத் தனியாகக் கண்டால் 'அத்தை கொண்ணாந்த ரொட்டி நல்லா இருந்திச்சா?' என்று கேட்கத் துடித்துக் கொண்டிருந்தான்.

ராமு யோசித்துக் கொண்டே வேலை செய்தான். மனதுக்குள் அத்தையைத் திட்டினான்.

"அஞ்சு வருஷத்துக்கு பொறகு திருவிழா நடக்கப் போவுது. ஒரு ஒதவி செய்ய வரமே! இந்தப் பக்கம் எட்டி கூடப் பார்க்கலியே! அத்தையாம்! அத்தை..."

பார்வதியின் நினைவு அத்தையின் நினைவை மறைத்தது. ஓ! பார்வதி... அவள் இதயம் உள்ளவள்.. என்னைப் புரிந்து கொண்டவள்.. இத்தோட்டத்தில் நடக்கிற பொது விஷயத்துக் கெல்லாம் ஓடி வருகிறாளே...!

## அத்தியாயம் – 11

அன்று பிற்பகல் மூன்று மணியைப் போல் நூல் நிலையத் திறப்பு விழா தொடங்கியது.

ஆண்களும் பெண்களும் வாண்டுகளுமாக பெருங் கூட்டம் வந்திருந்தது. காலையில் இருந்தே ஒலிபெருக்கி பக்திப் பாடல்களை முழக்கியது. அதனால் கூட்டம் சிறிது சிறிதாகச் சேர்ந்து விட்டது.

அந்தக் கூட்டத்தில் பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள். ஆண்கள் நின்று கொண்டிருந் தார்கள். வாண்டுகளில் ஒரு பகுதி உட்கார்ந்திருந்தது. மற்றது நின்று கொண்டிருந்தது.

மேடை அழகாக ஜோடிக்கப்பட்டிருந்தது. மேடையில் ராமு, சந்திக்கடை முதலாளி, டவுனிலிருந்து வந்திருந்த பேச்சாளர் ஆகியோர் நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் முன்னால் பெரிய மேஜை. அந்த மேஜை மீது பட்டுச்சேலை விரிக்கப்பட்டிருந்தது. பூச்செண்டு வைக்கப் பட்டிருந்தது. அந்த மேசைக்குப் பக்கத்திலும் உயரமான இருதடி நாட்டப்பட்டு, அதில் குருத்தோலைத் தோரணம் கட்டியிருந்தார்கள். தூரத்துப் பார்வைக்கு மேடை போலவே இருந்தது, அந்த மேஜையும் அதன் அலங்காரமும்.

மேஜை மீதிருந்த சின்னக் குத்து விளக்கை கோயில் பூசாரி ஏற்றி வைக்க ராமு 'மைக்' முன்னே வந்து நின்று பேசத் தொடங்கினான். எல்லோரும் கை தட்டினார்கள். அதில் பார்வதியும் ஒருத்தி என்று சொல்லவா வேண்டும்?.

"ரொம்ப நாளா ஒரு நூல் நிலையம் இந்தத் தோட்டத்தில திறக்கணும்னு கனவு கண்டேன். அந்தக் கனவு இன்னைக்கி தான் நனவாச்சி. இதுக்கு உதவி செஞ்ச எல்லோருக்கும் நன்றிய சொல்றேன். இனிமே எல்லாரும் சும்மா இருக்கிற நேரம் வந்து பேப்பர், புஸ்தகம் பாருங்க... படிங்க.."

ராமு பேசி முடிந்ததும் சந்திக்கடை முதலாளி தான் கொண்டு வந்திருந்த பூமாலையை ராமுவின் கழுத்தில் போட்டார். ராமு வெட்கிப் போனான். இதை அவன் எதிர் பார்க்கவே இல்லை.. பூ மாலையைக் கழட்டி கையிலெடுத்துக் கொண்டு, 'மைக்'கில், "மாலை போடுற அளவுக்கு நான் பெரிய சாதனை செய்யல்ல... போட்டா எல்லாருக்கும் மாலை போடணும்... ஏன்னா எல்லாரும் இந்த லைப்ரரிக்காகக் கஷ்டப்பட்டிருக்காங்க!.."

பூமாலையை மேஜையில் வைத்தான். மறுபடியும் கை தட்டல் எழுந்து ஒலித்தது. பார்வதி தன் கழுத்தில் மாலை விழுந்தது போலச் சந்தோஷப்பட்டாள்... சந்திக்கடை முதலாளி சில வார்த்தைகள் பேசினார். கடைசியாக டவுனிலிருந்து வந்த பேச்சாளர் ஒரு மணித்தியாலம் பேசினார். ஒரு நகர்ப்புற ஸ்கூல் ஆசிரியர் அவர். அதற்கு முன்னர் தோட்டத்து ஸ்கூல் மாஸ்டராக இருந்தவர்.. அதனால் அவருக்குத் தோட்டத்தில் நடக்கின்ற ஊழல்களை, சுரண்டல்களை, அநியாயங்களை அடையாளம் காட்ட முடிந்தது. அவரின் ஒவ்வொரு வார்த்தையும் ஒவ்வொரு சம்பவத்தையும் நேரில் கொண்டு வந்தது...

"எல்லாத் தோட்டங்களிலும் ஒரே வகையான சுரண்டல் தான் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் நான் கூறு

கின்றேன். தோட்டங்களில் இரண்டு வகையான சுரண்டல்கள் இருக்கின்றன. ஒன்று உழைப்பைத் தம் வசப்படுத்தும் சுரண்டல். மற்றது அறிவை இல்லாமலாக்கும் சுரண்டல். உழைப்பைத் தம் வசப்படுத்தும் சுரண்டலைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. உங்களுக்கு அது நன்றாகத் தெரியும்.. ஆனால் அறிவை எப்படி சுரண்டுகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியாது. அதை நான் சொல்கிறேன். நீங்கள் எல்லாரும் நாலு எழுத்துக் கூடப் படிக்க வசதி இல்லாமல் செய்து விட்டார்கள்.. தோட்டத்து ஸ்கூலில் படித்து வெளியே வந்தால் பேர் பதியச் சரியாக இருக்கும். பேர் பதிந்து வேலை செய்தால் லயமும் தோட்டமும் தான் உலகமாக இருக்கும். சாகும் வரைக்கும் அதுதான் உலகம். வெளியே என்ன நடக்கிறது என்று தெரியாது. கிணற்றுத்தவளை களாக இருக்க வேண்டியதுதான்... இத்தனை காலமும் இப்படித்தான் அறிவு சுரண்டப்பட்டு வாழ்ந்திருக்கிறோம். இனியாவது அதை மாற்றியமைக்க வேண்டும்..."

முழுப்பேரும் மௌனமாக கேட்டுக் கொண்டிருந் தார்கள்.

"இந்த இரண்டு சுரண்டல்களையும் இல்லாமலாக்க ஒரே ஒரு ஆயுதம் தான் இருக்கிறது! அது தான் அறிவாயுதம்! அதை எல்லோரும் தேடிக் கொண்டால் சுரண்டல்களை ஒழிக்கலாம். இந்த ஆயுதத்தைத் தீட்ட நூல் நிலையமும் அவசியம்! தோட்டங்களில் ஒவ்வொரு ஆலயத்திற்கும் பக்கத்தில் இந்த நூல் நிலையத்தை அமைக்க வேண்டும்..."

பேச்சாளர் பேசி முடித்ததும் ராமு அந்தத் தோட்டத் திலேயே மூத்த மனிதரான கருப்பையாக் கிழவனைக் கூப்பிட்டு நூல் நிலையத்தைத் திறக்க வைத்தான். கிழவன்

நடுக்கமும் வெட்கமும் ஒன்று சேரத் தட்டுத் தடுமாறி நூல் நிலையத்தைத் திறந்தான். இவ்வளவு பெரிய கூட்டத்தில் முன் வரிசையில் இருக்கவே கூச்சப்படுவான் அவன். அவனைத் திறக்கச் சொன்னால் வெட்கமும் நடுக்கமும் வரத்தானே செய்யும்! நூல் நிலையத் திறப்பு விழா முடிந்ததும் தேர்த் திருவிழா களைகட்டத் தொடங்கியது.

கோயிலைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்த ஒலிபெருக்கிகள் உரத்து முழங்கிக் கொண்டிருந்தன. கோயில் பண்டாரமும் கமிட்டியைச் சேர்ந்த சிலரும் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டு இருந்தார்கள். எவ்வளவுதான் சிந்தித்து முன்கூட்டியே திட்டம் போட்டிருந்தாலும், எதையாவது எடுத்துவர, கொண்டு வர மறந்து தான் போய் விடுகிறது... அதற்குத்தான் இந்த ஓட்டம்...

தேர் அலங்காரத்தில் பூத்துக் கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. வாண்டுகள் மணிக்கணக்கில் அதைப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். அவர்களின் பார்வையை தேரின் முன்னே பூட்டியிருந்த குதிரைகளும் கைவீசும் பெண் பொம்மையும் கவர்ந்து இழுத்தன. தேரில் பூட்டியிருந்த பல்புகள் மின்னிமின்னி மறைந்தன. அதை 'டெஸ்ட்' பண்ணிக் கொண்டிருந்தார்கள். கோயிலுக்குக் கூட்டம் வரத் தொடங்கி விட்டது. இன்னும் பலர் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தார்கள். பாதை நெடுக நிறைய வியாபாரிகள் கடை விரித்திருந்தார்கள். டீ குடிக்க, வடை பலகாரம் சாப்பிட, வளையல் மாட்டிக் கொள்ள, சாமி படங்கள் - நடிக நடிகைகள் படங்கள் வாங்க, விதவிதமான பொம்மைகள், முகமூடிகள் வாங்கிக் கொள்ள பல கடைகள் இருந்தன. கையிலுள்ளவர்கள் அந்தப் பக்கம் கால் வைத்தார்கள். இல்லாதவர்கள் பார்க்கக் கூடப் பயந்தார்கள்.

ராமுவும் முத்துவும் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந் தார்கள். பார்வதியும் ஓடினாள். அவளுக்கும் ஏதோ ஒரு வேலை இருக்கத்தான் செய்கிறது... கோயிலில் வேலைக்குப் பஞ்சமா? ஏதாவது இருக்குமே! தேர் புறப்படும்போது எல்லாம் சரியாக இருந்தாலும் கற்பூரம் கொளுத்தத் தீப் பெட்டி வைக்க மறந்து போகும். இனி அதை எடுத்து வர ஒருத்தரோ சிலரோ ஓட வேண்டியிருக்கும்.

கோயிலைச் சுற்றிப் போட்டிருந்த பல்புகள் எரியத் தொடங்கின. தேரிலுள்ள பல்புகளும் ஒளியை உமிழத் தொடங்கின. புதிய கோலத்தில் கோயில் விழாக்கோலம் பூண்டது. எங்கு பார்த்தாலும் ஜெகஜோதியாகப் பிரகா சித்தன பல்புகள். கோயிலினுள்ளே இருந்த நாதஸ்வரக் கோஸ்டி இசை வெள்ளத்தைப் பெருக்கியது. பூஜை ஆரம்ப மாகியது.

வெளியே ஒரு பக்கத்தில் சிலர் வேல் குத்தியும் காவடி எடுத்தும் ஆடிக் கொண்டிருந்தார்கள். வேறு ஒரு பக்கத்தில் பக்கத்துத் தோட்டத்தில் இருந்து இரண்டு பேர் அதில் ஒருத்தன் ராணி வேஷமும் மற்றவன் ராஜா வேஷமும் போட்டு நடனமாடிக் கொண்டிருந்தார்கள்.

இன்னும் ஒரு பக்கத்தில் கிளாரினட் வாத்தியக் கோஷ்டி முழங்கிக் கொண்டிருந்தது. அதைச் சுற்றி ஒரே மக்கள் கூட்டம். அந்தக் கூட்டத்தின் நடுவில் சொக்கன் கரகம் ஆடிக் கொண்டிருந்தான். அவனோடு அனுமான் வேஷம் போட்ட வரும் ஆடினார்; ஓடினார்; துள்ளினார். அனுமார் அல்லவா?.. குரங்குப் புத்தி வேண்டும் தானே; அதைக் காட்டிக் கொண்டிருந்தார். சொக்கனால் கரகம் ஆட முடியவில்லை. இடம் இருந்திருந்தால்தானே ஆட முடியும்..? அனுமார்

வாலை இழுத்தான். வந்ததே கோபம் அனுமாருக்கு. கையில் இருந்த கதாயுதத்தால் அவன் தலையில் ஒன்று போட்டார். 'ணங்'கென்று விழுந்தது ஒரு அடி! ஆனால் வலிக்கவில்லை. கதாயுதத்தின் அடிப் பாகத்தில் பஞ்சு வைக்கப்பட்டிருந்ததால் தப்பித்தான் அவன்.

சாமி தேருக்கு வந்தது. தோட்டத்துத் துரையும் அப்போதுதான் அங்கே வந்தார். மகாராஜா பவனி வரும்போது, 'பராக் பராக் மகாராஜா வருகிறார்' என்று சொல்வது போல் ஒருத்தன், 'துரை வர்ரார். விலகி நில்லுங்க' என்று கத்திக் கொண்டு கூட்டத்தை விலக்கி இடம் ஒதுக்கியவாறு துரைக்கு முன்னால் வந்தான்.

துரைக்கு முத்துதான் பூமாலை போட்டான். கணக்கப் பிள்ளைக்கும் மாலை போடப்பட்டது. ராமு மாலையை தொடவே இல்லை. துரை வந்தபோது முத்துவை மாலை போடச் சொல்லி விட்டு அவன் ஒதுங்கி விட்டான். அதை ஒரு பிரச்சனையாக எடுத்துக்கொண்டு ராமுவிடம் வம்பி ழுக்கச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தார் பழைய தோட்டத்து தலைவர்.

துரை கோயிலின் உள்ளே போய்ச் சாமி கும்பிட்டு விட்டு தேரின் அருகே வந்தார். கோயிலின் உள்ளே அவர் போனபோதும் திரும்பிய போதும் ஒரு கூட்டம் அவருடைய ஆதரவாளராகவோ பாதுகாவலராகவோ கூடவே அவரை வட்டமிட்டுப் போய்த் திரும்பியது. சாமியின் அருளை விட துரையின் 'அருளில்' லாபமிருப்பதாக அவர்கள் நினைத்தார்கள்.

யாரோ ஒருத்தன், "தேரோட்டத்தை ஆரம்பிக்கச் சொல்லித் தொரைகிட்ட சொல்லுங்கப்பா"

என்று கத்தினான். அவ்வளவு தான் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. சிலர் 'தேரை யாரும் இழுத்து வைக்க வேண்டியதில்லை' என்றார்கள்.

ராமு அதில் தலையிட்டு மெள்ளச் சமாளிக்கப் பார்த்தான். ஒருவன் தலைவரை இழுத்தெடுத்தான். நல்ல நேரம்.. முத்து அவர்களுக்கு இடையில் புகுந்து பிரித்து வைத்தான்...

தேரை மக்களே இழுத்து வைத்தார்கள்... துரை முகத்தைக் கோணிக் கொண்டு போனார். கோணலுக்குக் காரணம் முதன்முதலில் தேரை இழுத்து வைக்கவிட வில்லையே என்ற ஆத்திரம்தான்... கணக்கப்பிள்ளை அவருக்கு இன்னும் தூபம் போட்டுக் கொண்டு போனார்... பழைய தலைவர் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்.

"டேய்! நீ என்னடா மனுசன்... திருவிழான்னு சொல்லி காசை சேர்த்து கூத்தாடுரது தெரியாதா?.."

ராமு பழைய தலைவருக்கு நாலு போடத் துடித்தான்.. ஆனால் அவனை இரண்டு பேர் பிடித்துக் கொண்டார்கள். அவர்களுக்குப் பின்னால் பார்வதி கண்கள் கலங்க நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு அங்கே நடந்தது எல்லாம் தெரியும். அவளுக்கு மட்டுமா? இன்று எல்லோருக்கும் அவளுக்கும் ராமுவுக்கும் உறவு இருப்பது தெரிந்துவிட்டது. பார்வதி அழுது கொண்டே ஒருத்தருக்கும் சொல்லாமல் லயத்திற்குப் போனாள்.

அவள் போவதைப் பார்த்த ராமுவின் அத்தை மீனாட்சியிடம் 'இல்லாததையும் பொல்லாததையும்' சொல்லி வைத்தாள்.

"மீனாச்சி! ராமுவக் கண்டிச்சி வை! இல்லே கதை வேறு மாதிரிப் போயிரும். ஒன் மகனைப் பத்தியும் பார்வதியப் பத்தியும் அசிங்கமா என்ன என்னமோ ஆளுக சொல்றாங்க.. மகனைக் கண்டிச்சி வை..!"

மீனாட்சிக்கு வயிற்றில் நெருப்பைக் கொட்டியது போன்ற ஒரு உணர்வு.. பல்லைக் கடித்துக் கொண்டாள். இவனுக்கு எதற்கு இந்த வேலை? இன்று என்னென்னமோ சொல்கிறார்களே! மூச்சுக் காட்டாமல் லயத்திலேயே இருந் திருந்தால் இப்படி வருமா? நமக்கெதற்கு ஊர் வம்பு..?

எரியும் நெருப்பில் பெற்றோலை ஊற்றியது போல் வார்த்தைகளைக் கொட்டினாள். மறுபடியும் ராமுவின் அத்தை,

"என்னமோ ஒன் நன்மைக்குத்தான் சொல்ரேன். ராமு வையும் பார்வதியையும் சந்திக்கவுடாதே... சந்தி சிரிக்கப் போவுது!.."

மீனாட்சியின் நெஞ்சம் குமுறிக் கொண்டிருந்தது.. அப்படியே நின்றாள். ஓங்கி முழங்கிய வாத்தியங்களின் சத்தம் அவள் செவிகளில் ஏறவில்லை.. ஆனால் கண்களில் தீப் பந்தங்கள் மட்டும் பட்டுக் கொண்டிருந்தன. தூரத்தில் தீப்பந்தங்கள் சுழன்று கொண்டிருந்தன.. ராமு அந்தக் கூட்டத்தில். பார்வதியைத் தேடிக் கொண்டிருந்தான். பார்வதியைக் காணாமல் அவனுடைய மனம் தவித்துக் கொண்டிருந்தது.

## அத்தியாயம் – 12

தேர்த் திருவிழா முடிந்த இரண்டாவது நாளே காய்ச்சலில் விழுந்த ராமுவைப் பார்க்கப் பார்வதி லயத்திற்கு வந்து பத்து நிமிடத்திற்கு மேலாகிவிட்டது. இன்னமும் அவள் கவலையுடன் நின்று கொண்டே ராமுவைப் பார்த்தாள். அவன் படுக்கையில் கிடந்தான். அவன் முகத்தில் லேசான ரோமம் மண்டிக்கிடந்தது. அது அவன் நோயை மிகைப்படுத்திக் காட்டுவதைப் போலிருந்தது. அடிக்கடி அவன் அந்தக் காய்ச்சலின் மத்தியிலும் புன்னகைத்தான். அது முகத்தில் வெளிச்சம் போடுவது போல் தோன்றியது.

ராமுவையே பார்த்துக் கொண்டிருக்கலாம் போல் இருந்தது பார்வதிக்கு. ஆனால் அவனுடைய அம்மாவை நினைக்கும்போது பயமாக இருந்தது. அம்மா வந்தால் என்ன நடக்குமோ? லேசாக அவள் உடல் நடுங்கியது. பார்வதியைப் பார்க்கவே பிடிக்காது அவளுக்கு. அன்றொரு நாள் முதன் முதல் வந்ததற்கே முகத்தை ‘உம்’மென்று வைத்துக் கொண்டிருந்தாள். இன்று அவளில்லாத நேரத்தில் வந்து இருப்பதற்கு என்ன சொல்வளோ? கற்பனை செய்ய முடிய வில்லை.. பயந்து நடுங்கினாள் அவள் அந்தப் பயத்திலும் அவளின் நெஞ்சு புத்தியுடன் அப்போதே போக வேண்டு மென்று ஞாபகப்படுத்தியது.

அவள் போகத் தயாரானாள். ஆனால் அந்த நேரத்தில் தான் ராமு அவளை உட்காரச் சொன்னான். அவள் மனமும் உட்கார விரும்பினாலும் அவன் அம்மாவின் நினைவு உட்கார விடவில்லை..

“ஒக்கார நேரமில்ல... நா போகலாம்னு...”

அதற்கு மேல் அவளா சொல்லிப் புரிந்து கொள்ள வேண்டும்? அவள் போகப் போகிறாளாம்.

"இப்ப என்ன அவசரம்..? இன்னக்கித்தான் வேலைக்கும் போகலியே! இன்னும் கொஞ்சநேரம் இருந்திட்டு போகலாமே!"

அவனும் விடவில்லை...

"இருக்கலாம். ஆனா மத்தவங்க என்னா சொல் வாங்களோ!"

"யார் என்ன சொன்னாலும் என்னா? நீ பயப்படாதே!" என்று பதில் சொல்ல நினைத்த ராமு பேசவில்லை. ஊரைப் பற்றிக் கூட அவனுக்குப் பயமில்லை. அம்மாவை நினைக்கும் போதுதான்...

"அதுவும் சரிதான்.. நரம்பில்லாத நாக்கு... நாலும் பேசும். ஆனா இதுக்காக பயப்படக்கூடாது. வெரசா ஒரு முடிவு கட்டணும்..."

"அப்ப நா வரட்டுமா?.."

"ஹூம்.. போக முந்தி..." ராமுவின் வார்த்தைகள் அவளை கொக்கிப் போட்டு இழுத்தன.

"போக முந்தி... இந்தப் போர்வையை எடுத்து ஒன் கையால நல்லாப் போர்த்திவுட்டுட்டுப் போ...." ராமுதான் சொன்னான்...

அவளால் நம்ப முடியவில்லை. தன்னிடமா இதைச் சொன்னான் என்று மகிழ்ந்தாள் அவள்... அதை முகத்தில் காட்டாமல் ராமுவின் காலடியில் கிடந்த போர்வையை எடுத்து உதவினாள்... ராமு அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பார்வதி அதைக் கவனிக்காமல்

பதற்றத்தில் அவசர அவசரமாகப் போர்த்திவிடப் போனாள்... ஆனால் அதற்குள் அவளின் சேலை முந்தானை நெஞ்சை விட்டுக்கீழே நழுவி விட்டது. ராமு வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். முந்தானை நழுவிவிழ ரவிக் கையில் மார்பகங்கள் முட்டிக் கொண்டிருந்தன.. அவனுக்கு என்னவோ போலிருந்தது.. பார்வதி அவசர அவசரமாக முந்தானையைச் 'சரி' செய்தாள்...

இருவரின் பார்வைகளும் அர்த்தப் புஷ்டியுடன் கலந்து கொண்டன.

ராமுவுக்குப் போர்வையைப் போர்த்திய பின் அவனிடம் சொல்லிவிட்டு மனதில் நம்பிக்கைச் சுமையோடு தன் காம்பரா விற்குப் புறப்பட்டாள் பார்வதி. அவளுக்கு சொல்ல முடியாத மகிழ்ச்சி...

காம்பராவிற்கு வந்தாள் பார்வதி. நடு அறையில் அட்டாலில் சொருகி வைத்திருந்த பழைய கிழிந்த சாக்கை எடுத்துக்கீழே விரித்துப் படுத்துக் கொண்டாள். எப்போதும் அந்தச் சாக்குதான் அவளுக்கு படுக்கை... கோரைப் பாயில் படுத்து மாதக் கணக்காகி விட்டது. பாய் வாங்கக் கையில் சில்லறையும் இல்லை. வெறும் சாக்கில் படுத்துக் கொண்ட பார்வதிக்குத் தலைக்குத் தலையணை வைத்துக் கொண்டால் தேவலாம் போலிருந்தது. உடனே அவள் எழும்பி தலையணைத் தேடிப் பிடித்துத் தலைக்கு வைத்துக் கொண்டாள்.

மல்லாந்து படுத்துக்கிடந்த பார்வதி தன் கண்களை மேலே கூரை மீது மேயவிட்டாள்.. அவள் பார்வை வரும் வரை காத்திருந்தது போல் கொழுத்த எலியொன்று கூரைப் பலகை வழியாக ஓடிக் கொண்டிருந்தது. அடேயப்பா! என்ன ஓட்டம்? என்ன வேகம்? அந்தரத்தில் கூட ஓடித்திரிந்து பூனையிடம் தப்பி அது வாழத்தானே செய்கிறது... அப்படி

வாழ்வதிலும் அதற்கு அசைக்க முடியாத நம்பிக்கை... எலி ஓடி மறையும் வரை அவளின் பார்வை மேலே கூரையிலேயே இருந்தது.. எலி மறைந்ததும் கண்களை மூடிக்கொண்டாள். கண்களை மூடிக்கொண்டதுமே ஒன்றுமே தெரியவில்லை. ஆனால் நெஞ்சின் உள்ளே பல காட்சிகள் தெரியத் தொடங்கின...

பார்வதி அம்மா செல்லாயி உயிரோடு இருந்த காலத்தில் பார்வதிக்கு ஒழுங்கான ஒருத்தனைத் தேடிக் கொடுக்க வேண்டும் என்று முயற்சி செய்தாள். அப்போதெல்லாம் துன்பமே என்னவென்று புரியாமல் பசிக்குக் கிழங்கையும் கீரையையும் தின்பது துன்பமாகத் தெரியாமல் வாழ்ந்து வந்தாள் பார்வதி... எத்தனையோ நாள் சாப்பிடாமல் இருந்திருக்கிறாள்... அதுவெல்லாம் துன்பமாகத் தெரிய வில்லை. ஆனால் மூன்று வருடத்திற்கு முன்னர் தனக்கு ஒருத்தனைத் தேட முடியாமல் அம்மா திடீரென்று கண்ணை மூடிய பின்னர்தான் அவளுக்குத் துன்பங்கள் புரிய ஆரம் பித்தன. அதன் பின்னர் அடுத்தடுத்து துன்பம் சங்கிலித் தொடர் போல் வந்து கொண்டிருந்தது. அத்தனையும் பொல்லாத துன்பம்.

அம்மா செத்த பின்னர் அப்பாவும் தபால்காரர் கந்தசாமியும் பார்வதிக்கு ஒருத்தனைத் தேட ஆரம்பித் தார்கள். அந்த ஒருத்தனைத் தேடும்போது பார்வதியின் அம்மா சாவதற்கு முன் பார்வதிக்கு நல்ல மாப்பிள்ளையா கடைசி வரைக்கும் 'கஞ்சி தண்ணி ஊத்துறவனா பாருங்க. அப்படியான மாப்பிள்ளைதான் வேணும்' என்று சொன்ன வார்த்தைகளை நினைத்துக் கொண்டார்கள். தெரிந்த தோட்டமெல்லாம் சல்லடை போட்டுத் தேடி சாதி, சமயம், குலம், கோத்திரம் பொருத்தமெல்லாம் பார்த்து நூறு மைலுக்கு அப்பால் வவுனியாவில் விவசாயம் செய்யக் காட்டை அழித்துக் கொண்டிருந்த அவனைத் தேர்ந்

தெடுத்தார்கள். அவனும் தாலி கட்டிவிட்டு ஒரே ஒரு கிழமை அவளோடு இருந்துவிட்டு மீண்டும் காட்டை அழிக்கப் போனான். போகும்போது பார்வதியிடம்,

'இந்த நேரத்தில் போறேன்னு கவலைப்படாத.. காட்டை அழிச்சு வீட்டைக் கட்டினதும் ஒன்னய அங்கேயே கூட்டிக் கிட்டுப் போவேன். அப்படித்தான் நெனைச்சு இருக்கேன். தைரியமா இரு...' என்று சொல்லிவிட்டுப் போனான்.

அவன் போனதும் பார்வதி அவன் நினைவாகவே தோட்டத்தில் இருந்தாள். அவளுக்கு ஒரே கவலை... ஆசை தீர ஒரு நாள் கூட அவனோடு கட்டிப் புரளவில்லை. அதற்குள் வவுனியாவுக்குப் போய் விட்டானே...

அடிக்கடி அவன் கடிதம் போட்டான். அவனுடைய கடிதமெல்லாம் வவுனியாக் காட்டை அழிக்க அவன் நடத்துகின்ற போராட்டத்தைக் கதை கதையாகச் சொல்லிக் கொண்டே இருந்தன. அடிக்கடி அவளும் ஆசையோடு கடிதம் போட்டாள்.... அவன் வரவே இல்லை... அவன் வந்தது பார்வதியின் அப்பாவின் சாவுக்குத்தான்....

பார்வதியின் கழுத்தில் தாலி விழுந்த ஐந்தாவது மாதமே அவளுடைய அப்பாவும் போய்விட்டார். அதன் பின்னர் அவன் மீண்டும் வவுனியாக் காட்டுக்கே போனான்.. தன் இலட்சியத்தைத் தொடர... இரண்டு தடவை இடையிடையே தோட்டத்திற்கு வந்து போனான்... மூன்றாவது முறை வந்தவன் காய்ச்சல் என்று படுத்தான். அப்புறம் எழும்பவே இல்லை...

'ஓ'வென்று சத்தம் போட்டு அழவேண்டும் போன்ற ஓர் உணர்வு பார்வதிக்கு வந்தது. மூடிக் கிடந்த கண்கள் நனைந்தன. ஆனால் அவள் அழுகையை அடக்கிக் கொண் டாள்... பிறகு சேலை முந்தானையால் கண்களைத் துடைத்துக்

கொண்டாள். இதற்கு முன்னர் என்றால் இந்த நினைவுகள் வந்திருந்தால் 'ஓ'வென்று சத்தம் போட்டது மல்லாமல் இரண்டு கைகளாலும் தலையில் அடித்துக் கொண்டு அழுவாள். இன்றோ அழக் கூடாதென்ற எண்ணத்தில் ராமுவை நினைத்துக் கொண்டு அவன் இருக்கும் தைரியத்தில் துயரத்தை அடக்கிக் கொண்டிருந்தாள்...

அவள் இதற்கெல்லாம் இனி அழமாட்டாள். அவளுக் காக ஒருத்தன் இருக்கும்போது அவள் ஏன் அழவேண்டும்? அவனுடைய நினைவுகள் அவள் மனதில் மெல்லமெல்ல படர்ந்தன...

"போக முந்தி இந்தப் போர்வையை எடுத்து ஒன்கையால நல்லாப் போர்த்திவுட்டுட்டு போ..."

ராமுவின் குரல்தான் அது.... ஓ! என்ன கம்பீரமான குரல். அவளால் ராமு போர்வையைப் போர்த்திவிடச் சொல்லிச் சொன்னதைச் சாதாரண ஒன்றாக நினைக்க முடியவில்லை. அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் மற்ற லயத்துக்காரர்களும் அவளை ஒதுக்கித் தள்ளும் போது ராமு மட்டும் அவளோடு பேசுவதும் சிரிப்பதும் அவள் கொடுப்பதைச் சாப்பிடுவதும் அவளுக்குத் தைரியம் சொல்வதும் சாதாரணமானதா?..

அவன் அவளோடு எந்த வழியிலும் உறவு வைத்திருப் பதைச் சாதாரணமானதென்று சொல்ல முடியுமா?... சாதா ரணமான உறவென்றால் அது ஓடும் பஸ்ஸில் சந்தித்துப் பேசி, பஸ்ஸை விட்டு இறங்கியதும் மறக்கின்ற உறவாகத்தான் இருக்கும். ஆனால் இந்த உறவு சொந்தத் தாயின் எதிர்ப்புக்கு மத்தியில் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறதே...!

பார்வதிக்கு உடம்பெல்லாம் பூரித்தது... மார்பகங்கள் விம்மிப் பெருத்துத் தணிந்தன. ராமுவை நேரில் சந்தித்து விட்டது போன்ற உணர்வில் 'க்ளுக்' என்று சிரித்துக்

கொண்டாள். அவளுடைய உள்ளுணர்வு ராமுவின் மேல் காதல் ஏற்பட்டிருப்பதை உறுதிப்படுத்தியது. ஆனால் அதை மறுக்கவே இல்லை அதற்குப் பதிலாக அவனுக்கும் தன் மீது காதல் ஏற்பட வேண்டும் என்று எதிர்பார்த்தாள். தன் மீது காதல் அவனுக்கு இருப்பதாக நம்பினாள்.. அந்த நம்பிக் கையை அவனே ஒரு நாள் அவளுக்கு தந்திருக்கிறான்...

அப்போது பார்வதி பீலியடியில் குளித்துக் கொண் டிருந்தாள். ராமுவும் பீலிக்குப் போனபோது பீலியடியில் பார்வதியைத் தவிர வேறு யாருமே இல்லை. அவனைக் கண்டதுமே அவள்தான் முதலில் சிரித்தாள்...

"குளிக்கவா?..." அவன்தான் கேட்டான்.

"குளிக்கத்தானே பீலிக்கு வருவாங்க..." பார்வதி கிண்ட லாய்ச் சொன்னாள்.

ராமு பதில் பேசாமல் அவளையே உற்றுப் பார்த்தான்.

"ஏன் அப்படிப் பார்க்கிறீங்க?"

"ஒன்னயப் பார்க்கிர நேரம் இன்னும் பார்த்துகிட்டே இருக்கச் சொல்லுது... அதான் பார்க்கிரேன்..."

"ஆமா... நா பட்ட கஷ்டத்தை நெனைச்சா இவளா அந்தக் கஷ்டத்தை தாங்கினான்னு பார்க்கச் சொல்லும்...." பார்வதியின் குரல் தழுதழுத்தது.

"நா அதுக்காகப் பார்க்கல்ல.. ஒன்னய பார்க்கிர நேரம் ஏதோ ஒன்னு மனசில இருந்து பார்க்கச் சொல்லுது..."

பார்வதி எதுவும் பேசவில்லை. மேலே பேசாமலேயே ராமுவின் உள்ளத்தைப் புரிந்து கொண்டு விட்டாள்.....

படுக்கையை விட்டு எழுந்த பார்வதி அப்படியே உட்கார்ந்திருந்தாள். திடீரென்று ஒரு யோசனை அவளுக்கு

வந்தது. அந்த யோசனையின் முடிவில் ஒரு கேள்வி பிறந்தது... நானும் அவரும் நெருக்கமா பழகிறதை-பேசுரதைப் பார்த்திட்டு நம்ம ஆள்க என்ன சொல்வங்களோ இந்த நேரத்தில் கட்ட கருப்பையாவின் உருவம் வேறு ஞாபகத்தில் வந்த்து..

மெல்ல அவள் மனசு நடுங்கியது. ஆனால் மறு நிமிடமே ராமுவை நினைத்து 'எல்லாத்தையும் ராமு பார்த்துக்குவான்' என்ற தைரியத்தில் என்றோ தபால்காரர் கந்தசாமி சொன்ன வார்த்தைகளை மீட்டுக் கொண்டாள்...

'இந்த ஒலகத்துக்காகப் பயப்படக்கூடாது பார்வதி... நாம எது செஞ்சாலும் குத்தம் சொல்ல வரும்! ஆனா இருக்கிறவன்-வசதி உள்ளவன் எது செஞ்சாலும் அது நல்லதுதான்னு சொல்லும்... நாம இந்த உலகத்துக்குப் பயந்தா பொழைக்க முடியாது. அதனால நாம எது சரின்னு படுதோ அது ஞாயமானதாகவும் இருக்கனும் - அதை செய்ய வேண் டியதுதான். நாம என்னா கெட்டதையா நெனைக்க போறோம்? ஒலகத்துக்காகப் பயந்தா வாழ முடியாது. அதுக் காகப் பயப்படவும் கூடாது!

பார்வதிக்குத் தெம்பு பிறந்தது. அந்தத் தெம்பில் யாரை யும் எதிர்த்துப் பேசுவாள் போலிருந்தது....

"எவனாவது வரட்டும்! நொட்ட சொல்லிகிட்டு... வெளக்கு மாத்தால நாலு சாத்துச் சாத்தி அனுப்புரேன்! நாம கஷ்டப்பட்டு ஒழைச்சுச் சாப்புடணும்.! பட்டினி கிடந்த ஒரு பய எட்டிக்கூடப் பார்க்க மாட்டானுக... இவனுகளா நம்மள திருத்த வர்றது? வரட்டும்.... எவனாவது?.. சாத்தி அனுப்புரேன் வெளக்கு மாத்தால..."

பார்வதி தனக்குள் முணுமுணுத்தாள்.

## அத்தியாயம் – 13

உற்சாகத்துடன் படுக்கையிலிருந்து எழும்பினாள் அவள். பிறகு கீழே விரித்துப் போட்டிருந்த பழைய சாக்கைப் பிடித்து குசினியில் ஒரு மூலையில் வைத்து, தலையணையை அட்டாலில் போட்டுவிட்டு வராந்தாவிற்கு வந்தாள். தபால் காரர் இருக்கிறாரா என்று பார்த்தாள்... அவர் அங்கே இல்லை... இனிமேல்தான் வருவார்...

பக்கத்துக் காம்பராவைப் பார்த்தாள்... கட்டக் கருப் பையா இவளையே பார்த்துக் கொண்டு நின்று கொண் டிருந்தான்.. ஆனால் அவன் இவளைப் பார்த்ததும் வழக்கமாக 'சீ'யென்று காறித் துப்புவது போல் துப்பவில்லை. மௌன மாக இருந்தான் அவன். அவனுடைய மௌனம் அவளுக்குச் சந்தேகத்தைத் தந்தாலும் அவள் தைரியமாகவே இருந்தாள். வராந்தாவில் நடை போட்டாள்.

அப்போதுதான் ஒரு மூலையில் குவித்து வைத்திருந்த பலாக் கொட்டையையும் ஒரு பழைய மண்வெட்டியையும் பார்த்தாள். மண்வெட்டி அவளுடையது. பலாக்கொட்டை தபால்காரர் வாங்கிப் போட்டிருக்கலாம். கறி வைக்கும் போது கத்தரிக்காயோடோ-முருங்கைக்காயோடோ போட்டு ஆக்கலாம் ருசியாக இருக்கும்...

"பலாக் கொட்டை போனா போவுது... மண்வெட்டி போனா வாங்க முடியுமா? கவனமா இருக்கனும். திருட்டு பயலுக கூடிட்டானுக... கண்ணை தொறந்து முழிச்சிகிட்டு இருக்கிற நேரம் கண்ணை தோண்டி கிட்டு போறானுக. அஞ்சு ரூபாவுக்கு ஆளை உசுரோட கொன்னாலும் கொல்வான்க... கவனமா இருக்கனும்... காலம் கெட்டுப் போச்சி!" என்று

மெதுவாகச் சொல்லிக் கொண்டே மண் வெட்டியையும் பலாக்கொட்டையையும் காம்பராவின் நடு அறையில் பத்திரமாக வைத்தாள். அப்போது அவளைக் கண்டதும் மேலே கூரையில் இருந்த பூனை தொப்பென்று கீழே குதித்து 'மியாவ்' என்று கத்திக் கொண்டே அவள் காலடியில் படுத்தது.

"ம்...! வந்திட்டியா?.. காலையில இருந்து ஒன்னய காணோமே! ம்.. நீயும் என்னய வுட்டுட்டுப் போயிட்டியான்னு நெனைச்சேன். நீ போகவே இல்ல... நீ போகாதே... மனுசனை வுட நீ பெரிய மனுசன் எனக்கு... நீயாவது என்னோட இருக்கியே!..." என்று பேசினாள்.

பூனை பதிலுக்கு 'மியாவ்...மியாவ்' என்று கத்தியது.

வெகுநேரம் அந்தப் பூனையோடு அவள் உட்கார்ந் திருந்தாள். யாரோ வாசல் கதவை "லொட்டு...லொட்டு" என்று தட்டும் சத்தம் கேட்டது. யாராயிருக்கும்? கதவைத் தட்டி வரக்கூடிய யாருமே இல்லையே என்ற நினைப்புடன் பார்வதி குசினிலிருந்து வெளியே வந்து பார்த்தாள். மீனாட்சி நின்று கொண்டிருந்தாள். பார்வதிக்கு மனசு 'திக்'கென்றது... இவள் ஏன் இங்கே வந்தாள்? எங்காவது பார்த்தாலும் முகத்தைக் கோணிக் கொள்கிறவள் இங்கே ஏன் வர வேண்டும்? அவள் முகம் இருக்கிற இருப்பே சரியில்லையே!

பார்வதியின் மனம் நடுங்கியது. சற்று முன்னர் இந்த உலகத்தையே எதிர்க்கத் துணிந்தவள் இந்த மீனாட்சிக்கு இப்படி நடுங்குகிறாள்!

பூனை சகுனம் சரியில்லை! என்பது போலக் கத்தியது.

"வாங்க.." வார்த்தைகள் நடுக்கத்திற்கும் பயத்திற்கும் இடையில் சிக்கி வெளியே வந்தன.

"ஏன் நிக்கிறீங்க? ஒக்காருங்க..."

மீனாட்சியின் முகம் 'கறு'த்தது.

"ஒக்காந்து பேச வரல்ல..." வார்த்தைகள் வெடித்தன. பார்வதி தலை கவிழ்த்தாள்.

"இந்தா பார்வதி! இனி நீ நம்ம வீட்டுப் பக்கம் வராத.. ஞாயமா சொல்லிட்டேன்! அப்பறம் கரச்சதான் வரும்..."

பார்வதிக்கு மீனாட்சி வந்ததன் நோக்கம் என்னவென்று புரிந்து விட்டது.

"நா இல்லாத நேரம் நம்ம லயத்துக்கு வந்தியாமே! இனிமே இந்த மாதிரி வேல வைச்சுக்காதே. நாங்க ஒனக்கு யாரு? சாதியா சனமா? நீ என்னாத்துக்கு என் மகனைப் பார்க்க வர்ர? நீ வர்ரதுனால ஊரும் ஒலகமும் என் மகனை பத்தி கேவலமா பேசுது. றோட்டுல நடக்க முடியல்ல... என் மவன் வாழவேண்டியவன்... அதைக் கெடுத்திராத! ஒனக்கு கோடி புண்ணியம் கெடைக்கும். இதைச் சொல்லத்தான் வந்தேன்.."

பார்வதியின் இதயம் தவிப்பில் ஆழ்ந்தது. அவளால் மீனாட்சி கக்கிய வார்த்தைகளைத் தாங்க முடியவில்லை. வார்த்தைகளா அவைகள்? ஒவ்வொன்றும் ஒவ்வொரு நெருப்புத் துண்டுகள்... சுட்டு விட்டனவே!

மீனாட்சி பார்வதியின் காம்பராவை விட்டு, 'விறுவிறு' வென்று போய் விட்டாள். தன் மகன் மீதுள்ள கோபத்தை இங்கே இவள் மீது காட்டிவிட்டாள். அவளுக்கு அவன் மீது சரியான கோபம். பார்வதி வந்து போனதை அவன் சொல்லவே இல்லை. மறைத்துவிட்டான். ஆனால் பக்கத்துக் காம்பராக் கிழவி மீனாட்சியின் காதில் நன்றாக ஊதி விட்டாள்...

'என்னா மீனாட்சி..! மகன் போற போக்கு சரியில்லியே!... எச்சி கழுவுனாலும் எனத்தோட கழுவுன்னு சொல்லி யிருக்காங்க..! ஆனா ஒன் மகன் கதை வேற மாதிரி போயிரும் போல இருக்கே! பார்வதி வந்திட்டுப் போனா.. அவ யாரு.. நீ யாரு.. ரெண்டு பேருக்கும் என்னா சம்பந்தம்? ரோசன பன்னிப் பாரு.. மகனையும் கண்டிச்சி வை...'

பார்வதி நடுக்காம்பராவில் உட்கார்ந்து தலையில் அடித்துக் கொண்டு அழுதாள். அவளுடைய தைரியம் கல் விழுந்த கண்ணாடியாய் நொருங்கியது... நெடுநேரம் அழுத வாறு இருந்தாள் அவள்...

"பார்வதி.. பார்வதி..."

அவள் அழுகையைப் பதிலாக்கினாள்.

"ஏன் பார்வதி அழுவுற..." ஒரு தந்தையின் நெஞ்சோடு கேட்டார் தபால்காரர் கந்தசாமி.

நிமிர்ந்தாள் பார்வதி. இவரிடம் சொன்னால் மனப் பாரமாவது இறங்கும். மீனாட்சி வந்து போனதைச் சொன்னாள் அவள்...

தபால்காரர் கந்தசாமிக்குக் கோபம்தான் வந்தது...

"அட! நீ ஒண்ணு பைத்தியக்காரி மாதிரி அழுவுற.. அவ ஒன்னைய ஏசிட்டாங்கிறதுக்காக இப்புடியா அழுவணும்.. அவ கெடக்கிறா பைத்தியக்காரி.. அவ அப்படித்தான் ஏசுவா.. இதுக்கெல்லாம் பயப்படாத..! ராமுகிட்ட சொல்லுவோம்... அன்னைக்கி நீ இல்லேன்னா அவன் ஜெயில்ல இல்ல இருப்பான். அதை மறந்துட்டாளா?"

அவருடைய வார்த்தைகள் அவளுக்கு இதமாக இருந்தன. ஆனால் இனிமேல் ராமுவை மீனாட்சி சொன்னது

போல் பார்க்க முடியாமல் போய் விடுமோ என்ற கவலை அவளைப் பயமுறுத்தியது. நடந்ததை அவன் காதில் போட்டு வைத்தால் நல்லது என்று அவசரப்பட் டாள் அவள். அவள் போகமுடியாது. தபால்காரரைப் போகச் சொன்னால்,

"ஆமா, ஒனக்கு ஏன் இம்புட்டு அவசரம்?" என்று கேட்பார்... எதுவும் புரியாத பார்வதி விம்மி விம்மி அழுத வாறு முணுமுணுத்தாள்...

"கோயில் திருவிழா விசயமா காம்பராவுக்குப் போன துக்கு ஒழுங்கா மூஞ்சி பார்த்து பேசல்ல. மகன் சுகமில்லாம இருந்ததைப் போயி பார்த்திட்டு வந்ததுக்கு இங்க வந்து ஏசினாங்க? மரியாதை இல்லாம ஏசினாங்க.. அத நெனைச் சாதான் அழுக வருது!"

"சரி.. இப்பவே போயி கேக்கிறேன்... ராமுகிட்டயும் சொல்றேன்"

தன் நரைத்த மீசையைத் தடவிக்கொண்டே தபால்காரர் கந்தசாமி வெளியே போனார். படிக்கட்டுகளில் இறங்கும் சத்தம் தெளிவாகத் கேட்டது. டயர் சப்பாத்து அவள் காதில் விழுந்தது.

பார்வதி முந்தானையால் துடைத்துக் கொண்டாள் அவள் முகத்தை. அவளுக்குத் தபால்காரர் கந்தசாமி மீது நம்பிக்கை இருந்தது. ஆனாலும் அவள் உள்ளத்தில் அவ்வப் போது சுறுக்கல்கள். மீனாட்சி சொன்னது போல் இனி அவனைப் பார்க்க முடியாமல் போய்விடுமோ! ராமுவும் அம்மாவோடு சேர்ந்து விடுவானோ? சேரமாட்டான் என்று அவள் இதயம் அடித்துச் சொன்னாலும் அவளுக்கு இன்னமும் அழுகைதான் வந்தது.

காம்பராவிற்குத் திரும்பி வந்த தபால்காரர் கந்தசாமி இன்னமும் கவலையோடு இருந்த பார்வதியைப் பார்த்து விட்டு ஆறுதல் படுத்தினார்.

"என்னா பார்வதி! அதையே இன்னமும் யோசிச்சிகிட்டு இருக்கியா? இதுக்கெல்லாம் அழலாமா? ராமுகிட்ட நடந்தத சொன்னதும் பார்வதிய கவலப்பட வேணாம்னு சொன்னான். அவன் நல்லவன்... அவங்க அம்மா மாதிரி இல்ல அவன்! அம்மா மேல கோபப்பட்டான்... அவங்களுக்கு பேச தெரியா துன்னு சொன்னான்... இன்னமும் அவனுக்கு நல்ல சொக மாகல்ல.. இல்லேன்னா என்னோடயே வந்திருப்பான்.."

பார்வதிக்கு வயிற்றில் பால் வார்த்தது போலிருந்தது. மனதுக்கு இதமாக இருந்தது. ஆனால் இடையிடையே மீனாட்சியின் நினைவு கொஞ்சம் பயமுறுத்திக் கொண் டிருந்தது...

"நீங்க போன நேரம் மீனாட்சி இருந்தாங்களா?"

"நா போன நேரம்.. ராமு மட்டும்தான் இருந்தான்.. மீனாட்சி எங்கயோ போயிட்டா... அது எனக்கு வசதியா இருந் திச்சி.. சாவகாசமா பேசினேன்.. ஆனா பாவம் அவன் அப்பா. சொகமில்லாம இருக்காரு. நா ராமுவோட பேசிரதுக்குள்ளே லொக்கு - லொக்குன்னு ஆயிரம் தடவை இருமி இருப்பாரு! பாவம் நல்ல மனுசன்... எப்படி இருந்தவரு இப்புடி ஆகிட்டாரு..."

பார்வதியின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. ஆனால் மௌனமாக இருந்தாள்.. அந்த மௌனம் அவளுக்கு ஒரு சுகத்தைத் தருவதாகத் தோன்றியது. செவிகள் இன்னமும் சொன்னால் கேட்கத் தயாராக இருந்தன. அப்போதெல்லாம் அவளுடைய மனசு ரெக்கை கட்டிக் கொண்டு நினைவு

உலகத்தில் பறப்பதில் சுகம் கண்டது. ஓ! எத்தனை இனிய சுகம்! ஆனால் அவைகளை வெளியே சொல்லத் துணி வில்லாமல் இருந்தாள் அவள். தபால்காரர் ராமுவைப் புகழ்வதற்கும் அவள் அவனைப் புகழ்வதற்கும் வித்தியாசம் நிறைய இருக்கும்.

"சும்மா சொல்லக் கூடாது. ராமு கெட்டிக்காரன்..! கோயிலுக்குப் பக்கத்தில் புஸ்தகம் படிக்க ஒரு மடுவத்தைக் கட்டிப் போட்டு பெரிய வேல செஞ்சுட்டான்... இப்ப என்ன டான்னா கெழடு கட்டை கூட பேப்பர் பார்க்குது, படிக்குது. வாண்டுகளும் போவுது. எல்லார் கிட்டயும் படிக்கனும்; மனுசனாகனுங்கிற ஆசை பரவிகிட்டு வருது. இதனால நம்ம ஆளுக நாலு எழுத்து படிக்க தெரிஞ்சிட்ட? அவனை எமாத்த ஏலாது..."

பார்வதியின் முகத்தில் குடியிருந்த சோகரேகைகள் விலக ஆரம்பித்தன. நேரம் செல்லச் செல்ல முகத்தில் வெளிச்சம் போட்டது போல் புன்னகை குடியிருக்கத் தொடங்கியது. இனி அழுவதிலோ முணுமுணுப்பதிலோ அர்த்தமில்லையே!

தன் முகத்தைச் சேலை முந்தானையால் துடைத்துக் கொண்ட பார்வதி அவசர அவசரமாக அடுப்பைப் பற்ற வைத்தாள்.. 'பிளேன் டீ' ஊற்றித் தானும் குடித்துவிட்டு தபால்காரருக்கும் ஒரு கிளாஸில் கொடுத்தாள்.

தபால்காரர் பிளேன் டீயைக் குடித்துவிட்டு சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டு காம்பரா வெளியே நின்றார்.

பார்வதி குசினியில் இருந்தாள். அவள் மனம் எங் கெங்கோ போயிற்று.

தேர்த் திருவிழாவுக்குப் பிறகு கோயில் பக்கமே போக வில்லையென்ற ஞாபகம் வந்தது. திருவிழாவுக்குப் பிறகு லைப்ரரி எப்படி நடக்கிறது என்று கூடத் தெரியவில்லை.

இப்போதே கோயில் பக்கம் ஒரு எட்டு எட்டிப் பார்த்து விட்டு வந்தால் நல்லது போல் ஓர் நினைவு வந்தது.

தபால்காரர் காதில் விழுகிற மாதிரி,

"கோயில் வரைக்கும் போயிட்டு வர்ரேன்" என்று சொல்லிவிட்டுக் கோயிலை நோக்கி நடந்தாள்.

கோயிலில் எவருமே இல்லை. தேர்த்திருவிழா நடந்ததன் அடையாளங்கள் ஆங்காங்கே இருந்தன. கோயில் கட்டி டத்தில் இருந்த வர்ணக் கடுதாசிகள் காற்றில் அசைந்து கொண்டிருந்தன. தென்னோலைத் தோரணங்கள் காய்ந்து போய் இருந்தன... லைப்ரரியை எட்டிப் பார்த்தாள்... கூட்டம் இருந்தது. வேலை இல்லாததும் பலபேர் லைப்ரரிக்கு வந்திருக் கிறார்கள் போலும்... அவள் வெட்கப்பட்டுக்கொண்டு உள்ளே போகவே இல்லை.

ஆசையை அடக்கிக் கொண்டு வெளியே நின்று பார்த்தாள். தபால்காரர் சொன்னது போல் இப்போது எல்லோருக்கும் ஒரு ஆசை வந்திருக்கிறது. புத்தகமே தொடா தவர்கள் கூடப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். இதைத்தான் ராமு கனவு கண்டான். அவன் கனவு நனவாகி வருகிறதே...

சிறிது நேரம் அங்கிருந்த பார்வதி பழைய பாதையில் போகாமல் வேகவேகமாகக் கொஞ்சம் சுற்றிச் சுற்றிப் போக வேண்டுமென்றாலும் குறுக்குப் பாதையில் தன் காம்பராவை நோக்கி நடந்தாள்.

## அத்தியாயம் – 14

குறுக்குப் பாதையில் அவள் போவதற்கும் காரணம் இருந்தது. போகும் வழியில் பீலித் தண்ணீர் வரும் இடத்தில் அடர்ந்து கிடக்கிற பொன்னாங்கன்னி, வல்லாரைக் கீரைகள் முடிந்தளவு ஆய்ந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் அவள் போகிறாள். அப்படியே போகும்போது நின்று நிதானித்து ஆய்ந்தெடுத்தால் பருப்புப் போட்டுக் கடைந்து சோற்றோடு சாப்பிட உதவும்.

பார்வதி கால்களை நனையவிட்டுக் கொண்டு குனிந்து அங்கும் இங்கும் பார்த்தவாறு கீரைகளை ஆய்ந்தாள். யாரும் வந்துவிடக் கூடா தென்ற பயத்தில் அவசரஅவசரமாக ஆய்ந்தாள். மனம் போதும் என்று நினைத்ததும் ஆய்ந்த கீரைகளை மடியில் கட்டிக் கொண்டு நடந்தாள். சிறிது தூரம் நடந்த போதுதான் அவளுக்குத் தன் வயிற்றைப் பார்த்ததும் சிரிப்பு வந்தது.

ஓ! அவளுக்கு இப்போது மூன்று மாதமாம். அப்படித் தான் அவள் வயிறு இருக்கிறது. தன் வயிற்றைப் பார்த்து முதலில் சிரித்த பார்வதி, பின்னர் கலங்கிய கண்களுடன் நடந்தாள். கல்யாணம் ஆகியும் அவளுக்கு அப்படி ஒரு கோலம் வரவே இல்லை. அதை நினைத்தால் அவள் அழத்தானே செய்வாள்? அவளுக்குத் தெரிய கல்யாணம் கட்டிய லட்சுமி ஒரு கிழமைக்கு முன்னர் வயிற்றைத் தள்ளிக் கொண்டு தாய் வீடு வந்திருக்கிறாள். இவளோ கல்யாண மாகியும்...

தூரத்தில் கணக்கப்பிள்ளை 'விசுக் விசுக்'கென்று வேகமாக நடந்து வருவது தெரிந்தது. பார்வதியின் மனம்

'திக்'கடித்தது. ஏன் அவள் பயப்படவேண்டும்? மடியில் கனம் இருப்பதைப் பார்த்தால்... மடியில் என்ன தங்கமா இருக் கிறது? ரோட்டோரத்துக் கீரை இருக்கிறது. இதற்கு ஏன் பயப்பட வேண்டும்..?

"யாரு.. பார்வதியா?.."

பார்வதி மௌனமாய் இருந்தாள். இந்தக் கணக்கனோடு நமக்கென்ன பேச்சு..? என்பதுபோல் இருந்தது அவளுடைய மௌனம். கணக்கப்பிள்ளை விடவில்லை..

"அட! வயித்தில என்ன?.. வயிறு பெருசா இருக்கே!" என்று சொல்லி விட்டு நக்கல் சிரிப்புச் சிரித்தான்.. பிறகு அவள் மேல் அனுதாபப்படுவது போல் பேசினான்..

"ஹூம்... வாயும் வயிறுமா இருக்க வேண்டியவ... நீ! உன் தலயெழுத்து இப்புடி ஆயிருச்சி... ஆமா... மடியில என்னா? சீனி, கொச்சிக்காயா?... கீரை வகையா?.. எதாயிருந்தா என்னா?... ஆக்கி சாப்புடத்தானே கொண்டு போ..."

கணக்கப்பிள்ளை வெற்றிலைக் காவி படிந்த பற்களைக் காட்டிச் சிரித்தான். அசிங்கமான பற்களைப்போல் அவன் மனதும் அசிங்கமானதுதான்... அவன் எப்போதும் இப்படித் தான். பெண்கள் என்றால் அதிலும் இளவயசென்றால் போதும் 'பல்'லைக் காட்டுவான்! அவனுக்கு, தான் இன் னமும் ஒரு மன்மதன் என்ற நினைப்பு...

"ஆமா! பார்வதி.... வேல இல்லாம எப்படி இருக்க?... கல் உடைக்கிறதா கேள்விப்பட்டேன். அது கஷ்டமான வேல.. நீ சரின்னு சொல்லு.. தொரவூட்டு பங்களாவுல வேல வாங்கித் தாரேன்... சோக்கான வேல... லேசான சேல... வெள்ளக்காரி மாதிரி குளிச்சி முழுகி இருக்கலாம்.... வெய்யில்ல காய வேண்டியதில்ல... சம்பளம் நெறைய கெடைக்கும்.. அதிலயும் நீ மனசு வைச்சா..."

கண்களைச் சிமிட்டினான் கணக்கன். பார்வதிக்குச் கோபம் வந்தது. கண்கள் சிவந்தன. நரம்புகள் புடைத்தன நினைக்கவே வெட்கமாக இருக்கிறது. துரையின் பங்களாவில் வேலையாம்.. என்ன வேலை என்று அவளுக்குத் தெரியும்... சீ...

“தாலி அறுத்தவன்னா அவளோட எப்படியும் பேச லாம்னு பார்க்கிறியா..? வேல வாங்கி தர்ராராம்.... அதுக்கு வேற ஆளப் பாரு!”

பார்வதி கணக்கப்பிள்ளையை ‘முறை’த்துப் பார்த்து விட்டு ‘விறுவிறு’ வென்று நடந்தாள்.

கணக்கப்பிள்ளை மீசையைத் தடவிக் கொண்டார். அதற்கு அர்த்தம், ‘இரு... இரு... ஒன்னயப் பார்க்க வேண்டிய இடத்தில பார்க்கிரேன்!’ என்பதுதான். பார்வதியையும் ராமுவையும் பிரிக்கத் துரை போட்ட திட்டத்திற்கு சம்மதிக் காதது அல்லாமலும் அவமானமாகப் பேசியதால் அவருக்கு பார்வதி மீது சரியான கோபம்...

பார்வதி கணக்கனோடு தன் மானத்தைக் காக்க மோதிய தற்காகத் தன்னைப் பழிவாங்கும் எண்ணத்தில் வரவிருக்கின்ற எதையும் எதிர்த்துப் போராடும் தைரியத்தில் நடந்தாள். அவள் நெஞ்சில் ராமு இருந்தான். அவன் இருக்கும்போது என்ன பயம்!

நாலு நாள் கழித்து ராமு, அவள் காம்பராவிற்கு வந்தான்.. அப்போது குசினியில் வேலையாய் இருந்தாள். அவனைக் கண்டதும் சொன்னது போல அவனாக வந்து விட்டானே... என்ற சந்தோசத்தில் அவள் மனசு தலைகால் புரியாமல் குதித்தது. சொன்னது போல வந்துவிட்டானே அவனை நம்பலாம்.

பார்வதியின் பார்வை ராமுவைத் தொட்டது. அவன் முகத்தில் வெளிச்சம் போட்டது போல் ஓர் பிரகாசம்..

மனதில் கவலை இல்லாமல் அவனும் சிரித்தான். அவளும் பதிலுக்குச் சிரித்தாள்.

இருவரின் சிரிப்பும் இருவரின் நெஞ்சிலும் மகிழ்ச் சியைக் குவித்தது. ஓ! எத்தனை நாட்களுக்குப் பின்னர் எத்தனையோ எதிர்ப்புக்கு மத்தியில் சிரிக்கிறார்கள்.

"தபால்காரர் எல்லாத்தையும் சொல்லிட்டு வந்தாரு. என்னால அப்ப வரமுடியல்ல... அதான் சொகமானதும் இன்னைக்கி வந்தேன். நீ கவலப்படாத.. நா அம்மாவ புடிச்சி பேசினேன்... அம்மா பயந்து போச்சி..." என்ற ராமு பேச்சை நிறுத்தி சிறிது நேரம் மௌனமாக இருந்தான்.. அப்போது அவன் நெஞ்சில் அந்த நினைவுகள் நீண்டன...

அன்று நடந்தது...

தபால்காரர் வந்து போன பின்னர் ராமு படுக்கையில் சாய்ந்திருந்தான். அம்மாவை நினைக்க நினைக்கக் கோபம் தான் வந்தது. அந்தக் கோபத்தில் அம்மாவோடு சண்டை போட்டாலும் போடுவான் போலிருந்தது. இதற்கு முன்னர் அம்மாவோடு சண்டை போட்டதே இல்லை. அம்மா சொன்ன சொல்லைத் தட்ட மாட்டான். கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான். ஆனால் பார்வதிக்காக இன்று அம்மாவை எதிர்த்துப் பேசமட்டுமல்ல அம்மாவோடு இருக்கின்ற பேச்சு வார்த்தைகளைக் கூட அவதானித்துக் கொள்ளத் தயாராகி விட்டான்.

மீனாட்சி வந்தாள்..

வராந்தாவில் படுத்திருந்த ராமுவின் அப்பாவைக் கண் டித்தாள். நோயும் நொடியும் உள்ள அவர் இருமிக் கொண்டு குளிர்காற்று வீசும் இடத்தில் படுக்கலாமா..?

"ஏங்க? ஒங்களத்தான்... உள்ளுக்குப் படுக்கலாமே!"

அவர் முக்கி முணங்கினார். என்ன சொன்னாரென்று புரியவில்லை. இருமல் பேச ட்டால்தானே..!

மீனாட்சியின் துணையோடு தன் படுக்கையை நடுக் காம்பராவிற்கு மாற்றிக் கொண்டார். மீனாட்சி அவரைப் படுக்க வைத்துவிட்டு ராமுவின் அருகே வந்தாள்...

"ராமு! இப்ப எப்படி இருக்கு?."

அவன் அதற்குப் பதில் சொல்லாமல் அப்போதைய தன் மனதை காட்டினான்...

"நீங்க ஏன் பார்வதிய திட்டினீங்க? அவ மட்டும் அன்னைக்கி இல்லேன்னா தொர என்னய திருடனாக்கி இருப்பானே! அவள ஏன் ஏசணும்? பாவம் அவ.. என்னால வேலயும் இல்ல.."

மீனாட்சி பதில் பேசவில்லை. அவன் இப்படி திடீ ரென்று பேசுவான் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை. அதுவும் இவ்வளவு சீக்கிரமாக....! பார்வதியைப் பார்த்துப் பேசியது அதற்குள் இவன் காதில் விழுந்து விட்டதே.. யாரோ அந்தக் காரியத்தைச் சுடச்சுடச் செய்திருக்கிறார்கள். அவளுக் காக இவனும் பேசுகிறானே.. அவ யாரு? நா யாரு?..

படுக்கையில் இருந்தவாறு நிமிர்ந்து பார்த்தான் ராமு. சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு படம் அவன் கண்களில் தெரிந்தது. அந்தப் படம் புகைபட்டு, தூசிபட்டு பழசான படம். அதை உற்றுப்பார்த்தான். ராமரின் கால் பட்டு அகலிகை உயிராவதை உணர்ச்சி பூர்வமாக அழகாகச் சித்தரிக்கும் படம் அது. எப்போதோ அப்பா வாங்கிப் போட்ட படம். அழகான சித்திரம். அந்தச் சித்திரத்தில் ஒரு காவியம். காவியத்தில் ஒரு அர்த்தம். இந்திரனின் மாயா ஜாலத்தில் கெட்டுப் போய்க் கல்லாகிப் புனிதன் ராமனின்

கால் பட்டு உயிராகி, ஒரு பெண்ணாய் அதுவும் புதுப் பெண்ணாய்...

இந்த அர்த்தம் மீனாட்சிக்குத் தெரியுமா? அவளுக்குத் தெரியுமோ என்னவோ படத்தின் அழகு மட்டும்தான் தெரியும்.. ராமு யோசித்தான். அகலிகைக்கு ராமர் அருள் செய்யும் போது பார்வதியோடு பேசினால் என்ன..?

மீனாட்சி பதிலேதும் பேசாது அழத் தொடங்கினாள்... இப்போதைக்கு அவளால் முடிந்தது அது ஒன்றுதான்... அதன் பின்னர் அவர்கள் பேசிக் கொள்வதே இல்லை...

ஒரு கிளாஸில் டீ ஊற்றிக் கொடுத்தாள் பார்வதி. ராமு கிளாஸை வாங்கிக் கொண்டு அவளுக்குத் தைரியம் சொன்னான்...

"நா இருக்கிறேன். கவலைப்பட வேணாம்..."

ராமு கிளாஸைப் பார்வதியிடம் திருப்பிக் கொடுத்த போது கணக்கப்பிள்ளையைப் பற்றிச் சொன்னாள்...

"கணக்கனைப் பத்தித்தான் உனக்குத் தெரியுமே! இப்படித்தான் ஆசைகாட்டி மோசமாக்குவான். கவனமா இருக்கணும். அவனுக்குச் சரியான பாடம் படிச்சி குடுக்கனும். அதை நாளைக்கே செய்யலாம். ஆனா நம்ம ஆளுக ஒத்துமையா இருக்கனுமே! ஒன்னுபடுவாங்களா?.."

ராமுதான் கேட்டான்..

"நாமதான் புத்தி சொல்லி ஒன்னாக்கணும். நீங்க மனசு வைச்சா அதைச் செய்யலாம். கோயில்ல லைப்பரரி கட்டி தேரிழுத்த ஒங்களுக்குப் பெரிய வேலயாக்கும்"

சொல்லிவிட்டுச் சிரித்தாள் பார்வதி. அவளுடைய சிரிப்பின் உள் அர்த்தத்தைப் புரிந்து கொண்டான்.

“தபால்காரர் இருக்காரா?...” வாசலிலிருந்து ஒரு குரல் உள்ளே வந்தது.

பார்வதி வெளியே போய்ப் பார்த்தாள். கோழி ஆசாரி அங்கே நின்று கொண்டிருந்தார்.

“யாரு கோழி ஆசாரியாரா? வாங்க... வாங்க.. இன்னைக்கித்தான் தடம் தெரிஞ்சிருக்கு போல.. மாசக் கணக்கில ஆளயே இந்தப் பக்கம் காணோமே!”

வெற்றிலைக் காவி படிந்த ‘பல்’லைக் காட்டிச் சிரித்துக் கொண்டே உள்ளே குசினிக்கே வந்தார் கோழி ஆசாரி; ராமுவைக் கண்டார்...

“அட நம்ம ராமுத் தம்பியா? ஒங்களப் பத்தி நாடார் அய்யா நல்லா சொன்னாரு. நீங்க தானாமே அவரைக் காப்பத்தியது”

ராமு தன் அடக்கத்தைக் காட்டுவது போல் சிரித்துக் கொண்டான். மனதில் நாடாரைக் காப்பாற்றிய அந்தச் சம்பவம் கிளர்ந்து மறைந்தது.

“தேருக்கு வரலாம்னு பார்த்தேன். வசதி இல்லாமப் போச்சி... இந்த மூனு மாசமா ஒரே வேல.. இன்னைக்கித்தான் மூனு மாசத்துக்குப் பொறகு வந்திருக்கேன்.”

“அப்படி என்ன வேல?” என்று பார்வதியோ ராமுவோ கேட்கவில்லை. கேட்டிருந்தாலும் அவர் அடித்த பொய் அவிழ்ந்திருக்காது. பொய்யை உண்மையாக்கி விடுவார். சமாளித்துவிடுவார்.. எத்தனையோ பொய் சொல்லியிருக் கிறார். தொழில் என்றால் பொய் சொல்லாமல் முடியுமா? ஆனால் நடந்ததை மறைக்க முடியுமா?.. நடந்தது இதுதான்.. மூன்று மாதத்திற்கு முன் டவுனில் ஒருத்தனிடம் நல்ல

லாபத்தில் ஒரு தங்கத் தோட்டை வாங்கி உருக்கிக் கொழுத்த ஆதாயத்திற்கு விற்றுவிட்டார். விற்ற பின்னர்தான் அது திருட்டுத் தோடு என்று தெரிந்தது. அவரைப் பிடிக்கத் தோட்டை விற்றவனை ஜீப்பில் போட்டுக்கொண்டு டவுன் முழுவதும் சுற்றினார்கள். ஒருநாள் டீக்கடையில் நின்று கொண்டிருந்தபோது பொலிசார் அவரை ஜீப்பில் போட்டுக் கொண்டு போய் ரிமாண்டில் வைத்தார்கள். அந்த வழக்கில் இருந்து தப்பிக் கொள்ள நகைக்குப் பணமும் கொடுத்ததோடு, மேற்கொண்டு 'கிம்பளமும்' கொடுக்க வேண்டியதாகி விட்டது. கடைசியில் தோட்டு வியாபாரம் அறுநூறு ரூபாவை விழுங்கிக் கொண்டு ஆளை விட்டது. அறுநூறு ரூபா அவருக்குப் பெரியது.. அதற்காக மனைவியின் சங்கிலியை ஈடு வைக்க வேண்டியதாயிற்று...

"இப்ப தங்கம் நல்ல வெலை... ஏன் ராமு நம்ம ஆள் களுக்கிட்ட தங்கம் ஏதும் கெடைக்குமா? புள்ள குட்டிக் காரன் நா..."

ராமு சிரித்துவிட்டுச் சொன்னான்,

"நம்ம ஆள்களுக்கிட்ட தங்கமா? எல்லாத்தையும் வித்து தின்னுட்டாங்களே! தங்கம் எங்க இருக்கு? இப்ப நம்ம ஆள்களுக்கிட்ட பொன்னகையும் இல்ல; புன்னகையும் இல்ல... அதான் ஒங்களுக்குத் தெரியுமே!"

கோழி ஆசாரி பார்வதியைப் பார்த்தான்..

"நகை இருக்காது ஆள்களுக்கிட்ட. ஆனா கோழி இருக்கும்! வாங்கிட்டு போங்க.. எனக்கிட்ட கோழி கூட இல்ல" என்றாள் பார்வதி.

கோழி ஆசாரி கவலப்படவில்லை.

"தங்கம், பொன், வெள்ளி கெடைக்கலேன்னா அப்புறம் என்னா செய்ய? கோழி யாவாரம்தான் செய்யனும். இங்க இருந்து கோழி கொண்டு போயி வித்தா ஏதோ அஞ்சு பத்துக் கெடைக்கும். அதையாவது செய்வோம். ம்... அப்படி செஞ்சா தான் இந்தப் பேரும் நெலைக்கும்."

பார்வதியும் ராமுவும் சிரித்தார்கள்.

ஆரம்பத்தில் கோவிந்தசாமி ஆசாரியாகத் தோட்டத் திற்கு வந்து நகை வியாபாரம் செய்தவர். தோட்டத்திற்கு வரும் ஒவ்வொரு தடவையும் கோழியோடுதான் வீட்டுக்குப் போவார். நாளாக நாளாகக் கோவிந்தசாமி என்ற பெயர் மறைந்து கோழி வாங்கிற ஆசாரி என்ற பெயர் மலர்ந்தது. இப்போது அதுவே கோழி ஆசாரியாகச் சுருங்கிவிட்டது. இன்று கோழி ஆசாரியென்றால் சின்னப் பிள்ளைகளுக்கும் தெரியும்...

"அப்ப நா.. போறேன். பேசிக்கிட்டே இருந்தா பொழுது போயிடும். அப்புறம் லயத்துக்குப் போக முடியாம போயிடும்..."

கோழி ஆசாரி புறப்பட்டார்.. அவரோடு ராமுவும் புறப்பட்டான். புறப்படுவதற்கு முன்னர் தன் கண்களால் 'போய் வருகிறேன்' என்று பார்வதியிடம் சொல்லிவிட்டுப் போனான்.

கோழி ஆசாரி அந்த லயத்திலுள்ள ஒவ்வொரு காம்பரா விற்கும் போனார். ராமு அவரோடு போகாமல் அவரிடம் சொல்லிவிட்டுத் தன் காம்பராவிற்குப் போனான். காம்பரா வில் அம்மாவும் அத்தையும் மிக நெருக்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களை ஒன்று சேரப் பார்த்ததும் அவனுக்கு என்னவோ போலாகிவிட்டது. மனதில் இருந்த

மகிழ்ச்சி வலுவிழந்து கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நேரம் பார்வதியோடு இருந்துவிட்டு வந்திருக்கலாமே என்று நினைத்தான் அவன். வேறு வழியின்றி ராமு காம்பரா வுக்குள் நிற்காமல் வெளியே போய் நின்றான்.

அத்தை மீனாட்சியைப் பார்த்தாள்.

"ஏன் ராமு வெளியில போய் நிக்கிறான்" என்று கேட்பதைப் போலிருந்தது அந்தப் பார்வை. மீனாட்சி அதனைப் புரிந்துகொண்டு பதில் சொன்னாள்.

"அவனுக்கும் எனக்கும் கொஞ்சம் மனஸ்தாபம். ரெண்டு மூணு நாளா என்னோட பேசுறது இல்ல. அதான் வெளிய போய் நிக்கிறான்..."

தாய்க்கும் மகனுக்கு ஏன் மனஸ்தாபம் ஏற்பட்டது என்பது அத்தைக்கு நன்றாகத் தெரியும். அதை அவள் கேட்க வில்லை. மீனாட்சியின் வாயிலிருந்து வரட்டும் என்று இருந்தாள்... வந்து விட்டது.

"சரி... இதை இப்படியே விடுரது நல்லதா?.." அத்தை கேட்டாள்.

"சரியில்லத்தான் ஆனா ஒருத்தி என்ன செய்ய முடியும்?"

"ஏதோ யோசிச்சி செஞ்சுக்குங்க. ஊர்ல கதை அடிபடுர மாதிரி சரியில்ல. கடேசியில கதை வேற மாதிரி போயிரும்..."

மீனாட்சிக்குப் பார்வதி மேல் கோபம் கோபமாக வந்தது...

"தண்ணி வெண்ணியில மருந்து கலக்கிக் குடுத்திட் டாளோ? அவள ஏசினதுக்குத் தாய்னுகூடப் பார்க்காம என்னய ஏசினானே!"

ராமு வெளியே வேடிக்கை பார்த்தான். பக்கத்துக் காம்பராக் கிழவியின் பேரன் ராமுவின் நாய் வீரனோடு விளையாடிக் கொண்டிருந்தான். வீரனும் சின்னப் பிள்ளையைப் போல் அவனோடு விளையாடியது.

கொஞ்ச நேரம் விளையாடிக் களைத்த கிழவியின் பேரன் விளையாட்டை நிறுத்திவிட்டு ராமுவின் அருகே வந்தான். சிரித்தான். அவனையே உற்றுப் பார்த்தான்.

"ஏன் இங்க நிக்கிற? அத்தையோட பேசு..."

"அத்தை என்ன குதிரை மேலயா வந்திருக்காங்க? அவங்களோட பேச..." ராமு கிண்டலாகப் பேசினான். கிழவியின் பேரன் விடவில்லை..

"நடந்துதான் வந்திருக்காங்க.. அவங்களோட பேசுனா தானே அத்தை மகளத் தருவாங்க.."

"அப்படியா.. சரி எனக்கு அத்தை மக வேணாம். நா.. அத்தைகிட்டச் சொல்லி ஒனக்குக் கட்டி வைக்கிறேன்! சரியா?"

"வேணாம்! வேணாம்!! நா.. என் அத்தை மகளைக் கட்டுரேன்! நீங்க உங்க அத்தை மகளைக் கட்டுங்க..."

ராமு 'டக்'கென்று சிரித்து விட்டான். சின்னப்பயல் என்ன பேச்சுப் பேசுகிறான். அவனை அப்படியே தூக்கி மேலே போட்டுப் பிடித்துக் கீழே விட்டான். அவன் துள்ளிக் கொண்டு ஓடினான். அவன் பின்னே வீரனும் ஓடியது. உள்ளே இருந்து ராமுவின் அப்பா இருமும் சத்தம் கேட்டது.

ராமு வானத்தை வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனதில் பார்வதி சிரித்துக் கொண்டிருந்தாள்.

## அத்தியாயம் – 15

பொழுது நன்றாக விடிந்து விட்டது. அக்கம் பக்கத்துக் காம்பராவைச் சேர்ந்த வாண்டுகள் எல்லோரும் சத்தம் போட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். எங்கோ ஒரு காம்பராவில் கிழவி இரும்பு உரலில் வெற்றிலையை 'லொட்டு லொட்டு' என்று இடித்துக் கொண்டிருந்தாள். பல்லில்லா விட்டாலும் வெற்றிலை போடவேண்டும் அவளுக்கு. இனி ஓயாமல் வாயை அசைத்துக் கொண்டு இருப்பாள்...

மீனாட்சி வேலைக்குப் போய்விட்டாள். ராமுவின் அப்பா படுத்திருந்தார். ராமு இன்னமும் படுக்கையை விட்டு எழும்பாமல்.. எழும்ப மனசில்லாமல் படுத்துக் கிடந்தான். அவனுக்கு இன்னும் கொஞ்சம் தூங்கவேண்டுமென்ற ஆசை இருந்தது. தூக்கத்தை முறித்துக் கொண்டு எழும்பு என்று யார் சொன்னாலும்,

"எழும்பி என்னதான் செய்ய? வேலை இல்லையே" என்று மனம் பேசித் தூங்கச் சொல்கிறது. வேலை செய்த போது இப்படியில்லை. எப்போது விடியும் என்று பார்த்துக் கொண்டிருப்பான். விடிந்ததும் வேலைக்கு ஓடிவிடுவான். அத்தனை ஆர்வம் - ஒரு ஆசை அந்த வேலையில் இருந்தது அவனுக்கு. அந்த வேலை இல்லாமல் போனதில் இருந்து இப்போதெல்லாம் இப்படித்தான் தூங்கும் ஆசை... ஓ..! நேரத்தோடு எழும்பித்தான் என்ன செய்ய முடியும்?

காம்பராவின் பின்னால் இருக்கும் வீட்டுத் தோட் டத்தில் வேலை செய்யலாம். என்ன வேலை? மண்ணைக் கொத்திப் போடுவது உரம் போடுவது; பாத்தி கட்டுவது; வேலி கட்டுவது ஆகிய வேலை. அதையும் எவ்வளவு நேரம் தான் நீட்ட முடியும்?

காலை வெய்யில் அவன் போர்த்தியிருக்கும் போர்வையை ஊடறுத்துக் கொண்டும், அதில் இருக்கிற ஓட்டைகளில் நுழைந்தும், அவன் உடம்பைத் தொட்டது. கண்களைத் திறந்து பார்த்தான். இரண்டு கண்களும் கூசின.. போர்வைக்குள்ளே வரும் வெளிச்சத்தை அந்தக் கண்களால் எதிர் கொள்ள முடியவில்லை. ஒருக்களித்துப் படுத்தான். சிறிது நேரம் யோசித்தான். இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தால் சிரிப்பார்கள்... படுக்கையில் உட்கார்ந்தான் அவன். அப்போது தான் அந்த ஞாபகம் மனசில் வந்து நின்றது... ஓ..! இன்று டவுனுக்குப் போய் பிரதிநிதியைப் பார்க்க வேண்டும் அல்லவா?.. முத்துவையும் வரச்சொல்லியிருந்தான். இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவானே..! அவன் வருவதற்குள்...

எங்கிருந்து வேகம் வந்ததோ தெரியாது. அப்படி ஒரு வேகம் வ ந்தது அவனுக்கு.. படுக்கையை விட்டு எழுந்தான்...

பல் விளக்கி, முகம் கழுவி 'டீ' ஊற்றிக் குடித்தபோது முத்து அவனைத் தேடி வந்துவிட்டான்.

"நீ இன்னும் ரெடியாகலியா? சரியா போச்சி... நா.. நீ ரெடியா இருப்பேன்னு ஓடியாந்தேன். டீ குடிக்கல்ல.."

ராமு சிரித்துக் கொண்டே இன்னும் ஒரு கிளாஸில் டீயை ஊற்றிக் கொடுத்துவிட்டுச் சொன்னான்.. "சரி.. அதுக்கென்ன? இங்க குடிச்சாச் சரியாப் போச்சி... இந்தா டீ!"

டீக் கிளாஸை வாங்கிக் கொஞ்சம் உறிஞ்சி டீயைக் குடித்துவிட்டுப் புகழ்ந்தான். "அட! நல்லா இருக்கே! நீ ஊத்துன டீயா?.."

"ம்... நா.. ஊத்துன டீதான். இப்பதான் ஊத்துனேன். நீயும் வந்துட்ட?.."

முத்து டீ குடித்துவிட்டுக் கிளாஸைத் திருப்பிக் கொடுத்த போது ராமு கேட்டான், "ஒனக்கு டீ ஊத்தத் தெரியுமா?.."

முத்து புன்னகைத்து விட்டுச் சொன்னான்...

“தேயிலைத் தோட்டத்தில் இருந்துகிட்டு தேயிலை கொழுந்து பறிச்சிகிட்டு தேயிலை ஸ்டோர்ல வேல செஞ்சுகிட்டு வாழ்ர நமக்கு டீ ஊத்தத் தெரியலேன்னா சிரிப்பாங்க... பெரிய வெக்கம்... ஆனா.. நம்ம ஆளுக எல்லாத் துக்கும்மே டீ ஊத்தத் தெரியும். டவுன்ல எங்களத் தோட்டக் காட்டானுக என்று சொல்ர மொதலாளி மாருக ஓட்டல்ல நல்ல காட்டம் போட்ட டீ கேப்பானுக... அப்ப யாரு ஊத்தி குடுப்பா தெரியுமா? நம்மவன்தான்! ஓட்டல்ல சர்வரா டீ மேக்கரா நம்மவன்தான் இருப்பான்...”

ராமு அப்பாவுக்கு ஒரு கிளாஸ் டீ கொடுத்து, குடிக்கச் சொல்லி அவர் குடித்ததும், கிளாஸைக் குசினியில் வைத்து விட்டு நேற்றே துவைத்துக் காயப் போட்டிருந்த சட்டை யையும், வேட்டியையும் உடுத்திக் கொண்டு அப்பாவிடம் சொல்லிவிட்டு, முத்துவோடு புறப்பட்டான். அவன் பின்னே வீரன் வாலை ஆட்டிக்கொண்டு ஓடி வந்தது. இதைக் கவனித்த அவன்,

“காம்பராவுல இரு! நா.. டவுனுக்குப் போயிட்டு வாறேன்...” என்று சொல்லிவிட்டுக் கையால் விரட்டினான். வீரனுக்கு வாய்ப் பாஷை விளங்கியதோ, கைப்பாஷை விளங்கியதோ தெரியாது திரும்பி விட்டது. அதைப் பார்த்து முத்து வியந்தான்.

“அட! நாயைக் கூட சொன்ன சொல்லுக்கு அடங்க வைச்சிருக்கியே!”

“எதிலயும் கட்டுப்பாடு இல்லேன்னா மனுசன் வாழவே முடியாது...”

ராமு முன்னால் நடந்தான். அவன் பின்னே நடந்தான் முத்து. ராமுவைப் போல் வேகமாக முத்துவால் நடக்க

முடியவில்லை அந்தப் பாதையின் இருபக்கங்களிலும் தேயிலைச் செடிகள் இன்றுதான் பெரட்டுத் திறந்திருக்கிறார்கள். பெண்கள் கொழுந்தெடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கைகள் யந்திரமாக வேலை செய்தன. இரு நாட்களுக்குப் பின்னர் இன்றுதான் கொழுந் தெடுக்கிற வேலை. அதனால் அவர்கள் உற்சாகத்துடன் இன்றாவது பேர் விழுமே என்ற சந்தோஷத்தில் வேலை செய்தார்கள்.

இன்னும் சிறிது தூரம் நடக்க வேண்டும் தார் ரோட்டுக்குப் போக.. இந்த மேட்டையும் கடந்து விட்டால் டவுனுக்குப் போனது போல்தான்..

இப்போதுதான் மேட்டைக் கடந்து நடந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய காதில் எங்கிருந்தோ காற்றோடு காற்றாகக் கலந்து அந்தப் பாடல் மோதியது.

ராமு 'சீ'யென்று காரித் துப்பினான். அவனுக்கு அந்தப் பாடலைக் கேட்க விருப்பமே இல்லை. அதற்குக் காரணம் பாட்டிலோ இசையிலோ பாடிய வரியிலோ உள்ள வெறுப்போ கசப்போ அல்ல. பாடல் வருமிடத்திலும் அதைக் கேட்பவரிடத்திலும் இருக்கும் வெறுப்பும் கசப்புந்தான்.

"இந்த நேரத்தில் நம்ம ஆளுக கொழுந்தெடுக்கிராங்க. தொரவூட்டு சம்சாரம் மகாராணியம்மா பாட்டுக் கேக்கிராங்க. அந்த மகாராணியையும் ஒரு நாளைக்கி கொழுந் தெடுக்க வைச்சா ஒலகம் தெரியும். நம்ம கஷ்டமும் புரியும்"

முத்து சொன்னான்...

"ஒரு நாளைக்கி அவங்க கொழுந்தெடுக்கிற காலம் வரத்தான் செய்யும்"

ஒரு பக்கம் விடியும் முன்னரே இப்படிப் பாட்டுக் கேட்பது துரையின் மனைவியின் வழக்கமாகும். ஒவ்வொரு

நாளும் ரெகோர்ட் பிளேயரிலிருந்தோ -டேப் ரெகோடரி லிருந்தோ வரும் பாட்டுத்தான் அவளுக்கு விடிவைத் தரும். இருட்டுவதும் அதனால்தான்... மாதத்தில் சில நாட்களில் பங்களாவில் பெரிய டீ பார்ட்டி நடக்கும். டவுனி லிருந்து ஏழெட்டுக் கார்கள் வரும். இரவெல்லாம் குடியும் கூத்தும் தான். அன்றைக்கெல்லாம் துரையின் மனைவி பலரின் அர வணைப்பில் டான்ஸ் ஆடுவாள். துரை குடி மயக்கத்தில் மிதப்பார்.

"தொரட பொஞ்சாதி சரியில்ல... இல்லாட்டி அவரு இப்படி நடக்க மாட்டாரு"

ராமு 'வெடுக்'கென்று கேட்டான்...

"அவ ஒருத்தி சொல்ரதுக்காக தொரை நம்ம எல்லாத் துக்கும் அநியாயம் செய்யலாமா? ஒருத்தி பெருசா? ஏழைங்க நாங்க பெருசா?"

"தொரைக்கி ஒருத்திதான் பெருசா தெரியுது."

"எத்தனை நாளைக்கி அது? ஒரு நாளைக்கி எது பெருசுன்னு தெரிஞ்சிடும்.."

இருவரும் மேட்டைக் கடந்து தார் ரோட்டுக்கு வந்து விட்டார்கள். தார் ரோட்டில் சிறிது தூரம் நடந்தால் சந்திக் கடைக்குப் போகலாம். சந்திக்கடைக்குப் போனால் சுடச்சுட ஏதும் குடிக்கலாம். சந்திக்கடை முதலாளியோடு சுடச்சுடப் பேசலாம்.

ராமு அம்மாவை நினைத்துக் கொண்டு நடந்தான். இந்தச் சில நாட்களாக அம்மாவோடு பேசுவதே இல்லை; அவளும் அவனோடு பேசுவதே இல்லை. ஒருவர் முகத்தை ஒருவர் தப்பித் தவறிப் பார்த்துவிட்டாலும் பார்க்காதது போல் நடந்து கொண்டார்கள். ராமு வாயைத்திறந்து டீ

கூடக் கேட்டதில்லை. மீனாட்சி தானாக டீ ஊற்றி டீ கிளாஸை நடுக் காம்பராவில் உள்ள மேஜையில் வைப்பாள். அது தனக்குத்தான் என்று அறிந்து அதைக் குடிப்பான். சாப்பாட்டை எடுத்து வைப்பாள். அவனாகப் போட்டுச் சாப்பிடுவான். இந்த நாடகம் இன்றும் நீடித்தது. இனி எத்தனை நாளைக்கு நீடிக்குமோ தப்பித் தவறி ராமு விட்டுக் கொடுத்தாலும் மீனாட்சி அதற்குத் தயாராக இல்லை. பார்வதியை மறந்தால் அவள் பேசத் தயாராக இருக்கிறாள்... ஆனால் அவன்?

சந்திக்கடையருகே வந்தபோதுதான் ராமுவிற்கு நினைவுகள் அறுந்து சுயநினைவு வந்தது...

இருவரும் முகத்தில் ஒரு மலர்ச்சியுடன் கடைக்குள் போனார்கள். அவர்களைக் கண்டதும் சந்திக் கடை முதலாளி வரவேற்றார்...

"வாங்க... வாங்க..."

ராமு, "வந்துக்கிட்டே இருக்கிறோம்" என்றான் வேடிக்கையாக.

"காலையிலே ரெண்டு பேரும் கௌம்பிட்டீங்க... டவுனுக்கா? என்ன விசயம்? பொது விசயமா? சொந்த விசயமா?..."

உரிமையோடு சந்திக்கடை முதலாளி கேட்டார்.

ராமு பதில் சொன்னான்...

"சொந்த விசயம் தான்... ஆனா அதை பொது விசயம்னும் சொல்லலாம்... எப்படீன்னா எனக்கு வேல இல்லாம போனது சொந்த விசயம். ஆனா அப்படிச் செஞ்சது அநியாயம்னு எல்லாரும் சொல்ற நேரம் அது பொது விசயம்தானே!

இப்ப அது விசயமாத்தான் நான் நம்ம பிரதிநிதியப் பார்க்கப் போறேன்.. இன்னைக்கி ரெண்டுல ஒன்னு கேக்கனும்... அவருக்கிட்ட.”

“ஆமா... எத்தன நாளைக்கித்தான் வேலை இல்லாம இருக்கிறது? பிரதிநிதிகிட்ட ரெண்டுல ஒன்னு கேட்டுட்டு சரி வரலேன்னா வேற வேல பார்க்க வேண்டியதுதான்..”

“வேற வேல என்னா வேல?..” முத்து கேட்டான்.

ஆத்திரத்துடன் பதில் சொன்னான் ராமு...

“வேற என்னா வேல? தொரய இல்லாம ஆக்கிரதுதான் அந்த வேல; பெரிய வேல..”

“சந்திக்கடை முதலாளி அப்போது சொன்னார்... என்னயும் அந்த வேலயில சேர்த்துக்க; என்னால முடிஞ்சதைச் செய்யிரேன்!”

சந்திக்கடை முதலாளியின் உறுதியில் ராமுவுக்குப் புது உற்சாகம் வந்தது.

“ஒங்க உதவி இருந்தா தொரக்கி ஒரு பாடம் படிச்சி கொடுக்கலாம்..”

கடை வேலைக்காரனை ‘டீ’ போடச் சொன்னார்... முதலாளி, அவர்கள் 'டீ' குடித்து விட்டு வந்ததாகச் சொன்னார்கள்.. முதலாளி விடவில்லை. இருவரையும் குடிக்க வைத்தார். ‘டீ’ குடித்து முடிந்ததும் சங்கத்தை நோக்கி நடந்தார்கள்.

தொழிற் சங்கத்தின் காரியாலயத்தின் உள்ளே இருவரும் போனபோது டெலிபோனில் பேசிக் கொண்டிருந்தார், சங்கத்தின் பிரதிநிதி ஆள் உருவத்தில் அகஸ்தியர். ஆனால்

காரியமாற்றுவதில் சூரன். அவர் வாயும் கையும் 'இங்கிலீஸ்' வெளுத்து வாங்கும்.

ராமு ஒரு ஏக்க உணர்வோடு அவரையே பார்த்தான்... டெலிபோன் பேச்சுத் தொடர்ந்தது..

"ஐயாம் கிரு ணன் ஸ்பீக்கிங் இயர்.. குட்மார்னிங்... மிஸ்டர் ராமசாமி..! பைன்... பைன்... ஹலோ எபவுட் அவர் லேபர் கொன்பரன்ஸ்..."

பிரதிநிதி இங்கிலீஸில் வெளுத்து வாங்கிக் கொண்டிருந்ததைக் கேட்ட ராமுவுக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. அதை அடக்கிக் கொண்டான். மனதில் நினைவுகள் புழுக்களாய் ஊர்ந்தன...

ஐந்தாம் வகுப்புவரைத் தோட்டத்து ஸ்கூலிலும் எட்டாம் வகுப்பு வரை டவுண் ஸ்கூலிலும் படித்தவன். அதற்கு மேல் படிக்கத் துடித்தவன். ஆனால் அவனால் மேலே படிக்க முடியவில்லை. படிப்பதற்கு அவனுடைய அப்பா விடவில்லை... 'நீ படிச்சி கிழிச்சி தொரை வேலைக்கா போக போற? பெரிய படிப்பு படிச்சவன் எல்லாம் வேல கெடைக்காம சோத்துக்கே லாட்டரி அடிக்கிரானுக! நீ தான் படிச்சி கிழிக்கப் போறியாக்கும்? போ! பேர் பதிஞ்சு வேலைக்கு போ..!' என்று சொல்லிவிட்டார்.

தோட்டத்து ஸ்கூல் மாஸ்டர் கூட அவனைப் படிக்கச் சொன்னார். யாழ்ப்பாணத்தின் குக்கிராமத்தில் பிறந்து இந்தத் தோட்டத்தில் மாஸ்டர் வேலைக்காக வந்திருப்பவர். உண்மையிலேயே தோட்டத்துப் பிள்ளைகள் கல்வி விஷயத்தில் அக்கறை கொண்டவர்...

"என்ன ராமு! நீ படிக்கப் போறதில்லையெண்டு முடிவு பண்ணிட்டியோ? அநியாயமா வாழ்க்கையை கெடுத்து

விடாதே! படிப்பு இருந்தால் எந்த ஊரிலும் பிழைக்கலாம்.. என்னைப் பார்.. பனை மரத்தைத் தவிர ஒண்டும் இல்லாத கிராமம்... படிச்சதினால இங்க வந்து இருக்கிரன்... நல்லதுக்கு சொல்ரன்... படிப்பை விடாத! படி..! நல்லா படிச்சா நீயே இந்த ஸ்கூலுக்கு மாஸ்டரா வரலாமே!"

ஆனால் அவனால் படிப்பைத் தொடர முடியவில்லை. தோட்டத்தில் வேலைக்குத்தான் போக முடிந்தது.

கண்களை எவருக்கும் தெரியாமல் கசக்கிக் கொண்ட ராமு, பிரதிநிதி இன்னமும் பேசிக் கொண்டிருப்பதால் பக்கத்து அறையில் டைப் அடித்துக் கொண்டிருக்கும் கிளார்க்கின் மேஜையருகே போனான்.

"யாரு ராமுவா... வாங்க! போன கெழம வர்ரேன்னு சொன்னீங்க... ஏன் வ'ரல்ல?" என்றவாறே கிளார்க் டைப் அடித்தார்..

"சொகமில்லாமப் போச்சி அதான் வரல்ல"

ராமு பிரதிநிதியிடம் வந்தான். பிரதிநிதி டெலிபோனில் பேசி முடித்து விட்டு, ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அவனைப் பார்த்ததும் உட்காரச் சொல்லிவிட்டு எழுதுவதை நிறுத்திப் பேசினார்.

"லெட்டரைப் போன கெழமை நானே டைப் செய்தேன். தொரய வேல நிப்பாட்டுன எல்லாத்துக்கும் வேல குடுக்கச் சொல்லி எழுதியிருக்கேன்! சரியா?"

"ம்.." என்றான் ராமு.

## அத்தியாயம் – 16

பிரதிநிதி அந்தக் கடிதத்தின் பிரதியைத் தேடியெடுத்துப் பிரித்துச் சில வரிகளை வாசித்துக் காட்டினார். ஆங்கிலத்தில் தான் டைப் செய்யப்பட்டிருந்தது. மொழி புரியாவிட்டாலும் அவனுக்கு வாசித்தபோது, வார்த்தைகளின் தொனி அழுத்தம் நன்றாகவே புரிந்தது. கடுமையாகத்தான் கடிதம் எழுதி யிருக்கிறார்.

"இந்த லெட்டருக்குப் பதில் வரலேன்னா மற்றதை அப்புறம் பார்ப்போம். லெட்டரை நானே ரிசிஸ்டர் செய்யிறேன். ஒப்பம் மட்டும் போடுங்க.."

ராமு அந்தக் கடிதத்தில் கையெழுத்திட்டான்...

வெளியே வந்த இருவரும் வேகமாக நடக்க ஆரம் பித்தனர். முத்து கேட்டான்..

"இந்த லெட்டர்ல ஒனக்கு வேல கெடைக்கும்னு நெனைக்கிறியா?"

ராமு சொன்னான்...

"லெட்டர் அனுப்ப வேண்டியது நம்ம வேல! தொரை வேல தரலேன்னா அடுத்த வேலய தொடங்க வேண்டியது தான்..."

என்ன வேலை? என்று முத்து ஏனோ கேட்கவில்லை. ராமு மௌனமாக இருந்தான்.. இருவரும் நடந்தார்கள். பஸ்ஸில் கூட போகலாம். சில்லறை வேண்டும்.. ஆனால் நடப்பதற்குச் சில்லரை தேவையில்லையே..!

வெய்யில் தலைக்குமேல் நெருப்பைக் கொட்டியது போல் அடித்தது. இருவரும் சந்திக் கடையருகே வந்து, தோட்டத்திற்கு உள்ளே சிறிது தூரம் போய்விட்டு ஒரு குறுக்குப் பாதையில் இறங்கினார்கள். அந்தக் குறுக்குப் பாதை துரையின் பங்களா அருகேதான் கரத்தை ரோட்டில் இறங்கும்..

துரையின் பங்களாக் 'கேட்'டருகே கூட்டமாக தோட்டத்தில் வேலை செய்பவர்கள் நிற்பதைப் பார்த்தான் ராமு. ஏன் இவர்கள் இங்கே நிற்கிறார்கள்? என்ற கேள்வியை மனதில் சுமந்து கொண்டு கரத்தை ரோட்டில் இறங்கிக் கூட்டத்தை நோக்கி நடந்தார்கள்... அவர்கள் இருவரும்.

"ராமுவா... வாப்பா? இப்பதான் டவுன்லயிருந்து வர்ரியா?"

"ஒன்னயத் தேடி லயத்துக்கு போனோம்... சரி.. நீயே வந்திட்ட.. நல்லதா போச்சி.. நீ வந்தாத்தான் இது சரியா வரும்... தோட்டத்துப் பைப்ல தண்ணியே வருதில்ல.. இதைப் பத்தி எத்தனையோ தரம் சொல்லியாச்சி... ஒன்னும் கேக்கிரமாதிரி இல்ல. நம்ம ஆளுக தண்ணி இல்லாம ரொம்ப கஷ்டப்படுதுக. மேட்டு லயத்துக்காரங்க தண்ணியெடுக்கப் பணிய லயத்துக்கு வாராங்க... மேட்டு லயம் எங்க இருக்கு? பணிய லயம் எங்க இருக்கு? ரெண்டும் ரெண்டு மூலையில இருக்கு."

ராமு மௌனமாக அதே நேரத்தில் உள் மனதில் கோபம் கொப்பளிக்க எல்லோரையும் பார்த்தான். முப்பது முப்பத்தைந்து பேருக்கு மேல் அங்கே வந்திருந்தார்கள். இதற்கு முன்னரென்றால் துரையிடம் எதையும் கேட்க ஐந்து பேர் துணிந்து வரமாட்டார்கள். இப்போதோ இவர்களிடம் ஒரு விழிப்புணர்ச்சியும் துணிவும் ஆர்வமும் வந்துதான் இருக்கிறது.

ராமு கேட்டான்... "தோட்டத்து தலைவர் ஏன் வரல்ல"

"தலைவரா அவரு வரமாட்டாரு... அவரு தொரக்கி சப்போட் பண்றாரு... அவருகிட்ட பைப்ல தண்ணி வரலேன்னா அதெல்லாம் வரும். அவசரப்பட வேணாம். தொட்டதுக்கெல்லாம் தொரக்கிட்ட போகக் கூடாதுன்னு சொல்ராறு.... எம்புட்டோ எடுத்துச் சொல்லியும் அவரு கேக்கல்ல.. அதுக்குப் பொறகுதான் நாங்களே வந்தோம்.. தலைவரை நம்பி பிரயோசனம் இல்லே... அவரு வர மாட்டாரு..."

"அட தலைவர் இதுக்கெல்லாம் வருவாரா? தொர கூப்புட்டா ஓடி வருவாரு... அவருக்கு தொரைதான் எங்கள வுட முக்கியம்..." என்று ஒருத்தன் சத்தம் போட்டான். குரல் இளைய குரலாக இருந்தது. ராமு குரல் வந்த பக்கம் பார்த்து,

"உஸ்! சத்தம் போடாதீங்க..." என்று சாடை காட்டினான்.

"என்னங்க நீங்க.. ஓங்களத்தான் எங்க தலைவரா வைக்கலாம்னு இருக்கோம்! நீங்க என்னன்னா சத்தம் போட்டுப் பேசக் கூடாதுன்னு சொல்றீங்க.."

ராமு சிரித்தான். அந்தச் சிரிப்பில் இருந்த ஒரு கவர்ச்சி அவர்கள் எல்லோரையும் கவர்ந்து இழுத்தது... அர்த்த மில்லாமச் சத்தம் போடுறதுல பிரயோசனமே இல்ல. அதனாலதான் சொன்னேன்... சத்தம் போட வேணாம்னு.. சரி அதை விடுங்க... துரை வந்தோன்ன கேப்போம்.. அமைதியா மரியாதையா கேப்போம். கேக்கிரதைத் தரலேன்னா மத்ததை யோசிப்போம்..

அத்தனை பேருக்கும் அவன் பேச்சுப் பிடித்தது. அவன் சொன்னதில் இருந்த நியாயத்தைப் புரிந்து கொண்டார்கள்.

அவன் சொன்னது நியாயம்தானே. சும்மா 'வாள்-வாள்' என்று கத்துவதில் என்ன கிடைக்கப் போகிறது..

"தொர வர்ராறு.. சத்தம் போடாதீங்க. என்னான்னு கேப்போம்..."

துரை வந்தார்.. அவரோடு கணக்கப்பிள்ளை - கிளார்க் காவல்காரன் என்று ஒரு பட்டாளமே வந்தது. துரையின் கண்களில் கோபம் மிதந்தது. அவர் பேசுவதற்கு முன்னமே கணக்கப்பிள்ளை வாயைத் திறந்தார்..

"இன்னும் நீங்க பேவலியா? சத்தியாக் கெரகமா செய்யுறீங்க?"

"சத்தியாக் கெரகம் செய்யல்ல கணக்கப்பிள்ளை அய்யா.. பைப் போட சொல்ரோம்..." சூடாகவே தொடங் கினான் ராமு.

துரைக்குக் கோபம் சிவப்பாய் முகத்தில் படர்ந்தது. வேலையை விட்டு விரட்டியும் அடங்க மாட்டேன் என் கிறானே..! ஆள் திரட்டி வந்து விட்டானே! இவனை.. இவனை..

"முதலாளி சொன்னாத்தான் பைப் போட முடியும்... என்னால இப்ப ஒன்னும் செய்ய முடியாது. லெட்டர் போட்டு கேக்கிறோம்... ரிப்ளை வந்ததும் சொல்ரேன். அது வரைக்கும் பொறுங்க..."

கிளார்க்கர் சொன்னார்.. இது பழைய பல்லவி... மாதக் கணக்கில் சொன்ன பதில்.

"பொறுத்தது போதாதா...?" கூட்டத்தில் ஒரு குரல்.

ராமு சொன்னான் நிதானமாக... "நாங்க ஒங்களோட சண்டை போட வரல்ல... நியா யத்தைச் சொல்லுரோம்.. பைப்ல தண்ணி வரல்ல.. ஆளுக ரொம்ப கஷ்டப்படுராங்க..."

“அதுக்கு நான் என்னா செய்ய முடியும்? முதலாளி சொன்னா நாளைக்கே பைப் போடலாம். எனக்கிட்ட ஒன்னும் கேக்காதீங்க... இதை கேக்கத்தானா இங்க கூட்டமா வந்தீங்க?...” துரை கோபத்துடன் கேட்டார்.

ராமு அதற்கு ஆத்திரத்துடன் பதில் சொல்ல வாயெடுத்த போது லொறி வரும் சத்தம் கேட்டது. லொறி துரையின் பங்களா ‘கேட்’ருகே வந்து நின்றது. ராமு இப்போது பேசவில்லை. துரையைப் பார்த்தான். அவரின் முகம் ‘கறு’த்தது.. எல்லோரும் அந்த லொறியையே பார்த்தார்கள். லொறியில் பைப்புகளும் விதவிதமான கம்பிகளும் வெளியே நீட்டிக் கொண்டிருந்தன. கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. சலசலப்பு பின்னர் சத்தமாக வெடித்தது..

“நமக்கு பைப் போடத்தான் மொதலாளி லெட்டர் வேணும். இப்ப லொறியில் வந்திருக்கிறது யாருக்கு?.. இதுக்கு லெட்டர் தேவையில்லையா..? தொரைக்கு மட்டும் ஸ்டோர் கெணத்தில இருந்து தண்ணி எடுக்கத்தான் இந்த பைப் எல்லாம் புரியுதா?”

ராமு ரகசியத்தை உடைத்து வைத்தான்.

“நமக்குச் சம்பளம் கொடுக்கவும், வேல கொடுக்கவும் ஆயிரம் சட்டமும் கேள்வியும்.. இவங்களுக்கு தேவைன்னா ஒடனே செஞ்சுக்குவாங்க.. ஒன்னும் தேவையில்ல...” அதையும் ராமுதான் சொன்னான்.

கணக்கப்பிள்ளை கெஞ்சினார்..

“சொன்னா கேளுங்கப்பா.... சும்மா ஏன் சத்தம் போடுறீங்க? பேசாம சொன்னதைக் கேட்டுட்டுப் போங்க...”

“தொரைக்குப் பந்தம் புடிக்கிறான் கணக்கன்....”

கூட்டத்தில் ஒரு குரல் ஒலித்தது. அதைத் தொடர்ந்து இன்னும் கூட்டத்தில் ஒரு குரல்...

"பந்தம் புடிச்சாத்தானே ஒரு கணக்குச் சேரும்!"

கணக்கப்பிள்ளையின் முகம் செத்துப் போய் விட்டது. துரையின் முன்னால் தன்னை இப்படி அவமானப் படுத்தி விட்டார்களே... என்ற கோபம் அவருக்கு... அத்தனை பேரையும் பார்த்து ஞாபகப்படுத்தி கொண்டார்.. அவர்களின் மனைவிகளை அவருக்கு நன்றாகத் தெரியும்... அவரிடம் தானே அவர்கள் கொழுந்து நிறுக்க வருவார்கள்... நிறுக்கும் போது ஐந்து ராத்தல் ஆறு ராத்தலை விழுங்கக் கை வரிசையைக் காட்டினால் போதும்...

"வீ வில் கோ - கம், கம்" என்றபடி துரை போக அவரின் பின்னே கணக்கப்பிள்ளை - கிளார்க் - காவல்காரன் ஆகியோர் போனார்கள். அவர்கள் பின்னே லொறி டிரைவரும் போனான்.

"நாங்க இம்புட்டு தூரம் வந்து ஞாயம் கேட்டதுக்கு ஒழுங்கா பதில் சொல்லாம, பேசாம போறாங்களே இருக்கட்டும் - இருக்கட்டும்! எத்தன நாளைக்கி இவங்க இப்புடியே இருக்கப் போறாங்க? என்னைக்காவது ஒரு நாளக்கி இவங்க நல்ல பாடம் எங்களுக்கிட்டயிருந்து படிக்கத் தான் போராங்க... நாங்களும் படிச்சிக் குடுக்கத்தான் போரோம்.. வாங்க... போவோம்.."

அவர்கள் அத்தனை பேரும் லயத்திற்குப் போவதற்காக ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டும் முணுமுணுத்தும் சத்தம் போட்டும் நடந்தபோது எதிர்ப்புறத்தில் இருந்து கரத்தை ரோட்டில் ராமுவின் லயத்தில் இருக்கும் கந்தையா ஓடிவருவது தெரிந்தது...

எல்லோரின் மனதிலும் ஒரு கேள்வி தொக்கி நின்றது. ஏன் அவன் இப்படிப் பரபரப்புடன் ஓடி வருகின்றான்? கந்தையா அவர்கள் அருகே வந்து நின்றான். அவனுக்கு மூச்சு இளைத்தது. சில நிமிடங்கள் அவனால் பேச முடியவில்லை. ராமுவின் மனசு 'திக்'கென்று அடித்தது. இவன் ஓடிவந்த வேகத்தைப் பார்த்தால் பயமாக இருக்கிறதே, ஏன் வேகமாக ஓடி வந்தான்? அவன் முகம் சரியில்லை...

"ஏன் இம்புட்டு வேகமா ஓடிவந்த?..." முத்து கேட்டான்.

"அண்ணே! ராமு வூட்டு அப்பாவுக்கு மிச்சம் சொக மில்ல... ரத்தம் ரத்தமா கக்கிராறு.... அம்மா ஒங்கள தேடி னாங்க.. கையோட கூட்டிகிட்டு வரச் சொன்னாங்க..."

ராமுவுக்குக் கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை... அவனுடைய கண்கள் கலங்கிக் கொண்டு வந்தன.

முத்து ராமுவின் தோளைத் தொட்டவாறு ஆறுதல் சொன்னான்... சரி ராமு... எதுக்கும் ரோசண பண்ணாத.... வா.. போவோம்...

ராமு எல்லோரையும் அர்த்தத்துடன் பார்த்தான்... அவனுடைய பார்வைக்குப் பதில் சொல்வது போல் எல்லோரும் 'நாங்களும் வர்ரோம்...' என்றார்கள்.

எல்லோரும் நடந்தார்கள்... ராமு வேகமாக நடந்தான். பிறகு மெதுவாக ஓடினான். மற்றவர்களும் அதற்கேற் றாற்போல் நடந்தும் ஓடியும் போனார்கள்.

ராமு காம்பராவில் கால் வைத்தான். மீனாட்சி ஓ..! வென்று ஒப்பாரி வைத்துக் கொண்டிந்தாள். உள்ளே போய்ப் பார்த்தான். அப்பாவின் தலைப் பக்கம் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

## அத்தியாயம் – 17

லயம் லயமாக மூன்று மணிக்குப் பிணம் தூக்குவதாகச் சொல்லியிருந்தும், பிணத்திற்குச் செய்ய வேண்டிய சடங்கு சம்பிரதாயங்களில் ஒரு நூல் விடாமல் எல்லாவற்றையும் செய்து பிணத்தைத் தூக்கியபோது மணி நாலாகிவிட்டது. பிணத்தைத் தூக்கி வெளியே எடுப்பது பெரும் பாடாகி விட்டது. மீனாட்சியும், பக்கத்துக் காம்பராக் கிழவியும், ராமுவின் அத்தையும், பிணத்தின் மீது விழுந்து விழுந்தும் தூக்குவதை தடுத்தும் அழுதார்கள். மற்றப் பெண்கள் அவர்களோடு சேர்ந்து சத்தம் போட்டு ஒப்பாரி வைத்தார்கள். ஆண்களில் ராமுதான் விம்மிவிம்மி அழுதான். மற்றவர்கள் கண்கலங்கியும் மனமுருக்கிய கவலையிலும் இருந்தார்கள்.

முத்துவும் சந்திக்கடை முதலாளியுந்தான் ஓடியாடி வேலை செய்தார்கள். அவர்களின் முயற்சியால்தான் பிணப் பெட்டியைக் காம்பராவை விட்டு வெளியே எடுக்க முடிந்தது. அப்போது ராமுவைச் சமாளிப்பதே பெரும் பாடாகி விட்டது. ஓ..! அவனுக்கு எங்கிருந்துதான் அசுரபலம் வந்ததோ மூன்று பேர் பிடித்தும் முடியாமல் திமிறிக் கொண்டு பிணத்தைக் காம்பராவை விட்டு வெளியே போக முடியாமல் தடுக்கப் பாய்ந்தான். சந்திக்கடை முதலாளி அவனைத் தடுத்து சமாதானப்படுத்தி அப்படியே கண்டித்தார்..

"என்ன ராமு நீயே இப்படிச் செஞ்சா எப்படி மத்த காரியங்களைச் செய்ய முடியும்? தயவு செஞ்சு பேசாம இரு..."

ராமு 'ஓ'வென்று அழுதவாறு நடந்தான். மீனாட்சி வீதி வரை வந்தாள். அதற்கு மேல் அவள் பெண். அதிலும்

செத்தவரின் மனைவி. வீதி வரை தானே அவள் உறவு? ராமுவின் சித்தப்பா முறைவரும் ஒருத்தரின் மகள் நீர்க்குடம் உடைத்தாள். அவள் அதைச் செய்ததும் ஒரு வெள்ளைத் துணியைப் போர்த்தி உள்ளே இழுத்துக் கொண்டு போனார்கள் ஐந்தாறு பெண்கள்.

இறுதி ஊர்வலம் ஆரம்பமாகியது. ஊர்வலத்திற்கு முன்னால் வீரனும் சுப்பனும் தம்மை மறந்து ‘தப்’பை வெளுத்து வாங்கிக் கொண்டு போனார்கள். காத்தான் விட்டு விட்டு சங்கு ஊதிக் கொண்டிருந்தான். சங்கு ஊதாத நேரத்தில் டின்னில் இருந்த பொரியை வீசினான்.

சந்திக்கடை முதலாளியும் முத்துவும் இன்னும் ஏழெட்டுப் பேர்களும் பெட்டியைத் தூக்கிக் கொண்டு போனார்கள். ராமு அவர்கள் பின்னால் தலை குனிந்தவாறு கலங்கிய கண்ணோடு சோகமே உருவாக நடந்து போனான். அவன் பின்னால் ஏகப்பட்ட கூட்டம்... ஒரு தோட்டத் தொழிலாளியின் சாவுக்கு இப்படிக் கூட்டம் வந்தது... இதுவே முதல் தடவை. அந்தத் தோட்டத்தில் உள்ள அத்தனை பேரும் பழைய தலைவரும் அவரது கோஷ்டியைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தார்கள்.

தோட்டத்துத் துரை காலையில் தலை காட்டி விட்டுப் போனார். அவரோடு கணக்கப்பிள்ளை, கிளார்க்கர், ஸ்கூல் மாஸ்டர் ஆகியோரும் தலை காட்டினார்கள். கணக்கப் பிள்ளை வந்தபோது முத்துவைக் கூப்பிட்டு ஒதவி தேவைன்னா தொர செய்யிரேனு சொன்னாரு. தேவைன்னா சொல்லுங்க! என்று அவன் காதில் போட்டார். முத்து ராமுவிடம் கேட்டுச் சொல்வதாகச் சொன்னான். சந்திக் கடை முதலாளி வந்ததும், இதைப்பற்றிச் சொன்னபோது அவர்,

"இதெல்லாம் தந்திரம். ராமுவுக்கு ஒதவி செஞ்சு கையில போடலாம்னு பார்க்கிராங்க... நமக்கு ஒன்னும் தேவையில்ல" என்றார் கோபத்துடன்.

ராமுவின் அப்பா சாவுச் செய்தி காதில் விழுந்ததுமே 500 ரூபாவுடன் இங்கே லயத்திற்கு வந்தவர். இரவெல்லாம் இங்கேயே இருந்து ஆக வேண்டிய காரியங்களைச் செய்து இன்னும் கடைப் பக்கம் கால் வைக்காமல் இருக்கும் போது கணக்கப்பிள்ளை துரை சார்பாக உதவி தேவையா என்று காலையில்தான் கேட்கிறார். தேவையானதைத்தான் சந்திக் கடை முதலாளி செய்து விட்டாரே!

ராமு இரவெல்லாம் சோகத்தில் வராந்தாவில் இருந் தான். கையெடுத்துக் கும்பிட்டான். அதைத்தான் அவனால் செய்ய முடிந்தது. சந்திக்கடை முதலாளி தான் மற்றக் காரியங் களைக் கவனித்தார். பெண்கள் பக்கம் பார்வதியும் பக்கத்துக் காம்பராக் கிழவியும் இன்னும் சிலரும் ஓடியாடி வேலை செய்தார்கள். இரவு தங்கி இருந்தவர்களுக்கு டீ ஊற்றிக் கொடுத்தார்கள். அடுப்படி வேலையைப் பார்வதி பொறுப் பெடுத்துக் கொண்டாள். ராமுவின் அத்தை மீனாட்சியின் அருகிலேயே இருந்தாள். விடியவிடிய அந்தக் காம்பராவின் உள்ளேயும் வெளியேயும் நிறையப் பேர் இருந்தார்கள். முத்துவிடமும் சந்திக்கடை முதலாளியிடமும் கைமாற்று வாங்கிய பெட்ரோல்மெக்ஸ் லாம்பு 'வெளிச்சம்' போட்டுக் கொண்டிருந்தது.

மயானக் கரைக்குப் போகிற பாதையின் இரு பக்கமும் ஆள் உயரத்தடிகள் நட்டு அதில் கயிறுகட்டி குருத்தோலை தோரணம் தொங்க விட்டிருந்தார்கள். அது கோயில் திரு விழாக் கமிட்டியைச் சேர்ந்தவர்களின் கைவரிசையாகும். யாரும் இப்படிச் செய்வார்கள் என்று எதிர்பார்க்கவே

இல்லை. துரையும் கணக்குப்பிள்ளையும் அதைப் பார்த்து விட்டுக் ‘குசு குசு’த்துக் கொண்டார்கள். துரைக்கு மனசுக்குள் கோபம்...

நாளுக்கு நாள் ஆதரவு கூடி வருவதைக் காட்டுவது போல் இருந்தது அந்தத் தோரணம்.. ஒரு தோட்டத்தில் வேலை செய்கிற கூலிக்காரன் செத்ததற்கு இத்தனை மரியாதையா?

அரை மணித்தியாலத்தின் பின்னர் ஊர்வலம் மயானத்திற்கு வந்து சேர்ந்தது. பிணத்தைப் பெட்டியோடு குழி மேட்டில் வைத்தார்கள். செய்ய வேண்டிய கடமைகளைச் செய்தார்கள். அப்போதுதான் சங்கப் பிரதிநிதி வந்தார். அவர் வந்ததும் செய்த காரியம் வாய்க்கு அரிசி போட்டதுதான்... வாய்க்கரிசி போட்டுவிட்டுப் பிணத்தைப் புதைக்கும் வரை மயானத்தில் இருந்தார். எல்லாம் முடிந்ததும் ராமுவிடம் சொல்லிவிட்டு அவர் புறப்பட்டார். அவர் போன கொஞ்ச நேரத்தில் இருட்டத் தொடங்கியதால் மற்றவர்களும் சொல்லி விட்டுப் பீலியடிக்குக் குளிக்கக் கிளம்பினார்கள்.

பீலியடியில் குளித்து விட்டுச் சந்திக்கடை முதலாளியும் முத்துவும் லயத்திற்கு வந்தபோது மணி ஏழாகிவிட்டது. அவர்களோடு தான் ராமுவும் குளித்துவிட்டு வந்தான். ராமுவின் அத்தை எல்லோருக்கும் சாப்பாடு கொண்டு வந்திருந்தாள். பக்கத்துக் காம்பராவில் எல்லோரையும் உட்காரச் சொல்லி இலை போட்டுப் பரிமாறினாள். ஆண்கள் ஒரு பந்தியிலும் பெண்கள் ஒரு பந்தியிலும் சாப்பிட்டார்கள். முதலில் ஆண்கள் பந்திதான் நடந்தது. ராமு அதில் சாப்பிட்டு விட்டுப் பெண்கள் பந்தி நடக்கும் போது பந்தியில் இருந்த வர்களைப் பார்த்தான். பிறகு சமையல்கட்டுப் பக்கமாகப் பார்த்தான். எங்கேயும் அவன் தேடிய ஜீவன் இல்லை. அது

பற்றி யாரிடமும் கேட்கலாமென்றால் யாரிடம் கேட்பது எப்படிக் கேட்டாலும் அவர்கள் என்ன சொல்வார்களோ! வேறு யாரையும் தேடியிருந்தால் உடனே கேட்கலாம்.. ஆனால் அவன் தேடியது பார்வதியைத்தானே..

பிணத்தைத் தூக்கும் வரை சாவு வீட்டில் இருந்து போனவள் தான் திரும்ப வரவே இல்லை பார்வதி... இனி நாளை காலை வரலாம். காலையில் பால் தெளிக்க வேண்டி இருக்கிறது. ராமுவைப் போல் மீனாட்சியும் பார்வதியின் நினைவு வந்து தேடிப் பார்த்து மௌனமாக இருந்தாள். அவளால் ஏனோ முன்னரைப் போல் நினைத்த மாத்திரத்தில் அவள் மீது கோபப்பட முடியவில்லை. அவளையறியாமலே அவள் மீது ஒரு இரக்க உணர்ச்சி உருவாகியது.

அவளுக்கு இப்போதுதான் ஒரு விதவையின் உணர்வுகள் புரியத் தொடங்கியிருக்கின்றன. அதுவும் இளம் வயதில் ஓர் குழந்தை கூடப் பெறாமல் விதவையானவளின் உணர்ச்சியை....

மறுநாள் ஒரு கூட்டம் ராமுவின் காம்பராவுக்கு வந்திருந்தது. சந்திக்கடை முதலாளி, முத்து இன்னும் சிலர் அங்கேயே இரவிலிருந்து இருந்தார்கள். பார்வதி காலையில் வந்தாள். ஒரு பத்தரை மணியைப் போல் பால் தெளிக்கப் போனார்கள். பால் தெளித்து முடித்ததும் சந்திக்கடை முதலாளி, ராமுவிடம் ஒரு நூறு ரூபாவைக் கொடுத்து செலவுக்கு வைத்துக் கொள்ளச் சொன்னார். ராமு மறுத்தும் கேட்காமல் அவர் ரூபாவைக் கொடுத்துவிட்டு எல்லோ ரிடமும் சொல்லிவிட்டுக் கடைக்குப் போனார்... கடையில் இருந்தும்; வந்தும் இரண்டு நாட்களுக்கு மேலாகிவிட்டதே!

பார்வதியும் தன் காம்பராவிற்குப் போனாள். போவதற்கு முன்னர் ராமுவிடம் சொல்லிவிட்டுப் போக

முயன்று பார்த்தாள். முடியவில்லை... கடைசியில் தன் கண்களால் போறேன் என்று சாடை காட்டிவிட்டுப் போனாள். ராமுவோடு பேசவேண்டும் என்றிருந்த உணர்வு களை அடக்கி ஊமையாகப் போனாள்.. அவள்.

அப்பா செத்துப் பத்து நாட்களுக்குப் பின்னர்தான் ராமு வெளியே நடமாட ஆரம்பித்தான். முத்து வின் காம்பரா விற்குப் போய்க் கொஞ்ச நேரம் பேசிவிட்டுச் சந்திக்கடை முதலாளியைப் பார்க்கப் போனான். சந்திக்கடை முதலாளி அவனைக் கண்டதும் அன்புடன் வரவேற்றார்...

"அட ராமுவா! வந்திட்டியா? நான் ஒன்னய பார்க்க லாம்னு நெனச்சேன்.. நீயே வந்திட்டியே..."

ராமு முகத்தில் புன்னகை மலர்ந்தது. ஆனால் அதில் முன்பிருந்த களை இல்லை...

"நம்ம கால் அங்கயும் இங்கயும் ஓடுன காலு... எங்க அம்மாகூட கால்ல சக்கரம் இருக்குன்னு சொல்வாங்க... இந்த காலோட ஒரே எடத்தில் காம்பராவுக்குள்ள இருக்க முடியுமா...? வந்துட்டேன்...! அம்மாவும் வேலக்குப் போக இருக்காங்க..."

"அப்படியா.. நாளையில இருந்து சும்மா இருந்தா இங்க வந்து நில்லு... நமக்கும் ஒரு பேச்சுத் தொணையாப் போச்சி... வேலக்கு வேலயும் ஆச்சி... சம்பளமும் கெடைக்கும் சரியா?.."

ராமு யோசித்தான். வேலையும் இல்லை. காம்பரா விலேயே இருந்தால் சும்மாதான் இருக்க வேண்டும். சும்மா இருந்தால் கொட்டாவிதான் வரும். இல்லாவிட்டால் இப் போதைய நிலையில் துயர நினைவுகள் இதயத்தை உறுக்கும்... போதாக்குறைக்கு அம்மா காம்பராவிலேயே இருந்தால்

துயரம்தான்... அப்பாவை நினைத்து அடிக்கடி அழுவாள் அவள்.. அப்போதெல்லாம் அவனும் அவளோடு சேர்ந்து அழ வேண்டியதுதான்.. இத்தனை நாட்களும் இந்தச் சோக நாடகம் தான் நடந்தது...

அம்மா அவரை நினைத்துக் கொண்டு வசனம் பேசு வாள். பிறகு சத்தம் போட்டு அழுவாள். ஒரு நாள் கொடிக் கயிற்றில் இருந்து துணியை மடித்து வைக்கப் போனபோது ஒரு வேட்டியைப் பார்த்துவிட்டு,

"ராமு! இது யாரு வேட்டி தெரியுதா?.. ஒங்க அப்பா வுட்டு... இதில எத்தனை கிழிசல் பாரு... இதைத்தான் கட்டி கிட்டு இருந்தாங்க. நான் வேற வேட்டி கட்டுங்க... கட்டுங் கன்னு எம்புட்டோ சொல்லியும் கேக்கல்ல... ஆனா ஒரு நா.. கிழிஞ்ச சேல நான் கட்டுனதும் இதை ஏன் கட்டுன? கட்ட வேணாம்னு சொன்னாங்க... ஒடனே டவுணுக்குப் போயி புதூசா சேல வாங்கித் தந்தாங்க... இனி அப்புடி யாரு?.." என்று சொல்லி அழுதாள் அவள். அவனும் அழுதான்.

"சரி" யென்றான் ராமு.

"அப்ப இன்னையில இருந்தா?" சந்திக்கடை முதலா ளியின் முகத்தில் ஓர் ஒளி ததும்பியது.

ராமு மறுத்தான்.. இன்னையில இருந்து கஷ்டம். இப்ப நா.. அரிசி மாவு வாங்கத்தான் வந்தேன். நாளைக்கி வர்ரேன். இன்னைக்கி சாமான் வாங்கிட்டு வர்ரேன்னு சொல்லிட்டு வந்தேன். நாளக்கி வர்ரேன்..

சந்திக்கடையில் அரிசி மாவு வாங்கிக் கொண்டு காம்பரா விற்குப் போகும் வழியில் நூலகத்தை எட்டிப் பார்த்தான். அதைப் பார்க்கும்போது அவன் மனதில் ஓர் பெருமிதம்

ஓடியது. ஓ...! இன்று எத்தனை ஆர்வத்தோடு நம்மவர்கள் பேப்பர், புத்தகம் பார்க்கிறார்கள். நூலகத்தின் உள்ளேயும் வெளியேயும் நல்ல கூட்டம்... உள்ளே நிறையப் பேர் படித்துக் கொண்டிருந்தார்கள். வெளியே அதை விடப் பெரிய கூட்டம் படிக்கக் காத்துக் கொண்டிருந்தது...

ராமு நூலகத்தின் உள்ளே போனான். அவனைக் கண்டதும் உள்ளே இருந்தவர்கள் மரியாதை காட்டுவது போல் புன்னகைத்தார்கள். நூலகத்திற்குப் பொறுப்பாக உள்ள துரைசாமி எழுந்து நின்றான். ராமு அவனை உட்காரச் சொன்னான். பின்னர் அவனோடு பேச நினைத்தவன் அங்கே மாட்டப்பட்டிருந்த அறிவித்தல் பலகையைப் பார்த்தான். அவனுக்குச் சொல்வதுபோல் எழுதப்பட்டிருந்தது. அந்தப் பலகையில் ‘இங்கே படியுங்கள்... வெளியே பேசுங்கள்’ என்று எழுதப்பட்டிருந்தது...

வெளியே போய் இருவரும் பேசினார்கள்.

“டவுன்லயிருந்து புத்தகம் வருதா?”

“ஆமாம்.. நேத்துக்கூட வந்திச்சி..”

“எல்லாரும் சந்தா ஒவ்வொரு ரூபா குடுக்கிறாங்காளா?”

“ஆமாம்” என்றான் துரைசாமி.

“சரி.. நா வாறேன்..” ராமு தன் காம்பராவை நோக்கி நடந்தான்.

காம்பராவில் அவனுக்காக முத்து காத்துக் கொண் டிருந்தான். அவனைக் கண்டதும் அவன்,

“சந்திக்கடையில இருந்து இப்பதான் வாரியா? நானும் டவுனுக்குப் போயி இப்பதான் வந்தேன். நீ அங்க இருந்தது

எனக்கு தெரியாம போச்சி.. தெரிஞ்சிருந்தா ரெண்டு பேரும் சேர்ந்தே வந்திருக் கலாமே..." என்றான்.

"ஆமா... டவுனுக்குப் போனியே.. பிரதிநிதி என்ன சொன்னார்?.." ஆவலுடன் கேட்டான் ராமு

"அவரு என்ன சொல்வார்? முந்தி சொன்னதைத்தான் சொன்னார். இன்னும் பதில் வரலியாம்... துரை கிட்டருந்து.. இன்னொரு தபால் போடுரேன்னு சொன்னாரு... ஷூம்.. அதுக்காவது பதில் வருமா?. நான் நம்பல்ல..." என்ற முத்து அப்போது தான் ஞாபகம் வந்தவன் போல்,

"ஒனக்கு ஒரு சேதி தெரியுமா? நம்ம தோட்டத்து ஸ்கூல் மாஸ்டர் ஸ்கூல் நடத்துரதே இல்லியாம். இப்ப ஒப்பீசில வேல செய்யிராராம். நம்ம புள்ள குட்டிக எங்க படிக்கும்?.." என்றான்.

மறுநாள் சந்திக்கடைக்குப் போன ராமு ஸ்கூல் மாஸ் டரைப் பற்றிச் சொன்னான். அதற்கு அவர் யோசனை சொன்னார்..

"நீங்க எல்லாரும் மாஸ்டரைப் பத்தி அங்கயும் இங்கயும் சொல்லிகிட்டிருக்கிறதைவிட அவருக்கிட்டயே இதைப் பத்தி எல்லோரும் சேர்ந்து சொன்னா நல்லது. அவரும் ஒங்கள மாதிரி தொழில் செய்ய வந்தவருதானே! ஒங்க வர்க்கம் தானே..."

சந்திக்கடை முதலாளி சொன்ன யோசனையை ராமு ஏற்றுக் கொண்டான். ஆனால் அதற்கு ஒரு சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் அந்தச் சந்தர்ப்பம் வந்தது போல் சந்திக்கடையில் வேலையை முடித்துக் கொண்டு காம்பராவிற்குப் போனபோது வழியில் இருந்த

ஸ்கூல் மாஸ்டரின் வீட்டில் நுழைந்தான். மாஸ்டர் அவனைக் கண்டதும் திடுக்கிட்டுப் போனார்...

மாஸ்டர் மனம் லேசாக நடுங்கினாலும் வந்திருப்பது ராமு அவன் நல்லவன் என்ற எண்ணங்களை ஓடவிட்டு நிம்மதி அடைந்தார் அவர்.

"ஓ! ராமுவா?.. இந்த நேரத்தில்... சொல்லியிருந்தா நானே வந் திருப்பேன்..."

ராமு வந்த விஷயத்திற்கே வந்தான்...

"மாஸ்டர்! நான் கேக்கிறேன்னு கோவிக்காதீங்க. எல்லாரும் சொன்னதைத்தான் சொல்லப் போறேன். நீங்க ஸ்கூல்ல படிச்சி குடுக்கிறதில்லியாம். ஒப்பீசில வேல செய்யி றீங்களாம். நம்ப புள்ளைகளை ஏன் இப்படி?"

அவன் பேசி முடிப்பதற்குள் மாஸ்டர் பேசத் தொடங்கி விட்டார்...

"ராமு! நீ ஒருநாள் இங்க வருவேன்னு நான் நெனைச் சேன். வந்துட்ட.... மத்தவங்க நெனைக்கிற மாதிரி நானே ஒப்பீசில போயி வேல செய்யல்ல.... துரைதான் செய்யச் சொல்றாரு.. இதை மீறினா எனக்கு வேல இல்லேன்னு சொல்லியிருக்காரு... நான் என்ன செய்ய? புள்ளகுட்டிக் காரன்... இந்த வேல இல்லேன்னா பட்டினி கெடந்து சாக வேண்டியதுதான்... நான் செய்யிரது தப்புன்னு எனக்கு தெரியுது... ஆனா இந்தத் துரை..."

ராமுவின் நெஞ்சிற்குள் ஒரு நினைவு ஓடியது.. இந்தத் துரையை இல்லாமப் பண்ணினாத்தான் நியாயம் வரும்!

"இது சம்பந்தமா துரையோட பேசுங்க.. நான் பிள்ளை குட்டிக்காரன்.. நான் என்ன செய்ய? எது எப்படியோ அடுத்த

கிழமையில் இருந்து சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் ஸ்கூல் வைச்சி படிச்சி குடுக்கிறேன்..."

ராமு அவரின் பிரச்சனைகளை உணர்ந்தான். துரையைப் பகைத்தால் வேலை போய்விடும். அந்த தோட்டத்தைப் பொறுத்த வரையில் துரையின் பேச்சுக்கு மறுபேச்சு இல்லை. ராமு அவரிடம் துரை செய்த அநியாயங்களை எடுத்துச் சொல்லி துரைக்கெதிராக ஒருநாள் குமுறப்போகிற தொழிலாளர்களுக்கு உதவ வேண்டும் என்று கூறிவிட்டுத் தன் காம்பராவிற்குப் புறப்பட்டான்.

மறுநாள் நடந்ததைச் சந்திக்கடை முதலாளியிடம் சொன்னான். அவர் புன்னகைத்துக் கொண்டே,

"நான் நெனைச்ச மாதிரியே நடந்திருச்சி... மாஸ்டரை குறை சொல்லிப் பலன் இல்ல... எல்லாத்துக்கும் துரைதான் காரணம்.. அவனை அடக்கி வைச்சா எல்லாம் சரியாப் போகும்.. நாள் கடத்தாம அதுக்கு வேண்டியத செய்யுங்க.. என்னால முடிஞ்சதை நான் செய்வேன்.." என்றார்.

அவரை ராமு நம்பிக்கையுடன் நன்றி உணர்வுடன் பார்த்தான்..

சந்திக்கடையில் வேலை செய்து வந்த ராமு கருமாதியன்று வேலைக்கு வராமல் காரியங்களை முடித்து விட்டு மறுநாள் கடைக்கு வந்துவிட்டான். வந்ததுமே கடையில் வேலை செய்யத் தொடங்கினான்.

ஒருநாள் காலையில் இருந்தே பார்வதியைப் பார்க்க வேண்டும் என்ற நினைவு நெஞ்சில் ஓடிக்கொண்டிருந்தது ராமுவுக்கு.

வெளியே மழை பெய்தது. அந்த மழையினால் காய்ந்து போயிருக்கிற தேயிலைச் செடிகள் பசுமை பூசிக் கொள்ளும். கொழுந்துத் தேயிலை இலைகள் முளைக்கும். பேர் போட வேலை கிடைக்கும்.

கடையில் முதலாளி, ராமு ஆகியோரைத் தவிர வேறு யாரும் இல்லை. கடைக்குப் பொருள் வாங்க வந்தவர்கள் மழையினால் கடை வாசலிலேயே ஒதுங்கி நின்றார்கள்... குடை கொண்டு வரவில்லை என்ற கவலை அவர்களுக்கு...

அப்போது மழையில் நனைந்து கொண்டே ஒரு சிறுவன் ஒரு பதினைந்து வயதிருக்கும் வேகமாக ஓடிவந்து கடை வாசலில் நின்றான். அவனுக்கு மூச்சு இளைத்தது. மூச்சு இளைப்பு நின்றதும் அவன் முதலாளியைப் பார்த்தான். பிறகு ராமுவைப் பார்த்தான்..

"ஒங்கள ஒரு பொம்பள ஆள் வரச் சொல்றாங்க... வெளிய மரத்தடியில நிக்கிறாங்க.. வாங்க.."

ராமு சந்திக்கடை முதலாளியைப் பார்த்தான். அவர் போய்ப் பார்! என்பதைப் போல் முகத்தால் சாடை காட்டினார். ராமுவின் மனதில் யாராக இருக்கும் என்ற கேள்வி சுமையாக அழுத்தியது.

## அத்தியாயம் 18

மழையில் நனைந்து கொண்டு வெளியே போனான் ராமு. பாதையோரத்தில் ஒரு மரத்தின் கீழே மழைக்காக ஒதுங்கி பார்வதி நின்று கொண்டிருந்தாள். ஓ... இவள்தான் சிறுவன் சொன்ன பொம்பள ஆளா?.. அவனுக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அவன் அந்தச் சிரிப்பை அடக்கிக் கொண்டான். அவள் முகத்தில்தான் வழக்கமாக இருக்கும் அந்தப் பொலிவு இல்லையே!

ராமுவின் தலையில் விழுந்த மழைத்துளிகள் அவள் நனைவதை நினைவுபடுத்தின. அவளைக் கடைக்கு வரச் சொன்னான். இருவரும் கடைக்குள் நுழைந்தார்கள்.

சந்திக்கடை முதலாளி பேப்பர் பார்த்துக் கொண்டிருந்தார்.

பார்வதி ராமுவைப் பார்த்துப் பேசத் தொடங்கினாள். சந்திக்கடை முதலாளி பேப்பரை மடித்து வைத்துவிட்டு ராமுவின் அருகே போய் நின்றார்.

இன்னைக்கி வேலைக்கிப் போனேன். கணக்கப்புள்ள வேலக்கித் துண்டுதர மாட்டேனுட்டாரு.. ஏன்னு கேட்டதுக்கு ஒனக்கும் மலை வேலக்கும் பொருத்தமில்லியாம்; கொழுந்தெடுக்கத் தெரியாதாம். அதனால வேல நிப்பாட்டி இருக்காம்...

அவள் கண்கள் கலங்கி விட்டன.

ராமுவின் முகம் சிவந்தது. பல்லைக் கடித்துக் கொண்டு சந்திக்கடை முதலாளியைப் பார்த்தான். அவர் அவனைப் பார்த்து சொன்னார்,

"இது துரை வேல.. அவனை ஒழிச்சாத்தான் எல்லாம் சரியா வரும்!."

கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டு பார்வதி சொன்னாள்...

"இதைச் சொல்லத்தான் மழையில ஓடியாந்தேன். நா.. ஒங்களோட தோட்டத்துத் துரைக்கு எதிரா நிக்கிரதுனால எனக்குச் செஞ்ச அநியாயம்தான் இது... இனி எப்புடிச் சாப்புடுவேன்? வேல இருந்தாத்தானே சம்பளம் வரும்..."

அவளுக்கு ராமு ஆறுதல் சொன்னான்..

"அரிசி மாவு வேணும்னா நான் வாங்கித் தாறேன். அமைதியா இரு. கூடிய சிக்கிரம் ஒரு முடிவு எடுப்போம்."

பார்வதி வெளியே புறப்பட்டாள். சந்திக்கடை முதலாளி அவளைத் தடுத்து நிறுத்தி வெளியே இன்னும் மழை பெய்வதால் குடைகொடுத்து அனுப்பினார்.

பார்வதி போனதும் சந்திக்கடை முதலாளியின் முகத்தையே பார்த்தான் ராமு. ஏதோ சொல்லத் துடித்தான். ஆனால்... ஆனால்... அவன் மனதில் பார்வதியின் நினைவுகள் குவிந்தன... அவளுக்கு இனி யார் உதவி செய்வார்கள்..?

"பார்வதி வந்து அரிசி, மாவு கேட்டா கடனுக்குக் கொடுங்க... நா.. பணம் தர்ரேன்.." ராமு சந்திக்கடைக் காரரைப் பார்த்துச் சொன்னான்.

சந்திக்கடை முதலாளி சுற்றும் முற்றும் பார்த்தார்... கடையில் ராமுவைத் தவிர யாரும் இல்லை.. நல்ல நேரம்... கேட்கலாமே!

"நான் கேக்கிரேன்னு கோவிச்சுக்காதே... காத்து வாக்கில வந்த கதையத்தான் கேக்கிரேன்! பார்வதிக்கு அரிசி, மாவு குடுக்கச் சொல்லி ஒன் கணக்கில போடச் சொன்னியே... ஒனக்கும் அவளுக்கு என்ன உறவு? ஊரும் உலகமும் ஏதேதோ சொல்லுது... நான் இதை நம்பல்ல.. அவளை நீ..."

ராமு பதில் சொல்லாமல் மௌனமானான்.. அவன் நெஞ்சில் பார்வதியின் முகம் நீந்திக் கொண்டிருந்தது. ஓ..! அவளின் முகம் எத்தனை அழகான தெய்வீகக் களை கொண்ட முகம்... அவள் என்றும் புன்னகையோடு வாழ வேண்டும்... அவள் வாழத்தான் வேண்டும்...!

ராமு சந்திக்கடை முதலாளியைப் பார்த்துப் புன்னகைத் தான்.. அந்தப் புன்னகையின் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட சந்திக்கடை முதலாளி பதிலுக்குப் புன்னகைத்தார்...

ராமு சந்திக்கடைக்கு வேலைக்குப் போய் வந்தான். மீனாட்சி வேலைக்குப் போகாது காம்பராவிலேயே இருந்தாள்.

தன் புருஷன் செத்ததில் இருந்து கருமாதி வரை மனம் இடம் கொடுக்காததால் வேலைக்குப் போகாமல் இருந்தாள் அவள்.. சில நேரத்தில் மனம் இடம் கொடுத்தாலும் உடல் இடம் கொடுக்கவில்லை. கை கால் தேகமெல்லாம் ஒரே வலி.. குடைச்சல்... அத்தோடு விட்டு விட்டு வருகிற பொல்லாத காய்ச்சல்... இந்த லட்சணத்தில் மலை ஏறிக் கொழுந்து பறிக்க முடியுமா? தோட்டத்து டாக்டரிடம் மருந்தெடுத்து இருக் கிறாள் அவள்... அது போதாது என்று பக்கத்துக் காம்பராக் கிழவி சொன்ன கை மருந்து செய்து சாப்பிட்டாள். அந்தக் கிழவிதான் அவளுக்குத் துணை.

இப்போதும் அந்தக் கிழவிதான் மீனாட்சியின் காம்பராவுக்கு வரத் தயாராக இருக்கிறாள். இதன் முன்னறிவிப்புதான் அவள் கொடுக்கின்ற குரல்..

"மீனாட்சி..! மீனாட்சி..!!"

"ஏன் அம்மா?" மீனாட்சி பதில் குரல் கொடுத்தாள்.

கிழவி அதற்குள் வெற்றிலை உரலும் கையுமாகக் காம்பராவிற்குள் வந்துவிட்டாள். மீனாட்சி இருக்கும் இடத்திற்கு அருகில் ஏற்கனவே விரித்து வைக்கப்பட்டிருந்த சாக்கில் கால்களை நீட்டிவிட்டு உட்கார்ந்தாள். வெற்றிலையும் பாக்கும் புகையிலையும் போட்டு 'டக்டக்'கென்று இடிக்க ஆரம்பித்தாள். சிறிது நேரம் சென்றதும் இரண்டு விரலை உரலின் உள்ளே விட்டு அகப்பட்டதையெடுத்து வாயில் போட்டுச் சப்பிக் கொண்டே இடிக்க ஆரம்பித்தாள்.

"வெத்தில போடுறத வுடமாட்டீங்க போல இருக்கே! பல்லு இல்லாம போயும் வுடுராப் போல இல்ல."

படுக்கையில் உட்கார்ந்து கொண்டே மீனாட்சி கேட்டாள். கிழவி இடிப்பதை நிறுத்திச் சப்புவதை நிறுத்திச் சொன்னாள்..

"அட நீ ஒன்னு.. இன்னைக்கி நேத்துப் பழகின பழக்கமா?.. என் கல்யாணத்துல இருந்து பழகின பழக்கம்... கல்யாணத்துக்கு முந்தி வெத்தல போடவே இல்ல.. அந்தப் பழக்கமும் இல்ல... கல்யாணம் கட்டின புதுசில புருசனுக்கு வெத்தல மடிச்சிக் குடுத்தேன். அப்ப அவரு, நீயும் பழகுன்னு சொல்லி எனக்கு மடிச்சிக் குடுத்தாரு... வாங்கிப் போட்டேன். அப்படியே பழகிருச்சி... இப்ப அதை வுட முடியல்ல..."

மீனாட்சிக்கு நீண்ட நாட்களுக்குப் பின் புன்சிரிப்பு இதழோரத்தில் வந்தது. ஆனால் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"கெழவிகிட்ட ஒரு கதை சொல்ல ஏலாது. அதுக்கு மறுகதை சொல்லுவ பொல்லாத கெழவி..." தனக்குள் நினைத்துக்கொண்டாள் மீனாட்சி.

கிழவி வெற்றிலை இடிப்பதை நிறுத்தி, இடித்ததை வாய்க்குள் போட்டு அதக்கிக் கொண்டு சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, "ஒன்னோட கொஞ்சம் பேசணும்" என்றாள்.

மீனாட்சி இவள் என்ன பேசப் போகிறாள் என்ற ஆர்வத்தை நெஞ்சில் ஊட்டிக் கொண்டு கிழவியைப் பார்த்தாள்.

கிழவி பேச முற்பட்டாள். அதற்குள் கிழவியின் பேரன் "பாட்டி.. பாட்டி..." என்று கத்திக்கொண்டு கிழவியிடம் வந்து விட்டான். இனி எங்கே பேசுவது? கிழவி சொல்ல வந்ததைச் சொல்லாமல் பேரனைப் பார்த்து,

"நீயும் வந்துட்டியா.. வா... வா.. நீ ஒரு ஆள்தான் பாக்கி. இனி ஒன்னோட மாரடிக்க வேண்டியதுதான்.." என்று அலுத்துக்கொண்டாள்..

பேரன் கிழவியின் கழுத்தில் இரண்டு கைகளையும் போட்டுக்கொண்டு, சாய்ந்தவாறு,

"சாய்ந்தா டம்மா சாய்ந்தாடு..!
சங்கதி சொல்வேன் சாய்ந்தாடு..!"

என்று மழலை ராகமெடுத்துப் பாடினான். கிழவி கைகளைக் கழற்றி விட்டவாறு,

"சாய்ந்தாடுர நேரமா இது? போயி ஒங்க ஆயி முதுகில சாய்ந்தாடு.. போ..." என்றாள். மீனாட்சி கண்டித்தாள்..

"இது என்னா பழக்கம்? பாட்டி முதுகில சாஞ்சிகிட்டு.. வாய் பார்க்கிர..? நாங்க பெரியவங்க,.. நல்லது கெட்டது பேசுவோம்.. நீ காது குடுக்கிறதா?"

"நா.. சும்மா வந்தேன்.."

"சும்மா இங்க எதுக்கு..? பாட்டிகிட்ட பால் குடிக்கத் தானே" என்று மீனாட்சி சொன்னதுந்தான் தாமதம்.. அவன் முகம் குபீரென்று சிவந்தது. 'ஓ'வென்று அழுது கொண்டு வெளியே போனான். அம்மாவிடம் நடந்ததைச் சொல்வான்.

"சும்மா சொன்னதுக்கு அழுதுகிட்டுப் போறானே.." மீனாட்சி சொன்னாள்.

"அவன் எப்படியும் போகட்டும்... நீ விசயத்துக்கு வா.." என்று கிழவி ஒரு விநாடி சுற்றும் முற்றும் பார்த்தாள்..

இந்த ஒரு விநாடியில், கிழவி சொல்லப் போகும் விஷயத்தை நினைத்து, மீனாட்சியின் இதயம் ஆயிரம் எண்ணச் சிறகுகளை விரித்தது. இவள் என்னதான் சொல்லப் போகிறாள்?

கிழவி வெளியே போய் வெற்றிலைச் சாறைக் காறித் துப்பிவிட்டு வாயையும் கழுவிவிட்டு உள்ளே வந்து உட்கார்ந்து மீனாட்சியைப் பார்த்துப் பேசத் தொடங்கினாள்...

"ரெண்டு நாளைக்கி முந்தி குளிக்கப் போன நேரம் ராமுட அத்தைய... அதான் முத்தம்மாவக் கண்டேன்.. ரெண்டு பேரும் மிச்ச நேரம் பேசிக்கிட்டிருந்தோம். அப்ப ரொம்ப

கவலையா ராமுவப் பத்தி முத்தம்மா சொன்னா.. நீங்களும் ஒரு முடிவு சொல்றீங்க இல்லியாம். ராமுவும் அதப்பத்தி அக்கறை இல்லாம இருக்கானாம். ராமு போற போக்குச் சரியில்ல... போற போக்கில பார்வதியக் கட்டிக்கிருவான் போல இருக்குன்னு முத்தம்மா சொன்னா... ஆமா.. நான் தான் கேக்கிரேன்.. இதுக்கு ஒரு முடிவு கட்டமாட்ட என்னா?"

"நான் முடிவு கட்டி என்ன செய்ய? அவன் இல்ல முடிவு கட்டணும்.."

"அவன் என்னதான் சொல்ரான்?"

"அவன் அத்தை மகளைக் கட்டமாட்டேன்னு சொல்லிக் கிட்டிருக்கான்.."

"அப்ப முத்தம்மா சொன்னது சரிதான். பார்வதியக் கட்டிக்குவான் போல இருக்கு... இப்பகூட எங் காதில ஒரு சங்கதி விழுந்திருச்சி. பார்வதிக்கு வேல நிப்பாட்டினதுக் காக இவன் அங்கயும் இங்கயும் ஓடிக்கிட்டு இருக்கானாம். என்னமோ நா.. நல்லதைத்தான் சொல்ரேன்.. அவனைக் கண்டிச்சி வை.. இல்லே ஊர் சிரிக்கும்."

"என் மகனைக் கெடுக்கறது அவதான். தாலியறுத்தவ பொடி போட்டுட்டா போல இருக்கு..."

மீனாட்சியின் முகத்தில் கவலை ரேகை ஓடியது. மனம் யோசித்தது. பிறகு தன் இயலாமையைச் சொன்னாள் அவள்.

"நா... என்னதான் செய்ய? அவரு இருந்தாலும் பயப் படுவான். எனக்கா பயப்படப் போறான்? நானும் முந்தில இருந்து ஊரு வேல வேணாம்னு சொன்னேன்.. கேக்கல்ல... இப்ப இது எங்க போயி முடியுமோ தெரியல்ல..."

## அத்தியாயம் – 19

மீனாட்சி படுக்கையில் விழுந்தாள்; யோசித்தாள்; இன்று அவன் வரட்டும். கேட்கத்தான் வேண்டும். இப்படியே விட்டால் ஊர் சிரிக்க வந்துவிடும்.

இரவு எழு மணியைப் போல் சந்திக்கடையில் வேலையை முடித்துவிட்டு களைத்துப் போய் ராமு காம்பராவில் கால் வைத்தான். இன்று சரியான வேலை அவனுக்கு. கையில் டோர்ச் லைட் இருந்தது. அவன் பின்னால் வீரன் நாய் வாலை ஆட்டிக் கொண்டு நின்றது. ராமு குசினிக்குப் போனான். அவனைத் தொடர்ந்தது வீரன். மீனாட்சி அதனை விரட்டினாள். வீரன் வெளியே ஓடியது.

குசினிக்குப் போன ராமு தண்ணீர் குடித்துவிட்டு குசினிக் கதவைச் சாத்திவிட்டுத் தன் பாயையும் தலையணையையும் எடுத்துக்கொண்டு வராந்தாவிற்குத் திரும்பியபோது மீனாட்சி பேசினாள்.

"சாப்புடலியா?"

"கடையில சாப்புட்டேன்." ராமு நின்று கொண்டே சொன்னான்.

"கடையில சாப்புட்டியா? இங்க அத்தை கொண்டு வந்த ரொட்டி இருக்கே! ஒனக்காகத்தான் அத்தை கொண்டு வந்தா. எனக்கும் அவதான் காலையில பகல்ல ராத்திரி சாப்புட சோறு ரொட்டி பான் கொண்டு வந்து இருக்கிரா. அவ இல்லேன்னா நம்ம பொழப்பே நாறிப் போகும். அதை வீணாக்காம சாப்புடு."

ராமு மறுத்துவிட்டான்.. "நா.. சந்திக்கடையில நல்லா சாப்புட்டுத்தான் வந்தேன். இனித் தூங்க வேண்டியதுதான்.. ஆமா ஒங்களுக்கு இப்ப எப்படி இருக்கு?"

மீனாட்சி யோசித்தாள். மனதா? உடம்பா? உடம்பென்றால் இப்போது பரவாயில்லை. மனதென்றால் கிழவி சொன்னதை நினைத்துப் பார்த்தாள். ஒரு ஆத்திர உணர்வு அவள் நெஞ்சில் கருக்கட்டியது. இது உருவமெடுக்க ஒரு சில எண்ணங்கள்...

"இப்ப பரவாயில்ல... ஆனா ஊரும் ஒலகமும் ஒன்னப் பத்திக் கேவலமா பேசுது. நமக்கெதுக்கு இந்த ஊர் வம்பு? பேசாம இருக்க வேண்டியதுதானே. அவளோட.. அந்தத் தாலி அறுந்தவளோட ஒனக்கென்ன பேச்சு..? அவளுக்கு வேல நிப்பாட்டினதுக்காக நீ ஓடித் திரியிரியாமே! முந்தித்தான் ஊர் வம்புல ஒன் வேல போச்சி.. இனி என்ன போகப் போவுதுன்னு தெரியல்ல... என்னமோ நல்லதைத்தான் சொல்ரேன்... நம்ம கௌரவத்தை நாமதான் காப்பத்தணும்.. நீ அவளோட ஒறவு வைச்சிருக்கிறது நல்லதில்ல.. நம்ம அத்தையும் அதைத் தான் சொன்னாங்க..".

ஓ...! அத்தையின் வேலைதான் இது... நெருப்பு வைத் திருக்கிறாள்.. பற்றி எரிகிறது...

ராமுவுக்குக் கோபம் வந்தது. அடக்கிக் கொண்டு பாயையும் தலையணையையும் வராந்தாவில் தொப்பென்று போட்டான். அவன் கோபமாக இருக்கிறான் என்பதன் அடை யாளம் அந்தத் 'தொப்' சத்தம். நடுக்காம்பராவிற்கு வந்தான்.

"யாரும் என்னத்தையும் சொல்லட்டும். நான் செய்யிரதைச் செய்வேன். நான் ஏன் பயப்படனும்? யாருக்கும்

அநியாயம் செய்யலியே.. நல்லதையே செய்யிரேன்.. இதுக்குச் சில பேரு எதிரியா இருப்பானுக... அவனுகளுக்குத்தான் நான் செய்யிரது அநியாயமா தெரியும். ஆனா அவனுகளுக்குப் பயந்துகிட்டு என் வேலைய நிப்பாட்ட மாட்டேன்! கண்ட கண்ட ஆளுக பேச்சு கேட்டுக்கிட்டு பார்வதிய ஏச வேணாம். அவ்வளவு தான் நான் சொல்வேன்."

மீனாட்சி முணுமுணுத்தாள்..

ராமு படுக்கையில் விழுந்தான். அவன் மனதில் எண் ணங்கள் சுழியிட்டு நின்றன. அத்தை அவனுக்கும் அம்மா வுக்கும் சாப்பாடு கொண்டு வருவது காரணத்தோடுதான். அம்மாவுக்குச் சுகமில்லாத இந்த நேரத்தில் ஓடி, ஓடி உபசரித்து ஆக்கிப் போட்டு, நல்ல பேரைத் தேடி, ரொம்பக் க டப்பட்டாள் என்ற உணர்வை உண்டாக்கி, அதன் மூலம் மகளை ராமு தலையில்....

அதற்கு அவன் உடன்பட மாட்டான்.. அதனால் அவன் அம்மாவுக்குச் சுகமில்லை என்றதும் அம்மாவிற்கு மருந்து வாங்கக் காசு கொடுத்துவிட்டு வழக்கம் போல் சந்திக்கடைக்கு வேலைக்குப் போய்விட்டான்.

சந்திக்கடையில் பகல் இரவு காலை ஆக மூன்று நேரச் சாப்பாடும் கிடைக்கும். ஒருத்தரைப் பார்க்க வேண்டிய தில்லை. உப்புச் சாப்பிட வேண்டியதுமில்லை. உள்ளளவு நினைக்கத் தேவையுமில்லை... என்பதெல்லாம் அவனுடைய கணிப்பு. அப்படியிருந்தும் இன்னொருத்தர் தருகின்ற சாப்பாட்டைச் சாப்பிடுவதில் சிக்கல் வரத்தான் செய்கிறது. இரண்டு நாட்களுக்கு முன் காலையில் பார்வதி அவனுக்காக இடியாப்பம் செய்து சந்திக் கடைக்கே அனுப்பி விட்டாள்.

சந்திக்கடை முதலாளி அதற்கு ஒரு அர்த்தமே சொல்லி விட்டார்.

"இடியாப்பம் வருது... இடியப்பச் சிக்கல் வராம இருந்தா சரிதான்."

"நானா கேக்கல்ல! தானா வருது.."

சந்திக்கடை முதலாளி புன்னகையோடு சொன்னார்.

"இவ்வளவு தூரத்துக்கு வந்தாச்சி. ஊரும் ஒலகமும் ஒரு கதை கட்ட முந்தி ஒரு முடிவு கட்டிக்கிட்டா நல்லது."

அவன் அதற்கு மேல் பேசாது ஒரு புன்னகையோடு இருந்து விட்டான்.

அதற்கடுத்த நாள் முத்துவும் சந்திக்கடை முதலாளி சொன்னதையே சொன்னான்.

"நீங்க இரண்டு பேரும் பழகிறது நல்லதில்லன்னு சொல்லல்ல. ஒன்மேல எனக்கு நம்பிக்கை இருக்கு. ஆனா ஊரும் ஒலகமும் ஒரு பேச்சு பேச முந்தி நீ இதுக்கு ஒரு முடிவு கட்டிக்கிறது நல்லது."

அவன் நினைவுகளை அறுத்துக் கொண்டு யோசித்துப் பார்த்தான். அவனுக்கும் வேலை இல்லை. பார்வதிக்கும் வேலை இல்லை. அம்மாவும் வேலைக்குப் போகவில்லை. துரையை எதிர்த்துப் போராட வேண்டிய காலம். இந்த நிலையில் எப்படிப் பார்வதி விஷயத்தில் ஒரு முடிவு எடுப்பது? எடுக்கக்கூடிய நேரமா இது? போராட்டத்தின் பின்னர் பார்ப்போம். அதுவரை எது வந்தாலும் தாங்கிக் கொள்ள வேண்டியதுதான்.

பார்வதியின் முகம் மனதில் மிதந்தது. இனிய நினைவு... அந்த நினைவிலேயே கண்களை மூடினான். தூக்கம் கொஞ்சம் கொஞ்சமாக வந்தது. அதே நேரத்தில் படுக்கையில் தூங்காமல் மீனாட்சி அவனைப் பற்றி யோசித்தாள்.

ராமுவின் அத்தை சொன்னதை இப்போதுதான் அவள் பரிபூரணமாக நம்பினாள். அவ்வப்போது தன் செவிகளில் சாடை மாடையாக விழுந்த சேதிகளைக் கையும் காலும் வைத்துச் சொல்லப்பட்டதென்றாலும் அவைகளில் உண்மை இருக்கத்தான் செய்கிறது என்பதை மீனாட்சி உணர்ந்தாள்.

மீனாட்சி மனதில் உறுதி செய்து கொண்டாள். நான் உசுரோட இருக்கிற வரைக்கும் நடக்கவுடமாட்டேன்!

ராமு தூங்கிக் கொண்டிருந்தான். வாசலில் வீரன் சத்தம் போட்டுக் கொண்டிருந்தது. மீனாட்சி விழித்துக் கொண் டிருந்தாள். இந்த நேரத்தில் அவனைத் தேடித்தான் வந்திருப் பார்கள் யாரும். அவனே பார்க்கட்டுமே என்பது போலும் தூங்கிக் கொண்டிருந்தாள். ராமு நிஜமாகவே அசதியில் தூங்கிக் கொண்டிருந்தான். எந்தச் சத்தமும் அவனுக்குக் கேட்கவில்லை.

நாய் இப்போது பெருத்த சத்தத்தில் விடாமல் குலைத்தது.

ராமு கண்களைத் திறந்து, படுத்தவாறே பார்த்தான். லந்தாரத்தின் வெளிச்சம் கண்களைக் கூச வைத்தது. உற்றுப் பார்த்தான். சாமிக்கண்ணுவும் இன்னும் சிலரும் வந்திருந் தார்கள். இந்த நேரத்தில் இங்கே ஏன் வந்தார்கள்?

சடாரென்று படுக்கையை விட்டு எழும்பிய ராமு, சுவரின் ஆணியில் மாட்டியிருந்த சட்டையைப் போட்டுக்

கொண்டு வெளியே போனான். வெளியே சாமிக்கண்ணுவும் ராஜலிங்கமும் நின்றார்கள்.

சாமிக்கண்ணு கையில் லந்தாரம்; அதன் வெளிச்சம் இருட்டைப் போக்கியது. ஆனால் அவன் முகத்தில் இருட்டு. தேகமெல்லாம் லேசாக ஆடியது.

ராமு என்ன என்பது போல் சாமிக்கண்ணுவைப் பார்த்தான். சாமிக்கண்ணு பதட்டத்தில் பேசினான்.

"நம்ம பொஞ்சாதிக்கி சரியான வருத்தங்க... சாகப் பொழைக்கக் கெடக்கிரா... தோட்டத்து டொக்டரும் இல்ல... ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணும். நம்ம கெட்ட நேரத்துக்குக் கார் ஒன்னும் கெடைக்கல்ல... நீங்கதான் தோட்டத்து லொறிய கேட்டு வாங்கித் தரணும்... ஒங்களத்தான் நம்புரேன்! லொறி டிரைவருக்கிட்ட கேட்டதுக்கு தொரகிட்ட கேளுங் கண்ணு சொல்லிட்டான். நீங்கதான் எப்படியாவது..."

ராமு சற்று யோசிப்பது போல் இருந்தான்.

"இது பெரிய வேல இல்லீங்க... நம்ம தோட்டத்துத் தொரகிட்ட சொல்லி லொறிய கேளுங்க."

ராமுவின் நினைவில் சடாரென்று விழுந்தது ஒன்று. தோட்டத்தில் யாராவது சாகப் பிழைக்கக் கிடந்தால் ஆஸ்பத்திரிக்கு அவர்களைக் கொண்டு போகத் தோட்டத்துச் செலவில் லொறி கொடுக்கத்தான் வேண்டும். இது சட்டம் அல்ல; ஆனால் மனிதாபிமானம் உள்ளவன் கட்டாயம் செய்ய வேண்டியது.

"சரி.. தொரகிட்டப் போவோம் வாங்க..." என்று சொன்ன ராமு அவர்களோடு புறப்பட்டான். வீரன்

அவனோடு வரப்பார்த்தது ராமு அதைத் தடுத்து நிறுத்தி விட்டான்.

லந்தாரமும் கையுமாகச் சாமிக்கண்ணு முன்னால் போக, ராஜலிங்கம் பின்னால் போக இருவருக்கும் நடுவில் ராமு நடந்தான். எல்லோரும் துரையின் பங்களாவிற்குப் போனார்கள்.

லந்தாரம் கொண்டு வந்தது நல்லதாப் போயிற்று. வானம் கறுப்புமை பூசிக் கொண்டது போல் இருண்டு கிடந்தது. ஆங்காங்கே கறுப்புக் குடையில் விழுந்த ஒட்டை கள் போல் நட்சத்திரங்கள் மின்னின.

துரையின் பங்களாவிற்குப் போனார்கள். கேட் திறந்தே இருந்தது. ஆனால் உள்ளே போகவில்லை. போனால் அல்சேஷன் நாயின் வரவேற்பு நல்ல முறையாகக் கிடைக்கும். நாய்க்குப் பயந்து மூவரும் 'கேட்'டுக்கு வெளியே நின்றார்கள்.

சிறிது நேரத்தில் அல்சேஷன் நாய் சீறிக்கொண்டு வந்தது. பயங்கரமாகக் குலைத்தது. ஆனால் கேட்டுக்கு வெளியே வரவில்லை.

அந்த அல்சேஷன் பயங்கரமாகச் சத்தம் போட்டது. நேரம் செல்லச்செல்ல அந்தச் சத்தத்தை மீறிப் பங்களாவின் உள்ளே இருந்து பொப் மியூசிக் அவர்கள் காதில் விழுந்தது.

ராமு 'தூ'வென்று காறித் துப்பினான். மியூசிக்கை ரசிக்கக்கூடிய நிலையில் அவன் இல்லை. எப்படியாவது லொறியை வாங்கிக் கொடுத்துச் சாமிக்கண்ணுவின் சம் சாரத்தை ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டுமென்று அவன் துடித்தான்.

பத்து நிமிடமாகியும் யாரும் வெளியே வரவில்லை. ராட்சத நாய்தான் வரவேற்பிதழ் வாசித்து கொண்டே இருந்தது. அதைக் கேட்டுமா வரவில்லை.

அரை மணித்தியாலத்திற்குப் பிறகு வேலைக்காரன் வெளியே வந்து எட்டிப் பார்த்தான். பிறகு உள்ளே போனான். சில நிமிடத்தில் பங்களா வாசல் லைட் எரிய ஆரம்பித்தது. வேலைக்காரன் லைட் போட்டிருக்க வேண்டும்.

பங்களா வேலைக்காரன் திரும்பி வந்தான். அவர்களிடம் வந்த நோக்கத்தைக் கேட்டுவிட்டு நாயைச் சங்கிலியோடு பிடித்து உள்ளே கொண்டு போனான். மூவரும் 'கேட்'டைத் தாண்டி உள்ளே போனார்கள்.

பங்களா வாசல் கதவு மூடியே இருந்தது. உள்ளே இருந்து வந்த மியூசிக் சத்தம் அவர்கள் காதை முட்டியது.

ராமுவுக்குப் 'பொசு பொசு' வென்றிருந்தது. சாமிக் கண்ணு நடுங்கிக் கொண்டிருந்தான். நேரம் ஆக ஆகப் பயம் வேறு சேர்ந்து கொண்டது அவனுக்கு. மனசெல்லாம் லயத்தில் இருந்தது. எப்படி இருக்கிறாளோ அவள்?

ராமுவின் பொறுமையைச் சோதிப்பது போல் ரொம்ப நேரம் கழித்துத் துரை வந்தார். அவரின் கண் சிவந்திருந்தது. அவரோடு ஹெட்கிளார்க் கணக்கப்பிள்ளை ஆகியோர் வந்தார்கள்.

துரைக்குப் பதிலாகக் கணக்கப்பிள்ளைதான் பேசினார்.

"எல்லோரும் எதுக்கு இந்த நேரத்தில் வந்திருக்கிங்க?"

ராமு மெள்ளமாகப் பதில் சொன்னான்.

"சாமிக்கண்ணு சம்சாரம் சாகப் பொழைக்கக் கெடக்குது. ஆஸ்பத்திரிக்கு ஒடனே போவணும். தோட்டத்து லொறிய குடுத்தா நல்லது."

கணக்கப்பிள்ளை துரையைப் பார்த்தார். துரை அதி காரக் குரலில் சொன்னார்,

"லொறி குடுக்கிறதுன்னா கம்பனிக்கு எழுதிக் கேக்கணும். நான் என்ன செய்ய?"

ராமு நிதானமாகப் பேசினான் மறுபடியும்.. ஒரு உயிர் சாகப் பொழைக்கக் கெடக்குது. அதை மொதல்ல காப்பாத் துங்க. லொறிய குடுத்திங்கன்னா ஆஸ்பத்திரிக்குப் போகலாம். கம்பனிக்கு எழுதி கேக்கிற நேரமா இது..?"

துரை இப்போது ஆங்கிலத்தில் பேசினார்.

"ஐயாம் வெரி பிசி.... வில் சீ டுமாரோ..."

ராமுவுக்கு அவரின் ஆங்கிலம் புரிந்தது. நெஞ்சுக்குள் கிளம்பிய கோபத்தை அடக்கிக்கொண்டு சொன்னான்,

"விடியிர வரைக்கும் தாங்கிற மாதிரித் தெரியல்ல. ஒடனே ஆஸ்பத்திரிக்குப் போவணும். அதை மொதல்ல பாருங்க. பேசிக்கிட்டிருக்கிற நேரம் இல்ல"

ராமு சாமிக்கண்ணுவைப் பார்த்தான்.

சாமிக்கண்ணு துரையைப் பார்த்து இரண்டு கைகளால் கும்பிட்டவாறு கெஞ்சினான்.

"ஆமாங்க தொர . என் பொஞ்சாதி இழுத்துக்க பறிச் சிக்கக் கெடக்குதுங்க .. ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனா

காப்பாத்திரலாம் சாமி... ஒதவி செய்யுங்க... நீங்க நல்லா இருப்பீங்க...."

சாமிக்கண்ணுவின் கெஞ்சல் ராமுவின் மனதைப் பிழிந்தது. ஆனால் துரைக்கு...? கல்நெஞ்சுக்காரர்களை ஏழையின் சொற்கள் கரைத்தாகச் சரித்திரம் இல்லை... துரை அசையவே இல்லை... அவரின் மனசும் எண்ணமும் பார்ட்டியிலேயே இருந்தது. வாயை நனைத்த விஸ்கி மனசை நனைக்கவில்லை. அதற்குள்... மனசுக்குள் வெறுப்புக் குவிந்து இருந்தது. என்ன என்று விசாரித்து விட்டுத் திரும்பலாம் என்றால் நீதிமன்ற விசாரணையாகப் போகிறது. கூலிக்காரப் பயல்களோடு பேச்சு. அதனைத் தொரை விரும்பவில்லை. அதை மட்டுமா? பார்ட்டி நேரத்தில் இந்தச் சந்திப்பையே விரும்பவில்லை.

ஹெட்கிளார்க்கிடம் ஏதோ சொல்லிவிட்டுத் துரை உள்ளே போய் விட்டார்.

ஹெட்கிளார்க் இப்போது துரையானார்.

சாமிக்கண்ணு அழுதழுது பேசினான்.

"என் பொஞ்சாதிய எப்படியாவது காப்பாத்துங்க சாமி...! புள்ள குட்டிக்காரன் தொர..."

ஹெட்கிளார்க், "நான் சாமியும் இல்ல... தொரையும் இல்ல.. பெரிய தொரதான் இன்னைக்கி முடியாதுன்னுட்டாரே! தொர பெரிய பார்ட்டியில இருக்காரு... தொந்தரவு செய்ய வேணாம்... நாளைக்கிப் பார்ப்போம்...." என்றார்.

அவர் வாய் ஊறிக்கொண்டிருந்தது... இந்த மாதிரிப் பார்ட்டியில் தான் வாயை ஓசியில் நனைக்க முடியும்...

சாமிக்கண்ணு அழுதான்...

"அப்படிச் சொல்லாதீங்க.. தொர... நீங்க மனசு வைச்சா எம் பொஞ்சாதியக் காப்பாத்தலாம்."

உள்ளே இருந்து வேலைக்காரன் வந்தான். துரை வரச் சொன்னதாகக் ஹெட்கிளார்க்கிடம் சொன்னான்.

எந்தப் பதிலையும் எதிர்பார்க்காமல் அவர்களை ஒரு பொருட்டாகவே பார்க்காமல் கணக்கப்பிள்ளையோடு ஹெட் கிளார்க் உள்ளே போனார். கதவு மூடியது. ராமு பாய்ந்து அந்தக் கதவை உதைக்கப் போனான். மற்றவர்கள் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். சாமிக்கண்ணு அழு தான். ராஜலிங்கம் அப்போதுதான் பேசினான்.

"தொரையோட சண்டை போடற நேரமில்ல இப்ப... எப்படியாவது சாமிக்கண்ணு சம்சாரத்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணும்."

"சாக்குக் கட்டில்ல ஆளைப் படுக்க வைச்சி நாம தூக்கிட்டுப் போவோம். 'பன்சல' சந்திக்குப் போனா டவுனுக்குப் போற காரோ, லொறியோ கெடைக்கும். எப்படி யாவது கெஞ்சிக் கேட்டு ஆஸ்பத்திரிக்குப் போறதப் பார்ப்போம். வெரசா நடங்க... லயத்துக்குப் போவோம்."

ராமு பதிலே பேசாது குமுறும் உள்ளத்தை அடக்கிக் கொண்டு நடந்தான். மற்றவர்கள் ராஜலிங்கம் சொன்னது சரிதான் என்பது போல நடந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் கவலையே ஒரு சுமையாக அழுத்த சாமிக் கண்ணு உணர்வில்லாமல் வெறும் உடம்பாய் நடந்து கொண்டிருந்தான்.

"இப்படி நடந்தா சரி வராது. ஓட்டமும் நடையுமா நடங்க... லயத்துக்குப் போயி டவுனுக்குப் போவணும் இல்ல..."

ராஜலிங்கம் எல்லோரையும் அவசரப்படுத்தினான். சாமிக்கண்ணுவைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் வேகமாக நடந்தார்கள்.

லயத்துக்குப் போவதற்கு முன்னரே அழுகைக் குரல் மெல்லிசாய்க் கேட்டது. ராமுவுக்குப் புரிந்து விட்டது. நடக்கக் கூடாதது நடந்துவிட்டது.

சாமிக்கண்ணு எல்லோரையும் முந்திக்கொண்டு வேக மாக ஓடினான். அப்படி ஒரு வேகம் எங்கிருந்துதான் வந்ததோ!

லயத்துப் படிக்கட்டில் தாவித்தாவிப் போன சாமிக் கண்ணு தன் காம்பராவில் கூடியிருக்கிற கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே போனான்.

காம்பரா வராந்தாவில் அவன் மனைவி கிடத்தப்பட் டிருந்தாள். தலைமாட்டில் விளக்கு எரிந்தது. குடும்பஜோதி அணைந்துவிட்டது.

"நாகம்மா போயிட்டியா...?"

முழுத் தோட்டத்தையும் எதிரொலிப்பது போல் கதறிக் கொண்டு அவள் மீது விழுந்து அழுதான்.

## அத்தியாயம் – 20

கோயில் மைதானத்தில் ஒரு பெரிய கூட்டம் கூடியிருந்தது. கூட்டத்தின் நடுவில் ராமு, சந்திக்கடை முதலாளி, முத்து, தொழிற்சங்கப் பிரதிநிதி ஆகியோர் நடு நாயகங்களாக உட்கார்ந்திருந்தார்கள். பார்வதி பெண்கள் பகுதியில் முன் வரிசையில் உட்கார்ந்திருந்தாள்.

கோயிலின் இன்னொரு பகுதியில் இருந்த ஆலமரத்தின் கீழே லயத்துப்பிள்ளைகள், குழந்தைகள் பூங்காவொன்றை உருவாக்கியிருந்தார்கள்... கூட்டத்தில் சத்தம் போடுவார்கள் என்பதால் அவர்களை அங்கே ஒதுக்கித் தபால்காரர் கந்தசாமி பொறுப்பில் விட்டிருந்தார்கள்...

கோயில் திறந்திருந்தது. பூசாரி தீபாராதனை காட்டத் தயாராக நின்று கொண்டிருந்தார். தீபாராதனை காட்டி, கோயில் மணியை மூன்று தடவை அடித்துத்தான் கூட்டத்தை தொடங்குவார்கள். அந்தக் கூட்டத்திற்குப் பழைய தலைவரும் அவருடைய ஆதரவாளர்களும் வரவில்லை. அவர்கள் வரப்போவதும் இல்லை. தோட்டத்துத் துரை செய்வது சரியென்று நம்புகிறவார்கள் அவர்கள்.

கூட்டம் இன்னும் தொடங்காததால், முழுக் கூட்டத்தினரும் முதல்நாள், இறந்து போன சாமிக்கண்ணுவின் மனைவி நாகம்மா பற்றியும், அவள் விட்டுப் போன பிள்ளைகள் பற்றியும் பேசிக் கொண்டனர். அந்தப் பேச்சு ஆங்காங்கே எழுந்து ஒரு சத்தமாய்க் குவிந்தது. அந்தச் சத்தத்திற்கு இடையில் சந்திக்கடை முதலாளியும் முத்துவும்

பேசிக்கொண்டார்கள். ராமு மௌனமாக இருந்தான்.. அவன் விழிகள் சோர்ந்து போயிருந்தன.

இரண்டு நாட்கள் சரியான தூக்கம் இல்லை. ஒரு உயிரைக் காப்பாற்ற முடியவில்லையே என்ற ஆதங்கமும் துரைக்கு எதிராக இன்னமும் இத்தனை அநியாயங்கள் நடந்தும் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற ஆத்திரமும் ஒன்று சேர்ந்து அவனைக் ுடைந்தது. ஒரு விநாடி, கடந்த இரண்டு நாட்கள் நடந்தவற்றை எண்ணிப் பார்த்தான்.

சாமிக்கண்ணுவின் மனைவி செத்துப் போனதும் அவன் இரவு முழுவதும் தூங்காமல் அந்த லயத்திலேயே விழித் திருந்தான். விடிந்ததும் டவுணுக்குப் போகிற முதல் பஸ்ஸில் தொழிற்சங்கப் பிரதிநிதியைப் பார்க்கப் போனான்.

அவன் போனபோது டவுன் இன்னும் தூக்கத்தில் இருந்து எழுந்திருக்கவில்லை. மெல்லிய வெள்ளைத் துணி தொங்கவிட்டது போன்று பனித்துளிகள் வீதியில் தொங்கின.

திறந்திருந்த ஹோட்டலில் ஒரு டீ குடித்தான். நேரம் ஆகும் வரை டீக்கடையிலேயே ஒரு ஓரத்தில் உட்கார்ந் திருந்தான். சரியாக எழு மணிக்குத் தொழிற்சங்கக் காரி யாலயத்திற்குப் போனான். கதவு மூடியிருந்தது.

பிரதிநிதி உள்ளே இருப்பார். காரியாலயத்திலேயே தங்குபவர். கொஞ்ச நேரம் யோசித்தவன்... கதவைத் தட்டினான். ரொம்ப நேரத் திற்குப் பிறகு கதவு திறந்தது. தூக்கம் கலையாமலேயே வந்தார் பிரதிநிதி.

மன்னிச்சுக்குங்க சேர்..! ஒங்க தூக்கத்தைக் கலைச் சிட்டேன் போல இருக்கு.. என்றான் ராமு.

அப்படியெல்லாம் ஒன்னுமில்லே.. ராத்திரி லேட்டாப் படுத்தேன்.. தூங்கிட்டேன்.. நீங்க தட்டாட்டியும் நான் எந்திரிக்கத்தான் இருந்தேன்!

நடுராத்திரியில் தொழிலாளர்கள் கதவைத் தட்டினாலும் எரிச்சல் படமாட்டார்; கோபப்படமாட்டார்... ராமு இரவு நடந்ததை விபரமாகச் சொன்னான்.

அப்படியா? துரையை மட்டந்தட்ட இதுதான் சரியான சந்தர்ப்பம். கொஞ்சம் இருங்க.. குளிச்சிட்டு வர்ரேன்.

பிரதிநிதி குளிச்சிட்டு உடுத்தி வந்தபோது டைப்ரைட்டர் மேஜையில் 'டீ' ஆவி பறக்க இருந்தது. பிரதிநிதி ராமுவைப் பார்த்தார்.

"நான்தான் டீ வாங்கிட்டு வந்தேன். குடிங்க...!" என்ற ராமு கையிலிருந்த கண்ணாடிக் கிளாஸை வாயில் வைத்து உறிஞ்சினான். பிரதிநிதி டீயைக் குடித்துக் கொண்டே அடுத்துச் செய்யவேண்டியதைச் சிந்தித்தார்.

தொழிற்சங்க வட்டாரத்தில் இந்தப் பிரதிநிதி நல்ல பேர் எடுத்தவர். சில பிரதிநிதிகளைப் போல் தொழிலாளர்கள் பிரச்சனைக்காக வந்தால் சாப்பாட்டுப் பார்சல் வாங்கி வா! கை மாத்துக் காசு கொடு! பியர் போத்தல் வேண்டும்! என்று கேட்கவே மாட்டார். சொந்தக் காசில் வருவபர்களுக்கு டீ வாங்கிக் கொடுப்பார். எந்த ஊருக்குப் போனாலும் தொழிலாளர்கள் இதயத்தை மட்டுமல்ல தொழிற் சங்கக் காரியாலயம் இருக்கிற ஊர் மக்களின் நெஞ்சையும் தொட்டு விடுவார்.

டீ குடித்து முடித்த பிரதிநிதி விபரங்களைக் கேட்டுக் கொண்டே லெட்டரை 'டைப்' செய்தார்.

லெட்டரை டைப் செய்த பின்னர் ராமுவைப் பார்த்துப் பேசினார்.

"ராமு! நாளைக்கி கூட்டத்தில 'ஸ்ரைக்' செய்ய முடிவெடுங்க... மத்ததை நான் பார்க்கிரேன்... ஹெட் ஒப்பீசுக்கு டெலிபோன் போட்டுப் பேசுரேன்... பேப்பருக்கு நியூஸ் கொடுக்கிரேன்... நேரம் இருந்தா நானும் எஸ்டேட்டுக்கு வர்ரேன்.. ஆமா கூட்டம் எத்தனை மணிக்கு..?"

"நாலு மணிக்கு..!"

"அனேகமாக நான் வருவேன்னு நெனைக்கிறேன்."

"நிங்க வந்தாத்தான் நல்லது."

"சரி... வாரேன்..!"

ராமு புறப்பட்டபோது பிரதிநிதி சொன்னார்,

"துரைக்கு எதிராக எல்லாரையும் ஒன்னுதிரட்ட இது தான் சரியான சந்தர்ப்பம். அதுக்காக வேலைகளைச் செய்யணும். துரை லொறி கொடுக்காததால சாமிக்கண்ணு சம்சாரம் செத்துப் போனதை வெளி உலகத்துக்கு எடுத்துக் காட்டணும். பேப்பர் நியூஸ்ல அதை நான் செய்வேன். நீங்க தோட்டத்தில ஊர்வலம் போற பாதையில வெள்ளைக் கொடி நட்டுங்க. துரை செஞ்ச அநியாயத்தப் பெரிய எழுத்தில எழுதி வைக்கணும். அது துரைக்குச் சப்போர்ட்டா இருக்கிறவங்க மனசத் தடுமாற வைக்கும். இப்பவே எஸ்டேட்டுக்கு புறப்பட்டுப் போய் வேலயப் பாருங்க.."

வெள்ளைத் துணி, கார்ட் போட், பெயின்ட் வாங்கிக் கொண்டு ராமு தோட்டத்திற்குப் போனபோது மணி பன்னிரண்டாகி விட்டது.

பிணத்தை நாலுமணிக்கு எடுப்பதாக முடிவு செய்திருந் தார்கள். சரியாக மூன்று மணிக்கெல்லாம் பிணம் போகிற பாதையெல்லாம் வெள்ளைக் கொடிகள் பறக்க விட்டிருந் தார்கள். ஆங்காங்கே துரையின் அநியாயத்தைத் தெரிவிக்கும் வாசகங்கள் தொங்க விடப்பட்டிருந்தன.

துரையினால் எதையும் செய்ய முடியவில்லை. அந்தத் தோட்டமே காணாத கூட்டம் சாமிக்கண்ணுவின் மனைவி யின் இறுதி ஊர்வலத்தில் கூடியிருந்தது.

மயானத்தில் தகனக் கிரியைக்குப் பின்னர் பொதுக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் சந்திக்கடை முதலாளி- தொழிற்சங்க பிரதிநிதி - ராமு ஆகியோர் பேசினார்கள். பிரதிநிதி அங்கிருந்தோர் உள்ளத்தைத் தொடுமாப் போலப் பேசினார்.

“இந்த நாட்டில் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை மிக மோசமானது; போராட்டமானது! தொழி லாளர்கள் வயிற்றுக்காகவும் போராட வேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் வாழ்வதற்காகவும் போராட வேண்டி யிருக்கிறது. இங்கே இறந்து போன ஒரு தொழிலாளி, அதாவது சாமிக்கண்ணு சம்சாரம் வாழ்வதற்காகப் போரா டித் தோற்று மரணமடைந்து விட்டார். தோட்டத்துத் துரை, தோட்டத்து லொறியைக் கொடுத்திருந்தால் ஒரு வேளை இந்தத் தொழிலாளி பிழைத்திருக்கலாம்.”

“சமீபத்திய மருத்துவப் புள்ளி விவரப்படி தோட்டத்தில் சரியான மருத்துவ வசதி செய்தால் தொழிலாளர்களின் சராசரி ஆயுள் அதிகரிக்கும்; அவர்களின் ஆரோக் கியத்தினால் உற்பத்தியும் அதிகரிக்கும் எனத் தெரிய வருகிறது.

லயத்தில் பிறக்கும் குழந்தைகளின் அகால மரணங்கள் குறையும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.”

“தொழிலாளர்களின் அடிப்படை மருத்துவ வசதிகளைத் தோட்டத்து நிர்வாகம் செய்ய வேண்டும் என்பது பொதுவான விதி. ஆனால் அதனை அமுல்படுத்துவது தோட்டத்து நிர்வாகம்தான். இங்கே நிர்வாகம் லொறி கொடுக்க மறுத்ததால் ஒரு உயிர் போய்விட்டது. நிர்வாகம் சர்வாதிகாரமாக நடந்து கொண்டுள்ளது.”

தொழிலாளர்கள் மத்தியில் ஒற்றுமை வந்தால் இது நடந்திருக்காது. தொழிலாளர்களின் பிளவில் நிர்வாகம் வெற்றி காண நினைக்கிறது. உங்களுக்குள் தனிப்பட்ட முறையில் கருத்து முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் அவைகளைப் பொதுப் போராட்டத்தில் முன் வைக்கக் கூடாது. போராட்டம் வெற்றி பெற்றால் எல்லாத் தொழிலாளிகளுக்குந்தான் பலன் கிடைக்கும். இதனை நீங்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டும். எனவே எல்லோரும் ஒன்று சேருங்கள்...!”

மயானக் கூட்டம் முடிந்து எல்லோரும் கலைந்து போனார்கள். ராமு, முத்து, பிரதிநிதி, சந்திக்கடை முதலாளி ஆகியோர் பீலிக்குப் போய்க் குளித்துவிட்டுச் சாமிக் கண்ணுவின் லயத்திற்குப் போனார்கள். ஏற்கனவே பார்வதி குளித்துவிட்டு ஒரு பெரிய சமையலைச் செய்து எடுத்து வைத்திருந்தாள். ராமுதான் அதனை ஏற்பாடு செய்திருந்தான். சாப்பாடு முடிந்ததும் ராமுவும் முத்துவும் லயம் லயமாக அடுத்தநாள் கூட்டத்திற்கு எல்லோரையும் அழைக்கப் போனார்கள்.

அந்தக் கூட்டத்தின் தற்காலிகத் தலைவராகத் தபால் காரர் கந்தசாமியைத் தெரிவு செய்திருந்தார்கள். அவர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு ராமுவிடம் கேட்டார், "தம்பி! கூட்டத்தத் துவங்கலாமா?"

தலை அசைத்தான் ராமு.

"எல்லாரும் வந்துட்டாங்களா?" என்று ( கட்ட தபால் காரர் கந்தசாமி எவரும் அற்கு எதிராகவோ - ஆதரவாகவோ குரல் கொடுக்காததால் கோயில் வாசலில் நிற்கிற பூசாரியைப் பார்த்தார். புரிந்து கொண்ட பூசாரி இன்னொருத்தனைப் பார்த்தார். அவன் ஓடிப்போய்க் கோயில் மணியை மூன்று தடவை அடித்தான். பிறகு பூசாரி தீபாராதனை காட்டினார்.

கூட்டம் தொடங்கியது. ராமுதான் முதலில் பேசினான்...

"இன்னைக்கி அவசரமா ஏன் கூடியிருக்கோம்னு உங்களுக்குத் தெரியும்னு நெனைக்கிறேன். இந்தத் தோட் டத்தில நாளுக்கு நாள் அநியாயம் கூடிப்போச்சி. தோட்டத்துத் துரை லொறி கொடுக்காததுனால சாமிக்கண்ணு சம்சாரத்த ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக முடியல்ல! கடைசியில நாகம்மா செத்துப் போச்சி... இன்னைக்கி நாலுபுள்ள அனாதையா இருக்கு.. துரை லொறி கொடுத்திருந்தா நாகம்மா பிழைச்சிருக்கலாம். ஆனா துரை நம்மள பழிவாங்கிட்டாரு.. ஏற்கனவே பல பிரச்சனைகள் இங்க இருக்கு... பல பேர வேலையில இருந்து காரணம் இல்லாம நிறுத்திட்டாரு.. ஸ்கூல்ல மாஸ்டர் நம்ம பிள்ளைகளுக்குப் படிச்சிக் கொடுக் கிறதில்ல. எப்பப் பார்த்தாலும் மாஸ்டர் ஒப்பீசிலதான் இருக்காராம். மாஸ்டரைக் குறை சொல்லிப் பிரயோசனம் இல்ல.. துரைதான் மாஸ்டரை வேல செய்யச் சொன்னாராம்.

பல லயத்துக்குப் 'பைப்ல' தண்ணியே போறதில்ல.. பைப் ரிப்பேர் ஆகி மாசக் கணக்காச்சி... இப்படிப் பல பிரச்சனை. இன்னும் என்னென்ன நடக்க போவுதோ?.. இதுக்கு நாங்க ஒரு முடிவு எடுக்கணும்.. அதுக்காகத்தான் வரச்சொன்னேன்.. எல்லாரும் கலந்து பேசி ஒரு முடிவு எடுங்க."

"என்ன முடிவு...?"

ஒரு குரல் ஒலித்தது. பலர் பிரதி நிதியைப் பார்த்தார்கள்.

பிரதிநிதி புன்னகையோடு சொன்னார்...

"நான் எந்தக் கருத்தும் சொல்லமாட்டேன். நீங்க என்ன செய்யணுங்கிறதை நீங்களே முடிவு செய்யுங்க.."

சந்திக்கடை முதலாளி அப்போது சொன்னார்,

"பிரதிநிதி ஏதும் சொல்லப்போயி அவருதான் தூண்டு ராருன்னு வந்திரும்.. அதனால நீங்களே முடிவு எடுங்க.."

கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. ராமு அந்தச் சலசலப்பை அடக்கியவாறு சொன்னான்,

"எல்லாரும் 'ஸ்ரைக்' செய்யிரதுதான் சரியான முடிவு" அந்த முடிவை எதிர்த்து எவரும் பதில் சொல்லவே இல்லை. எல்லாரும் சேர்ந்து ஸ்ரைக் செஞ்சா நல்ல முடிவு கிடைக்கும். ராமுதான் சொன்னான்.

பிரதிநிதி புன்னகைத்தவாறு, "இப்ப என் முடிவச் சொல்லலாம் இல்லையா..? இப்ப ராமு சொன்னதுதான் சரியான முடிவு. எல்லாரும் ஸ்ரைக் செய்யிரதுதான் துரையை என்னான்னு கேக்கச் சரியான வழி..." என்றார்.

ராமு உடனே கேட்டான், "இந்த முடிவை ஏத்துக் காதவங்க இருந்தாச் சொல்லுங்க..."

மௌனம்.... மௌனம்....

ஏகமனதாக எல்லோரும் 'ஸ்ரைக்' செய்வதாக முடி வெடுத்தார்கள்.

கூட்டம் முடிந்து ராமு, முத்து, சந்திக்கடை முதலாளி, பிரதிநிதி ஆகியோர் பார்வதியின் லயத்திற்குப் போனார்கள். அவர்களுக்கு அங்கேதான் இரவுச் சாப்பாடு.. ராமுதான் அதனை ஏற்பாடு செய்திருந்தான். அன்றிரவு முத்துவைத் தவிர மற்ற எல்லோரும் பார்வதியின் காம்பராவிலேயே தங்கினார்கள்.

விடிந்ததும் பிரதிநிதியைப் பஸ்சேற்றிவிட்டு லயத்திற்குத் திரும்பினான். வராந்தவிலேயே காத்திருந்தாள் மீனாட்சி. அவள் முகத்திலேயே ஒரு போராட்டம் தெரிந்தது.

"ராத்திரி எங்க சாப்புட்ட?" முதல் கேள்வியே ராமுவை பிரச்சனைக்கு இழுத்தது.

"பார்வதி காம்பராவுல.."

"எங்க தங்கின..?"

"பார்வதி காம்பராவுல.."

"பார்வதி.. பார்வதி.. அவ யாரு நமக்கு..? அவ தொடர்பு நமக்கு வேணாம்னு சொன்னாலும் நீ கேக்கமாட்டேங்கிற.. அவ வீட்டுல சாப்புடறே.. அவ வீட்டுல தங்கி இருக்க..."

ராமுவுக்குச் சிறிது கோபம் வந்தது. ஆனாலும் அடக்கிக் கொண்டான்.

"நான் மட்டும் சாப்புடல்ல - தங்கல்ல... பிரதிநிதி முதலாளியோடதான் சாப்புட்டேன் - தங்கினேன்..."

"அவங்க தங்கிராங்க - சாப்புடுராங்க.. நீ ஏன் தங்கினே?"

ராமுவால் அதற்குப் பதில் கொடுக்க முடியவில்லை.

"ஒனக்கு எத்தனையோ தரம் சொன்னேன்...நீ கேக்கல்ல.. அவ தொடர்பால நம்ம குடும்ப மானம் சந்தி சிரிக்கிது. இன்னையில இருந்து அவ தொடர்ப வுட்டுடு... இல்லே நா.. இந்த வீட்டுல இருக்க மாட்டேன்.. ஒனக்கு அவ முக்கியமா நா.. முக்கியமான்னு முடிவு பண்ணிக்க..."

ராமு அமைதியாகச் சொன்னான்,

"எனக்கு ரெண்டு பேரும் தான் முக்கியம்..."

மீனாட்சிக்குக் கோபம் வந்தது..

"அவ எப்புடி முக்கியம்..?"

"அவளும் ஒங்க மாதிரித்தான்..."

"அவ... அந்த... அவ... என் மாதிரியா?.. சரி இனி அவளோடயே இரு! நா.. வர்ரேன்... பெத்த தாயையும் அவளையும் ஒன்னா சொல்றியே! இனி நா.. இந்த வீட்டுல இருக்கமாட்டேன்..."

மீனாட்சி 'விறுவிறு'வென்று காம்பராவுக்கு உள்ளே போனாள்... சில நிமிடங்களின் பின்னர் திரும்பி வந்தாள்.

## அத்தியாயம் – 21

ராமு ஒன்றும் செய்ய முடியாமல் தவித்தான். துரையை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் அம்மா வேறு அவன் மீது ஒரு போராட்டத்தைத் தொடுத்து விட்டாள். அம்மா எது சொன்னாலும் அவன் கேட்கத் தயார். ஆனால்.. அதில் பார்வதியைப் பற்றி எதுவும் இருக்கக் கூடாது. அவளோடு உறவு வைக்காதே! என்பதை அவனால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

மீனாட்சி தன் சேலையையும் ரவுக்கையையும் ஒரு பொட்டலமாகக் கட்டிக்கொண்டு புறப்பட்டாள். அவன் அதைத் தடுக்கவே இல்லை. பக்கத்துக் காம்பராக் கிழவிதான் ஒடிவந்து தடுத்தாள்.

"என்னா மீனாட்சி! இதுக்குப் போயி கோவிச்சிக் கிட்டுப் போறியே! அது சரியில்ல.."

"இது சரியில்லதான்.. ஆனா அவன் பார்வதி காம்ப ராவுக்குப் போறதும், அவளோட பேசுறதும் ஞாயமா? அவ யாரு... நாம யாரு..? அவளோட இவன் என்ன பேசுரது..? அதக் கேட்டதுக்கத்தான் என் மேல நாய் மாதிரிப் பாயிரான்.. நா.. அவனுக்குத் தாயா இருந்து என்னா பிரயோசனம்...?"

கிழவி ராமுவைப் பார்த்தாள். அவன் தலை குனிந்தவாறு நின்று கொண்டிருந்தான். அவன் எதுவும் பேசவில்லை. நடக்கிறது நடக்கட்டும் என்றது அவன் மனம். மீனாட்சி வராந்தாவுக்குள் வந்தாள்.

அப்போது வீரன் நாய் வாலை ஆட்டிக் கொண்டு மீனாட்சியின் முன்னே அவளைப் போக விடாமல் தடுப்பது போல் நின்றது. மீனாட்சி கீழே குனிந்து வீரனின் முகத்தில் லேசாகத் தட்டி,

"ஒனக்கிருக்கிற அறிவு மனுசனுக்கு இல்ல.." என்று சொல்லி விட்டு வெளியே நடந்தாள்.

மீனாட்சி போகிறாள் என்பது ராமுவுக்குத் தெரியும். அத்தையின் லயத்திற்குத்தான் போவாள்.

பக்கத்துக் காம்பராக் கிழவி தனக்குள் முணுமுணுத்தாள்.

"ராமுப் பய சுத்த மோசம். பெத்த தாய வெரட்டிட்டு கல்லு மாதிரி நிக்கிரானே! என்னா தைரியம்..? எல்லாம் அவ குடுத்த தைரியம் தான்.. இல்லாட்டி இப்புடி இருப்பானா? தாலியறுத்தவ ஆளை நல்லா மயக்கிட்டா..."

ராமு தன் மனதில் தாங்க முடியாத சோகம் அழுத்த நாற்காலியில் உட்கார்ந்தான். அது 'கிறீச்'சென்று சத்தம் போட்டது. அவனுடைய பாரத்தைத் தாங்க முடியவில்லை போலும்.

கிழவியின் பேரன் வந்தான். ராமுவின் அருகே போய் அவனையே உற்றுப் பார்த்தான்.

"நா.. ஒன்னடோட பேசமாட்டேன் போ.." கிழவியின் பேரன் சொன்னான்.

"ஏன்?" ராமு கேட்டான்.

"அம்மாவ வெரட்டிட்ட.. ஒன்னோட பேசமாட்டேன்.."

ராமுவுக்கு என்னவோ போலிருந்தது. ஆனால் அவனால் கோபப்பட முடியவில்லை.

வேறு யாரும் இப்படிக் கேட்டிருந்தால் சீறிப் பாய்ந் திருப்பான். இவனோ சின்னப் பையன்.

"அம்மாவ நா.. வெரட்டல்ல.. அவங்கதான் கோவிச்சி கிட்டுப் போராங்க.. அதுக்கு நான் என்ன செய்ய..?"

"அம்மாவக் கூட்டிக்கிட்டு வா..!"

ராமு பேச்சை வளர்க்க விரும்பாமல், "சரி"யென்றான். பேச்சை நீட்டினால் வேதனைதான் வரும். கிழவியின் பேரன் ஓடிப் போனான்.

ராமு நாற்காலியில் இருந்தவாறு சுவரை உற்றுப் பார்த் தான். அந்தச் சுவரில் ஒரு சோப் கம்பெனி எப்போதோ லயம் லயமாகக் கொடுத்துவிட்டுப் போன பொன்மொழி அச்சிட்ட சிறிய போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது. அதை ஒட்டியது அவன்தான்.. அது அவன் மனதை உறுத்தியது...

'தாயிற் சிறந்த கோயிலுமில்லை' என்ற பொன் மொழியே அது. அதனையே பார்த்தான். அது அவனைப் பார்த்துச் சிரிப்பதுபோன்று தோன்றியது.

தாயிற் சிறந்த கோயிலுமில்லை... அது நல்ல பொன் மொழி. ஆனால் அதை அவன் மதிக்கவில்லையே.

'தாயை விடப் பார்வதி உனக்குப் பெரிதாகி விட்டாள். அவளோடு சண்டை பிடிக்கிறாயே நீ மனிதனா?' அவனுடைய நெஞ்சில் அப்படி ஒரு குரல் கேட்டது. சில நிமிடங்கள் அவன் தடுமாறினான். ஆனால் மறுநிமிடம் அவன் தன்னைத் தேற்றிக் கொண்டு, 'அம்மாவ நான் விரட்டல்ல.. பார்வதிய

கேவலமாகப் பேசியதால்தான் பிடிக்கவில்லை' என்று தனக் குத்தானே சமாதானம் செய்து கொண்டான்.

ராமுவின் நெஞ்சில் பார்வதியின் லட்சுமிகரமான முகம் ததும்பியது.

நாற்காலியை விட்டு எழும்பிய ராமு மனதில் அழுத்திக் கொண்டிருக்கும் கவலையை மறக்க யாரிடமாவது பேசிக் கொண்டிருக்கலாம் என்று நினைத்தான். யாரிடம் பேசலாம்? அவனுக்கு உடனே பார்வதியின் நினைவு வந்தது. அவள் தான் உள்ளத்தைப் புரிந்து கொண்டு பேசக் கூடியவள்.

ராமு வெளியே கிளம்பினான். வெளிச்சம் அவனைக் கைவிட்டது போல் விலகிக் கொண்டிருந்தது. இருட்டுப் படரத் தொடங்கியது. டோர்ச் லைட்டைக் கையில் வைத்துக் கொண்டான்.

மீனாட்சியைக் கூட்டிக் கொண்டு வரப் போகிறான் என்று பக்கத்து காம்பராக் கிழவி நினைத்தாள். அவன் மீது அவளுக்கு நம்பிக்கை வந்தது.

பார்வதியின் லயத்தில்..... ராமு அங்கே போனபோது வெவ்வேறு கம்பராவைச் சேர்ந்தவர்கள் லயத்தின் வெளியே நின்று கொண்டிருந்தார்கள். அவனைப் பார்த்ததும் அவர்கள் மனதில் கிளம்பிய கேள்வி... 'இந்த நேரத்தில் இவன் ஏன் இந்தப் பக்கம்..? பார்வதியைப் பார்க்க வந்திருப்பான்...' என்பதுதான். ஆனால் எவரும் கேட்கவில்லை. வெறும் உதட்டுப் புன்னகையோடு இருந்து விட்டார்கள்.

இருட்டில் காம்பராக்களில் இருந்துவரும் வெளிச் சத்தில் அந்தப் புன்னகையை அடையாளம் கண்ட பதில்

புன்னகையோடு பார்வதியின் காம்பராவுக்குள் நுழைந்தான். அவன் துணிந்து விட்டான். எத்தனை நாளைக்குத்தான் ஊருக்கும் உலகத்திற்கும் பயந்து வேஷம் போட முடியும்? எல்லோருக்கும் தெரியவே பார்வதியிடம் போகிறான்.

ராமுவைத் திடீரென்று கண்டதும் பார்வதிக்கு லேசான அதிர்ச்சிதான். அப்போது அவன் வருவான் என்று அவள் நினைக்கவே இல்லை.

அவன் முகத்தில் இருந்து அதிர்ச்சி மறைந்து புன்னகை பூத்தது.

"வாங்க... ஹூம்.. ஒக்காருங்க.."

பார்வதி நடுக்காம்பராவில் விரித்த பாயில் உட்கார்ந்தாள்.

அவளுக்கு என்னவென்றே புரியவில்லை. ஏதோ ஒரு உணர்வு அவளைத் தடுமாற வைத்தது.

"ஒன்னோட கொஞ்சம் பேசணும்.."

"பேசுங்க" என்பது போல் பார்த்தாள் பார்வதி. அதே நேரத்தில் மனதுக்குள் கேள்வி சுழன்றது. என்ன பேசப் போகின்றான்..?

"நீ நின்னுகிட்டே இருக்கிறியே!"

"பரவாயில்லே சொல்லுங்க..."

ராமு பேசத் தொடங்கினான். அம்மா தன்னோடு சண்டைபிடித்துக் கோவித்துக் கொண்டு போனதை....

பார்வதியின் சந்தோஷம் நீரில் பூத்த குமிழியாய் உடைந்தது.

"என்னால ஒங்களுக்குப் பிரச்சனை. அம்மாவ ஏன் போக விட்டீங்க..? சரியில்ல..!"

"நான் போகச் சொல்லல்ல... போயிட்டாங்க.."

"எங்க போனாங்க.." பார்வதி கேட்டாள்.

"வேற எங்க... அத்தைவூட்டு லயத்துக்குத்தான் போயிருப் பாங்க..."

"நீங்க ஒடனே போயிக் கூப்புடுங்க... ஆயிரந்தான் இருந் தாலும் அம்மாவோட சமாதானமாத்தான் போவணும்."

நான் ஒன்னுமே பேசல்ல... ஒன்னோட பேசக்கூடாதாம்; ஒன்னப் பார்க்கக்கூடாதாம்... ஒன்னோட பேசினா இனி என்னோட பேசாதேன்னு போயிட்டாங்க.... கவலையோடு சொன்னான் ராமு. சில நிமிடத்தின் பின்னர் அவளைப் பார்த்துக் கொண்டே உதிர்த்தான் அந்த வார்த்தைகளை.

ஒன்னப் பார்க்கக்கூடாது; ஒன்னோட பேசக்கூடா துன்னு சொன்னதை எம் மனசு ஏத்துக்கல்ல... அது என்னால முடியாது!

பார்வதியின் நெஞ்சில் புதிய ராகத்தை எதிரொலித்தன அந்த வார்த்தைகள். தன்மீது இவ்வளவு நம்பிக்கை வைத்திருக் கிறானா இவன்..? அவளால் அந்தப் பொழுதில் அவனை ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை.

சில நிமிடங்கள் மௌனம் நிலவியது... மௌனத்தைக் கலைத்துப் பேசினாள் பார்வதி.

ஒங்க அம்மாவப் பத்தி ஒங்களுக்குத் தெரியும்... அவங்க கோவிச்சாலும் நீங்க கோவிக்க வேணாம்... இப்ப அவங் களுக்கு யாரு இருக்கா...?

ராமு சற்று யோசித்தான். அவள் சொல்வது சரிதான். ஆனால் அம்மாவை எப்படிக் கூப்பிடுவது...? அம்மா கேட்கிற உறுதியைக் கொடுக்க முடியுமா..?

மெல்லப் பேச்சைத் திசை திருப்பினான் ராமு.

"என்னால ஒனக்கு நிறையப் பிரச்சனை...?"

பார்வதி உடனே மறுத்தாள். "நான்தான் பிரச்சனை... என்னோட பேசுரதுனாலதான் ஒங்களுக்குப் பிரச்சனை."

ராமு மெல்லமாய்ச் சொன்னான்.... "இதுக்கெல்லாம் ஒரு முடிவு கட்டுரேன்.. அது வரைக்கும் நீ பொறுக்கணும்."

"என்ன முடிவு?" என்று கேட்க நினைத்த பார்வதி ஏனோ மௌனமாகவே இருந்தாள். ஆனால் உள்ளத்தில் இனம் புரியாத மகிழ்ச்சியின் ரேகைகள் ஓடின... அவன் என்ன அர்த்தத்தில் சொன்னான் என்பது தெரியாவிட்டாலும் ஏதோ ஒரு அர்த்தம். அது தனக்கு ஒரு அந்தஸ்து அர்த்தம் - என்பது மட்டும் புரிந்தது அவளுக்கு.

ராமு பார்வதியிடம் சொல்லிவிட்டுப் புறப்பட்டபோது "ரொட்டி கொண்டாரேன்.. சாப்புட்டுப் போங்க" என்றாள் பார்வதி.

அவன் "சரி" யென்றான்.

குசினிக்குப் போய் வந்த பார்வதியின் கையில் ஒரு ஈயத்தட்டு... ஒரே ஒரு ரொட்டி இருந்தது. தட்டை அவன் முன்னே வைத்தாள்.

"சாப்புடுங்க.."

"ஒனக்கு.."

"எனக்கு இருக்கு... நீங்க சாப்புடுங்க.."

அவன் சாப்பிட்டு முடித்தான்...

பார்வதி அப்போது சொன்னாள்... "ஒரு காம்பராவுல ஒரு சந்திரன்தான் இருக்கும். அதைத்தான் உங்களுக்குத் தந்திட்டேனே...!"

அவனுக்குப் புரியவில்லை. பார்வதி புரிய வைத்தாள்.

சந்திரன்னு சொன்னது ரொட்டிய... இந்தக் காம்பராவுல ஒரு சந்திரன்தான் இருக்கும். அதைத்தான் ஒங்களுக்குத் தந்திட்டேனே..!

"அப்படீன்னா ஒனக்கு.."

"பகல்ல ஆக்கின சோறு இருக்கு... சாப்புடுவேன்..."

"அது போதுமா?"

"நீங்க வரமுந்தி எனக்கு நெறையப் பசி இருந்திச்சி... ஒங்களக் கண்டோன்ன பசியேயில்ல. அந்தச் சோறு போதும்."

ராமு அவளை நன்றியுணர்வுடன் பார்த்தான். தனக் காகச் சுட்ட ஒரே ஒரு ரொட்டியைத் தந்துவிட்டாளே..! இவள்தான் எனக்குப் பொருத்தமானவள்...!

ராமு காம்பராவைவிட்டுப் புறப்பட்டபோது வெளியே நன்றாக இருட்டியிருந்தது. லயத்து வாசலில் நின்றிருந்த கூட்டம் குறைந்திருந்தது... ஒன்றிரண்டு தலைகள் மட்டுமே தெரிந்தன. டோர்ச்லைட் இருந்ததால் இருட்டில் வேகமாக நடந்து போனான்.

ராமு தன் காம்பராவில் கால் வைத்தபோது வராந்தாவில் அத்தையும் பக்கத்துக் காம்பராக் கிழவியும் அருகருகே

உட்கார்ந்திருந்தார்கள். பக்கத்துக் காம்பராக் கிழவி அவனைக் கண்டதும் மெல்ல நழுவிப் போய்விட்டாள். அவன் ஒன்றும் பேசவில்லை. என்ன சொல்வது....? அத்தையிடம் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிருப்பாள். வழக்கமான சிண்டு முடியிற வேலைதான் கிழவிக்கு... அவன் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

கிழவி தனக்குள் ராமுவைத் திட்டினாள்.. சே...! இவனும் மனுசனா....? அம்மாவக் கூப்புடப் போறான்னு நெனைச்சேன்.. இவன் எங்கயோ போயிட்டு வாரான்... எங்க போயிருப்பான்? ம்..... அங்கதான் போயிருப்பான்.

ராமு குப்பிலாம்பைப் பற்ற வைத்தான். மங்கலான வெளிச்சம் காம்பராவில் பரவியது.

ராமு மௌனமாகவே இருந்தான்.. அத்தையும் மௌனமாக இருந்தாள். இருவர் மனதிலும் யார் முதலில் பேசுவது... எதைப் பேசுவது? என்ற போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அந்தப் போராட்டத்தில் முதலில் முடிவெடுத்தது அத்தைதான்...

"என்னா தம்பி? நீங்க அம்மாவோட கோவிச்சிகிட்டீங்களாமே.. அம்மா நம்ம லயத்திலதான் இருக்காங்க.. நீங்க..."

அதற்குள் குறுக்கிட்ட ராமு சொன்னான்...

"நா ஒன்னும் சொல்லல்ல.. அவங்கதான் சண்டை புடிச்சி கோவிச்சிக்கிட்டு வந்தாங்க..."

"சரி.. அவங்க ரெண்டு மூணு நாளைக்கி அங்கயே இருக்கட்டும். நானும் ராணியும் பார்த்துக்குரோம்... நீங்க மட்டும் இங்க இருங்க... சாப்பாடு கொண்ணாந்து தர்ரேன்.."

அவன் 'வேண்டாம்' என்று சொல்ல வாயெடுத்தான். பிறகு என்ன நினைத்தானோ மௌனமானான்.

அவனிடம் அத்தை சோற்றுப் பார்சலைக் கொடுத்தாள். அவன் வாங்கிக் கொண்டான்.

அத்தை தன் லயத்திற்குப் புறப்பட்டாள். கையில் டோர்ச் லைட் இருந்ததால் வெளிச்சமே துணையாக இருப்பது போன்ற தைரியம்... தனியே கிளம்பினாள்... தனியே இருட்டில் போகிற அத்தைக்குத் துணையாகப் போவோமா... வேண் டாமா... என்று யோசித்தபோது கிழவி வாயைத் திறந்தாள்.

"அத்தை தனியாப் போறாங்க.. இந்தக் காலத்தில தனியா போறது சரியில்ல.. காலம் கெட்டுக் கெடக்கு... துணைக்குப் போயிட்டு வாங்க தம்பி.."

ராமு வேறு வழியில்லாமல் டோர்ச் லைட்டை எடுத்துக் கொண்டு அத்தையின் பின்னே நடந்தான்.

"நா.... போயிருவேன் தம்பி" என்று மறுத்தலித்தாள் அத்தை. ராமு,

"பரவாயில்ல... தனியே நீங்க போறது சரியில்ல.. நான் வர்ரேன் என்றான்."

அத்தையின் நெஞ்சில் நம்பிக்கைத் துளி சேர்ந்தது... ராமுவோ எப்போது திரும்புவோம் என்ற மனநிலையில் நடந்து கொண்டிருந்தான்.

## அத்தியாயம் – 22

நடுக்காம்பராவில் ஒரு மூலையில் ஒரு பெட்டி மீது வைக்கப்பட்டிருந்த சிமிலி லாம்பு 'மினுக்மினுக்' போட்டு எரிந்து கொண்டிருந்தது. ராமுவும் முத்துவும் அடுத்தடுத்து பாய் விரித்துப் படுத்திருந்தார்கள். இன்னும் அவர்கள் தூங்கவே இல்லை. படுக்கையில் சாய்ந்தவாறு ராமு பேசிக் கொண்டிருந்தான். முத்து அவன் சொல்வதற்கு ..ம்ம்.. போட்டுக் கொண்டிருந்தான்.

மீனாட்சி போனதிலிருந்து ராமுவின் காம்பராவில் படுக்கையை முத்து வைத்துக்கொண்டான். அவனாக இங்கே வரவில்லை. ராமுதான் தனியே இருக்கிறேன். துணைக்கு வாடா என்று அழைத்தான். உண்மையில் பேச்சுத் துணைக்காக அவனை அழைக்கவில்லை. தோட்டத்துத் துரைக்கு எதிராக நடத்துகின்ற போராட்டத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி யோசித்துப் பல முடிவுகள் எடுக்க அவன் உதவுவான் என்றுதான் அழைத்தான். இங்கே நிம்மதியாகப் பேசலாம்.

படுக்கையில் இருந்த ராமு கேட்டான்...,

"ஸ்ரைக் போட்டு இன்னையோட சரியா அஞ்சு நாளாச்சி... ஆள்க உசாரா இருக்காங்களா? என்னா சொல்ராங்க..?"

"ஆள்க உசாராத்தான் இருக்காங்க.. ரெண்டுல ஒண்ணு பார்க்கிறதுன்னு கங்கணம் கட்டிட்டாங்க.. ஆனா நம்ம பழைய தலைவரும் அவரோட ஆள்களும் விடிஞ்சோன்ன

வேலைக்கிப் போகப் போறாங்களாம். என் காதில விழுந்திச்சி.. அது ஒனக்குத் தெரியுமா..? என்ன செய்ய? பழைய தலைவர் வேலயே அதுதானே. ஒரு போராட்டத்தில சப்போர்ட் பன்னுற மாதிரிப் பன்னுறது. அப்புறம் தொரைக்கி சப்போர்ட்டா மெல்ல நடுவில நழுவுறது. இப்படித்தான் இப்பவும் நடக்கப் போவுது.. ஹூம்.. அவன் போவட்டும். அதப் பத்தி எனக்குக் கவலை இல்லை. மத்த ஆளுக வேலைக்கிப் போயிடுவாங்களோன்னு தான் கவலையா இருக்கு."

"மத்தவங்களா.. அவங்க போகமாட்டாங்க.. தொரய வெட்டித் திங்கிற மாதிரி இருக்காங்க..."

ராமுவுக்குத் தைரியம் இருந்தது. மற்றவர்கள் உறுதியாக இருந்தால் தானே இவனும் தைரியமாக இருக்கலாம்.

"இந்த மொறை தொரைய அசைக்கலேன்னா இனி ஜென்மத்துக்கும் அசைக்க முடியாது..."

ராமு சொல்லி முடிக்கவில்லை. லயத்துக் கூரையில் 'டமால்' என்ற சத்தத்துடன் ஏதோ ஒன்று விழுந்தது. ராமு படுக்கையில் உட்கார்ந்தான். முத்து எழுந்து விட்டான்.

"என்ன சத்தம்?"

"தேங்கா, மாங்கா தகரத்தில் விழுந்திருக்கும். வேற என்ன விழப் போவுது?"

"தேங்கா - மாங்கா விழுந்தமாதிரி எனக்குத் தெரியல்ல" என்றவாறு முத்து படுக்கையில் உட்கார்ந்தான். மீண்டும் சத்தம். அது தொடர்ந்தது.

ராமுவும் முத்துவும் எழுந்து வெளியே போனார்கள். லயத்து நாய்கள் ஒன்று சேர்ந்து குலைத்துக்கொண்டிருந்தன.

குப்பி லாம்போடு மற்றக் காம்பராக்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள்.

"யாரோ லயத்துக்குக் கல்லடிக்கிறானுக.."

"யாரு?"

"வேற யாரு?.. தொரவூட்டு ஆளுகதான்..."

அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

ராமு காம்பராவுக்குள்ளே போய் டோர்ச் லைட்டை எடுத்துக் கொண்டு திரும்பினான். மற்றவர்களை அங்கேயே சத்தம் போடாமல் இருக்கச் சொன்னான். முத்துவை மட்டும் கூட்டிக் கொண்டு காம்பரா வழியாகக் குசினிப் பக்கம் போனான். குசினியில் இருந்து இருட்டில் பார்த்தான். தூரத்தில் ஒரு பீடி நெருப்புத் தெரிந்தது. முத்துவிடம் அதைக் காட்டினான்.

"எவனோ ஒருத்தன் பீடி குடிச்சிக்கிட்டு மேட்டுல இருக்கிறான். சத்தம் இல்லாம போனா ஆளைப் புடிச்சிரலாம் அவன்தான் கல்லடிக்கிறான் போல..."

இருவரும் கையில் டோர்ச் லைட் இருந்தும் அடிக்காமல் குறுக்குப்பாதை வழியாகப் போனார்கள். குறுக்குப் பாதை மேட்டைச் சுற்றிப் போகிறது. மெது மெதுவாகச் சத்தமே வராமல் இருட்டில் போய் மேட்டருகே வந்துவிட்டார்கள்.

ஒரு ஆள் பீடி குடிப்பது தெரிந்தது. ராமு மட்டும் மேட்டை நோக்கிப் போனான். பின்பக்கமாகப் போய் அவனை ஒரே பாய்ச்லில் பிடித்தான் ராமு. அதற்குள் முத்து அங்கே வந்து டோர்ச் லைட்டை அடித்துப் பார்த்தான்.

அவன் அந்தத் தோட்டத்து ஆள் இல்லை. எங்கும் கண்டதாக ஞாபகம் இல்லை.

"நீ யாரு? பொய் சொல்லாத...?" ராமு அதட்டிக் கேட்டான். அவன் மௌனமாக இருந்தான்.

"நீதானே லயத்துக்குக் கல்லடிச்சே? கையிலிருந்து பீடியை வீசி விட்டு தலையசைத்தான் அவன்.

"யாரு கல்லடிக்கச் சொன்னா?"

மௌனித்தான் அவன்...

'பளார்' என்று ஒரு அறை கன்னத்தில் போட்டான் ராமு.

'அய்யோ! அடிக்காதீங்க... நான் உண்மையைச் சொல்ரேன்... தொரதான் கல்லடிக்கச் சொன்னாரு.."

ராமு அதைக் கேட்டதும் உணர்ச்சி வசப்பட்டான்.

"ஒகோ! நம்ம தொரதான் கல்லடிக்கச் சொன்னாரோ" என்றவாறு கல்லடித்தவன் மீதிருந்த தன்பிடியைத் தளர்த்தினான். அதை உணர்ந்த அந்த ஆள், அசுர வேகத்தில் ராமுவிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு இருட்டில் ஓடினான். சிறிது தூரம் அவனைத் துரத்திக் கொண்டு ராமுவும் முத்துவும் ஓடியும் பிடிக்க முடியவில்லை.

ராமு ஆத்திரப்பட்டான்..

"சே..! முட்டாளாயிட்டேன்.. அவன் தொரதான் கல்லடிக்கச் சொன்னாருன்னு சொன்னதும் நான் என்ன மறந்துட்டேன்... இவனை வைச்சித் தொரய ஒரு ஆட்டு ஆட்டலாம்னு நெனைச்சேன். அதுக்குள்ள இப்புடி ஆயிருச்சே..!"

இருவரும் லயத்திற்கு சோகமாய்த் திரும்பினார்கள். முத்து லயத்தில் நின்றவர்களிடம் நடந்ததைச் சொன்னான். அவர்கள் ராமுவுக்கு ஆறுதல் சொன்னார்கள். ஆனால் ராமுவின் மனம் ஆறுதலடையவில்லை.

படுக்கையில் விழுந்த ராமு முத்துவிடம் சொன்னான், "நாளைக்கி எல்லா லயத்துக்கும் போயி ஆள்கள உசார் ஆக்கனும்."

முத்து குறுக்குக் கேள்வி கேட்டான். "எல்லா லயத்துக் கும்னா அத்தை இருக்கிற லயத்துக்கும் போகணும் தானே..?"

ராமு உடனே சொன்னான்.. "சொந்தப் பிரச்சனைய இதில பார்க்க முடியாது. அத்தை காம்பராவுக்கும் போவனும்.." என்ற ராமு முத்துவிடம் கேட்டான்,

"நீ என்னய மாட்டி வைக்கப் பார்க்கிற..?"

"நான் ஒன்னய மாட்டப் பார்க்கிரேனா?.. அத்தைதான் ஒன்னய மாட்டப் பார்க்கிராங்க.. நீ மாட்டேங்கிரே...ஆமா நீ ஏன் மாட்டேங்கிற..?"

ராமு துணிந்து பதில் கொடுத்தான்.. "அத்தை மகள் எனக்கு என்னைக்கும் அத்தை மகதான்.... ஆனா எனக்கு பொஞ்சாதியா வர்ர தகுதி அத்தை மகளுக்கு இல்ல.."

"அப்ப யாருக்கு இருக்கு...?" முத்து அவன் வாயில் இருந்து உண்மையை வரவழைக்கப் பார்த்தான்.

"நேரம் வர்ர நேரம் சொல்ரேன். அத ஒனக்குத்தான் மொதல்ல சொல்வேன்."

"நீ சொல்லவே வேண்டியதில்லை.. எனக்குத் தெரியும்" என்று சொல்ல நினைத்த முத்து ஏனோ மௌனமாகப்

போனான்.. அதற்குப் பிறகு அவர்கள் பேச்சைத் தொடர வில்லை.. தூங்கினார்கள்.

விடிந்தது... வெளிச்சம் வரும்போது ஒரு பரபரப்பைக் கொண்டு வந்திருந்தது. பழைய தலைவரும் அவருடைய ஆதரவாளர்களும் வேலைக்குப் போனார்கள். எல்லா லயத்திலும் அதைப் பற்றியே பேசிக் கொண்டார்கள். அதனால் ஒரு பரபரப்பு. வதந்திகள் வேறு தலையெடுத்தன. ராமு ஒரு ஒன்பது மணியைப் போல் லயம் லயமாகக் கிளம்பினான். அவனோடு முத்துவும் கிளம்பினான்.

லயத்தில் உள்ளவர்களிடம் ஸ்ரைக் வெற்றி காணும் வரைத் தொடர வேண்டும். துரையின் தந்திரங்களுக்குப் பணிந்து விடக்கூடாது. பழைய தலைவர் துரையின் தூண்டு தலால் வேலைக்குப் போகிறார். அவர் போவதால் நீங்களும் வேலைக்குப் போய்விட நினைக்கக்கூடாது. வெற்றி உங்கள் கையில்தான். என்று எடுத்துச் சொன்னான் ராமு.

அத்தையின் காம்பராவிற்கு வந்ததும் தயங்கினான் ராமு. அதற்குக் காரணம் அங்கே அம்மா இருந்ததால் ஏற்கனவே இருவருக்கும் தகராறு. அந்த நேரத்தில் மேலும் வீண் தகராறு வரக்கூடாதென்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான். அவனுடைய நல்லநேரம் மீனாட்சி வெளியே போயிருந்தாள்.

ராமு அத்தையோடு பேசினான். "பழைய தலைவர் வேலைக்குப் போறாராம். அதைப் பார்த்துட்டு தைரியத்தை இழக்காதிங்க..."

"தம்பி நல்லதைத்தான் சொல்வீங்க.. அதனால நீங்க சொன்னதை நாங்க கேப்போம்.. எல்லாத்துக்கும் ஒங்கள நம்பித்தான் இருக்கோம்.." அடுத்த காம்பராவிற்குப் புறப் பட்டான் ராமு.

"தம்பி டீ குடிச்சிட்டுப் போங்க..."

"எல்லா லயத்துக்கும் போவனும்.. வர்ரேன்.."

"அஞ்சு நிமிசம் இருங்க தம்பி டீ போடுரேன்..." ராமு மறுக்காமல் நின்றான்.

அத்தை உள்ளே போய் டீ ஊற்றினாள்.. ராணி டீக் கிளாசைக் கொண்டு வந்து ராமுவிடம் கொடுத்தாள். முத்து ஒரு புன்னகையோடு டீயைக் குடித்தான்.

அத்தைக்கு ராமுவின் மீது ஒரு நம்பிக்கை பிறந்தது. அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். ராமுவை மாற்றி நம் பக்கம் இழுக்கலாம். என்று அவள் நம்பினாள்.

எல்லா லயத்திற்கும் போய்விட்டு ராமு லயத்திற்குப் போனபோது இருட்டிவிட்டது. வராந்தாவில் மீனாட்சி உட்கார்ந்திருந்தாள். அவனால் அதை நம்பமுடியவில்லை. ஆனால் நம்ப வேண்டியிருந்தது.. நிஜமான காட்சிதானே அது.

அவன் மனதில் பல கேள்விகள் கிளம்பின. அம்மா எப்படித் திரும்பி வந்தாள்? கோபம் குறைந்து விட்டதா? இனி இங்கேயே இருப்பாளா..? அதற்கெல்லாம் பதில் காணத் துடித்தான் அவன். பதில் மீனாட்சியின் நெஞ்சில் இருந்தது. அதை வெளியே கொண்டு வரலாம். அம்மாவோடு பேச வேண்டும்.. பேசுவானா? அவன் மௌனமாக இருந்தான்.

மீனாட்சி ராமு பேசுவான் என்று எதிர்பார்த்தாள். அவன் வாய் திறக்கவில்லை... கடைசியில் அவள்தான் பேசினாள்.

"நான் ஏன் இங்க வந்தேன்னா ஒன் தாய்ங்கிறதுனால தான். அதோட நீ நல்லா இருக்கனும்.. ஒன் அத்தையும் சத்தம் போட்டாங்க.."

ராமு எதுவுமே பேசவில்லை...

"நமக்கு ஊர் வம்பு வேணாம்.. நல்லதுக்குத்தான் சொல்ரேன்.. குமாரையாவின் மகனைப் பாரு..! தொரய பகைச்சிக்காம சொல்ரதைக் கேட்டுக்கிட்டு இருக்கிரான்.. அவன் மாதிரி நீ இருந்தா என்னா?"

– என்று சொன்ன மீனாட்சி சிறிது இடைவெளி விட்டுத் தொடர்ந்தாள்.

"இன்னைக்கி திடீர்னு தொர என்னயக் கூப்பிட்டு விட்டாரு. போயிப் பார்த்தேன்.. அப்ப அவரு நல்லதைத்தான் சொன்னாரு.. ஒனக்கு ஸ்டோர்ல வேல போட்டுத் தர்ரேன்னு சொன்னாரு.. ஸ்ரைக்க வுடட்டாம்..."

குமாரையாவின் மகன் ஒரு துரோகி கருங்காலி என்று மனதிற்குள் எண்ணிக்கொண்ட ராமுவுக்குக் கோபம் வந்தது அடக்கிக் கொண்டான்.

"ஓகோ! தொர எனக்கு ஸ்டோர்ல வேல தர்ரேன்னு சொன்னாரா?.. முந்தி இப்படித்தான் சொக்கனைக் கைக்குள்ள போட்டாரு... அந்த மாதிரி என்னையும் கைக்குள்ள போட லாம்னு நெனைக்கிறாரோ.. அது எனக்கிட்ட நடக்காது. என்ன நம்பியிருக்கிற ஆளுகளக் கைவுடமாட்டேன். வர்ரது வரட்டும்.. நல்ல முடிவு வர்ர வரைக்கும் ஸ்ரைக் நடக்கும்..."

ராமு இப்படிப் பேசுவான் என்று மீனாட்சி எதிர் பார்க்கவே இல்லை. துரை ஸ்டோரில் வேலை தருகிறேன் என்று சொல்லியும் அவன் அசையவில்லை. ஸ்ரைக்கைத் தொடர்வேன் என்று சொல்லிவிட்டானே. இதனால் என்ன என்ன நடக்குமோ. துரையும் சும்மா இருக்க மாட்டார். பதிலுக்கு.... மீனாட்சி பயந்து போனாள்.

"என்னமோ ஒன் நன்மைக்குத்தான் சொன்னேன்... அதுக்கு மேல ஒன் இ டம்..."

முணுமுணுத்தாள் மீனாட்சி.

ராமு அசையாமல் மௌனமாக இருந்தான். பிறகு இங்கேயே இருந்தால் ஏதாவது பிரச்சனை வரும் என்று சந்திக்கடைக்குப் போனான்.. அவன் பின்னால் வீரனும் நடந்தது. அதை விரட்டவில்லை.

சந்திக்கடை மூடியிருந்தது. முதலாளி டவுனுக்குப் போயிருக்கலாம். லயத்திற்குத் திரும்பினான் ராமு.

அம்மா உள்ளே படுத்திருந்தாள். அவளைப் பார்த்ததும் மனதுக்குள் ஒரு நிம்மதி... குசினிக்குப் போய்ச் சொம்பு நிறைய தண்ணீர் மொண்டு குடித்துவிட்டு வராந்தாவில் படுக்கை யைப் போட்டுப்படுத்தான். சாப்பிடவில்லை.

வெளியே நாய்களின் 'கோரஸ்' சத்தம்.. வழக்கமானது தான் என்று அவன் நினைத்தபோது அவனை எவரோ கூப்பிடுவது போல் இருந்தது..

"ராமு.. ராமு.." கண்களைத் திறந்தான்... லந்தரா வெளிச்சம் ஆடியது.. படுக்கையை விட்டு எழுந்தான் ராமு.. வெளியே முத்துவும் வேறு சிலரும் நின்றார்கள்...

"ராமு.. நம்ம லைப்ரரிய..."

முத்துவால் அதற்குமேல் பேச முடியவில்லை.. ஓடி வந்ததில் அவனுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது.

"யாரோ லைப்ரரிய நெருப்பு வைச்சிட்டாங்களாம்." ஒரு வெறியே வந்தது அவனுக்கு..

"லைப்பரரிக்கு நெருப்பா?.. யார் வைத்திருப்பார்கள்.. இது துரையின் வேலைதான்..."

அந்தக் கூட்டத்தோடு ராமு புறப்பட்டான். அவர்களோடு வீரனும் நடந்தது. அவர்கள் அத்தனை பேரும் கோபம் கொண்டிருந்தார்கள்..

அவர்கள் போனபோது லைப்ரரி எரிந்து முடிந்திருந்தது.. ஒரு லைப்ரரி எரிந்ததற்கான அடையாளமே தெரியவில்லை.. சாம்பல்தான் கருகி இருந்தன.

ராமு பல்லைக் கடித்துக் கொண்டே கத்தினான்...

"இது தொர வேலதான்.. தொரைக்கி லைப்ரரி இருக்கிறது புடிக்காது. நாம படிக்கிறது இவனுக்கு ஆபத்து தானே..?"

முத்துகூடக் கோபப்பட்டான்..

"நம்ம மேல கோபம்னா லைப்ரரி என்ன செய்யும்..? நெருப்பு வைச்சிட்டாங்களே!"

"ஆயிரம்தான் இருக்கட்டும்... தொர இந்த மாதிரிச் செய்யலாமா?.." ஒரு கிழவன் கோபப்பட்டான். அதற்குள் ஒருத்தன்,

"அவனுக்கெல்லாம் இந்த மாதிரி அநியாயம் செய்ய மனசு வராம இருக்கனும்னு அவன் பங்களாவுக்கு நெருப்பு வைக்கனும்.. அப்பதான் புத்தி வரும்.." என்றான்.

சிறிது நேரம் அங்கே நின்றவர்கள் பிறகு மெது மெதுவாகப் பேசிக் கொண்டு புறப்பட்டார்கள்.

## அத்தியாயம் – 23

விடிந்ததும் சந்திக்கடைக்குப் போனான் ராமு. சந்திக் கடை முதலாளியோடு அவன் லைப்ரரி எரிந்து போனதைப் பற்றியும் புதிய லைப்ரரி அதே இடத்தில் உடனே கட்டுவது பற்றியும் துரையின் அடக்குமுறைகள் அதிகரித்து வரு வதையும், பழைய தலைவர்களும் அவருடைய ஆதரவாளர் களும் ஸ்ரைக்கில் சேராமல் வேலைக்குப் போனதின் பின்னே உள்ள நிலைமைகளையும் பேசினான்.

சந்திக்கடை முதலாளி தைரியப்படுத்தினார்.

"ராமு இனிமேத்தான் தைரியமா இருக்கணும்.. இப்ப நடக்கிறதைப் பார்த்து அசந்துராதே! தொரை செய்யிர இந்த வேலையெல்லாம் நம்மள ஒன்னு சேரவைக்கும்.. இப்ப உடனே நீ செய்ய வேண்டிய வேலை... லைப்ரரியக் கட்டணும்.."

ராமு அன்றே ஒரு கூட்டத்தைத் திரட்டி எரிந்து போன லைப்ரரி இடத்தைத் துப்புரவு செய்தான்.. ஓலைகளால் ஒரு சிறிய மண்டபம் புதிதாகக் கட்டத் தேவையானதைத் தயார் செய்து கொண்டான். அன்று அவன் சந்திக்கடையிலேயே படுத்தான். இரவெல்லாம் சந்திக்கடை முதலாளியோடு பேசினான்.

விடிந்தது.... ராமு இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தான். முதலாளி படுக்கையை விட்டு எழும்பி அடுப்புப் பற்ற வைத்தார்.

அப்போ கதவை எவரோ தட்டும் சத்தம் கேட்டது. கதவை முதலாளி திறந்தார். வெளியே நின்றது முத்து. அவன்

முகத்தில் களையே இல்லை. எதுவோ நடந்திருக்குன்னு... எண்ணிக் கொண்டார் முதலாளி.

"என்ன முத்து.. காலையிலேயே.."

முத்து மௌனமாகவே இருந்தான்.

சந்திக்கடை முதலாளி உள்ளே போய் ராமுவை எழுப்பிக் கொண்டு வந்தார். முத்துவைப் பார்த்ததும் எதுவுமே புரியாமல் தவித்தான் ராமு.

முத்து மெள்ளச் சொன்னான். "தோட்டம் பூரா நம்ம ராமுவப் பத்தியும் பார்வதியப் பத்தியும் அசிங்கமா எழுதி யிருக்கு.. ஸ்டோர் செவரு.. லயத்துச் செவரு.. ஸ்கூல் செவரு.. புள்ள காம்பராச் செவரு இப்படி எல்லா செவருலயும் அசிங்கமா எழுதியிருக்கு.

நேற்று இரவு லைப்ரியை எரித்தார்கள், இன்று சுவர் களில் எழுதியிருக்கிறார்கள்.

ராமுவின் மனசில் கோபம் கொப்பளித்தது. தன் பல் லைக் கடித்துக் கொண்டான்.

"லைப்ரரிய எரிச்சானுக.. இப்ப என் வாழ்க்கையை எரிக்கப் பார்க்கிரானுக.. அவனுகளை..."

சந்திக்கடை முதலாளி உணர்ச்சி வசப்படாமல் பேசினார்.

"போராட்டத்தைத் திசை திருப்ப வேற திட்டம் இல்லாம கடேசியில ராமுவூட்டுச் சொந்த வாழ்க்கைக்கு வந்திருக்கானுக.. ராமுவப் பத்தி இப்படியெல்லாம் எழுதி வைச்சு தொழிலாளிகளைத் தன் பக்கம் இழுக்க திட்டம் போடுரான் தொரை..."

"இதுக்கெல்லாம் நான் பயப்படமாட்டேன்.. வர்ரது வரட்டும் என்னப் பத்தி எதை எழுதினாலும் எனக்குக் கவலையில்லை.. மொதல்ல எரிஞ்சி போன லைப்ரரியக் கட்டி முடிக்கணும். அதுக்குப் பொறகு வேற ஒரு முக்கியமான வேல இருக்கு அதைச் செஞ்சிட்டா எவனும் என்னமும் செய்யமுடியாது..!"

"என்ன முக்கியமான வேலை?" என்று முத்து கேட்க வாயெடுத்தான். பிறகு ஏனோ பேசாமல் இருந்து விட்டான். சந்திக்கடை முதலாளிக்கு மட்டும் அது என்ன என்பது புரிந்தது... ஆனால் அவரும் அதுபற்றிக் கேட்கவில்லை.. ராமு! லைப்ரரி கட்டுற வேலைய இன்னைக்கே - இப்பவே தொடங்கு..! அதைத் திரும்பக் கட்டினாத்தான்.. உன் மேல நம்ம ஆளுகளுக்கு நம்பிக்கை வரும்.."

சந்திக்கடை முதலாளி ராமுவைத் தூண்டினார்...

"அப்ப இன்னைக்கே நான் டவுனுக்குப் போவணும்.." என்று ராமு சொன்னான்.

"மொதல்ல மூஞ்சு கழுவிட்டு வா.. டீ.. குடிச்சிட்டுப் போவலாம்.. முத்து நீயும் வா..."

டீ குடித்து விட்டு ராமுவும் முத்துவும் சந்திக்கடை முதலாளியிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டார்கள்.. இரு வரும் கடையைவிட்டு வெளியே இறங்கியபோது படுத்தே கிடந்த.. வீரன் ராமுவின் பின்னே போய் வாலை ஆட்டிக் கொண்டே நின்றது. ராமுவுக்கு அப்போதுதான் வீரனின் நினைவு வந்தது.

"அட.. வீரா? நீ இங்கதான் ராத்திரியெல்லாம் இருந் தியா? மறந் திட்டேன்.. சரி... வா.. போவோம்..."

இருவரும் நடந்தார்கள். அவர்கள் பின்னால் வீரன் நடந்தது. அவர்கள் தோட்டத்துக் 'கேட்'டருகே வந்தார்கள். கேட்டோடு ஒரு பெரிய சுவர் கட்டப்பட்டிருந்தது. சுவரில் கரிக்கட்டையில் பெரிய எழுத்தில் பார்வதியையும் ராமுவையும் இணைத்துக் கேவலமாய்......

"விதவைக்கு வாழ்வு அளிக்கும் வீரன் யார் ராமுதான்..."

"பார்வதியின் கள்ளப் புருஷன் யார்?"

"பார்வதி கர்ப்பமாம் - புருஷன் யார்?"

என்று கற்பனையாய் அள்ளிப் பூசியிருந்தார்கள் வசவுகளை...

ராமு பல்லைக் கடித்துக் கொண்டான்.

"இங்க மட்டுமில்ல... எல்லா இடத்திலையும் எழுதி இருக்கானுக..."

"என்னத்த எழுதினாலும் எனக்கென்னா?.. எல்லாத் துக்கும் ஒரு முடிவு கட்டுரேன்.."

போகிற வழியெல்லாம் சுவர்களில் - தண்ணீர் டாங்குகளில் அவனையும் பார்வதியையும் இணைத்துக் கேவலமாக அசிங்கமாகக் கரிக்கட்டையில் எழுதித் தள்ளியிருக்கிறதைப் பார்த்து அவ்வவ்போது குமுறிய நெஞ்சை அடக்கிப் புன்னகையை மலரவிட்டுக் கொண்டே போனான்.. இன்னும் சில நாட்களில் தான் செய்யப்போகும் காரியத்தால் சுவரில் எழுதியவைகள் வலுவிழந்து போகும். அப்படித்தான் ராமு நினைத்துக் கொண்டான்.

ஒரு கைவண்டியைத் தள்ளிக் கொண்டு கோயில் மைதானத்திற்குள் நுழைந்தான் முத்து. அந்த வண்டியில் சுத்தியல், கத்தி, கத்திரி, மண்வெட்டி, அலவாங்கு போன்ற

ஆயுதங்கள் இருந்தன. ஏற்கனவே கோயில் மைதானத்தில் ராமு, பார்வதி தபால்காரர் இன்னும் சிலரும் இருந்தார்கள். சந்திக்கடை முதலாளி முத்துவிற்கு பின்னால் வந்தார்.

மறுபடியும் அந்த லைப்ரரியைக் கட்டியெழுப்பும் வேலை ஆரம்பமாகியது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலை செய்தார்கள். இந்த லைப்ரரியைத் திரும்பக் கட்டுவதற்கான முழுச் செலவையும் சந்திக்கடை முதலாளியே கொடுத்தார். அவருடைய பணமும் மற்றவர்களின் உழைப்பும் எரிந்து போன லைப்ரரியைத் திரும்பக் கொண்டு வரப்போகின்றன.

வேலை விறுவிறுவென்று நடந்தது. சந்திக்கடையில் இருந்து வேலை செய்பவர்களுக்கு டீ - சாப்பாடு தயார் செய்து கொடுக்கப்பட்டது. சமையல் வேலையைப் பார்வதி தான் பொறுப்பெடுத்திருந்தாள்.

அன்று மாலை லைப்ரரிக்கான சிறிய மண்டபம் கட்டி முடிக்கப்பட்டது. சந்திக்கடையில் இருந்து பழைய அலு மாரியும் மேஜைகளும் கொண்டு வந்து போட்டார்கள். புத்தகங்களைச் சேர்த்து விட்டால் லைப்ரரியைத் திறந்து விடலாம்.

அடுத்த நாள் டவுனுக்குப் போய்த் தொழிற்சங்கப் பிரதிநிதியின் உதவியோடு புத்தகங்கள் சேர்க்க முடிவு செய்தார்கள்.

வேலை முடிந்து லயத்திற்குத் திரும்பியபோது கட்டி முடிக்கப்பட்ட லைப்ரரிதான் ராமுவின் கண்முன்னே வந்து நின்றது. ஒரே நாளில் லைப்பரரி எழும்பிவிட்டது. துரைக்கு எதிரான போராட்டத்தில் ஒன்று சேர்ந்திருக்கிற மக்களின் உறுதியைப் போல் ரைப்ரரி காட்சியளித்தது.

நாட்டில் கள்ளுக் குடிக்கப் போனவன் எரிந்து போன இடத்தில் எழும்பியிருந்த லைப்ரரியைப் பார்த்துவிட்டுக் கணக்கப்பிள்ளை வீட்டிற்குத்தான் போனான் கட்டக் கருப்பையா. கணக்கப்பிள்ளை வீட்டில் இருந்தார். கட்டக் கருப்பையா அவரிடம் ராமுவைப் பற்றிச் சொன்னான். சொன்னானா இல்லை; நெருப்பு வைத்தான்.

"லைப்ரரிய மறுபடியும் கட்டிட்டானா..?"

கணக்கப்பிள்ளைக்கு அதிர்ச்சி...

"சந்திக்கடை மொதலாளிதான் மேஜை, அலுமாரி மண்டபம் கட்டக் கம்பு, ஓலை எல்லாம் கொடுத்தானாம்."

கடனுக்கு அரிசி கேட்டு இல்லை என்று சொன்னதில் சந்திக்கடை முதலாளி மீது கட்ட கருப்பையாவுக்குக் கோபம்.

"அந்தக் கடைக்காரப் பயலைத் தொலைக்கணும். அவனும் இல்ல.. இந்தப் பயல்களோட சேர்ந்துகிட்டு தொரைக்கி எதிரா வேல செய்யிரான்...".

சொந்தக்காரன் பேரில் முதல்போட்டு கடை வைத்திருந்தார் கணக்கப்பிள்ளை. சந்திக்கடை வந்ததும் சந்திக்கடையின் நியாயமான விலைக்கு முன்னே நிற்கமுடியாது தூங்கியது கணக்கப்பிள்ளையின் கடை. அதனால் சந்திக்கடைக்கார முதலாளி மீது தணியாத சினம் கணக்கப்பிள்ளைக்கு இருந்தது...

"நான் வர்ரேனுங்க.. அய்யா... கட்ட கருப்பையா கள்ளுக் குடித்துவிட்டுப் போனான்..."

துரையின் பங்களாவிற்கு அப்போதே புறப்பட்டார் கணக்கப்பிள்ளை. போவதற்கு முன்னர் கொஞ்சம் மேக்அப்

போட்டுக் கொண்டார். தலை சீவினார்.... முகத்திற்குப் பவுடர் போட்டார். இஸ்திரி போட்ட உடுப்புகளை உடுத்திக் கொண்டார். அந்த நேரத்தில் பங்களாவில் துரையும் அவர் மனைவியும் இருந்தாலும் இருக்கலாம். துரை மனைவி முன்னே அழகாக இருந்தால்தான் ஏறெடுத்துப் பார்ப்பாள் - சிரிப்பாள்...

பங்களாவில் துரை இருந்தார். அவர் நியூஸ் பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தார். கணக்கப்பிள்ளையைக் கண்டதும் பேப்பரை மடித்து வைத்துக் கொண்டார்... "வாங்க... கே.. பி.."

"ஆமாங்க... தொரை.." என்றவாறு கதையைத் தொடங்கினார் கணக்கப்பிள்ளை.

"லைப்ரரிய மறுபடியும் கட்டிட்டாங்களாம் தொரை..."

துரையின் கண்கள் சிவந்தன... அப்போது துரையின் மனைவி உள்ளே இருந்து வந்தாள். கணக்கப்பிள்ளை, "கும்பிடுரேனுங்க" என்றார்.

தனக்கு மேலே பதவியில் இருக்கிறவர்களைக் கும்பிடுகளால் பணிவைக் காட்டுவதில் கணக்கப்பிள்ளை கெட்டிக்காரர். அந்தக் கும்பிடுகளால்தான் தன் கைக்கு எட்டியதைச் சுருட்ட முடிகிறது அவரால்.

துரையின் மனைவி லேசாகப் புன்னகைத்தாள். அதுதான் பதில் வணக்கம்...!

கணக்கப்பிள்ளையின் கண்கள் லாவகமாகத் துரையின் மனைவியை மேய்ந்தன... வெள்ளை நிறத் தொடைகளைக் காட்டிக் கொண்டு கவுன் உடுத்தியிருந்தாள்.. ஓ...! என்ன அழகான கால்கள்...! கணக்கப்பிள்ளைக்குத் தன் மனைவியின் கால்கள் ஞாபகத்தில் வந்து நின்றன. கன்னங்கரேலென்ற நிறத்தில் குச்சியாய் மெலிந்த கால்கள்...

டீ கொண்டு வரச்சொன்னார். வேலைக்காரன் டீ கொண்டு வந்தான். டீயைக் குடித்துவிட்டுக் கணக்கப்பிள்ளை தன் கடமையைச் செய்து முடித்துவிட்ட திருப்தியில் தன் வீட்டிற்கு வந்தார்.

இரண்டு நாட்களின் பின்னர் லைப்ரரிக்குத் திறப்புவிழா.. ஏராளமான பேர்கள் வந்திருந்தார்கள். கோயிலைச் சுற்றி மாவிலைத் தோரணங்கள் கட்டித் தொங்கவிட்டிருந்தார்கள். டவுனில் வர்த்தகப் பிரமுகர்களிடம் இருந்து சேர்த்த புத்தகங்கள் அலுமாரியில் வைக்கப்பட்டிருந்தன. அன்றைய நாளிதழ்கள் மேஜையில் கிடந்தன.

லைப்ரரியை மழைக்கும் பள்ளிக்கூடத்தில் ஒதுங்காத ஒரு தோட்டத்துக் கிழவன் திறந்து வைத்தான். அதை ராமுதான் ஏற்பாடு செய்தான். அந்தக் கிழவன் நடுங்கும் கரங்களால் ரிப்பனை வெட்டி வைத்தபோது அவன் கண்களில் முத்துக்களாய் நீர் திரண்டு விட்டன.

கோயில் மைதானத்தில் ஒரு கூட்டம் நடந்தது. மேடை இல்லை; ஒலி பெருக்கி இல்லை, ஆனால் பேச்சில் ஆவேசம் இருந்தது...

சந்திக்கடை முதலாளி கூடியிருந்தவர்கள் உள்ளத்தைத் தொட்டுப் பேசினார்.

“எரிஞ்சி போனதை மறுபடியும் கட்டி எழுப்பியிருக் கோம் இதை மறுபடியும் எரிச்சாக் கூட நாங்க மறுபடியும் ஒரு லைப்ரரியக் கட்டி எழுப்புவோம்.. மனம் தளர மாட்டோம்... யாருக்கும் பயப்படமாட்டோம்! நீதி நேர்மைக் குத்தான் பயப்படுவோம்... அந்த நீதி நேர்மைதான் இந்தத் தோட்டத்தில் இல்லையே.. நாங்க அதுக்காகத்தான்

போராட்டம் நடத்துகிறோம்... இந்தப் போராட்டம் வெற்றி பெற்றா எனக்கோ - ஏன் ராமுவுக்கோ தனிப்பட்ட சலுகை கெடைக்காது.. உங்க எல்லாத்துக்கும் நல்லது நடக்கும்."

"இந்தப் போராட்டம் நடக்கிர நேரம் சில பேரு தோட்டத்துத் தொரைய ஆதரிக்கிராங்க.. அது அவங்க இடம்.. ஆனா அவங்ககிட்ட ஒரு கேள்வி கேக்கிரேன்.. தொரய எதிர்த்துப் போராடுற இந்தப் பக்கம் பணக்கார முதலாளி யாரு இருக்கா...? அப்புடி இருந்தா இதை ஒரு சுயநலப் போராட்டம்னு சொல்லலாம்.. இங்க யாருமே இல்லியே! எல்லோரும் தொழிலாளிக.. ஆனா தொழிலாளி போராட்டத்துக்குத் தொழிலாளியே ஆதரவு கொடுக்கல்ல.. அப்புறம் எப்படித் தொழிலாளிகளின் உரிமையை வெல்ல முடியும்? நமக்குள்ள ஒற்றுமை வந்தா எதிரிய அந்த ஒற்றுமையாலே வெல்ல முடியும்."

பலத்த கரகோஷத்தின் மத்தியில் சந்திக்கடை முதலாளி பேசி முடித்தார். கடைசியாக ராமு லைப்ரரி கட்ட நிதி, பொருள் உதவி செய்தவர்களுக்கும் புத்தகங்கள் கொடுத்த வர்களுக்கும் ஒட்டு மொத்தமாக நன்றி சொல்லிவிட்டுப் பேசத் தொடங்கினான்.

"என்னயப் பத்தி என்னென்னமோ எழுதி வைச்சிருக் காங்க அதைப் பத்தி நா... கவலைப்படல்ல.. நாமெல்லாம் ஒத்துமையா இருக்கணும். அதுதான் என் ஆசை. அதுக்காக என் உயிரைக் குடுக்கக்கூடத் தயாரா இருக்கேன்.. லைப்ரரி ஏன் கட்டுனோம்? நம்ம ஆள்க புள்ளைக ஒலகத்தத் தெரிஞ்சுக்க..! ஆனா... அதுகூடச் சில பேருக்குப் புடிக்கல்ல.. நாமெல்லாம் உலகமே தெரியாம - படிப்பே இல்லாம இருக் கனும்னு நெனைக்கிராங்க.. இதைப் புரிஞ்சிகிட்டீங்கன்னா

நல்லது. இங்க நடக்கிற போரராட்டம் நமக்காக.... தனிப்பட்ட யாருக்காகவும் இல்ல! தயவு செஞ்சு நீங்கள்ளாம் ஒதவியா இருங்க..."

பேசி முடித்தபோது ராமுவின் கண்களில் நீர் வடிந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு சொன்னான்.

"நாளைக்கிக் காலையில பத்து மணியைப் போல எல்லாம் இந்தக் கோயிலுக்கு வாங்க.. ஒரு முக்கியமான விசயத்தச் சொல்லப் போறேன். என்னன்னு கேக்காதீங்க. நாளைக்கி வாங்க.."

கூட்டத்தினர் என்னவாக இருக்கும் என்று தங்களுக்குள் கேட்டுக்கொண்டே கலைந்து போனார்கள்.

சந்திக்கடை முதலாளியும் முத்துவும் ராமுவை நெருங்கி நின்று கொண்டார்கள். ராமுவையே பார்த்தார்கள்.

ராமு புன்னகையோடு சொன்னான். "நீங்களும் என்னான்னு கேக்காதீங்க. காலையில வாங்க. மொதலாளி கட்டாயம் நீங்க வரனும். முத்து நீயுந்தான் வரணும்."

சந்திக்கடை முதலாளியும் முத்துவும் ராமுவின் அந்த விஷயத்தைப் புரிந்து கொண்டார்கள். ஆனால் கேட்க வில்லை... ஒரு பொழுது... விடியட்டும் பார்க்கலாம்.. என்று இருந்து விட்டார்கள்.

ராமு படுக்கையில் விழுந்தபோது இரவு பத்து மணியாகி விட்டது. காலையில் இருந்து ஓடியாடித் திரிந்ததில் அடித்துப் போட்டது போன்ற அலுப்பு. கண்களில் தூக்கம் சுற்றிக் கொண்டிருந்தது.

## அத்தியாயம் – 24

பார்வதியோடு நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்த ராமு லயத்திற்குத் திரும்பியபோது வெகுநேரம் ஆகிவிட்டது. பாதிக் காம் பராக்களில் உள்ளவர்கள் தூங்கிபே விட்டார்கள். மீனாட்சி விழித்துத்தான் இருந்தாள். எதுவுமே பேச வில்லை அவள்..

வராந்தாவில் பாயை விரித்துப் போட்டுப் படுத்தான் ராமு. கண்களை மூடினான். தூக்கம் தான் வரவில்லை. நடந்தவைகள் நினைவுகளாக நிஜங்களாகக் - காட்சிகளாக வந்து கொண்டே இருந்தன. லயத்தில் பார்வதியோடு பேசியவை.

"பார்வதி..! நாளைக்கிக் காலையில கோயிலுக்குக் கட்டாயம் வந்திடு..!"

"ஏன்.....?"

"அதை அங்க வைச்சித்தான் சொல்வேன். நீ வரணும்" ராமு வற்புறுத்தினான்.

"நான் கட்டாயம் வரத்தான் வேணுமா?.. நாளைக்கி டவுனுக்கு போவலாம்னு இருக்கேன்...!"

"அது இன்னொரு நாளைக்கிப் போவலாம்." அவள் அப்போதும் சரியென்று சொல்லவில்லை.

"நீ வர்ரதும் வராததும் உன் விருப்பம். இத்தன நாள் நீ என்னோட எல்லா வேலைக்கும் - போராட்டத்துக்கும் ஒதவியா இருந்தே. நாளைக்கி வர்ரதா இல்லையாங்கிறதை நீயே முடிவு பண்ணிக்க..."

"நாளைக்கி டவுனுக்குப் போவனும்னு நெனைச்சேன்... அதான்.. ஒங்களுக்கு ஒதவியா இருக்கிரதை விட எனக்கு என்ன வேல...?"

பார்வதி 'சரி'யென்றாள்... ஆனால் தன்னை ஏன் கட்டாயம் வரவேண்டும் என்று சொல்கிறான் என்பது புரியவில்லை அவளுக்கு.

ஏதேதோ எண்ணங்கள் நெஞ்சுக்குள் கிளர்ந்தன. ஆனால் கண்கள் தூக்கத்தில் செருக ஆரம்பித்தன. காலையில் இருந்து ஓடியாடித் திரிந்ததில் அடித்துப் போட்டது போன்று அலுப்பு. நாலு மணி நேரம் நன்றாகத் தூங்கினால் போதும்...!

தோட்டத்து ஸ்டோரில் மணி ஒன்று அடித்தது...

திடீரென்று நாய்களின் சத்தம் ஏக காலத்தில் ஒலித்தன. அதையும் மீறி ஒரு குரல்.. "ராமு.. ராமு.." அந்தக் குரல் ராமுவைத் தொட்டு எழுப்பினாற் போல் எழுப்பியது.

படுத்திருந்த ராமு எழுந்தான்.. டோர்ச் லைட்டும் கையுமாகச் சில பேர்கள். அப்போதுதான் டோர்ச் லைட் வெளிச்சத்தில் முத்து நிற்பது தெரிந்தது. எல்லாக் காம்பராக் களிலும் இருந்து வெளிச்சங்கள் வெளியே வந்தன. படுத் திருந்வர்கள் வெளியே வந்துவிட்டார்கள். சின்னக் கூட்டமே கூடிவிட்டது.

"ராமு! சந்திக்கடைக்கு யாரோ நெருப்பு வைச்சிட் டாங்க. நல்ல நேரம் மொதலாளி தப்பிச்சிட்டாரு."

ராமுவின் நெஞ்சு பதறியது. வார்த்தைகள் தடுமாறின. எங்கிருந்துதான் வேகம் வந்ததோ தெரியவில்லை. சந்திக் கடையை நோக்கி ஓடினான். அவனைத் தொடர்ந்து முத்து. முத்துவைத் தொடர்ந்து ஒரு கூட்டம்.

ராமு போனபோது சந்திக்கடை புகைந்து கொண்டிருந் தது. எரிந்து முடிந்துவிட்டது. சந்திக்கடை முதலாளியின் கையைப் பிடித்தான்...

யுத்த களத்தில் எதிரிகளின் குண்டு வீச்சுகளால் தகர்ந்து எரிந்துபோன ஒரு கட்டிடம் போல் இருந்தது... சந்திக்கடை!

சந்திக்கடை முதலாளியின் கண்கள் கலங்கின..! என்னால தான் உங்களுக்கு இந்தக் க டம்..! நீங்க பாட்டுக்கு யாவாரம் செஞ்சுக்கிட்டு இருந்திருப்பீங்க.. பொது வேலயில தலை போடப் போயி உங்க கடையை எரிச்சிட்டானுக...!"

சந்திக்கடை முதலாளியின் முகத்தில் புன்னகை அரும் பியது... இத்தனை பிரச்சனைக்கு மத்தியிலும் எப்படித்தான் அவரால் சிரிக்க முடிந்ததோ.. ஆனால் அந்தச் சிரிப்பின் பின்னால் ஒரு மெல்லிய திரை போன்ற இருள் தெரியத்தான் செய்தது.

"நான் என் கடை எரிஞ்சதைப் பத்திக் கவலப்படலல்ல.. நான் பொறக்கிர நேரம் சொத்தக் கொண்டுகிட்டு வந்தனா? இனிமே நானும் உங்க மாதிரி தொழிலாளியா ஆகப் போறேன்..."

"நீங்க ஏதையாவது சொல்லிச் சமாளிச்சிருவீங்க.. அதுவே உங்க வேலயாப் போச்சி?.." தபால்காரர் சொன்னார்.

அப்போது அங்கிருந்தவர்களில் ஒருத்தன் சொன்னான், "இது தொரவூட்டு வேலயாத்தான் இருக்கும்.." இன்னொருத் தன் சொன்னான்.. "கடை உள்ளுக்குப் போயிப் பார்ப்போம்.."

ராமு அதைத் தடுத்தான்.. "போகாதீங்க! போலீஸ் வந்த போறகு போவலாம்.."

"போலீசுக்கு ஆள் அனுப்பியாச்சா?.."

"போலீசுக்குப் போயி என்ன கெடைக்கப் போவுது?"

"கெடைக்குதோ இல்லையோ போலீசில கம்பளயின்ட் குடுக்கிரது நல்லது. ராமு உறுதியாகச் சொன்னான்."

"முத்து பண்டையாவூட்டுக் காரைப் பேசிக்கிட்டு வா! போவோம்..."

முத்து காரோடு வந்தான்.. அந்தக் காரில் டவுனுக்குப் போய்ப் போலீஸில் புகார் செய்து விட்டுத் திரும்பினார்கள்.

அன்றிரவு சந்திக்கடை முதலாளி ராமுவின் காம்பராவில் தாங்கினார். இருவரும் தூங்கவில்லை...

மொதலாளி..! நாளைக்கு எல்லாத்தையும் காலையில வரச் சொன்னேன். அதை நான் செய்யப் போறதில்ல..! நீங்க கடைய, ஏன் முழுச் சொத்தையே இழந்துட்டு இருக்கீங்க. இந்த நேரத்தில அதெல்லாம் வேணாம். முதலாளி தடுத்தார்.

"அவசரப்படாதே.. ராமு..! நீ சொன்ன மாதிரியே கோயிலுக்கு நான் வர்ரேன்.. அது பாட்டுக்கு நடக்கட்டும்.. இதுக்கெல்லாம் பயந்தா நாம வாழ முடியாது. இனிமே என்ன செய்யப் போறானுக? லைப்ரரிய எரிச்சானுக....! எங் கடைய எரிச்சானுக..! இனி என்னா இருக்கு...?"

ராமுவுக்கு மனம் ஒப்பவில்லை... என்றாலும் சந்திக்கடை முதலாளியின் எண்ணத்தை மாற்ற முடியாது என்று அவனுக்குத் தெரியும். எதுவுமே பேசாது படுத்துவிட்டான்.

மெள்ளமெள்ள அவன் நெஞ்சுக்குள் அந்தத் தோட்டத்து சந்தியில் கடை வைக்க வந்த முதலாளியின் உருவம் இறங் கியது. கையில் ஒரு சூட்கேசோடு.... பல ஆண்டுகள் ஓடின..

இன்று மறுபடியும் கையில் ஒரு சூட்கேசோடு.. வீதியோரத்தில் இருக்கிறார். இருக்க ஒரு வீடு வாசல் இல்லை.

பார்வதி கோயிலுக்குக் காலையில் வந்தபோது அவளால் தன் கண்களை நம்ப முடியவில்லை. மாவிலைத் தோரணங் களால் கோயிலை அலங்காரம் செய்திருந்தார்கள். கோயில் வாசலில் வாழைக் குலைகளுடன் இரண்டு வாழை மரங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. மூலஸ்தானத்திற்கு முன்னால் ஒரு குத்து விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வெற்றிலை பாக்குப் பழம் தட்டுகளில் இருந்தன... கோயில் பூசாரி பொங்கல் வைப்பதற்காக அங்கும் இங்கும் ஓடியாடிக் கொண்டிருந்தார். கோயில் மைதானத்தில் ராமு வரச் சொன்னது போல் நிறையப் பேர் வந்திருந்தார்கள்.

ஒரு இரவுக்குள் எப்படி இத்தனையையும் ராமு செய்தான்?.. அவன் உண்மையில் ஒரு கெட்டிக்காரன்தான். பெருமித உணர்வுகள் அவள் நெஞ்சைக் குளிர்வித்தன. ஆனால் இவையெல்லாம் ஏன் என்றுதான் அவளுக்குப் புரியவே இல்லை. நேற்று இரவு சந்திக்கடை எரிந்து போயிற்று. இன்னமும் அந்த வேதனையின் சாயல் மாற வில்லை. அதற்குள் கோயிலில் ஏன் பூஜை...?

சந்திக்கடை முதலாளியும் ராமுவும் பேசிக் கொண்டிருந் தார்கள். பார்வதி அங்கே போனாள். சந்திக்கடை முதலாளி யைப் பார்த்ததும் கண்கள் கலங்கிவிட்டன. சந்திக்கடை முதலாளி அதனைக் கவனித்துவிட்டார். பார்வதி! அதெல் லாம் அப்புறம் பாத்துக்கலாம். இப்ப அதெல்லாம் வேணாம். "மொதலாளி... மொதலாளி.." என்ற பார்வதியால் பேச முடிய வில்லை.. நல்லதையே செய்தார்... ஆனால் அவருக்கு இத்தனை சோதனையா...?

கோயில் மணி மூன்று முறை அடித்தது. ராமு சொன்னது போல் நல்ல கூட்டம் சேர்ந்துவிட்டது. லைப்ரரி திறக்க வந்ததைவிட இன்று கூட்டம் அதிகம். எல்லோரின் மனதிலும் ராமு என்ன சொல்லப் போகிறான்? ஏன் வரச் சொன்னான் என்ற கேள்விகளே விசுவரூபமாய் இருந்தன.

ஒரு கசெட்டில் பாடிக் கொண்டிருந்த நாதஸ்வரம் நிறுத்தப்பட்டது. சிறிது அமைதி... அந்த அமைதி கலையும் முன்னர் ஒரு குரல், "தயவு செஞ்சு எல்லோரும் அமைதியா இருங்க..."

ராமுதான் பேசினான். மேலும் அமைதி கூடியது. "மொதல்ல உங்க எல்லாத்துக்கும் வணக்கம். நான் நேத்து எல்லாரையும் ஏன் வரச் சொன்னேன்னு சொல்லல்ல.. ஆனாலும் என் பேச்ச மதிச்சு இங்க வந்திருக்கீங்க.. மிச்ச சந்தோஷம்... ஒரு நிமிடம் தன் பேச்சை நிறுத்திவிட்டுச் சொன்னான்... நான் ஏன் உங்க எல்லோரையும் வரச் சொன் னேங்கிறதைக் கோயில் பூசாரி இப்ப சொல்வாரு.. புதிர்... புதிர் மேல் புதிர் போட்டுக் கொண்டு ராமு பேசியதால் கூட்டத் தினருக்கு ஆவல் அதிகமாகியது. சந்திக்கடை முதலாளி ராமுவைப் பார்த்தார். ராமுவின் முகத்தில் நிழல்களால் புன்னகை... கோயில் கமிட்டியில் இருந்து விலகப் போகி றானோ! முத்துவிற்கும் ராமுவின் புதிர் புரியவில்லை.

கோயில் பூசாரி தயங்கித் தயங்கி வந்தார். அவரால் உடனே பேசமுடியவில்லை. கூடியிருக்கிற கூட்டத்தைப் பார்த்ததும் ஒரு தயக்கம்... உதடுகள் ஒட்டிக் கொண்டன... மௌனமாக நின்றார். அவர் பேசப் போவதைக் கேட்க அந்தக் கூட்டமும் மௌனமாக இருந்தது. எவ்வளவு நேரம் தான் அப்படி மௌனமாக இருக்க முடியும்...? தயங்கித் தயங்கிப் பேச ஆரம்பித்தார் பூசாரி...

“எப்படிச் சொல்ரதுன்னு தெரியல்ல..”

பூசாரி வேறு புதிர் போட்டார்.. மீண்டும் தயக்கம்! வேர்த்து விட்டது அவருக்கு... அவரின் நிலையை உணர்ந்த சந்திக்கடை முதலாளி அருகே வந்து தைரியப்படுத்தினார்.

“தயங்காமப் பேசுங்க...”

பார்வதியின் முகத்தில் கேள்விகள் மிதந்தன. பூசாரி பேசினார். “இன்னைக்கி ஒரு கல்யாணம் நடக்கப் போவுது..”

இப்பவும் புதிரா...? கூட்டத்தினர் யாருக்கும் - யாருக்கும் என்று பார்த்துக் கொண்டிருந்தனர்.

சந்திக்கடை முதலாளி.யின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. முத்துவின் முகத்திலும் அதே கதைதான். பார்வதிக்கு அதிர்ச்சி. அதே நேரத்தில் பரவசம் அவள் உள்ளத்தை ஆக்கிரமித்தது. பூசாரி வாயைத் திறந்து பேசும் முன்னர் ராமுவே வந்து பேசினான்.

“பூசாரி ரொம்பத் தயங்குகிறாரு... நானே சொல்ரேன்.. எனக்கும் பார்வதிக்கும் இங்க உங்க முன்னிலையில் திருமணம் நடக்கப் போவுது.. அதுக்காகத்தான் உங்கள வரச் சொன்னேன்.. இந்த விசயத்தைப் பார்வதிக்குக் கூடச் சொல்லல்ல.. பார்வதியக் கேட்டீங்கன்னா நான் சொல்ரது உண்மையா பொய்யான்னு தெரியும். பார்வதிக்கு வாழ்வு குடுக்கனும்னு நான் ரொம்ப நாளா நெனைச்சுகிட்டிருந்தேன். ஆனா நம்ம தோட்டத்துத் தொர என்னப் பத்திக் கேவலமாக எழுதினதால இன்னைக்கி பார்வதியக் கல்யாணம் செய்ய முடிவு செஞ்சேன். இனி என்னப் பத்தி என்ன எழுதினாலும் கவலப்பட மாட்டேன்.. நீங்க எல்லாரும் இருந்து எங்களுக்கு ஆசிர்வாதம் செய்யணும்..”

கூட்டத்தில் இருந்த மீனாட்சி குமுறிக் கொண்டிருந் தாள். ஆனால் வெளிக்காட்ட முடியவில்லை. கோயில் பூசாரி பார்வதியைக் கூப்பிட்டுப் பட்டுச் சேலையும் ரவுக்கையும் ஒரு தட்டில் வைத்துக் கொடுத்தார். ராமுவுக்கும் பட்டு வேட்டியும் சட்டையும் கொடுக்கப்பட்டது. இருவரும் வாங்கிக் கொண் டார்கள். பார்வதியால் ராமுவை இன்று ஏறெடுத்துப் பார்க்க முடியவில்லை. பெண்களுக்கான நாணம் இன்று அவளைத் தலைகுனிய வைத்தது. தன்னிடம் கூட இந்தக் கல்யாணத்தைப் பற்றிச் சொல்லாமல் ஒரு இன்ப அதிர்ச்சி கொடுத்து விட்டானே.. தனக்கும் ராமுவுக்கும் இவ்வளவு சீக்கிரம் திருமணம் நடக்கும் என்று அவள் நினைக்கவே இல்லை. ராமு இது நாள் வரையில் ஒரு மனிதனாக இருந்தான். இன்று அவள் கணவன். அதற்கு மேல் கண்கண்ட தெய்வமாய்...!

மணி ஓசை முழங்கக் கசெட்டில் நாதஸ்வரம் ஒலிக்கப் பூஜை நடந்தது. ராமுவும் பார்வதியும் மூலஸ்தானத்தில் அருகருகே நின்றார்கள். பார்வதி புதுப் பட்டுச்சேலையில் ல மிகரமாக மிளிர்ந்தாள். அவள் முகத்தில் வைக்கப்பட் டிருந்த குங்குமப் பொட்டுத் தங்கப் பதக்கத்தில் முத்துப் பதிந்தது போன்றிருந்தது. ராமு அவள் அழகில் மயங்கினான். இத்தனை அழகையும் எங்கு ஒளித்து வைத்திருந்தாள்..?

தீபாராதனை காட்டிய பிறகு தாலியிருந்த தட்டினை ராமுவிடம் நீட்டினார் பூசாரி... தட்டில் எரிந்து கொண்டிருந்த சூடத்தைக் கண்களில் ஒத்திக்கொண்டு தாலியை எடுத்து பார்வதியின் கழுத்தில் கட்டினான் ராமு. பார்வதி ராமுவின் காலில் விழுந்து வணங்கினாள். பூமாலைகள் மாற்றிக் கொள்ளப்பட்டன.

சந்திக்கடை முதலாளி ராமு அருகே வந்து அவன் கையைக் குலுக்கி,

"ராமு.. மனுசனுக்கு மேல உசந்துட்ட" என்றார்.

ராமு கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டே, "உங்க மாதிரிப் பெரியவங்க ஆசிர்வாதம்தான் என்ன மனுசனாக்கிச்சி" என்று சொல்லிவிட்டு, "எல்லாம் நல்லபடியா நடந்திச்சி... எங்க அம்மாதான் இங்க இல்ல.." என்று கவலைப் பட்டான்.

"அம்மாவ நீ கூப்புடலியா?" முத்து கேட்டான்...

"கூப்புட்டாலும் அவங்க வரமாட்டாங்க.. பார்வதியோட பேசுர்தே புடிக்கல்ல அவங்களுக்கு... அதுனால நான் சொல்லல்ல..."

ராமு கண்களைத் துடைத்துக் கொண்டான். பார்வதியின் கண்களிலும் கண்ணீர் முத்துக்களாய்த் திரண்டன. "பூசைக்கு வாங்க" என்று பூசாரி அழைக்க, எல்லோரும் மூலஸ்தானத்திற்குப் போனார்கள்.

கூட்டத்தில் இருந்த மீனாட்சி அழுதுகொண்டு மெள்ளமாய் வெளியே போனாள்... அவளைப் பொறுத்தவரை அவளுக்கும் ராமுவுக்கும் உள்ள உறவு அறுந்துபோய் விட்டது. பார்வதியின் கழுத்தில் தாலி கட்டியதை அவளால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. அத்தை நீண்ட நாட்களாக எச்சரித்தது உண்மையாகி விட்டது. கோயில் 'கேட்' டைத் தாண்டிப் போகப் போனவள், "மீனாட்சி.." யாரோ ஒருத்தர் அவளைத் தடுத்து நிறுத்தினார்கள். நிமிர்ந்து பார்த்தாள்.. பழைய தலைவர்.. அவர்பின் சிறிய கூட்டம்.. கட்ட கருப்பையா. ஸ்ரைக்கு எதிராக இருந்தவர்கள் அத்தனை பேரும்.

"மீனாச்சி..! நானே வந்திட்டேன். நீ போறது சரியில்ல ராமு நல்லதைத்தான் செஞ்சிருக்கான். அவன் நமக்காகத்தான்

பாடுபடுறான்... இங்க நடந்தது உனக்குத் தெரியுந்தானே.. லைப்ரரிய எரிச்சானுக... சந்திக்கடைய எரிச்சானுக.. இதுக்கு மேலயும் தொரைக்கி சப்போர்ட் பண்ணினா நான் மனுசன் இல்ல.."

பழைய தலைவர் சொன்னதைக் கேட்ட மீனாட்சி அப்படியே நின்றாள்.. அவள் மனதில் சிறு சலனம்..

"மனச மாத்திக்க மீனாட்சி..! பார்வதி நல்ல புள்ளதான்.. நாங்களும் ஸ்ரைக் செய்யப் போறோம்.. இனிமே அந்தத் தோட்டத்தில தொரைக்கிச் சப்போட்டா நீ மட்டுந்தான் இருப்ப போல...!"

மீனாட்சியின் பதிலுக்குக் கூடக் காத்திராமல் பழைய தலைவர் கோயிலுக்குள் போனார்... அவரைத் தொடர்ந்து மற்றவர்களும் போனார்கள். அதற்குள் ராமுவுக்கும் சந்திக் கடை முதலாளிக்கும் செய்தி போய்விட்டது.

பழைய தலைவரும் அவருட்ட ஆட்களும் கோயிலுக் குள்ள வர்ராங்க.

முதலில் தடுமாறினாலும் சமாளித்துக் கொண்டு ராமு சந்திக்கடை முதலாளியோடு பழைய தலைவரை எதிர் கொள் ளப் போனான். மீனாட்சி மகனைப் பார்க்கக் கோயிலுக்குள் திரும்ப நுழைந்தாள்!

□□□□

## இவர்களின் பார்வையில்...

**இந்நூலாசிரியரின் ஏனைய படைப்புகள் பற்றி...**

ஈழத் தமிழின் தேமதுர ஓசையில் ஒரு நாவல்.

மனித குலம் இம்சையில் இருந்து அகிம்சையை நோக்கித் தான் முன்னேறி வந்திருக்கிறது. இந்த இலக்கில் வெற்றி யடைய இன்னும் தலைமுறைகள் காத்திருக்கலாம் என்றார் காந்தியடிகள்.

மாத்தனை சோமு எழுதி, தமிழ்க்குரல் பதிப்பகம் வெளியிட்டிருக்கும் 'அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்' என்ற நாவலைப் படிக்கும்போது அந்தக் கருத்து நினைவில் மோது கிறது. ஆனாலும் வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்கு அத்துவானங்களில் உடல் உழைப்பை விரயமாக்க வேண்டிய கட்டாயங்ளையும் அத்தகைய கூட்டத்தையே ஆதாயமாக்கித் தங்கள் வரையறையற்ற பொருள் குவிப்பு முயற்சிகளை மேற்கொள்ளும் சக்திகளையும் சித்தரிக்கும் பல புதினங்கள், பல மொழிகளிலும் பல களங்களைப் பின்புலமாகக் கொண்டு வெளிவந்திருக்கின்றன.

கிரேப்ஸ் அஃ ராத் (ஸ்டீன் பெக்) சோமனதுடி (சிவராம கரந்த்) ஈறாக இன்றைய அறிவழகனின் களிசடை வரையிலும் பல புதினங்களும் நினைவில் உயிர்க்கின்றன.

சேய்த்தமிழின் (மழலை) ஓசையைத் தாய்த் தமிழர் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது என்ற குற்றச்சாட்டு இங்கே எடுபடாது. இன்று புலம்பெயர்ந்து, தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் பரவியுள்ள ஈழத்தமிழின் தேமதுர ஓசை தெளிவாகவே ஒலிக்கிறது.

('அந்த உலகத்தில் இந்த மனிதர்கள்' என்ற நாவல் பற்றி 'இந்தியா டுடே' தமிழ் இதழில் பிரபல தமிழக எழுத்தாளர். நாவலாசிரியை **ராஜம் கிருஷ்ணன்**.)

செம்மலர் இதழில் ஒரு கேள்வியும் பதிலும்.

*அண்மையில் தாங்கள் ரசித்துப் படித்த நாவல்?*

*1977-1983 இனக் கலவரங்களை மையமாக வைத்து இலங்கையின் மலையகத் தமிழர் ஒருவர் எழுதிய நாவல் அது. சிங்களப் பெண்ணொருத்தியைக் காதலித்து மணந்து கொண்ட, தமிழன் ஒருவனின் வாழ்வில் இனக்கலவரம் குறுக்கிடுகிறது. இருவரிடையே இருந்த இயல்பான நேசம் கூட அந்தப் புயலில் சிக்கி வதைபடுகிறது. மனதுக்குப் பிடித்த மங்கை எனும் உணர்வு அமுங்கிச் 'சிங்களப் பெண்' எனும் நினைவு மேலெழுந்து அவனை அலைக் கழிக்கிறது. அப் பொழுது தமிழ்ப் பெண்ணை மணந்த ஒரு சிங்களவனை அகதி முகாமில் இவன் சந்திக்கிறான். இவனது அறிவுக் கண்கள் படீரெனத் திறக்கின்றன. இதனூடே நித்யகண்டம் பூரண ஆயுசு எனவதியும் அந்த மக்களின் வாழ்வு முழுமையும் அதன் வாமன வடிவத்தில் நம்முன் வந்து போகிறது. சிலிர்த்தெழும் மனிதநேயம் எனும் சிகரத்தைத் தொடும் வழியில் இன மோதவின் கொடுமையை அப்பட்டமாய் நம்முன் கொண்டு வந்து நிறுத்தி விடுகிறார் மாத்தளை சோமு.*

*நாவலின் பெயர் - எல்லை தாண்டா அகதிகள். இதிலே ஒரு புதுமை - இதே தலைப்பில் இதே கரு சிறுகதையாகவும் எழுதப்பட்டு ஒரு பரிசையும் வென்றிருக்கிறது. இரண்டையும் ஒரே நூலாகப் பதிப்பித்திருக்கிறார்கள்.*

செம்மலர் - 1995 ஜூன் இதழ்

*மாத்தளை சோமுவின் இந்நாவல் மண் உரிமை உள்ள வர்கள் நிரந்தர அகதிகளாகும் அவலத்தை வெட்ட வெளிச்ச மாக்குகிறது. ஈழத்தமிழர் பிரச்னைகளைச் சிந்திக்காமல் போக முடியாது. அவர்களது இலக்கியத்தையும் கற்று அறியாமல் இருக்க முடியாது.*

*('எல்லை தாண்டா அகதிகள்' என்ற நாவல் பற்றிய 'புதிய கலாச்சாரம்' இதழின் விமர்சனம்.)*

சுபமங்களா இதழில்

காலம் காலமாக மனிதர்கள் கட்டுகிற ஆசைக் கோட்டையை, அதன் நிலையாமையை மிகச்சாதாரண வார்த்தைகளால், சம்பவங்களால் சித்தரித்துக் காட்டுகிறார் மாத்தளை சோமு.

சம்பவங்கள் விசேடமானவை அல்ல, என்கிறபோதும் இது ஒரு வெற்றிகரமான நாவலாகி இருப்பதன் சூட்சுமம் தான் என்ன? இதன் உண்மைத் தன்மைதான்...

நாவலில் பொதிந்திருக்கும் வாழ்க்கையில் நிஜத் தன்மையின் சுவடு பதிந்திருக்கிறது. சாதாரண மனிதர்களை, மனித அம்சங்களை வெகு நேர்மையான மனப்பான்மையோடு சித்தரித்த ஆசிரியரின் பக்குவமே இதைச் சத்தான நாவலாக ஆக்கியிருக்கிறது.

பல ஆண்டுகளுக்கு முன் வந்திருந்த ஆ. மாதவனின் 'புனலும் மணலும்' நாவலைப் போல் இது சிறந்திருக்கிறது என்கின்ற வல்லிக் கண்ணனின் கருத்துச் சரியானது ஆகும்.

பிரபல எழுத்தாளர்
பிரபஞ்சன்

மாத்தளை சோமுவின் இதர படைப்புகள்...

❒
அந்த உலகத்தில் இந்த மனிதர்கள் - நாவல்
(இலங்கை சாகித்தியப் பரிசு பெற்ற நாவல்)

❒
எல்லை தாண்டா அகதிகள் - நாவல்

❒
அவர்களின் தேசம் - சிறுகதைகள்
(தமிழ்நாடு லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கியப் பரிசு பெற்ற சிறுகதைத் தொகுதி)

❒
நமக்கென்றொரு பூமி - சிறுகதைகள்

❒
அவன் ஒருவனல்ல - சிறுகதைகள்

❒
இலங்கை நாட்டுத் தெனாலிராமன் கதைகள்
(குட்டிக்கதைத் தொகுப்பு நூல்)